# வைரவிழா மலர்

1956 - 2016




## கிளி/இராமநாதபுரம் மகா வித்தியாலயம்
## KN/RAMANATHAPURAM MAHA VIDYALAYAM

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வைரவிழா மலர்

## 1956 - 2016

சி.ந.தண்டாயுதபாணி
சமாதான நீதவான்
(அகில இலங்கை)
02/12/வகி/தீமு/540
இராமனாதபுரம்,
கிளிநொச்சி.

## கிளி/இராமநாதபுரம் மகா வித்தியாலயம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாடசாலைக்கீதம்

இராகம் : பிலஹரி தாளம் : ஆதி

வளர்புகழ் ஓங்குகவே கலைகள் மல்கி
வான்புகழ் தாங்குகவே வளர்மதிபோல்

(வளர்)

காலையிலே எழு கதிரவன் ஒளிபோல்
ஞாலம் முழுதுமொரு ஞானசூரியன் என

(வளர்)

செந்நெல் நிறைகழனி வண்ணப்பலாவின் சோலை
தென்னை கமுகொடு மா கன்னல் வாழை செழிக்க
கன்னித்தமிழ் வளர கணிதம் கலை வளர
இராமநாதபுர மகாவித்தியாலயம் வளர

(வளர்)

இயல் இசை நாடகம் இன்தமிழுடனே
வயமுறு காவியம் ஓவியம் வளர
செயன்முறை விஞ்ஞானம் சிறந்த விவசாயம்
நயமுறு இலக்கியம் நன்மணம் கமழ


(வளர்)

வற்றா வளம் திகழ் இராமநாதபுரம்
வையகம் மீதினிலே நன்றே வாழியவே
கற்றார் மதித்திடும் மகாவித்தியாலயமே
காலமெல்லாம் பணி செய்தே வாழியவே

(வளர்)

ஆக்கம்
வீரமணிஐயர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மகுட வாக்கியம்

# கற்று உணர்ந்து ஒழுகு

### தூரநோக்கு

தன்னை உணர்ந்து தன் வாழ்க்கை நெறியின் விழுமியங்களைப் பேணக்கூடிய மனித சமுதாயத்தை அமைப்பதற்கான தற்துணிவை உண்டாக்குதல்

### Vision

Create Self Determination For Concerning Themselves to Build up a Society of Sustaining the Values of Their Life Style.

### நோக்கக்கூற்று

மாணவர்கள் ஆத்மார்த்த ரீதியில் முன்னேறித் தமது வாழ்க்கைப்பாதையைத் தாமே தேர்ந்தெடுத்துச் சமூகத்தில் முன்மாதிரியாகத் திகழக்கூடிய வினைத்திறன் மிக்க ஆளுமையை ஏற்படுத்துதல்.


### Mission

Develop an Efficent Personalty on Students to go forward to select the ways of their Lives to be an exemplary Person in the Society



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாடசாலையின் நில அளவை வரிப்படம்




**SCALE 1 : 2000**

## PLAN

OF ONE (1) ALLOTMENT OF LAND CALLED
*" Kalmadukkaadu "*
( கல்மடுக்காடு )



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பொருளடக்கம்

ஆசிச் செய்தி
வாழ்த்துச் செய்தி

**வரலாற்றின் பதிவுகள்**

கிளி/இராமநாதபுரம் மகா வித்தியாலய தருவின் வளர்ச்சி 1-8

**மாணவர் ஆக்கங்கள்**

பூமி பிறந்தது 9
பள்ளியின் முதல் நாள் 10
கல்வியின் பெருமைக்கு நிகருண்டோ? 11
ஒற்றுமை 12
முதன்மைகள் 13
தாய்மைக்கு 14
என் அப்பா 15
வாழ்க்கையின் தத்துவம் 16
வெள்ளாடை மலர்கள் 17
புதுமை படைக்க எழுந்து விடு சிறுவனே 18
கவிதைப்பூங்கா 19
நட்பு 20
கண்ணாடி, பெண்னே, நேரம், பென்சில் 21
பள்ளித்தாயே 22
சுகமான வலிகளைத் தரும் பள்ளித்தருணங்கள் 23-24
தேடலே மானிட மேன்மை 25
ஒற்றுமையே பலம் 26
மீண்டும் பிறக்க வரம் வேண்டும் 27
பள்ளியின் எண்ணங்கள் 28
பிரிவுகள் 29
வாசிப்பதனால் உண்டாகும் பயன்கள் 30
புவியின் வெப்பநிலை அதிகரிப்பால் ஏற்படும் விளைவுகள் 31-32
என்னைக் கவர்ந்த பெரியார் டாக்டா A.P.J. அப்துல்கலாம் 33-35
கல்வியின் சிறப்பு 36-38
வாழ்க்கையின் தத்துவத்தை கற்றுக் கொள்ள வாழ்வில் இனிதே எழுச்சி காண் 39-40
சிந்தனைத்துளிகள் 41
நற்பண்புகள் 42
சுவாமி விவேகானந்தரின் பொன்மொழிகள் 43-44
ஈழத்து பூதந்தேவனார் 45-46
மனித உடல் பற்றிய தகவல்கள் 47
ஆச்சரியமான தகவல்கள் சில 48
அப்துல் கலாமின் பொன் மொழிகள் 49
கைத்தொலைபேசியின் அபாயம் 50-51
உங்கள் வெற்றிக்கு நீங்கள் தான் அடித்தளம் 52-53
பொது அறிவு 54
நேரத்தின் அருமை 55
புவியைப் பாதுகாப்போம் 56-57
சுற்றுச்சூழல் மாசடைவும் பாதுகாப்பும் 58-61

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆன்மீக தத்துவங்கள் சில 62-65
த –ரியல் பிக் போஸ் 66-69
திணைத்துணை நன்றி 70-71

**ஆசிரியர் ஆக்ககங்கள்**

புலமை I.Q 72-74
மாணவர்களின் கல்வி வளர்ச்சியில் பொற்றோரின் பங்கு 75-77
ஆரம்பக் கல்வி மாணவர்களிடையே தன்னம்பிக்கயை ஏற்படுத்துவதன் அவசியமும் தேவைப்பாடும் 78-80
கற்கும் காலம் மிகச் சிறிதே 81
வணிகத் திட்டம் 82-87
தமிழ் இலக்கியத்தில் நயம் தரும் தூதுப்பண்பு 88-96
மனித வாழ்வு 97
கவலையற்ற காலம், மனித வாழ்வு 98
நீயும் ஒரு நாள் 99-102
பாடசாலையை அடிப்படையாகக் கொண்ட கணிப்பீட்டு வேலைத்திட்டம் 103-106
Importance of education 107
Dr.A.P.J Abthulkalam 108
கிளி/இராமநபுரம் மகாவித்தியாலயத்தின் சாரணிய செயற்பாடு 109-111
யோகா என்பது 112-113
கற்றுக் கொள்ளுங்கள் 114
நெஞ்சை விட்டு அகலாத நினைவுகள் 115-117

**பழைய மாணவர் ஆக்கங்கள்**

ஏற்றமுறு வாழ்வு தந்து மகத்துவமாகின்றாய் 118-119
காயத்திரி மந்திரத்தின் மகிமைகள் 120-123
எம் கல்லூரி தாய்க்கு 124-125
இரணைமடு நீர்த்தேக்கம் 126-131
கிளிநொச்சி மாவட்டத்தின் அபிவிருத்தியில் வட்டக்கச்சி பிராந்தியத்தின் பங்கு சமூகப் பொருளாதார நோக்கு 132-135
1956-1965 காலப்பகுதியில் பயின்ற மாணவி ஒருவரின் இராமநாதபுரம் மகா வித்தியாலயம் மீதான ஒரு நோக்கு 136-137
எமது கிராமமும் பாடசாலையும் 138-143

**கல்வியலாளர்கள் ஆக்ககங்கள்**

ஆற்றல் மிகு சிறுவர் சமுதாயத்திற்கு ஆரோக்கியமான உணவு 144-147
வைரநெஞ்சம் 148-149
உளவளத்துணை- கல்வி நிறுவனங்களில் இச்சேவையை வழங்குவதற்கு அதன் முகாமைத்துவம் மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் 150-155
மாணவர்களின் கற்றல் ஆர்வத்தை அதிகரித்தல் தடைக்காரணிகளும் உளத்தாக்கங்களும் 156-165
மாணவர்களிடத்தில் மென்திறனை விருத்தி செய்வதில் ஆசிரியர்கள் கையாளக்கூடிய உத்திகள் 166-171
சங்க இலக்கியத்தில் தனி மனித ஆளமை உருவாக்க சிந்தனைகள் 172-177
பாடசாலையில் சாதனைமிகு மாணவர் உருவாக்கம் 178-181
உடற்கல்வி ஆசிரியர்களின் வகிபாங்கு பற்றிய பார்வை 182-185

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பழைய மாணவர் சங்கம் - 2017



## பழைய மாணவர் சங்கம் - 2016



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாடசாலை அபிவிருத்திச் சங்கம் - 2017



## பாடசாலை அபிவிருத்திச் சங்கம் - 2016



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசிச்செய்தி

## வைரவிழா மலர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மலர்க்குழு

தலைவர் : M.C.L மனுவல்

மலராசிரியர் : திருமதி.ஜீ.விவேகானந்தராசா

உறுப்பினர்கள் : திரு.தி.திலீபன்

திருமதி.ஸ்ரீ.இளங்குமரன்

திருமதி.ச.மகேந்திரன்

திருமதி.ப.சிவனேசன்

திரு.வே.ஜெயக்குமார்

திரு.வே.ஜோகப்பிரகாஷ்

திரு.சி.சத்தியசீலன்

திருமதி.க.யாழினி

அருட்சகோதரி.மரியகொறற்றி லியோன்

திருமதி.வே.கவிதா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## ஆசிச்செய்தி

கிளி/இராமநாதபுரம் மகாவித்தியாலயம் வைரவிழா நடத்துவதை அறிந்து அக மகிழ்ச்சியடைகிறேன். அத்தோடு பல மைக்கற்களை தாண்டி பல இன்னல்கள் துன்பங்களை சந்தித்து நிமிர்ந்து நிற்பது பாராட்டுக்கரியது இன்றைய சூழலில் மனிதனின் வாழ்கையில் மிக அத்தியாவசியமானது கல்வி. கல்வி பட்டம் பெறுவதற்கோ உத்தியோகம் செய்வதற்கோ அன்றி அறிவை வளர்ப்பதற்காகவும் இருக்க வேண்டும்.கல்வியுடன் இணைந்து அன்பும் பண்பும் இருந்தால் அவன் வளர்ச்சி அடைந்து உயர்ந்து நிற்பான். அதிபரின் ஆளுமையின் கீழ் சிறந்த ஆசிரியர்களின் வழி நடத்தலில் ஒழுக்கமும் பணிவும் கலந்த மாணவர்களின் வளர்ச்சி கல்லூரியின் உயர்விற்கு வழிவகுத்ததென்றால் மிகையாகாது. சமய, சமூக, கலை ,கலாச்சார துறைகளிலும் விளையாட்டுத் துறைகளிலும் சிறந்து விளங்குவதே வித்தியாலயத்தின் பூரணமான வளர்ச்சியாகும். இன்றைய விஞ்ஞான வளர்ச்சியின் யுகத்தில் மாணவர்கள் மிக நிதானத்துடன் பண்பு கலந்த புத்திஜீவிகளாக அறிஞர்களாக உருவாக வேண்டும். எதிர்காலம் சிறப்புற இதுவே அடிக்கல்லாகும். அவ் வைரவிழாவிலே யாவரும் வித்தியாலயத்தின் வளர்ச்சிக்கு உறுதுணையாக இருக்க வேண்டும் என்று ஆசிகூறி அமைகின்றேன்.

*சுபம்*

*சிவஸ்ரீ.பால.சாந்தினிகேசக்குருக்கள்*

*வட்டக்கச்சி சபரி ஐயப்பன் ஆலய பிரதம சிவாச்சாரியார்*

*சில்வாவீதி*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஆசிச் செய்தி

வன்னிப் பெருநிலப்பரப்பில் இயற்கை எழில்கொஞ்சும் இராமநாதபுரம் என்னும் பிரதேசத்தில் இளைய தலைமுறையினரை ஆற்றலும், ஆளுமையும் மிக்கவர்களாக மாற்றுகின்ற கல்விச் சிகரமாக உயர்ந்து நிற்கும் கிளி/ இராமநாதபுரம் மகாவித்தியாலயத்தின் வரலாற்றுப் பாதையை பதிக்கும் வைரவிழா மலருக்கு வாழ்த்துரை பகர்வதில் மட்டற்ற மகிழ்ச்சியடைகிறேன்.

இற்றைக்கு அறுபது ஆண்டுகளுக்கு முன்னதாக இம் மண்ணில் காலத்தின் தேவை அறிந்து, ஆயிரக்கணக்கான மாணவச் செல்வங்களை பக்குவப்படுத்தி, பல உயர் பதவிகளில் உன்னத நிலையை வகிக்க உதவிய பெருமை இவ் வித்தியாலய தாய்க்கே உரித்தாகும். அத்தோடு கடந்தகாலங்களில் யுத்தத்தின் காரணமாக பல இடர்களை சந்தித்த போதும் இவ் வித்தியாலயம் படிப்படியாக தனது பணியில் அடைந்த வளர்ச்சி மிக முக்கியமானதாகும். பல துன்பங்களைச் சுமந்த இப் பிரதேச மக்களுக்கு கல்விப் பணியாற்றி இப் பாடசாலை மக்களின் நன் மதிப்பை பெற்றிருப்பது மகிழ்ச்சி தருகின்றது.

இவ் வித்தியாலயத்திலே கல்வி கற்ற மாணவர்கள் இன்று புலம்பெயர்ந்த நாடுகளிலும், சொந்த மண்ணிலும் சிறப்போடும், பெருமையோடும் வாழ்கின்றார்கள். எனவே பல கல்விமான்களை உருவாக்கிய பெருமையுடன் அகவை அறுவதில் புதுப் பொலிவுடன் வைரமாக மின்னும் இப்பாடசாலையை எண்ணிப் பெருமையடைகின்றேன்.

மேலும் அகவை அறுபதைத் தாண்டி பயணித்துக்கொண்டு இருக்கும் இவ் வித்தியாலயத்தின் சாதனைப் பயணம் தொடரவும் இவ் வித்தியாலயத்தின் அதிபர், ஆசிரியர் குழாம், மாணவச் செல்வங்கள் மற்றும் பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தினர் அனைவருக்கும் இறையாசீர் வேண்டி வாழ்த்திநிற்கின்றேன்.

நன்றி

***இறைபணியில்,***
***அருட்பணி கை. பீ. கனிசியஸ் ராஜ்***
***பங்குத் தந்தை***
***வட்டக்கச்சி.***



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வாழ்த்துச் செய்தி

கிளிநொச்சி இராமநாதபுரம் மகா வித்தியாலயம் மாணவர்களுக்கான கல்விச் சேவையை கடந்த அறுபது ஆண்டுகளாக சிறப்பாக ஆற்றிய நிலையில் வைரவிழா கொண்டாட்டங்களை முன்னெடுக்கும் இத்தருணத்தில் வெளியிடப்படவிருக்கும் வைரவிழா மலருக்கான வாழ்த்துச் செய்தியொன்றை வழங்குவதில் மகிழ்வடைகின்றேன்.

1955ம் ஆண்டு விவசாயக் குடியேற்ற திட்டத்தின் கீழ் உருவாக்கப்பட்ட இராமநாதபுரம் கிராமத்தில் அங்குள்ள சிறுவர்களுக்கு கல்வியறிவைப் புகட்டுவதற்காக 1956.05.02ம் திகதி கிளிநொச்சி இராமநாதபுரம் அரசினர் தமிழ் கலவன் பாடசாலை என்ற பெயருடன் உருவாக்கப்பட்ட இப்பாடசாலை படிப்படியாக கல்வித்துறையிலும் ஏனைய கல்விசாரா நடவடிக்கைகளிலும் வளர்ச்சியடைந்து இன்று 1 தொடக்கம் 13 வரையான வகுப்புக்களைக் கொண்ட ஒரு மகா வித்தியாலயமாக வளர்ந்திருக்கின்றதென்றால் அதற்கு இப்பாடசாலையின் அதிபர்கள், ஆசிரியர்கள் மற்றும் மாணவர்களினது கடின உழைப்பும் கல்விமீது காட்டிய அக்கறையுமே காரணங்களாகும்.

தொடர்மாடிக் கட்டடங்கள், இரண்டு நூலகங்கள், செயற்பாட்டறை, அழகியல் அறை, பொது அறை, விஞ்ஞான கூடம் எனப் பல கட்டட வசதிகளுடன் குழாய்நீர் வசதி, பூந்தோட்டம், சிறுவர் பூங்கா, சுற்றுமதில், கேற் வளைவு என பல்வேறு அழகுப் பொலிவுடன் மிளிரும் இப்பாடசாலை இடம்பெயர்ந்த மாணவர்களால் நிரம்பி வழிந்த காலங்களில் அவர்களுக்கு ஆற்றிய கல்விச் சேவையும் அம்மாணவர்களுக்கு வழங்கிய கல்வியோடிணைந்த ஏனைய உதவி ஒத்தாசைகளும் எக்காலத்திலும் நினைவு கூரப்படுவன.

புகழ்பூத்த பல ஆசிரியர்கள் கற்பிக்கின்ற இப்பாடசாலை இன்னும் பல நூற்றாண்டுகள் சிறப்பான கல்விச்சேவையை மாணவர்களுக்கு வழங்க வேண்டும் என வாழ்த்துவதுடன் இப்பாடசாலையின் வைரவிழா நிகழ்வுகள் மிகச்சிறப்புடன் நடைபெற எனது வாழ்த்துக்களையும் நல்லாசிகளையும் தெரிவித்து நிறைவு செய்கின்றேன்.

**நீதியரசர் க.வி.விக்னேஸ்வரன்**
**முதலமைச்சர்**
**வடமாகாணம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## வளர்புகழ் ஓங்குகவே!

மருதநிலம் மகுடம் சூட 1955ம் ஆண்டு விவசாயக் குடியேற்றத்திட்டமாக விஸ்வரூபம் எடுத்த இராமநாதபுரம் கிராமத்தில் 1956ம் ஆண்டில் முகிழ்த்த இராமநாதபுரம் அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை காலவோட்டத்தில் ஏற்றங்கண்டு இராமநாதபுரம் மகா வித்தியாலயமாகி இன்று வைரித்து நின்று வைரவிழா காண்பது வார்த்தைக்குள் அகப்படாத அடிதொட்ட வளர்ச்சியின் முடிதொட்ட வரலாறாகும்.

கல்விச்சாலைகளுக்கும் கல்லூரிகளுக்கும் நெருக்கமான பிணைப்புண்டு. கல்லுளிகள் சிற்பத்தைச் செதுக்குவது போன்று கல்விச்சாலைகளும் வருங்கால சந்ததியை செதுக்குகின்றன. கல்லிலே கலை வண்ணங்காணும் சக்தி சிற்பிக்கு இருக்கும் போது கல்லுளிகள் காலத்தால் அழியாத அற்புத படைப்புக்களைப் படைத்து விடுகின்றன. இதே போன்றுதான் தம்மிடம் ஒப்படைக்கப்பட்ட இளஞ்சந்ததியினரை இனங்கண்டு அவர் தம் ஆளுமை மற்றும் ஆற்றல்களை வெளிக்கொணர உந்துசக்தியாக நிற்கும் அதிபர் ஆசிரியர்களைக் கொண்டு இயங்கும் கல்விச்சாலைகள் காத்திரமான எதிர்கால சந்ததியை காலத்தின் கரங்களில் கையளிக்கின்றன. இத்தகைய கல்விச் சாலைகளுக்குத்தான் வைரம்காணும் பெரும்பேறு கிட்டுகின்றது. அந்தப் பெரும்பேறு இராமநாதபுரம் மகா வித்தியாலயத்திற்கு கிடைத்தமை கண்டு பேருவகை அடைகின்றேன். இராமநாதபுரம் மகா வித்தியாலயம் அறுபது அகவைகளைக் கடந்து நிற்கும் இவ்வேளையில் அது நடந்து வந்த பாதைதனை சற்று பின்னோக்கி பார்த்தால் பௌதீக வளங்கள், ஆளணிப் பற்றாக்குறையுடன் இப்பாடசாலை சவால்களுக்கு முகங்கொடுத்து நின்றதை எவரும் மறக்க முடியாது. போரின் வடுக்களை தாங்கி நிற்கும் கிளிநொச்சி பாடசாலைகளுள் இப்பாடசாலையும் அடங்கும். இத்தனை சவால்களுக்கு மத்தியிலும் வித்தியாலயம் சரித்திரம் படைக்கின்றது எனின் வைர வரலாறு காண்கிறது எனின் திண்ணிய நெஞ்சமும் தெளிந்த நல்லறிவுங்கொண்ட கல்விச் சமூகத்தினரின் அயராத உழைப்பின் அறுவடை என்பதே நிதர்சனமாகும்.

இவ்வித்தியாலயம் தனது வரலாற்றுத்தடத்தில் இயங்குதிறன் மிக்க இருபத்து நான்கு அதிபர்களையும் ஆற்றல் மிக்க ஆசிரியர்களையும் பண்புசார் பணியாளர்களையும் மாண்புமிகு மாணவச்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செல்வங்களையும் கண்டுள்ளது. இன்றும் கண்டு வருகின்றது. வித்தியாலய வைரிப்பிற்கு வலுச்சேர்த்து உரமூட்டிய மறைந்து போன உத்தமர்களை வணங்கி வாழும் உள்ளங்களைப் போற்றி வாழ்த்துவதுடன் தொடர்ந்தும் வித்தியாலய வளர்ச்சிக்கு உரமிட்டு வரும் அதிபர், ஆசிரியர்கள், பணியாளர்களைப் பாராட்டி வாழ்த்துகின்றேன்.

"ஏட்டிற்கும் ஏருக்கும் ஏற்றம் தருவோம்" என்ற மகுட வாக்கியத்திற்கேற்ப சாதனை படைத்து வரும் வித்தியாலய அன்னையின் மைந்தர்களை மனங்கண்டு வாழ்த்துகின்றேன். வித்தியாலய அன்னை ஈன்று புறம் தந்து தாயக விடுதலைக்காக தம்மை ஆகுதியாக்கிய வீரமறவர்களுக்கு என் வணக்கத்தைச் செலுத்துகின்றேன்.

"வளர் புகழ் ஓங்குவே" என வித்தியாலய கீதம் காற்றில் கலந்து வர வித்தியாலய கொடி விதானித்து பறக்க காலத்தில் கவினுறு கலைக்கோயிலாக இராமநாதபுரம் மகா வித்தியாலயம் இகத்தில் இலங்கிட இறையருள் வேண்டி வாழ்த்தி அமைகின்றேன்.

நன்றி

சி.சிறீதரன்
பாராளுமன்ற உறுப்பினர்
யாழ்ப்பாணத் தேர்தல் மாவட்டம்
இணைத்தலைவர் மாவட்ட ஒருங்கிணைப்புக்குழு
கிளிநொச்சி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வாழ்த்துச் செய்தி

கிளிநொச்சி மாவட்டத்தில் இராமநாதபுரம் கிராமத்தில் பல்வேறு கஷ்டங்களின் மத்தியிலும் சிறப்பாக இயங்கி வரும் கிளி/இராமநாதபுரம் மகா வித்தியாலயம் தனது வைரவிழாவினைக் கொண்டாடுவதை அறிந்து கல்லூரிச் சமூகத்துடன் சேர்ந்து நானும் மகிழ்ச்சி அடைகின்றேன்.

1955ம் ஆண்டு விவசாயக் குடியேற்றத்திட்டத்தின் கீழ் உருவாக்கப்பட்ட இராமநாதபுரம் கிராமத்தில் குடியேறியிருந்த மக்களின் கல்வி அபிவிருத்தி கருதி 1956ம் ஆண்டு மே மாதம் இரண்டாம் திகதி திரு.எஸ்.கனகசுந்தரம் அவர்களை அதிபராகக் கொண்டு ஆரம்பிக்கப்பட்ட பாடசாலை ஆரம்பத்தில் இராமநாதபுரம் அரசினர் தமிழ் கலவன் பாடசாலை என்ற பெயரில் ஆரம்பிக்கப்பட்டுப் படிப்படியாக வளர்ச்சி பெற்று இன்று இராமநாதபுரம் கிராமத்தில் மிகச் சிறந்த கல்விச் சேவையை ஆற்றிவரும் வகையில் தரம் 1 C பாடசாலையாகத் தரம் உயர்த்தப்பட்டு தற்போதைய அதிபர் திரு.M.C.Lமனுவல் அவர்களின் வழிநடத்தலில் முன்னேறி வருவது குறித்து எனது வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

ஒரு பாடசாலையின் வளர்ச்சியும் பின்னடைவும் அந்தந்த காலங்களில் கடமையாற்றிய அதிபர்களின் ஆளுமை விருத்தியிலே தங்கியுள்ளதற்கு உதாரணமாக விளங்கும் இப்பாடசாலையில் முன்னாள் விளங்கிய திரு.ஆ.மகாதேவன், திரு.காராளபிள்ளை, திரு.ஜெயராஜா, திரு.இராமநாதன், திரு.வே.க.இரத்தினகுமார், திரு.சி.நடராசா மற்றும் தற்போதைய அதிபர் திரு.M.C.L மனுவல் போன்ற மேலும் பல அதிபர்களின் அர்ப்பணிப்புடனான பங்களிப்பின் மூலம் கிளிநொச்சி இராமநாதபுரம் மகா வித்தியாலயம் என்ற தரம் உயர்த்தப்பட்ட நிலையில் கல்வி அபிவிருத்தி, சாரணியம், விளையாட்டுத்துறை, ஆங்கிலக்கல்வி அபிவிருத்தி மற்றும் மாணவர்களின் ஒழுக்க விழுமியங்கள் எனப் பல்வேறு பரிமாணங்களிலும் மேலோங்கி வளர்ச்சி பெற்று வந்தமையை கல்லூரியின் வரலாற்றுப் பதிவேடுகளில் இருந்து அறிய முடிகின்றது.

இப்பாடசாலை தூய விவசாயப் பிரதேசமாக விளங்கியமையினால் சமூகத்தின் தேவைகளுடனும் ஒத்துப் போகும் வகையில் கல்வி அபிவிருத்தியையும் இலக்காகக் கொண்டு "ஏட்டிற்கும், ஏருக்கும் ஏற்றம் தருவோம் என்ற மிக அற்புதமான அர்த்தம் நிறைந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு மகுட வாக்கியத்தைக் கொண்டு ஈழத்தின் மிகப் பிரபலமான கவிஞரும் பாடல் ஆசிரியரும், விரிவுரையாளருமாக விளங்கிய பிரம்மசிறி வீரமணி ஐயர் அவர்களினால் இயற்றப்பட்ட "வளர் புகழ் ஓங்குகவே" என்ற அடியில் தொடங்கும் பாடசாலைக் கீதத்தை இசைக்கும் மாணவர்களின் அந்த அருமையான பாடலினூடாக மாணவர்களும், ஆசிரியர்களும் புத்துணர்ச்சி பெற்று தமது அன்றாட பணிகளை ஆற்றுவதும் பெருமைக்குரியது.

பல்வேறு அழுத்தங்கள் மற்றும் சவால்களுக்கு மத்தியில் முன்னேறி வருகின்ற இராமநாதபுரம் மகா வித்தியாலயமே கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள அதிகளவிலான எண்ணிக்கையிலான மாணவர்களைக் கொண்ட இப்பாடசாலை யுத்தத்தினால் பல்வேறு நெருக்கடிகளைச் சந்தித்துள்ள நிலையிலும் கல்வி அபிவிருத்தியில் உயர்ந்த பெறுபேற்றைக் கொண்ட சிறந்த பாடசாலையாக விளங்குகின்றமைக்கு அதிபர், ஆசிரியர்கள், பெற்றோர்கள் மற்றும் பழைய மாணவர்கள் ஆகியோரின் ஒன்றிணைந்த முயற்சியே காரணமாகும்.

அந்த வகையில் இன்று இப் பாடசாலை தனது வைரவிழாவினைக் கொண்டாடும் வேளையில் பாடசாலையின் வரலாறுகளை அடுத்த சந்ததியினருக்கு கையளிக்கும் வகையில் சிறப்பு மலரையும் வெளியிட முன்வந்தமைக்கு எனது பாராட்டுக்களையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

இப்பாடசாலை மேலும் பல சிறப்புக்களைப் பெற்று கிளிநொச்சி மாவட்டத்தில் உயர்ந்த பெறுபேறுகளைக் காட்டும் உன்னதமான ஒரு பாடசாலையாக விளங்கி இராமநாதபுரம் கிராமத்திற்கு மட்டுமல்லாது கிளிநொச்சி மாவட்டத்திற்கே பெருமை சேர்க்க வேண்டும் என்று வாழ்த்துகின்றேன்.

**கலாநிதி.க.சர்வேஸ்வரன்**
**கல்வி அமைச்சர்**
**வட மாகாணம்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வைரவிழா மலர் வாழ்த்துச் செய்தி

ஐம்பதுகளின் ஆரம்பத்திலிருந்து ஆரம்பிக்கப்பட்ட குடியேற்றத்திட்டங்களின் போது இராமநாதபுரம் உதயமாயிற்று. கிளிநெச்சி மாவட்டத்தில் ஏற்படுத்தப்பட்ட இவ்வாறான குடியேற்றத்திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்ட போது மக்களைக் குடியேற்றுவதற்கான மிகக்குறைந்தளவான வசதிகள் வழங்கப்பட்டன. அதன் அங்கமாக அனேகமான குடியேற்றத்திட்டங்களின் ஆரம்பத்தின் போது பள்ளிகளும் அமைக்கப்பட்டன இவ்வாறே மே திங்கள் இரண்டாம் நாள் இராமநாதபுரம் பள்ளி ஆரம்பமாகிற்று.

எட்டு வருடங்களில் இராமநாதபுரம் வடக்கு அரகினர் தமிழ் கலவன் பாடசாலை சிரேஸ்ட்ட பாடசாலை சான்றிதழுக்கான தேர்விற்கு மாணவர்களை தயார்படுத்தியுள்ளதோடு **1966**ல் பள்ளி ஆரம்பித்து பத்து ஆண்டுகளில் இராமநாதபுரம் மகா வித்தியாலயமாக உயர்வு பெற்றது. இவ்வுயர்ச்சியானது பள்ளியின் அபரீத வளர்ச்சியை எடுத்துக்காட்டுகின்றது. இவ்வாறான பிற பாடசாலைகள் கிளிநொச்சி மாவட்டத்தில் சொற்ப காலத்தில் மகா வித்தியாலயமாக உயர்ச்சி கண்டதில்லை என்றே எண்ணுகிறேன்

எனது ஆசிரியப் பணி கல்வி நிர்வாகப்பணிகளின் காலத்தில் பலவாறான சந்தர்ப்பங்களில் ஏட்டிற்கும் ஏருக்கும் ஏற்றம் தருவோம் என்ற மகுட வாக்கியத்தினூடாக இவ்வித்தியாலயத்துடன் மிக நெருக்கமான தொடர்பை வைத்திருந்தேன் என்பதை எண்ணும் போது பெருமிதமடைகின்றேன்.

திரு இராமநாதன் அதிபராக விருந்த சமயம் அவருடன் சேர்ந்து கொத்தணி அதிபராகக் கடமையாற்றிய நினைவுகள் மனதை வருடச் செய்கின்றன. மிகமிக அமைதியானவர் ஆங்கிலப் புலமையை அவர் தனது இந்தியப் பட்டப்படிப்பின் போது பெற்றவர். சேவைக்காலத்திலேயே எம்மை விட்டு பிரிந்தவர். அவ்வேளையில் பள்ளி மிகுந்த கவலையோடு அவருக்கு அஞ்சலி செலுத்தியமை பள்ளியின் மேன்மையை மேலும் மேலோங்கச் செய்துள்ளது.

கிளிநொச்சியிலுள்ள பள்ளிகளில் தனக்கென ஒரு தனியிடத்தை இராமநாதபுரம் மவி பிடித்துள்ளது. தன்னகத்தே வரும் மாணாக்கர் கறையேதும் படியாதபடி அவர்களைத் தேர்ச்சி பெற்றவர்களாக வெளிவிடுவதை பழைய மாணவர்களின் செயற்பாட்டினூடாக நலமறியக்கூடியதாக உள்ளது. கிராமத்தின் மத்தியில் பல வசதிகளுடன் அறுபதைக் கொண்டாடும் இக்கலைக்கூடம் ஏற்றம் தரும் பெருவிருட்சமாக வளர்ந்தோங்கி என்றென்றும் மாணாக்கருக்குப் பணி செய்ய எனது நல்லாசிகள் உரித்தாகட்டும்

**த.குருகுலராஜா**
**மாகாணசபை உறுப்பினர்**
**வடக்கு மாகாணசபை**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வாழ்த்துச்செய்தி

கிளிநொச்சி கல்வி வலயத்தின் பழைமைபெறு கல்லூரிகளில் ஒன்றான இராமநாதபுரம் மகா வித்தியாலயத்தின் வைரவிழா தொடர்பாக கல்லூரிச் சமூகத்தால் வெளியிடப்படவுள்ள மலரிற்காக வாழ்த்துச் செய்தி ஒன்றினை வழங்குவதில் மிக மகிழ்வெய்துகிறேன்.

கடந்தகால கல்விக் கட்டமைப்புக்களில் கொத்தணி அமைப்பு பின்பற்றப்பட்டபோது வட்டக்கச்சி கொத்தணி அமைப்பில் இவ்வித்தியாலயமும் உள்ளடக்கப்பட்ட போது நான் வட்டக்கச்சி கொத்தணி அதிபராக **1988**ம் ஆண்டு தொடக்கம் பதவி வகித்த போதும் பின்னர் **1998**ம் ஆண்டு தொடக்கம் கிளிநொச்சி வலயக் கல்விப் பணிப்பாளராக பதவி வகித்த போதும் நேரடியாக இக்கல்லூரியின் வளர்ச்சிப் போக்கை அவதானித்தவன். அவ்வாறே **2008**ம் ஆண்டுமுதல் மேலதிக மாகாணக் கல்விப்பணிப்பாளராக விளங்கிய போதும் பல வைபவங்களுக்கு இவ் வித்தியாலயத்திற்கு சமூகமளித்தேன்.

கிளிநொச்சி மாவட்டத்தின் வளர்ச்சிப் பாதையில் குடியேற்றத்திட்டங்கள் **1956**ம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டபோது இராமநாதபுரம் அ.த.க பாடசாலை ஆரம்பிக்கப்பட்டது. மக்களது அளப்பரிய ஒத்துழைப்பின் காரணமாக படிப்படியாக வளர்ச்சி பெற்று இன்று மகா வித்தியாலய நிலைமைக்கு வளர்ச்சி கண்டுள்ளது. இப்பாடசாலையின் வளர்ச்சியில் முன்னைய அதிபர்களின் பங்களிப்பு வேறு பாடசாலைகளோடு ஒப்பிடுகையில் தனித்துவமானது. உதாரணமாக என்னால் என்றும் நினைவுகூறப்படும் அதிபர்கள் வரிசையில் அமரர் காராளபிள்ளை போற்றப்பட வேண்டியவர். கொம்யூனிஸ் காராளபிள்ளை என அனைவரும் அழைப்பர். அப்போதைய சூழ்நிலையில் மிகப் பலம் வாய்நத அரசியல் வாதியாகவும் விளங்கினார். இக்காலத்திலேயே அதிகளவான மாணவர்கள் க.பொ.த (சா.த) பரீட்சையில் சித்தி எய்தியவர்கள்.

இவ்வகையில் இவரின் பின்னர் அதிபராக பதவி வகித்த அமரர்.ஜே.எம்.பி.ஜெயராசா அவர்களின் காலத்தில் இவ்வித்தியாலயம் பன்முக வளர்ச்சியைப் பெற்றது. ஆங்கிலதினப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போட்டிகளிலும், உடற் பயிற்சிப் போட்டிகள், மெய்வல்லுநர் போட்டிகளில் மாவட்ட மட்டத்தில் முதலிடம் பெற்றதோடு மாவட்டத்தில் இராமநாதபுரம் ம.வியை பலரும் பாராட்டும் முதன்மை நிலை ஏற்பட்டது. இத்தகைய அத்திவாரமொன்றை அமரர் ஜெயராசா தொடக்கி வைத்தார். அதனைத் தொடர்ந்து 1996ல் அதிபராக திரு.வே.க.இரத்தினகுமார் பதவி ஏற்றபின் பாடசாலையின் வளர்ச்சி அபரிமிதமாக தோற்றம் பெற்றது. ஏறத்தாழ 2600 மாணவர்கள் கல்வி கற்றனர். பல்வேறு கட்டடங்கள் அமைக்கப்பட்டன. வந்தாரை வரவேற்க முகப்புறம் பூங்காவாக மலர்ச்சி பெற்றது. அத்துடன் மாவட்டப் போட்டிகளில் இவ்வித்தியாலயம் தனது தனித்துவத்தை வெளிக்காட்டியது. இவ்வாறான வளர்ச்சிப் போக்கில் திரு.க.இரத்தினகுமாரைத் தொடர்ந்து திரு.க.இராஜமகேந்திரன் அதிபராக பதவி வகித்த காலத்திலும் பின்னர் திரு.க.முருகவேல் அதிபராக பதவி வகித்த காலத்திலும் மாவட்டத்தில் ஏற்பட்ட போரியல் தாக்கங்கள் பாடசாலையை பாதிக்கத் தொடங்கின. இதன் உச்சகட்டமாக 2009-2010 காலப்பகுதி பாடசாலை ஒரு வெற்று நிலமாக காட்சி தந்தது.

2011ம் ஆண்டைத் தொடர்ந்து பாடசாலை துரிதகதியாக வளர்ச்சி பெறத் தொடங்கியது. இவ்வேளையில் பல்வேறு சிரமங்களின் மத்தியில் திரு.சி.முருகானந்தம், திரு.சி.நடராசா ஆகியோர் அதிபர்களாக பதவி வகித்து பாடசாலையை முன்னைய நிலமைக்கு மாற்றியதுடன் பெற்றோர், பழைய மாணவர் ஒத்துழைப்புக்கு மத்தியில் வைரவிழா ஒன்றினை நடாத்தும் முயற்சியில் மும்முரமாக ஈடுபட்டனர். வைரவிழாவின் சிறப்பம்சமாக வைரவிழா நினைவுத்தூபி ஸ்தாபிக்கப்பட்டது. கலைத்தாய் சரஸ்வதிக்கு சிலை அமைக்கப்பட்டது. வைரவிழாவையும் அது தொடர்பான மலரையும் வெளியிடும் பொறுப்பு தற்போதைய அதிபர் திரு.M.C.L மனுவல் அவர்களிடம் கையளிக்கப்பட்டுள்ளது. வட்டக்கச்சி ம.வியின் அதிபராக விளங்கிய திரு.மனுவல் அவர்கள் அப்பாடசாலையின் வைரவிழாவையும், மலரையும் வெளியிடும் பல முன்னேற்பாடுகளைச் செய்து கொண்டிருக்கும் போது இடமாற்றம் பெற்றமையால் அவரிடம் மிகுந்த அனுபவ அறிவு உள்ளது. இதனால் இவ்வித்தியாலயத்தின் இரு நிகழ்வுகளும் மிகச் சிறப்பாக அமையும் என்பது வெளிப்படை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீண்ட பாரம்பரியம், அளவற்ற சாதனைகள், பரீட்சைகளில் பெற்ற சாதனைகள், இணைபாடவிதான செயற்பாடுகள் அனைத்திலும் இவ்வித்தியாலயம் பல சாதனைகளை நிகழ்த்திக் காட்டி உள்ளது. இவற்றிற்கெல்லாம் பதவி வகித்த அதிபர்களது அர்ப்பணிப்புகள், பெற்றோர் பழைய மாணவர்களது பின்புலம் எதனையும் முன்னெடுக்கும் ஆசிரியர்கள், கல்வித் திணைக்களத்தோடு உள்ள உறவு என பல பண்புகளின் வெளிப்பாடே இவ் வைரவிழா. இவ்வகையில் நான் ஒரு நிருவாக அதிகாரியாக பதவி வகித்த வகையில் எனது நல்வாழ்த்துக்களை வழங்குவதுடன் வைரவிழா சிறப்புற மனமார வாழ்த்துகிறேன். இவ்வாறே வெளியிடும் மலரும் என்றும் மணம் வீச இறைவனையும் வேண்டுகிறேன்.

**ப.அரியரத்தினம்**
**முன்னாள் வலயக்கல்விப் பணிப்பாளர்**
**முன்னாள் மேலதிக மாகாண கல்விப்பணிப்பாளர்**
**வடமாகாணசபை உறுப்பினர்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வாழ்த்துச் செய்தி

இயற்கையெழில் கொஞ்சும் இனிய ஊராம் இராமநாதபுரத்திலே பெருமையுடன் காட்சி தரும் உயர்தரபாடசாலை கிளி/இராமநாதபுரம் மகா வித்தியாலயம் என்றால் மிகையில்லை. அது அறுபது ஆண்டுகளாக தனது தன்னிகற்ற பணியை இப் பிரதேசப் பிள்ளைகளுக்காக ஆற்றி வருவது நாம் அனைவரும் அறிந்ததே.

நான் இப் பாடசாலையின் பழைய மாணவன் என்பதை இங்கு கூறிக்கொள்வதில் பெருமகிழ்ச்சியடைகின்றேன். நான் கல்வி கற்கும் காலத்தில் திரு.த.மார்க்கண்டு அவர்கள் இப் பாடசாலையின் அதிபராகக் கடமையாற்றிக் கொண்டிருந்தார்.

திரு.ஏ.பி.மரியதாசன் ஆசிரியர் அவர்கள் கிளிநொச்சியில் இருந்து வந்து எமக்கு கணித பாடத்தைக் கற்பித்தது. இன்னும் பசுமரத்தாணிபோல் என்னுள் பதிந்துள்ளது. அவரை எனது வாழ்நாளில் என்றுமே மறக்கமுடியாது. அவரின் கற்ப்பித்தல் பாணி அனைவரையும் கவர்ந்திழுக்கும்.

இப் பாடசாலையில் கற்ற மாணவர்கள் எப்போதும் தமது ஒழுக்க விழுமியங்களைப் பேணிபாதுகாத்து வந்தவர்களாகவே காணப்படுகின்றனர். இப் பாடசாலையைப் பொறுத்தவரை ஒழுக்கம் குன்றிய மாணவர்கள் என்று எவரையுமே நாம் கூறமுடியாது. அவ்வளவிற்கு இப் பள்ளி மாணவர்களை சிறந்த முறையில் வளர்தெடுத்துள்ளது. இதன் அடிப்படையில் இப்போது கற்கும் மாணவர்களும் சிறந்த ஒழுக்க விழுமியங்களைப் பேணி எமது பாடசாலைக்கு மென்மேலும் பெருமையைச் சேர்க்க வேண்டும்என இவ் வேளையில் கேட்டுக் கொள்கின்றேன்.

மாணவர்களே, ஆயகலைகள் பலவற்றை அள்ளி அள்ளி வழங்கும் எமது கல்லூரிக்த் தாய்க்கு இன்னும் பல மகுடங்களைச் சூட்ட நீங்கள் முன் வர வேண்டும். மேலும் வைரவிழாவும் மலர்வெயீடும் சிறக்க எனது மனமார்ந்த வாழ்த்துக்களைத் தெரிவித்து கொள்கின்றேன்.

**திரு.வை.தவநாதன்**
**பழையமாணவன்( கிளி/இராமநாதபுரம் ம.வி)**
**வடமாகாணசபை உறுப்பினர்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வாழ்த்துச் செய்தி

கிளி/இராமநாதபுரம் மகா வித்தியாலயத்தின் 60வது அகவை நிறைவை முன்னிட்டு வெளியிடப்படும் வைரவிழா மலருக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் பெருமகிழ்ச்சியடைகின்றேன்.

1955ம் ஆண்டு விவசாயக் குடியேற்றத் திட்டமாக உருவாக்கப்பட்ட இராமநாதபுரம் கிராமத்தில் கிளி/இராமநாதபுரம் அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை என்ற பெயரோடு தரம் 05 வரையான வகுப்புக்களைக் கொண்டு ஆரம்பிக்கப்பட்ட இப்பாடசாலை படிப்படியாக வளர்ச்சியடைந்து தற்போது 1 - 13 வரையான வகுப்புக்களைக் கொண்டு கிளி/இராமநாதபுரம் மகா வித்தியாலயமாகத் தரமுயர்த்தப்பட்டு கிளிநொச்சி மாவட்டத்தில் சிறப்பாக இயங்கி வருவதை எண்ணி பெருமகிழ்ச்சியடைகின்றேன்.

பாடசாலையின் பௌதீக, விளையாட்டு, கலாச்சாரம் போன்ற துறைகளின் வளர்ச்சியை ஆவணப்படுத்தும் சான்றுகளாக காலத்துக் காலம் வெளிவரும் பாடசாலை சஞ்சிகைகள் அமைகின்றன. அந்தவகையில் இவ் வைரவிழா மலர் எதிர்கால சந்ததியினருக்கு வரலாற்றுப் பதிவாக இருக்கும் என்பதில் எவ்வித ஐயமுமில்லை.

இப்பாடசாலை பல கல்விமான்கள், உயரதிகாரிகள், சிறந்த வீரர்கள், நற்பிரஜைகள் போன்றோரை உருவாக்கி மாகாண மற்றும் தேசிய மட்டத்தில் பல சாதனைகளைப் படைக்க எமது மனமார்ந்த வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்வதுடன் வைரவிழா வெளியீடாக வெளியிடப்படவுள்ள இம்மலர் வெளியீடு சிறப்புற அமைய எனது மனமார்ந்த வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**இ.இரவீந்திரன்**
**செயலாளர்**
**கல்வி, பண்பாட்டலுவல்கள்,**
**விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சு,**
**வடமாகாணம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## வாழ்த்துச் செய்தி

கிளி/இராமநாதபுரம் மகா வித்தியாலயமானது வைரவிழாவினை யொட்டி வெளியிடப்படும் மலரிற்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் மகிழ்வடைகின்றேன்.

இராமநாதபுரம் கிராமத்தில் 1956ம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்ட இப்பாடசாலை ஆரம்பத்தில் தரம் 05 வரை வகுப்புக்களைக் கொண்டதாக கிளி/இராமநாதபுரம் அ.த.க பாடசாலை எனும் பெயருடன் ஆரம்பிக்கப்பட்டது. பின்பு படிப்படியாக வளர்ச்சி பெற்று 1964ல் க.பொ.த(சா.த) வகுப்புக்களைக் கொண்ட பாடசாலையாக வளர்ச்சி பெற்றது. இப்பாடசாலை தற்போது மகா வித்தியாலயமாக வளர்ச்சி பெற்று சிறப்புடன் இயங்கி வருகின்றது.

இப்பாடசாலையினது வளர்ச்சிக்கு இப் பாடசாலையில் அதிபராகக் கடமையாற்றிய அதிபர்கள் காரணகர்த்தாக்களாக இருந்துள்ளனர். "ஏட்டிற்கும் ஏருக்கும் ஏற்றம் தருவோம்" எனும் மகுட வாக்கியத்திற்கு ஏற்ப கல்விக்கும், விவசாயத்திற்கும் முக்கியத்துவமளித்து இப்பாடசாலை செயற்பட்டு வருகின்றது. இப்பாடசாலையில் கல்வி கற்ற பல மாணவர்கள் இன்று சிறப்பான நிலைமையில் சமூகத்தில் நன்மதிப்புடன் வாழ்ந்து வருகின்றமை கடந்த காலங்களில் இப்பாடசாலை சமூகத்திற்கு ஆற்றிய பெரும்பணிகளை கட்டியங்கூறி நிற்கின்றது.

வைரவிழாக் காணும் இப்பாடசாலை தொடர்ந்தும் இப்பிரதேச மாணவர்களிற்கு சிறப்பான கல்வியை வழங்கி இப்பிரதேசத்தின் வளர்ச்சிக்கு பங்களிப்பினை வழங்க ஆசி கூறி வாழ்த்துகின்றேன்.

**திரு.செ.உ.தயகுமார்**
**மாகாணக் கல்விப் பணிப்பாளர்**
**வடமாகாணம்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வாழ்த்துச்செய்தி

குடியேற்ற முறைமைக்கு ஊடாக வளர்ச்சியடைந்த மாவட்டமான கிளிநொச்சி மாவட்டமானது விவசாய மாவட்டமாக காணப்படுவதால் ஆரம்ப காலத்தில் நீர்நிலைகளை அடிப்படையாகக் கொண்டு குடியிருப்புக்கள் அமைக்கப்பட்டது. அக் குடியிருப்பாளர்கள் குளங்களை அண்டிய பகுதிகளில் வயல்களை அமைத்து நெற்பயிற்செய்கையினை மேற்கொண்டனர். மாரிமழை பொய்த்துப் போகும் தருணங்களில் குளங்களிலிருந்து வாய்கால்களை வெட்டி நீர் பாய்ச்சி விவசாயத்தினை மேற்கொண்டனர்.

அந்த வகையில் விவசாயத்தின் மூலம் செல்வம் கொழிக்கும் பூமியாக விளங்குகின்ற கிளிநொச்சி மாவட்டத்தில் கரைச்சி பிரதேச செயலகப் பிரிவிலுள்ள இராமநாதபுரம் எனும் கிராமமும் விவசாயத்தினை அடிப்படையாகக் கொண்டு குடியேற்றப்பட்ட மக்கள் வாழ்கின்ற செழிப்பான கிராமமாக விளங்குகிறது. சேர்.பொன்.இராமநாதன் அவர்களின் விவசாயப் பண்ணைகள் இந்தப் பிரதேசத்தில் அதிகளவில் காணப்பட்டமையால் அவரது பெயரால் அழைக்கப்பட்ட பண்ணை நிலங்களது பெயர் பின்னர் ஊரினை அழைக்கும் பெயராக மருவியிருக்கலாம் என்று கூறப்படும் மரபும் காணப்படுகிறது. இவ்வழகிய கிராமத்தில் சிறுவர்களுக்கு கல்வி போதிக்கவென ஆயிரத்து தொள்ளாயிரத்து ஐம்பத்து ஆறாம் ஆண்டு **(1956)** ஆரம்பிக்கப்பட்ட கிளி/இராமநாதபுரம் மகாவித்தியாலயம் கல்விச் சமூகத்தினரின் அர்ப்பணிப்புமிக்க சேவையினால் மிகவும் சிறப்பான நிலையினை அடைந்துள்ளது.

மாணவர்களை கல்விச் செயற்பாடுகளில் மட்டுமன்றி விளையாட்டு மற்றும் இதரசெயற்பாடுகளிலும் ஈடுபடுத்தி பல சாதனைகளையும், கௌரவிப்புக்களையும், நன்மதிப்புக்களையும் பெற்று நிற்கின்றது. பாசாலைச் சமூகத்தினர் இத்தருணத்தில் வைரவிழாவினை கொண்டாடுவதுடன் இவ் விழாவைப் பதிவு செய்யும் வகையில் சிறப்பு மலர் ஒன்றினை வெளியிடுவதும் சிறப்பான செயற்பாடாகும். எதிர்காலத்தில் இப் பாடசாலை சகல வளங்களையும் பெற்ற கல்லூரியாக உயர்வு பெற்று கல்வியறிவோடு ஒழுக்கத்தில் சிறந்த நற்பிரஜைகளையும், சான்றோர்களையும், விற்பன்னர்களையும் உருவாக்கி இவர்கள் மூலம் இம் மண்ணுக்கு புகழ்சேர்க்க வேண்டுமென எல்லாம்வல்ல இறைவனை வேண்டிப்பிரார்த்திப்பதுடன் சகலவழிளிலும் அயராது உழைத்துக்கொண்டிருக்கின்ற அதிபர், ஆசிரியர்கள் பாடசாலைச் சமூகத்தினர், நலன்விரும்பிகள் அனைவருக்கும் எனது இதயபூர்வமான வாழ்த்துக்களையும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**சுந்தரம் அருமைநாயகம்**
**மாவட்டசெயலர் (அரசாங்க அதிபர்)**
**கிளிநொச்சிமாவட்டம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வாழ்த்துச்செய்தி

கிளி/இராமநாதபுரம் மகா வித்தியாலயத்தின் மலருக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் மட்டற்ற மகிழ்ச்சியடைகின்றேன். கிளிநொச்சிக் கல்வி வலயத்தின் கரைச்சிக் கோட்டத்திலுள்ள தலைசிறந்த பாடசாலைகளில் கிளி/இராமநாதபுரம் மகா வித்தியாலயமும் ஒன்றாகும். போருக்குப் பின்னான காலப்பகுதியில் துரிதமான வளர்ச்சியடைந்து வரும் இப் பாடசாலையானது, கல்வியிலும், இணைபாடவிதமான செயற்பாடுகளிலும் சாதனைகளை நிலைநாட்டி வருவது கண்கூடு.

இப்பாடசாலையானது தனது வளர்ச்சிப் பாதையில் பல படிமுறை வளர்ச்சிகளைக் கண்டு, இன்றைய தினம் வைரவிழாவினைக் கொண்டாடுவது மகிழ்ச்சிக்குரிய விடயமாகும். இத்தகைய பெருமைமிக்க நாளின் பதிவாகவும், வரலாற்று ஆவணமாகவும் விளங்கும் வைரவிழா மலரினை இராமநாதபுரம் மகா வித்தியாலய கல்விச் சமூகம் வெளியிடுவது மேலும் சிறப்பம்சமாகும். அந்த வகையில் இராமநாதபுர மகாவித்தியாலய கல்விச் சமூகத்தினரையும் மலர் வெளியீட்டுக் குழுவினரையும் மனதாரப் பாராட்டுகின்றேன்.

மாணவர்களை கல்விமான்களாக உருவாக்கி விடுவது மட்டும் கல்விச் சமூகத்தின் பணியல்ல. அவர்களை நல்ல பிரஜைகளாக, சமநிலை ஆளுமைப் பண்புள்ளவர்களாக உருவாக்குவதும் கல்விச் சமூகத்தின் கடமையாகும். இன்றைய மலர் வெளியீட்டு முயற்சிகளின் போது தலைமைத்துவம், தொடர்பாடல், எற்றுக் கொள்ளுதல், புரிந்துணர்வு, முதலிய சமநிலை ஆளுமைப் பண்புகள் மாணவர்களிடையே வளர்த்தெடுக்கப்படுகின்றன.

ஒரு கல்விச் சமூகம் தாம் வாழ்ந்த, வாழ்கின்ற காலப்பகுதிகளுக்கான வரலாற்று ஆவணங்களைச் சான்றுப்படுத்துவதிலும் அவற்றைப் பேணுவதிலும் சிரத்தையுடனும், விழிப்புணர்வுடனும் செயற்பட வேண்டியது காலத்தின் கட்டாயமாகும். அத்தகைய பணியினை இராமநாதபுரம் மகா வித்தியாலய கல்விச் சமூகம் செவ்வனே நிறைவேற்றியுள்ளது.

வைரவிழா நிகழ்வுகளும் மலர் வெளியீடும் சிறப்புற அமைய எல்லாம் வல்ல இறையருள் இறைஞ்சி வாழ்த்துகின்றேன்.

*தி.ஜோன் குயின்ரஸ்,*
*வலயக் கல்விப்பணிப்பாளர்,*
*வலயக் கல்வி அலுவலகம்,*
*கிளிநொச்சி.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வாழ்த்துச்செய்தி

இராமநாதபுரம் மகாவித்தியாலயத்தின் வைரவிழா மலருக்கான வாழ்த்துச் செய்தி வழங்க கிடைத்த சந்தர்ப்பத்தை எண்ணி மிகவும் மனம் மகிழ்ச்சி அடைகின்றேன். நான் பிறப்பதற்கு முன்னர் ஆரம்பிக்கப்பட்ட இப்பள்ளிக்கூடம் தற்போது பலபடிமுறைகளாக வளர்ச்சியடைந்து மாணவச்செல்வங்களுக்கு அளப்பரிய கல்விச் செல்வத்தை வாரி வழங்கிக்கொண்டிருக்கின்றது. பல காலகட்டங்களாக நடைபெற்ற யுத்தசூழல் காரணமாக பள்ளிகள் அவ்வப்போது இடம்பெயர்ந்து வேறு வேறு இடங்களில் தற்காலிகமாக இயங்கின. ஒருகால கட்டத்தில் வட்டக்கச்சி மத்தியகல்லூரி இராமநாதபுரத்தின் பள்ளி வளாகத்துள் இயங்கியது. அந்நேரத்தில் அப்பள்ளிச்சமூகம் முழுமனதோடு இவர்களையும் வரவேற்று இணைத்து கல்வியை வழங்கியது

எனக்கு க.பொ.த சாதரண தரத்தில் கற்பித்த ஆசிரியர் திரு.J.M.P.ஜெயராசா அவர்கள் அதிபராகக் கடமையாற்றிய இப் பாடசாலையிலேயே நானும் அதிபராக கடமையாற்றியது எனது பாக்கியமே நான், அரசசேவைக்காலத்தில் அதிபராக கடமையாற்றியது ஒரு பாடசாலையில் மட்டுமே அந்தப்பாடசாலையில் வைரவிழா காணும் சந்தர்ப்பம் கிடைத்ததற்கு மிகவும் மகிழ்ச்சி அடைகின்றேன். மிகவும் நெருக்கடியான துன்பகரமான காலகட்டத்தில் நான் அதிபராக பதவி வகித்தது இன்றும் கூட மறக்க முடியவில்லை. உறவுகளை இழந்து, பிரிந்து வாழும் கால கட்டத்தில் கற்பதற்கான சூழல், மனநிலை இல்லாத போது கற்பிப்பதற்கான விருப்ப இல்லாத நேரத்தில் கல்வியை வழங்கும் பொறுப்பை ஏற்று இயன்றளவு நகர்த்திக்கொண்டு சென்றோம்.

இப் பள்ளியிலிருந்து பெருமளவு மாணவர்கள் கணித, விஞ்ஞானப் பிரிவுகளில் கற்பதற்காக சித்திபெற்றும் வேறு பாடசாலைகளுக்கு செல்லவேண்டிய நிலமை ஏற்பட்டது. எனினும் இப் பள்ளியில் உயர்தர கணித, விஞ்ஞானப் பிரிவுகள் இல்லை. இவ்வாறு கற்ற மாணவர்கள் இன்று பொறியியலாளராக, மருத்துவராக, ஆசிரியர்களாக, அரச உத்தியோகத்தர்களாக கடமைபுரிகின்றனர். இவ்வாறு அளப்பரிய கல்விச் சேவையை வழங்கிக் கொண்டிருக்கின்ற பெருமை இப் பள்ளித் தாய்க்குரியதாகும். இப்பள்ளி பல்வேறு துறைகளில் மென்மேலும் வளர்ச்சி பெற இறைவனை இறைஞ்சி வாழ்த்துக்கூறி நிறைவுசெய்கின்றேன்.

**க.முருகவேல்**
**முன்னைநாள் அதிபர்**
**கிளி;இராமநாதபுரம் ம.வி**
**வலயக்கல்விப்பணிப்பாளர் (ஓய்வு நிலை)**
**கிளிநொச்சி.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வாழ்த்துச் செய்தி

***"ஈன்ற பொழுதிற் பெரிதுவக்கும் தன்மகனைச் சான்றோன் எனக் கேட்டதாய்"***

இவ்வுலகில் மனிதனை உருவாக்கும் தாயானவள் தனது பிரசவ வேதனையின் போது திருமுகம் கண்ட குளவியின் வாஞ்சையால் தன்வேதனை அனைத்தையும் மறக்கின்றாள். அதைவிட மேலாக அத்தகவு மகவு சான்றோன்" என்ற பெயரை ஈட்டியதும் ஈன்ற பொழுதிலிருந்த சந்தோசத்தை விட மிகமேலாக உவகை அடைகின்றாள் என தெய்வப் புலவர் வள்ளுவப் பெருந்தகை குறளினால் எமக்கு தந்துள்ளார். ஒருவனைச் சான்றோன் ஆக்கும் கல்வி, கேள்வி என்பன உலகியலில்மிகவும் வியாபகமானது. குருகுலக்கல்வியிலிருந்து நவீன கல்வி அமைப்பு வரை கலைக்கூடங்கள் இவ் அரும்பணியை நிகழ்த்தி வருகின்றன.

தற்கால ஜனநாயக கல்வி அமைப்பிலே பாடசாலையூடாக வழங்கப்படும் கல்வியே மிக அதிகமானவை. ஆரம்பக்கல்வி முதல் சிரேஸ்ட கல்வி வரைபாடசாலைகளின் அறிவூட்டலினாலேயே அனேகமாகப் பெறப்படுகிறது. இவ்வகையில் நோக்கும் போது ஒரு மனிதனைச் சான்றோனாக்கும் கைங்கரியத்தின் பெரும் பங்கினை பாடசாலைகள் ஏற்கின்றன மாதா, பிதா, குரு, தெய்வம் என்ற பணிநிலை அமைப்பினூடாக ஒரு மனிதன் பெறும் தகைமைகள் மனித வாழ்வின் கட்டங்களாக அமைகின்றன இவ்வகையில் மாதா, பிதா என்பவர்களின் சேர்மானத்தின் பின் குருவிடம் செல்லும் ஒரு மகவு தான் சான்றோன் ஆக வேண்டுமென்ற ஒரு தேவை கருதி கல்வி, கேள்வி என்பவற்றிலீடுபடுகின்றது. இதனடிப்படையில் அவர்தம் இயலுமையின் அடிப்படையில் திறமைசாலிகளாகின்றனர்.

உலகிற்கு உடலை வழங்கிய தாய் எவ்வாறு முன்னுரிமை பெறுகின்றாளோ அதேயளவில் ஒரு மனிதனுக்கு அறிவைவழங்கும் கலைக்கூடங்கள் உயர்நிலை பெறுகின்றன.

இந்தவகையில் நோக்கும் போது இராமநாதபுரம் என்ற குக்கிராமத்தில் அறிவொளியை வளர்ப்பதற்காக உருவாக்கப்பட்ட எம் கலைக்கூடம் வைரவிழாக்கண்டு இத்தீவிலும், புலம் பெயர் பூமிகளிலும் தனக்கென ஒரு கௌரவத்தினை நிலை நிறுத்திக் கொண்டிருக்கின்றமை கண்டு அதன் புதல்வர்களாகிய நாம் புளகாங்கிதம் கொள்கின்றோம். எமை அரவணைத்த எம் பாடசாலைத் தாயானவள் எம் தேவைகள் அறிந்து உயர்நிலைப்படுத்திய அர்ப்பணிப்பு மிக்க அதிபர்கள், அன்பும், பாசமும் கொண்டு கல்வி வழங்கி ஆற்றுப்படுத்திய ஆசான்கள், அன்பு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வழிகாட்டிகளான மூத்த உறுப்பினர்கள், எம் சக நண்பர்கள் எம் பின் கல்வி பயின்ற அன்பு சகோதரர்கள் என்று பல உறவுகளைத் தாங்கி இன்று வீறுநடைபோட்டு நிமிர்ந்து வாளும் எம் கலைக்கூடம் இராமநாதபுரம் மகா வித்தியாலயம் என்றென்றும் இவ்வுலகில் புகழ்பரப்பி இணைத்து வரும் மாணவர்கள் நலனோம்பி அவர்களைச் சான்றோர்களாக்கி இவ்வுலகிற்கு ஈய்ந்துவரும் செயற்பாடானதே தாயுள்ளம் பெருமிதமடையும்.

இக்கலைக்கூடத்தின் ஆரம்ப கல்வியை 1962ம் ஆண்டிலிருந்து பெற்று 1970ம் ஆண்டு க.பொ.த.(சாதாரண) தரச்சித்தியைப் பெற்றுக் கொண்டு உயர் கல்விக்காக விலகவேண்டிய தேவை ஏற்பட்டது. அதிலுள்ள இப்பாடசாலையில் ஆசிரியராகவும், பிரதி அதிபராகவும் கடமையாற்றி அதிபர் பதவிக்கமைய வேறுபாடசாலை செல்ல நேர்ந்தது.

எங்கள் பாடசாலை வாழ்க்கையில் ஆரம்பம்முதல் இறுதிவரை கற்பிப்பதில் பங்கு கொண்ட ஆசிரியப் பெருந்தகைகள் நிர்வாகமாற்றிய அதிபர் கனவான்கள் என்போரின் நிறை நிலைச் சேவைகளை எண்ணி மனம் மகிழக்கூடியதாகவுள்ளது. (ஏட்டிற்கும், ஏரிற்கும் ஏற்றம் தருவோம்" என்ற மகுடவாசகத்திற்கிணங்க இவ் சிவதாயப் பூமியின் விடிவிளக்காகத் திகளும் எம் இராமநாதபுரம் மகாவித்தியாலயம் நவீன கலைத்துவங்களைக் கற்பிக்கக்கூடிய பெரியதொரு கல்லூரியாகத் திகழ எனது கனம் நிறைந்த நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**இங்ஙனம்**
**திரு.கோ.செல்வராசா**
**(பழைய மாணவன்,ஆசிரியர்,பிரதி அதிபர்,**
**ஓய்வு நிலை பிரதிக்கல்விப் பணிப்பாளர்**
**கல்வி முகாமைத்துவம்**
**கிளி வலயம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## வாழ்த்துச்செய்தி

ஒரு சமூகத்தின் முக்கிய நிறுவனங்களுள் ஒன்று அங்கிருக்கும் பாடசாலையாகும். இராமநாதபுரம் எனும் குடியேற்றக்கிராமத்தின் பாடசாலையான கிளி/இராமநாதபுரம் மகாவித்தியாலயம் இன்று தனது அறுபது ஆண்டு அகவையைப் பூர்த்தி செய்து அறுபத்தோராவது அகவையில் கால் பதித்து வைரவிழாக்காணும் இத்தருணத்தில் அதன் வைரவிழா மலருக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் நான் மட்டற்ற மகிழ்ச்சி அடைகின்றேன். வைரம் + விழா = வைரவிழா. ஓர் அமைப்பு சங்கம் நிறுவனம் அல்லது நிர்வாகம் தோன்றி அறுபது ஆண்டுகள் வெற்றிகரமாக செயற்பட்டு இன்னும் உயிர்த்துடிப்போடு இயங்கிக்கொண்டிருந்தால் அந்த நிலையை வைரவிழா என்று வெகு அமர்க்களமாகச் சம்பந்தப்பட்டவர்கள் கொண்டாடி மகிழ்வர். அந்த வகையில் இராமநாதபுரம் ம.வி உயிர்த்துடிப்புடன் இயங்கியதை பறைசாற்றும் இவ்விழாவின் மலர் சிறந்தோங்குக. இவ்வித்தியாலயம் கடந்த ஆண்டகளில் பல அளப்பரிய பணியைச் செவ்வனே செய்ததன் காரணத்தால் பல அறிஞர்கள் கல்விமான்களை உருவாக்கித் தந்துள்ளது என்றால் மிகையில்லை. வைரவிழா இனிதே நிறைவேறவும் அவ்விழாவின் மலர் சிறக்கவும் எல்லா வல்ல மாவடி அம்மன் அருள் வேண்டி வாழ்த்துகின்றேன்.

**திரு.அமிர்தலிங்கம்**
***கோட்டக்கல்விப்பணிப்பாளர்***
**கரைச்சி**
**கிளிநொச்சி**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வாழ்த்துச் செய்தி

கழனியும் காடும் கற்றறிந்த அறிஞர்களும் கன்றும் பசுவும் "கணீர் கணீர்" என ஒலி எழுப்பும் ஆலயங்களும் வானுயர் தென்னந் தோப்புக்களும் தெளிந்த நீர் வாவிகளும் சிற்றாறுகளும் சூழ்ந்த இராமநாதபுரத்திலே அறுபது ஆண்டுகளால் அறிவுப் பசிக்கு கல்வி உணவூட்டி சான்றோர்களையும் புத்திமான்களையும் துறைசார் வல்லுநர்களையும் உருவாக்கித்தந்த இராமநாதபுரம் மகாவித்தியாலயம் தனது வைரவிழாவினைக் கொண்டாடுவதையிட்டு பழைய மாணவனாகிய நான் பேருவகை அடைகிறேன்.

மாணவனாக இப்பாடசாலையில் கழித்த நாட்கள் எனது வாழ்க்கையின் பெரும் பொக்கிஷங்களாகும். இப்பாடசாலையின் நிகழ்வு யாதாயினும் நடந்தால் அதனைத் தவற விடுவதில்லை. படித்த வகுப்பறை, விளையாடிய முற்றம் என்பவற்றைப் பார்க்கப் பார்க்க கடந்த கால நாட்களின் உணர்வுகள் மனதினை இதமாக வருடிச் செல்லும். பழகிய நண்பர்கள் இன்று உலகின் பல பகுதிகளில் வாழ்ந்தாலும் அவர்களது எண்ணங்களும் இப்பாடசாலையின் நாட்களை நினைப்பதை அறிகின்றேன். இப்பாடசாலை மென்மேலும் வளர்ச்சி பெற்று வளர்ந்து விட்ட ஆசான்களையும் நினைவில் அழியாது வைத்து வானுயர் சிறப்புப் பெற்று பல நூற்றாண்டு விழாக் கொண்டாட இவ்வைர விழாவில் வாழ்த்துகிறேன்.

நீ.ஜோன் ஜெகநாதன்
(பழைய மாணவன்)
கிராம அலுவலர் பு0
மாயவனூர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## வாழ்த்துரை

ஆண்டது ஐம்பத்தாறில் தொடங்கிய சேவை அறுபதாம் ஆண்டினையும் பூர்த்தி செய்து மிடுக்குடன் எமை நோக்கும் இராமநாதபுரம் மகா வித்தியாலயத்தின் வைரவிழா நினைவாக வெளியிடும் இச்சஞ்சிகைக்கு வாழ்த்துச்செய்தி தெரிவிப்பதையிட்டு பெருமகிழ்ச்சியடைகின்றேன்.

அன்று தொட்டு எத்தனையோ புத்திஜீவிகளை, நற்பிரஜைகளை உருவாக்கி எமது கிராமத்திற்கு பெருமை தேடித்தந்த இவ்வித்தியாலயம் 1AB தரத்திற்கு உயர்த்தப்பட வேண்டும். எமது பிள்ளைகள் தூரப்பாடசாலைகளுக்கு அலைந்து திரிந்து கஷ்டப்படாது கணித விஞ்ஞான கற்கை நெறிகளை இங்கேயே தொடர ஆவன செய்துதவ வேண்டுமென உரிய பொறுப்பதிகாரிகளிடம் பணிவோடு கேட்டுக்கொள்வதற்கும் நான் கடமைப்பட்டுள்ளேன்.

மேலும் வெளிநாடுகளிலிருந்து மட்டுமல்ல, உள்நாட்டில் சொற்ப வருமானத்தோடு வாழும் எமது பிள்ளைகள் கூட வைரவிழாவினை சிறப்பாகச் செய்து முடிக்க வேண்டுமென்ற ஆர்வத்துடன் பணத்தினை வாரி வழங்கியுள்ளனர். தாம் கற்ற பாடசாலை என்ற பற்றினால் இரவு பகல் என்று பாராது பாடசாலையை அழகுபடுத்துவதற்கு தமது உடலை வருத்திச்சேவை செய்துள்ளனர்.

எமது வித்தியாலயம் சாதனைகள் பல படைத்து மென்மேலும் புகழ்பெற வேண்டும். அதற்காகப் பெற்றோர்கள் தோள் கொடுக்க என்றும் தயாராக உள்ளனர் என உறுதியளிப்பதோடு, இது ஒரு கல்லூரியாக திகழவேண்டும் எனவும் ஆசிகூறிப்பாராட்டி வாழ்த்துகின்றேன்.

**திரு.தா.குகஞானபண்டிதன்**
**செயலாளர்**
**பாடசாலை அபிவிருத்திச் சங்கம் (2016)**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## வாழ்த்துரை

பல மாணவச் செல்வங்களின் அறிவுக் கண்களைத் திறந்து சாதனையாளர்களையும், புத்திஜீவிகளையும் உருவாக்கி பெருமகிழ்வுடன் தனது வரைவிழாவினைக் கொண்டாடும் எமது பாடசாலையை வாழ்த்துவதில் பெருமிதம் அடைகின்றேன்.

ஒருவன் தன்னையே தான் ஆராய்ந்து நல்லவனாக சமூகத்திற்கு உகந்தவனாக வாழ்வதை வாழவேண்டும் என்ற மனநிலையை உருவாக்குவது பாடசாலை அவ்வகையில் கிளி/ இராமநாதபுரம் மகா வித்தியாலயமானது என்றும் பண்புகளிம், ஒழுக்கத்திலும், கல்வியிலும் என்பதில் ஐயமில்லை.

பாடசாலைக் காலமானது ஒவ்வொருவர் வாழ்விலும் பசுமையான வசந்த காலமாகும். இவ் வசந்தகாலத்தில் வாழும் மாணவச் செல்வங்கள் என்றும் நற்பிரஜைகளாக உருவாகவும் அறிவுத்திறனுள்ள சமூகத்தை கட்டியெழுப்புவும் வாழ்த்துகின்றேன்.

பாடசாலையின் வளர்ச்சியில் அயராது உழைக்கும் அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள், பழைய மாணவர்கள், பெற்றோர், நலன்விரும்பிகள், அனைவரையும் வாழ்த்துவதுடன் "வைரவிழா" கொண்டாடும் எமது பாடசாலையின் புகழ் எங்கும் ஓங்கிட வாழ்த்துகின்றேன்.

**திரு.இ.அன்ரன் அற்புதராஜ்**
**பாடசாலை அபிவிருத்திச் சங்க செயலாளர்**
**(கிளி/இராமநாதபுரம் ம.வி 2017)**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## வாழ்த்துச் செய்தி...

இயற்கை நயம் தவறாது இன்னும் இயல்பால் காண்பவரை கவர்ந்திழுக்கும் ஆற்றலோடும் தெங்கு, பனை, மா, பலாக்களொடு பலமரங்கள் மெருகூட்டிவிட பசுமையாய் போர்த்துக் கிடக்கும் நெல்வயலும் ஆங்காங்கே மேய்ந்துவரும் பசுநிரையும் ஆறும் குளமுமென வர்ணிக்க முடியாத அழகு பொழியும் சூழலோடு கூடிய அறிவுப்பூமி இன்று அகவை அறுபதை அடைந்து வைரவிழாக்காணுகிறது.

ஆண்டு அறுபதுகள் கடந்து வைர விழாவாக வைராக்கியத்துடன் அடியெடுத்து வைக்கும் எனது பாடசாலைக்கு வாழ்த்துச் செய்தி வழங்கும் பெரும்பாக்கியத்தை பெற்றதில் பேருவகை கொள்கின்றேன்.

*" ஒருமைக்கண் தான்கற்ற கல்வி ஒருவருக்கு*
*எழுமையும் ஏமாப்பு உடைத்து"*

ஒருவனுக்கு அப்பிறவியில் கற்றுக் கொண்ட கல்வி அப்பிறப்போடு போகாது அது ஏழு பிறவிகளுக்கும் தொடர்ந்து சென்று உதவும் பண்பு கொண்டது என்று மிகவும் அழகாக வள்ளுவப் பெருந்தகை எடுத்து கூறுவதற்கு உகந்ததாகவே கல்வியறிவை போதிக்கும் கல்விச்சாலைகளும் விளங்குகின்றன. அவ்வாறே காலத்தில் பதில் சொல்லும் வல்லமை கொண்ட வரலாற்றை கிளி/ இராமநாதபுரமும் தன்னகத்தே கொண்டதை மறுக்க முடியாது.

எத்துனை துயரங்களை கடந்தும் பல்லாயிரம் அறிஞர்களை உருவாக்கி தனது மண்ணிற்கு பெருமை தேடித்தந்த பெருமகளுக்கு வயது அறுபது ஆயினும் இன்னும் இளமைத் துடிப்புடன் ஆண்டாண்டு காலம் பல்வேறு புதிய புதிய துறைகளினூடோடும் தொழில்நுட்ப அறிவினோடும் ஆயிரமாயிரம் அறிஞர்களை தோற்றுவித்து தன்னகம் மகிழ பணியாற்றிவிட வேண்டுமென நல்வாழ்த்துக்கள் கூறியமர்கிறேன்.

நன்றி

**என்றும் உன்பணியில்**
**க.திலீபன்**
**முன்னாள் செயலாளர்**
**பழைய மாணவர் சங்கம் (2016)**
**கிளி/இராமநாதபுரம் மகாவித்தியாலயம் இராமநாதபுரம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வாழ்த்துச் செய்தி

கிளி/ இராமநாதபுரம் மகாவித்தியாலயம் வைரவிழாக்காணும் இந்நாளில் வாழ்த்துரைக்கக் கிடைத்த வாய்ப்பினை எண்ணி மனம் புளகாங்கிதம் அடைகின்றது. சிறியேன் இப்பாடசாலையில் கிடைத்த அறிவால் வள்ர்ச்சி அடைந்தேன். என்னைப் போல் பலரை உருவாக்கிய பாடசாலை ஆரம்பத்தில் விவசாயிகள் மத்தியில் தன் பணியினை ஆரம்பித்து இன்று பழையமாணவர் மத்தியில் சேவையாற்றி வருகின்றது. இவர்கள் எல்லோருக்கும் தம் கல்வித்தாயான கிளி/ இராமநாதபுரம் மகாவித்தியாலயம் மேலும் வளர்ச்சி கண்டு கல்லூரியாக வேண்டும் என்ற மனவிருப்புடன் காணப்படுகின்றனர். தமது பிள்ளைகள் இப் பாடசாலையில் உயர்தர வகுப்பில் விரும்பிய துறையில் கல்வி கற்க இங்கு கணித ,விஞ்ஞானபிரிவுகள் அமைந்து விட்டால் அவர்கள் வேறு பாடசாலைக்குச் செல்ல வேண்டி நிலை ஏற்படாது.

அதுமட்டுமில்லாமல் உயர்வகுப்பில் வேறுபாடசாலைக்கு பெற்றுக்கொடுக்கும் புகழும் நம் பாடசாலையின் பெருமையாகிவிடும். பதினொருவருடம் அறிவுப்பாலூட்டிய தாயவள் பேரறிவுள்ள பிள்ளைகள் பலருக்கு உயர்கல்விச்சேவை வழங்கமுடியாது தவித்து நிற்கிறாள். கலைப்பிரிவிலும் வர்த்தகபிரிவிலும் பணியாற்றிப் பல அதிகாரிகள் மட்டுமன்றி சட்டத்தரணியைக் கூட உருவாக்கிய எம் கல்லூரிமாதா ஒரு வைத்தியரையோ, பொறியியலாளரையோ தன்னால் நேரடியாக உருவாக்கும் வாய்ப்பு தனக்கில்லை என்று தன்னகத்தே அழுவதும் எமக்கு கேட்கின்றது. இந்த வகையில் பாதிக்கப்பட்டவரில் யானும் ஒருவனே. எல்லா வயிலும் சிறப்படைந்து காணப்படும் எம் பாடசாலை பல்பிரிவிலும கல்வியை ஊட்டி மாணவர்களைப் பல்கலைக்கழகம் அனுப்பவேண்டும் என்பதே பெற்றோர், பழையமாணவர், அதிபர் ,ஆசிரியர்கள் யாவரினதும் பெருவிருப்பாகும் இவ்விருப்பு நிறைவேற இறையருள் பாலிக்க வேண்டும்.

அன்னை மடியில் வள்ர்ந்த பிள்ளை கல்வித்தாயை நாடி வருகையில் ஏற்றுக்கல்வியமுதூட்டி சமூகத்தில் வாழ்வதற்கு வழிகாட்டி அறிவுகண்களைத் திறந்து அவனியிலே பவனிவர வழி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமைத்த தாயே உன்சேவைக்கு இவ்வூர் பழையமாணவர்களும் தலைசாய்த்து நிற்கின்றோம். வைரவிழாவில் பணி செய்யும் பெருமை பெற்றோம். வைரவிழா எனும் வடத்தில் கைகோர்த்தோம்.

இதன் பயனாய் வைரவிழாக் காண்கின்றது எம் பாடசாலை. இது போல் எல்லாப்பிரிவிலும் கல்வியை வழங்க கல்வி அதிகாரிகள் அங்கீகாரம் வழங்க வேண்டும் பிரதேசத்தின மத்தியில் நல்லதோர் பாடசாலையாக அமைய ஆசிரியர் குழாமும், மாணவர் குழாமும் நல்மனதுடன் பணியாற்றி தமது திறமைகளை வெளிக்காட்டி எல்லாவற்றிலும் வெற்றியீட்டி தனக்கென இவ்வூரில் தனிமுத்திரை பதிக்கவேண்டும். அறுபது ஆண்டுகள் சேவையாற்றிய பாடசாலை இன்று போல் பலநூற்றாண்டுகள் சேவையாற்றி கல்விக்கும் ஏனைய துறைகளுக்கும் நன் மாணாக்கர்களை உருவாக்கி சமூகத்தில் நற்பிரஜைகளையும், சமூக ஆர்வலரகளையும் நாட்டிற்குக் கிடைக்க வழிவகுப்பதே தன் பணியென ஆசிரிய சமூகம் நற்பணியாற்றவும் என் சார்பிலும், என் நண்பர்கள் சார்பிலும், இப்பாடசாலைப் பழையமாணவர்கள் சார்பிலும் வாழ்க வாழ்க என வாழ்த்துரை வழங்குவதோடு வைரவிழாமலர் சிறக்கவும் வைரவிழா சிறப்புற நடந்தேறவும் இறைவனை வேண்டி நிற்கின்றேன்.

***ப.கஜன்***
***செயலாளர்***
***பழையமாணவர்சங்கம் (2017)***
***கிளி; இராமநாதபுரம் மகாவித்தியாலயம்***



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வாழ்த்துச் செய்தி

கிளி/இராமநாதபுரம் மகாவித்தியாலயம் கல்விச் சேவையில் வைர விழாவைக் கொண்டாடுவதையிட்டு பெருமகிழ்வடைகின்றேன்.

இப்பாடசாலை ஆரம்பிக்கப்பட்டதிலிருந்து வளர்ச்சியடைந்து கொண்டு வருகையிலே பல இடர்களின் மத்தியில் அவற்றை எதிர்கொண்டு இயங்கி வந்துள்ளது. போர் நெருக்கடி, பொருளாதாரத் தடை, இடப் பெயர்வுகள், வளப்பற்றாக்குறைகள் பல நெருக்கடிகளின் மத்தியிலும் இடம் பெயர்ந்து வந்து பாடசாலைகளின் சுமைகளையும் தாங்கி இடம்பெயரந்து வந்த ஆசிரியர்கள் மாணவர்களை அன்பாக அரவணைத்து அயற்பாடசாலைகளின் சொத்துக்களையும் தாங்கி இக்கட்டான காலகட்டததிலும் பல வெற்றிகளையும் சாதனைகளையும் கல்வியில் மட்டுமன்றி இணைப்பாடவிதானச் செயற்பாடுகளிலும் நிலைநாட்டி பாடசாலையின் பெயரை கல் மேல் எழுத்துப்போல நிலைக்க வைத்த பாடசாலைச் சமூகத்தினரையும் வாழ்த்துகின்றேன்.

அதிகஷ்டப் பிரதேசப் பாடசாலையாக இருந்த போதிலும் கல்விச் செயற்பாடுகளின் மூலம் மாணவர்களை உயர்வடையச் செய்து அவர்களை அரச துறையில் வேலை வாய்ப்புக்களை பெற்று இப்பொழுது உயர்ந்த கல்விமான்களையும் உருவாக்கி கற்றோர் மிகுந்த கிராமமாக இருக்கும் இராமநாதபுரத்தில் இராமநாதபுரம் மத்திய கல்லூரி என்ற பெயருடன் இப்பாடசாலை வளர்ச்சியடைய எல்லாம் வல்ல இறைவன் அருள்புரிய வேண்டி வாழ்த்துகிறேன்

**திரு.வே.க.இரத்தினகுமார்**
**முன்னாள் அதிபர்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வாழ்த்துச்செய்தி

மாறிவரும் உலகின் மாற்றங்களுக்கச் சவால் கொடுத்து வரும் இன்றைய உலகிலே வளர்ந்து வரும் மாணவச் சமுதாயத்தை வளர்தெடுக்கும் கலைக்கூடங்களில் பாடசாலைகள் தனித்துவம் மிக்கவையாக மிளிர்கின்றன. இவ் வகையின் கிளி/இராமநாதபுரம் மகாவித்தியாலயம் கிளிநொச்சி மாவட்டத்தில் தனக்கென ஒரு தனித்தடம் பதித்தவிட்ட வரலாற்றுச் சிறப்பு மிக்கதாகத் திகழ்கின்றமை வெள்ளிடை மலை போன்றதே. **1956** ம் ஆண்டு ஸ்தாபிக்கப்பட்ட இவ்வித்தியாலயமானது பல திறமையான மாணவச் செல்வங்கள் பலரதும் அறிவுப் பசி போக்கும் அன்னையாக பல்வேறு மாணவர்களைப் பல்கலைக் கழகம் அனுப்பி இன்று வரை உயர் பதவிகளை வகித்துவரும் உன்னதபணியை ஆற்றும் பெருமைக்குரியதாக மிளிர்கிறது.

பல துறைசார் திறமைமிகு மாணவர்களையும் ஒற்றுமை மிகுந்த ஆசிரியர்கள் குழாத்தையும் கொண்டதாக விளங்கும் இப் பாடசாலையானது பெற்றோர்களது ஒத்துழைப்பாலும் ஒன்றுபட்டு இயங்கும் பழையமாணவர்கள் சமூகத்தாலும் உயர்ந்து வளர்ந்து விருத்தி கண்டு வருகிறது. இத்தகைய ஒரு சிறந்த பாடசாலையானது தனது **60** ஆவது அகவையைப் பூர்த்தி செய்து 'வைரவிழா" ஒன்றைக் கொண்டாடுகிறது என்பது பெருமைக்குரிய விடயமாகும். இங்கு பயிலும் மாணவர்கள் படைத்த சாதனைகள் பல தரப்பட்டவை. மாவட்ட நிலை,மாகாணநிலை, தேசியநிலையிலான வெற்றிகளைப் பெற்ற மாணவர்கள் பலரையும் வளர்த்தெடுத்த இப் பாடசாலையானது எனது வாழ்வில் மறக்கமுடியாத ஒன்றாகும். இத்தகைய பாடசாலையின் வைரவிழா மலருக்கு வாழ்த்துச்செய்தி வழங்கும் சந்தர்பம் கிடைத்தமைக்காக மன மகிழ்வடைகிறேன். இப் பாடசாலையானது மேன் மேலும் பல சாதனைகளைப் படைத்து மாணவர்களையும் நன் நிலையில் உயர்த்தி சிறப்படைய வேண்டும் என வாழ்த்துகிறேன்.

**திரு.சி.முருகானந்தன்**
**(முன்னாள்அதிபர்)**
**இராமநாதபுரம் ம.வி**
**அதிபர் கிளி/தருமபுரம் மத்தியகல்லூரி**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வாழ்த்துரை

இயற்கை எழில் நிறைந்த கிளிநொச்சி மாவட்டத்தின் குன்றாத வளம் கொழிக்கும் என்றும் வந்தோரை வரவேற்று வாழ வைக்கும் நீண்ட புகழ் பூத்த பூமியாம் இராமநாதபுரம் மத்தியிலே மக்களின் வாழ்வின் இதய நாதமாய்த் திகழும் கிளி/இராமநாதபுரம் மகா வித்தியாலயம் என்ற நாமம் கொண்ட பாடசாலைத் தாயவள் என்றும் குன்றின் மேலிட்ட அகல் விளக்காய் எங்கும் அறிவொளி பரப்பி திக்கெட்டும் புகழ்பரப்பி எல்லோர்க்கும் உயிர்வூட்டி, வாழ்வளித்து அகவை அறுபதை பூர்த்தி செய்து விழாக்கோலம் பூண்டு அன்னையவள் மகுடம் அணியும் "வைரவிழா" மலருக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் இவ் விழாக்கான பெரு விருப்புடன் அடியிட்டவன் என்ற வகையில் மட்டற்ற மகிழ்ச்சியடைகின்றேன்.

சிறு வயதுப் பாலகனாய் என்னை அரவணைத்து ஏற்றமுறு கல்வி தந்தாய் என் தந்தை மிக விருப்புடன் ஆசானாய் கல்விப் பயிர் வளர்த்த, நான் கற்ற பாடசாலையிலே என்னையும் அதிபராய் சேவை செய்ய ஆசி தந்து எனது பணி முடிவில் மணி விழாவையும் உனது வைரவிழாவையும் காண வைத்த பாக்கியம் தந்தாய். என்னை நானாக வாழ வைத்த பாடசாலைத் தாயை கரம் கூப்பி சிரம் தாழ்த்தி முதலில் வணங்குகிறேன்.

இம் மாவட்டத்தில் 1955ம் ஆண்டில் மக்கள் குடியேற்றம் செய்யப்பட்ட போது 1956 - 05 - 02ல் யாழ்/ இராமநாதபுரம் வடக்கு அரசினர் தமிழ்க் கலவன் வித்தியாசாலை என்ற பெயரில் இப் பாடசாலை ஆரம்பிக்கப்பட்டது என அறியக் கிடைக்கிறது. அப்பொழுது யாழ்மாவட்டத்துடன் கிளிநொச்சி இணைந்திருந்த காலமாகும். அன்றிலிருந்து இன்றுவரை சிறந்த கல்விப் பாரம்பரியமுள்ள சமுதாயம் மதிக்கும் ஒழுக்க சீலர்களாக நன் மாணவரை உருவாக்கும் பாடசாலையாகவும் கல்வி, கலை, கலாச்சார பண்பாட்டு விளையாட்டு நிகழ்வுகளில் கோட்ட மட்டம், வலயமட்டம், தேசியமட்டம் ஆகிய நிலைகளில் சாதனைகள் பெற்று வாகை சூடிய பாடசாலையாகவும் இது விளங்குகிறது. இங்கு கல்வி கற்ற பல மாணவர்கள் உள்நாட்டிலும், புலம்பெயர் நாடுகளிலும் பல தொழிற்துறைகளில் உயர் பதவிகளை வகிப்பவர்களாக காண முடிவதுடன், தொழிலதிபர்களையும், தொழில் நுட்பவியலாளர்களையும், கலைஞர்களையும், புத்தி ஜீவிகளையும் உருவாக்கிய பெருமை இப்பள்ளியையே சாரும்.

இப்பிரதேசத்து மழலைச் செல்வங்களின் அறிவுப் பசி போக்கி உயர் வாழ்வு தரும் அட்சய பாத்திரமான இக்கல்விக் கூடத்தின் பெரு விழாவாக இவ் வைரவிழா அமைகின்றது. இத்துடன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்விழாமலர் எதிர்காலச்சந்ததியினருக்கு ஓர் எடுத்துக் காட்டாகவும், எமது நன்றியை உணர்வுடன் வெளிப்படுத்தும் நிகழ்வாகவும் ஓர் அரிய வரலாற்று ஆவணமாகவும் அமைந்து பாடசாலைக்கும் மக்களுக்கும் பெருமை சேர்க்கும் என்பதில் ஐயமில்லை.

பாடசாலையின் பெருமதிப்புக்கும் சிறப்புக்குமுரிய இந்நாளில் இப் பெருவிருட்சத்தை உருவாக்க வேராக, விழுதாக அன்றிலிருந்து இன்று வரை அர்ப்பணிப்புடன் உழைத்த அதிபர்களையும், ஆசிரியர்களையும், பாடசாலைச் சமூகத்தையும் நன்றியுடனும், பெருமையுடனும் நினைவு கூறுகின்றேன்.

மேலும் அந்நிகழ்வு சிறக்க அயராது உழைத்த முதல்வரையும், தோழோடு தோள் கொடுத்த அனைத்து ஆசிரியப் பெரு மக்களையும், மலர் வெளியீட்டுக் குழுவினரையும் பெற்றோர், பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தினரையும், நலன் விரும்பிகளையும், இப் பள்ளித் தாயின் சேய்களான நேயமிக்க பழைய மாணவர்களையும் மற்றும் புலம் பெயர்ந்த போதும் தம்மை உயர்த்திட்ட பள்ளி மறவாது பேருதவி புரியும் சகோதர உறவுகளையும், மலருக்கு ஆசியுரைகள், வாழ்த்துரைகள், நல்லாக்கம் வழங்கிய பெரியோர் அனைவரையும் வாழ்த்திப் பாராட்டுகின்றேன்.

நிறைவாக இவ்விழா மிளிர "வைரவிழா" தேர் வடம் பிடித்த அனைத்து நல் உள்ளங்களையும் இப் பாடசாலையின் இவ் விழாக்காலத்தில் ஓய்வு பெற்ற அதிபர் என்ற வகையில் நன்றியுடன் போற்றுவதோடு, எதிர் காலத்தில் இப்பள்ளி மேலும் வளம் பெற்று தனக்குரிய உயர்தரமடைந்து புகழ்பரப்ப அதிபர், ஆசிரியர், சமூகம் அனைவரும் ஒன்றிணைந்து கடுமையாக உழைக்க வேண்டுமெனவும் காலம் உள்ளவரை தொடர்ந்து வளர்ந்து பவளவிழா, அமுதவிழா, நூற்றாண்டு விழா இன்னும் பல விழாக்களை என் மனம் மகிழ வாழ்த்துகிறேன்.

*வளர்*

*வான்புகழ்*

**திரு.சு.நடராசா**

**முன்னாள் அதிபர் (பழைய மாணவன்)**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வாழ்த்துச் செய்தி

நான் இப் பாடசாலையில் 1970 -1980 வரையிலான பகுதியில் படித்திருக்கின்றேன். என்னுடைய க.பொ.த.சாதாரணதரப் பரீட்சை முடிந்தவுடன் 1981 ஆம் ஆண்டு க.பொ.த உயர்தரத்திற்காக நான் நெல்லியடி மத்திய கல்லூரிக்கு சென்றிருந்தேன்.

ஆனால் என்னுடைய ஆரம்பக்கல்வியில் பெற்ற அனுபவங்கள் மறக்கமுடியாதவை. எனக்கு இப்பவும் ஞாபகம் இருப்பது அந்தப் பலாமரம் ,தண்ணீர்த்தொட்டி அவை இரண்டும் என்னுடைய பாடசாலை வாழ்க்கையில் மறக்கமுடியாதவை.

நான் புலம்பெயர்ந்து வாழ்ந்தாலும் 2002 ஆம் ஆண்டில் இருந்து என்னுடைய பங்களிப்பு இப்போதுவரையும் இருக்கிறது. அதன் பிறகு வந்த பாடசாலை அதிபர்களுக்கு தெரியும். ஆகவே ஓர் ஊர் முன்னேற வேண்டுமென்றால் முதலில் அந்த ஊரில் உள்ள பாடசாலை முன்னேற வேண்டும். அதன் பிறகு தான் அந்த ஊரில் உள்ள சமுதாயம் கோயில்கள் முன்னேறும் என்கின்ற என்னுடைய சிந்தனையோடு இந்த வைரவிழா முற்றிலும் வெற்றி பெற என்னுடைய வாழ்த்துக்கள்.

**சரவணமுத்து விநாயமூர்த்தி**
**கனடா மக்கள் ஒன்றியத் தலைவர்**
**பழைய மாணவன்**
**கிளி/ இராமநாதபுரம் ம.வி**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## வாழ்த்துச்செய்தி

அனைவருக்கும் எனது அன்பான வைரவிழா வாழ்த்துக்களும் வணக்கங்களும் Dr. பரமலிங்கம் மதியழகன் ஆகிய நான் ஓர் ஏழ்மை விவசாயக் குடும்பத்தை சார்ந்தவன். எனது தாயாரின் வருமானத்தில் மட்டுமே எனது கல்வியை பாலர் வகுப்பில் இருந்து க.பொ.த சாதாரண தர வகுப்புவரை கிளி/ இராமநாதபுரம் மகா வித்தியாலயத்தில் கற்றேன். க.பொ.த உயர்தர விஞ்ஞான, கணிதப் பிரிவுகள் எமது பாடசாலையில் இல்லாத காரணத்தினால் எனது உயர்தரக் கல்வியை கிளி/பளை மகா வித்தியாலயத்தில் கற்றேன். **1994**ல் யாழ் மருத்துவ பீடத்தில் எனது மருத்துவ பட்டப்படிப்பை தொடங்கி தற்போது ஐக்கிய இராச்சியத்தில் (UK) ஓர் அரச மருத்துவ ஆசிரியராக (ENT Doctor) கடமை புரிந்து வருகின்றேன்.

எனது ஊரிலேயே எனது அடிப்படைக் கல்வியை முழுவதுமாக கற்று இராமநாதபுரம் மகா வித்தியாலயத்தால் முழுமையாக உருவாக்கப்பட்ட முதல் மருத்துவன் என்பதையிட்டு பெருமிதம் அடைவதுடன் எனது பாடசாலை இன்று வைரவிழா காணுவதையிட்டு நான் மிகவும் பூரிப்படைகின்றேன். இந்நாளில் எமக்கு கல்வி கற்றுத் தந்த ஆசான்களை நினைவுகூர கடமைப்பட்டுள்ளேன்.

பலாமரத்தின் கீழ் இருந்து பார்வதி ஆசிரியரிடம் "பாலா பந்தை அடி நிசா ஓடிப்பிடி" இன்னமும் என் நினைவில் இருக்கிறது பின்பு கண்ணம்மா ரீச்சர், அன்னமுத்து ரீச்சர், நாகம்மா ரீச்சர், செல்லையா சேர், அப்பையா சேர் (ஆங்கிலத்தை அறியத் தந்தவர்) ஆலாலசுந்தரம் சேர் கருணாநிதி சேர், ருக்குமணி ரீச்சர், மேரி ரீச்சர், மங்களேஸ் ரீச்சர், ராஜி ரீச்சர், சிவசுந்தரம் சேர் (கணக்கை காட்டியவர்) யோகா ரீச்சர் (விஞ்ஞானத்தை விளக்கியவர்), இந்திரா ரீச்சர் (மிகவும் பிடித்த ஆசிரியை - அனைத்து பாடங்களையும் கற்பிக்க கூடியவர்) ஆசிரியர் பற்றாக்குறை ஏற்படுவது கிராமப்புற பாடசாலைகளுக்கு ஒன்றும் புதியதல்ல. அப்போதெல்லாம் அவரே அனைத்து பாடங்களையும் எமக்கு கற்பிப்பார். செல்வராஜா சேர் இவர் விடுமுறை நாட்களிலும் கூட எம்மை விட்டு வைக்க வில்லை. இலவச விசேட மீட்டல் வகுப்பு என்பதை முதன் முதலில் ஆரம்பித்தவர் இவரே ஆவார். கிருஷ்ணமூர்த்தி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சேர் (உப அதிபர்) அதிபர் J.MP.ஜெயராஜா PT.Sportsஇல் எம்மை முதன் முதலில் யாழ்வரை கூட்டிச் சென்றவர். அதிபர் இராமநாதன் என்னும் பல ஆசிரியர்களின் முகங்கள் ஞாபகம் இருந்தாலும் பெயர்கள் சொல்ல முடியாதவனாய் உள்ளதையிட்டு மனம் வருந்துகிறேன்.

எமது பாடசாலை மாணவர்களுக்கு முயற்சி இருந்தால் முடியாத ஒன்றுமில்லை (Tray and Tray One Day Can Play) வறுமை நிலை கண்டு வருந்தாதீர்கள். கல்விக்கு பணம் மட்டமே தடையாக இருக்கும் மாணவர்கள் பழைய மாணவர் பிரதிநிதிகளினூடாக (RMVOSA) என்னிடம் அணுகுங்கள். என்னாலான உதவி உங்கள் படிப்புக்கு கிடைக்கும்

**நன்றியுடன்**
**Dr.மதி**
UK



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## வாழ்த்துச் செய்தி

எங்கள் மனங்களில் வியாபித்து மனிதத்தை விளைவித்து, மகிமை சொல்லி மங்காத பொருள் தந்து மடைமை அகற்றி மூன்றாவது கண் திறக்க முடிவில்லா சேவை செய்து, முழுவதுமாய் எமை ஆட்கொண்ட எங்கள் பள்ளி இன்று காண்கின்றது மாபெரும் வைரவிழா.

பொழுதெல்லாம் பொருதிப் பொல்லாமை பேய் அகல, தன் வளம் எல்லாம் திரட்டி எம்மை வாழவைத்து துலங்க வைத்த "இராமநாதபுரம்" எனும் ஊரின் இணையில்லா இரணைமடு நன்நீர் அரவணைக்க இன்றளவும் பசி போக்கும் வயலெல்லாம் வளம் கொழிக்க, வாழ்வாங்கு வாழ்ந்து கல்வியில், கலையில் இன்னும் பலவாய் காண்போர் வியக்கும் சான்றோராய் பெருமளவில் எம்மில் பல பேரை உருவாக்கி பெருமை பல சேர்த்த எனது பள்ளியையும், ஊரினையும் நான் சிரம் தாழ்த்தி எனது முதல் வணக்கத்தை செலுத்துகின்றேன்.

"இராமநாதபுரம் மகா வித்தியாலயம்" என்று உச்சரிக்கும் போதே என் நெஞ்சம் பெருமிதத்தால் விம்முகிறது எண்ணற்றோரை ஏற்றம் பெற வாழவைத்த இக்கல்விச் சாலையில் தான் சண்முகம் செல்வராசா ஆகிய நானும் 1978வது ஆண்டு வரை வழுவற்ற அறிவு வரப் பயின்றேன். அதன் பின்னர் காலம் இட்ட கட்டளையில் நானும் கட்டுண்டு 1980களில் எனது இனிய ஊர் விட்டு புலம் பெயர்ந்து புகலிடம் நாடிச் சென்ற போதும் இன்றும் உளம் விட்டுச் செல்லாத கற்கை நாளின் கவின்பெறு நினைவுகளே கனதியாய் நெஞ்சை நிறைத்து நிற்கின்றது. இவ் நினைவழியா சித்திரத்தை மனங்களில் தீட்டிய எம் மகா வித்தியாலயம் வைரவிழா மட்டுமல்ல இன்னும் பல நூறு நூறு ஆண்டுகள் விழாக்கண்டு அறிவுத்தீபம் அதை அணையாது காத்து எம் ஆயகலைகளெல்லாம் அகிலம் எங்கும் எம்மவரால் பரவிப் புகழ்படைக்க இன்னும் இன்னுமாய் என்போல் புலம்பெயர்ந்த எங்கள் பழைய மாணவர்களின் அக்கறைக்குள் இருந்து ஒரு போதும் எம் வித்தியாலய நினைவு அகன்று விடக்கூடாது என்பதில் நான் எடுத்த சிரத்தைதான் "ஓம்சக்தி" என்னும் ஒரு அமைப்பு. அதன்மூலம் முடிந்தவற்றை எனது ஊரின் அறிவுப்பசி போக்கும் இக்கல்லூரிக்கு வழங்கிட வேண்டும் என்கின்ற என் பெயரவா சதா என்னைத்தூண்ட போர் தந்த துன்பத்தில் துவண்டுபோய் பொருள் இன்றி கல்வியருள் வேண்டி தவித்து நிற்கும் சிலநூறு மாணவரையாவது அரவணைத்து அவர் பயிலத் தடையாய் நிற்கும் அனைத்தும் களைய ஆவண செய்ய விளைந்தேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இராமநாதபுரத்தில் உள்ள நான்கு பாடசாலைகளில் இருந்து இதுவரை **370** மாணவக் கண்மணிகள் பயன்பெறும் வகையில் கல்விக்கான கற்றல் உபகரணங்களை வழங்கினேன். இன்னும் இன்னுமாய் உள்ளவரை மைதான சுற்றுமதிலமைப்பையும் கல்விக்கான உதவியையும் மேற்கொள்ள விளைகின்றேன்.

வைரவிழாக் காணும் இக்கல்விச்சாலையில் தம் அறிவுப்பசி தீர்த்து இன்று உலகின் பல பாகங்களிலும் பரந்து விரிந்து தொழில் அதிபர்களாகவும் கல்விமான்களாகவும் வளம்பெற்று வாழும் எம் பழைய மாணவர்களின் கனவுகளும் இதுவாகவே இருக்குமெனவும் நான் எண்ணுகின்றேன். அவர்களின் வழிவழியே எமது ஊரின் மாணவர்களது எதிர்காலம் ஒளிமயமாக இருக்கவேண்டுமென்கின்ற உயர் எண்ணங்களும் உருவாகும் என நான் உளம் ஆற நம்புகிறேன். உலகின் மூலைமுடுக்குகளில் இருந்தெல்லாம் எம் மக்கள் துயர்களைய கூடிக் கரம் கோர்க்கும் பண்பாடு உள்ள எம் பழைய மாணவர்களை நான் நன்றியோடு நினைவு கூறுகின்றேன்.

அரை நூற்றாண்டுக்கு முன் எம் அயற்கிராமங்களில் இருந்தெல்லாம் வந்து இங்கு குடியேறிய மக்கள் இங்கு இதுவே எமது ஊர் என "இராமநாதபுரம்" ஊர் குறித்து இறுமாப்பெய்வது மிகையல்ல. இது உண்மை. பாரிடர் வந்த போதும் கல்விப் பயிரைக் காத்திட பாடசாலையே கதி என்று தம் அரும் கடமையாற்றிய ஆசிரியப் பெருந்தகைகளுக்கும், அவர்தம் ஆளுகை செய்து அரும்பணியாற்றிய அதிபர்களுக்கும் எனது அன்பு வணக்கங்களையும் வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்வதில் நான் பெருமிதம் அடைகின்றேன். இவர்கள் இன்றி இப் பெரும்பணி ஒருபோதும் நிறைவு கண்டிருக்க மாட்டாது.

இப்பெருமை மிக்க வைரவிழா காரணகர்த்தாக்களாகிய எனது ஊரின் பெருமக்கள் மாணவச் செல்வங்கள், பழைய மாணவர்கள், அதிபர், ஆசிரியர்கள், அனைவரையும் என் தலை சாய்த்து நன்றி தெரிவித்துக் கொள்வதோடு இப்பெரும் "வைரவிழா" சிறந்து ஓங்க என் இதயபூர்வமான வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

*வாழ்க*

*சேவையும்*

**இவ்வண்ணம்**
**சண்முகம் செல்வராஜா**
**(பழைய மாணவன் UK)**
**லண்டன்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## வாழ்த்துச்செய்தி

கிளி/இராமநாதபுரம் மகா வித்தியாலயத்தின் 60வது வருட நிறைவையிட்டு இடம்பெறும் வைர விழா நிகழ்விற்கு இவ் வித்தியாலயத்தின் முதல்வராக இருந்து வாழ்த்துச் செய்தி வழங்கும் சந்தர்ப்பம் கிடைத்ததையிட்டு மகிழ்வடைகிறேன்.

கிளிநொச்சி மாவட்ட கிழக்குப்பிரதேசத்தின் பழம் பெரும் கிராமங்களில் ஒன்றாகிய இராமநாதபுரத்தில் 1956ல் இப் பாடசாலை ஆரம்பிக்கப்பட்டு இன்று உயர் வளர்ச்சி பெற்று திகழ்கின்றது. அன்றைய காலகட்டங்களில் மகா வித்தியாலயங்களாக அமையப்பெற்ற ஒரு சில பாடசாலைகளில் இப்பாடசாலையும் முதன்மை பெற்று விளங்கியது.

கிளிநொச்சி மாவட்டத்தின் தனித்துவமான பண்புகளை கொண்டு விளங்கும் பாடசாலைகளில் ஒன்றாக அழகிய தோற்றத்துடன் தலை நிமிர்ந்து நிற்கின்றது.

இவ் வித்தியாலயத்தின் 60 ஆண்டுகால வாழ்வில் கல்விப்பணியாற்றிய அதிபர்களின் செயலாற்றுகைகள் மிகவும் காத்திரமானவை. 2008ம் ஆண்டின் இறுதிக்காலத்தில் எமது பகுதியில் ஏற்பட்ட போர்ச்சூழல் காரணமாக பாடசாலை இடம்பெயர்ந்து பல்வேறு கஸ்ரங்களின் மத்தியில் பராமரிப்பு முகாம்களில் இயங்கியது மீண்டும் ஏற்பட்ட இயல்புநிலை காரணமாக 2010ல் தனது சொந்த இடத்தில் இயங்கத் தொடங்கியது. பெற்றோரதும் பழைய மாணவர்கள், நலன்விரும்பிகள், வலயக்கல்வி அலுவலகத்தினர் போன்றவர்களின் ஒத்துழைப்புடன் கற்றற் செயற்பாடுகள், மெய்வன்மைப் போட்டிகள் போன்ற பல விடயங்களில் இவ் வித்தியாலயம் பல சாதனைகளைப் புரிந்திருப்பது யாவரும் அறிந்துள்ள விடயமாகும். 1998 தொடக்கம் 2006ம் ஆண்டுவரை இவ் வித்தியாலயத்தில் முன்னைய ஆண்டில் தொடங்கப்பட்டிருந்த வர்த்தகப் பிரிவு மாணவர்களுக்கு வணிகம், கணக்கீடு பாடங்களைக் கற்பிக்கும் ஒரு ஆசிரியராக நான் சேவையாற்றியமையும் மகிழ்ச்சிக்குரிய விடயமாகும்.

இவ் வித்தியாலயத்திற்கும் சமுகத்திற்குமிடையே மிகுந்த நல்லுறவு காணப்படுகின்றது. இதன் காரணமாக பாடசாலை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வளர்ச்சியடைந்து வருவதுடன் க.பொ.த(சா/த) பரீட்சைகளில் சித்தியடையும் மாணவர்களில் ஒரு தொகுதியினர் வருடந்தோறும் விஞ்ஞான, கணித உயர் கல்விக்காக அயற் பாடசாலைகளுக்கு செல்கின்றனர். பல சிரமங்களுக்கு மத்தியில் இக் கிராமத்திலிருந்து சென்று வருகின்றனர். அத்துடன் பலர் பொறியலாளர், மருத்துவர்கள், விஞ்ஞானப் பட்டதாரிகளாகவும் வெளிவந்துள்ளனர்.

இவ் வைரவிழா மலர் வெளியிடப்படுவதற்கு நதியுதவி வழங்கிய பெற்றோர்கள், பழைய மாணவர்கள், புலம்பெயர் பழைய மாணவர்கள், நலன் விரும்பிகள் மற்றும் பல வழிகளில் உதவிய அனைவருக்கும் எனது நன்றிகளும் பாராட்டுக்களும் உரித்தாகும். இவ் வைரவிழா மலர் உருப்பெறத் தேவையான விடயங்களில் துணை நின்று செயற்பட்ட மலராசிரியர், மலர்க்குழுவினர், ஆசிரியர்கள், மாணவர்கள், பழைய மாணவர்கள், நலன் விரும்பிகள் ஆகியோருக்கும் மலருக்கான ஆசியுரைகள், வாழ்த்துரைகள் வழங்கிய உயர் உள்ளங்களுக்கும் கட்டுரைகளை வழங்கியவர்களுக்கும் புகைப்படப்பிடிப்பாளருக்கும் இதனை அச்சிட்டு உதவியவர்களுக்கும் அதிபர் என்ற வகையில் எனது தனிப்பட்ட நன்றிகளை தெரிவித்துக் கொள்கின்றேன்.

வைரவிழாக்காணும் இவ்வித்தியாலயம் மென்மேலும் வளர்ச்சியடைந்து சாதனைகள் பல படைக்கவும் வைரமாக மிளிரவும் எல்லாம் வல்ல இறைவனின் இறையருள் வேண்டி வாழ்த்துகின்றேன்.

**திரு.ம.கிறிஸ்ரி லெனாட் மனுவல்**
**அதிபர்**
**கிளி/இராமநாதபுரம் ம.வி**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இதழாசிரியரின் உள்ளத்திலிருந்து...

கிளிநொச்சி மாவட்டத்தின் கிழக்குப் பிராந்தியத்தில் அமைந்துள்ள பாடசாலைகளில் பெருமதிப்புக்குரிய பாடசாலையாக கிளி /இராமநாதபுரம் மகா வித்தியாலயம் மிளிர்கிறது.

இப் பாடசாலை அறுபது ஆண்டுகளாக கல்விப்பயிர் வளர்த்து புகழ்பரப்பி நிற்கும் இவ் வேளையில் தனது அறுபது அகவைப் பணியை இதமாக நிறைவேற்றி அறுபத்தொன்றில் கால்பதித்து வீறு நடை போடுகின்றது. பெருமைக்குரிய இப் பாடசாலையின் வைரவிழா மலரின் ஆசிரியராக இருக்கக் கிடைத்த தருணத்தையிட்டு நான் பெரு மகிழ்ச்சியடைகின்றேன்.

2015 ஆம் ஆண்டு இப் பாடசாலையைப் பொறுப்பேற்ற அதிபர் திரு.சு.நடராசா அவர்கள் வைரவிழாவின் ஆரம்ப கட்ட வேலைகள் என வைரவிழா நினைவுத்தூபி, சரஸ்வதி சிலை என்பவற்றை நிலைநாட்டிய போதும் நூல் உருவாக்கம் செய்யப்படாமையினால் 2016 வைரவிழா ஆண்டில் இம்மலரினை வெளியிட முடியாது போனது. 2017 அவரது ஓய்வுக் காலத்திற்கு சற்றுமுன்னர் அயராது உழைத்த போதும் நூல் உருவாக்கத்தில் நிதிவளம், வரலாற்றுப் பதிவுகள் முதலியவற்றின் போதாமையினால் நூல் வெளிவர சில தாமாதங்கள் ஏற்பட்டன.

2017 மே மாதத்தில் இப் பள்ளியைப் பொறுப்பேற்ற அதிபர் திரு.M.C.L.மனுவல் அவர்கள் திரு.சு.நடராசா அதிபர் அவர்களின் மனக்குறையினை நிவர்த்தி செய்ய அரும்பாடுபட்டு உழைத்த அவர் பழைய மாணவர்கள், பெற்றோர்கள், நலன்விரும்பிகள் அனைவரையும் அணிதிரட்டி இந்த அருமையான வைரவிழாவை நூல் வெளியீட்டோடு கொண்டாடுவதற்கு வழி அமைத்தார் என்றால் மிகையில்லை.

அறுபது அகவை தாண்டிய நிலையில் ஒரு பாடசாலையின் வரலாற்றினைத் திடீரெனப் பதிவு செய்வது என்பது மிகவும் கடினமான காாழயம் ஆகும். ஓயாத போர்கள், இடப்பெயர்வுகள், மரண ஓலங்களுக்குள் வாழ்ந்த எமது மக்கள் முப்பது ஆண்டுகளுக்கு மேல் தமது சொந்த வாழ்க்கையை எவ்வாறு வாழ்வதென்பது தெரியாமல் தத்தளித்துக் கொண்டிருந்த போது, வரலாற்றுப் பதிவுகளைப் பேணி வைக்கக் கூடிய சாதகமான நிலைமைகள் இப் பாடசாலையைப் பொறுத்த வரை குறைவாகக் காணப்படுகின்றன. இங்கு வெள்ளிவிழா மலர், பொன்விழா மலர் வெளியிடப்பட்டிருந்தால் நிச்சயமாக இப் பாடசாலையின் பல வரலாற்றுக் கோலங்கள் அவற்றில் பதிவாகி இருக்கும் என்பது எனது தாழ்மையான கருத்தாகும்.

எனினும் பெற்றோர்கள், பழையமாணவர்கள், நலன் விரும்பிகள், முன்னைநாள் அதிபர்கள், ஓய்வுநிலை ஆசிரியர்கள் முதலியோரை நேரில் சந்தித்து அவர்கள் மூலம் பெறப்பட்ட தகவல்களின் உண்மையானவற்றை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மட்டுமே நாம் இங்கு நூலாக்கத்திற்காக சேர்த்துள்ளோம். என்பதை இவ்விடத்தில் குறிப்பிட விரும்புகின்றேன். இந்த அருமையானதொரு நூலில் கிடைக்கக் கூடிய பெறுமதிமிக்க பல விடயங்களை பெருமனதுடன் ஏற்று மனதார வேண்டிக் கொள்கின்றேன்.

இந்நூல் வெளியீட்டிற்காக பல விடயங்களைத் தேடிக் கண்டறிந்து தன்னுடைய முழு நேரத்தையும் இந்த நூல் ஆக்கத்திற்காக அர்ப்பணித்த பழைய மாணவர் சங்கச் செயலாளர் ப. கஜன் அவர்களை நான் மிகவும் பாராட்டுகின்றேன். மேலும் இந்நூலுக்கான புகைப்படங்களை ஒழுங்கு படுத்தித் தந்த பழையமாணவன் கோ. கர்சனுக்கு மனம் நிறைந்த பாராட்டுக்கள். மேலும், பல்வேறு வழிகளிலும் ஒத்துழைப்பு வழங்கிய ஓய்வு நிலை அதிபர்கள், ஆ ஓய்வு நிலை ஆசிரியர்கள், இடமாற்றம் பெற்றுச் சென்ற ஆசிரியர்கள் மற்றும் பெற்றோர்கள், பழைய மாணவர்கள் புலம் பெயர்ந்து வாழும் பழைய மாணவர்கள், நலன்விரும்பிகள், அனைவரையும் பாராட்டுகின்றேன்.

இந்த நூலுக்காக ஆக்கங்களை வழங்கிய பெரியோர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள், அனைவருக்கும் எனது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன். மேலும் இந் நூலாக்கத்திற்காக என்னோடு அல்லும் பகலும் உழைத்த மலர்க் குழுவினருக்கும் பாடசாலைச் சமூகத்திற்கும் எனது பாராட்டுக்கள். எமது பாடசாலையின் வைரவிழா மலரை அழகுற வடிவமைத்து தந்த தனு அச்சகத்தினருக்கும் எனது கனிவான நன்றியைக் கூறுவதில் உவகையடைகின்றேன்.

**திரு.ஜீ.விவேகானந்தராஜா**
**ஆசிரியை**
**கிளி/இராமநாதபுரம் ம.வி**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கிளி/ இராமநாதபுரம் மகா வித்தியாலயத்தை அலங்கரித்த அதிபர்கள்

| | |
|---|---|
| திரு.S.கனகசுந்தரம் | 1956 - 1960 |
| திரு.T.சங்கரப்பிள்ளை | 1960 - 1964 |
| திரு.A. கந்தையா | 1964 - 1965 |
| திரு.K.பொன்னம்பலம் | 1965 - 1966 |
| திரு.A.மகாதேவன் | 1966 - 1969 |
| திரு.K.காராளபிள்ளை | 1969 - 1971 |
| திரு.S.தியாகராஜா | 1971 - 1972 |
| திரு.T. விஷ்ணு | 1972 - 1974 |
| திரு.M.அலோசியஸ் | 1974 - 1975 |
| திரு.T.மார்க்கண்டு | 1975 - 1978 |
| திரு.S.சோமசுந்தரம் | 1978 - 1980 |
| திரு.T.கோபாலபிள்ளை | 1980 - 1982 |
| திரு.J. M. P.ஜெயராசா | 1982 - 1986 |
| திரு.S.இராமநாதன் | 1986 - 1993 |
| திரு.S.கிருஸ்ணமூர்த்தி | 1993 - 1994 |
| திரு.V.தனிநாயகம் | 1994 - 1995 |
| திரு.K.சிவகாமி | 1995 - 1997 |
| திரு.K.இரத்தினகுமார் | 1997 - 2004 |
| திரு.A.இராஜமகேந்திரன் | 2004 - 2005 |
| திரு.K.இரத்தினகுமார் | 2005 - 2007 |
| திரு.K.முருகவேல் | 2007 - 2008 |
| திரு.S.முருகானந்தம் | 2008 - 2015 |
| திரு.S.நடராசா | 2015 - 2017 |
| திரு.M. C. L மனுவல் | 2017 - இன்றுவரை |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலக உணவுக் குழு



# ஒழுக்காற்றுக் குழு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தரம் - 01



## தரம் 02 A



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தரம் - 02 B



## தரம் 03 A



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தரம் - 03 B



# தரம் 04 A



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தரம் - 04 B



# தரம் 05 A



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தரம் - 05 B



## தரம் 06 A



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தரம் - 06 B




## தரம் 06 C



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தரம் - 07 A



## தரம் 07 B



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தரம் - 07 C



## தரம் 08 A



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தரம் - 08 B



## தரம் 08 C



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தரம் - 09 A



## தரம் 09 B



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தரம் - 09 C



## தரம் 10 A



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தரம் - 10 B



## தரம் 10 C



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தரம் - 11 A



## தரம் 11 B



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தரம் - 11 C



## தரம் 12 (2019) கலைப்பிரிவு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தரம் 12 (2019) வர்த்தகப்பிரிவு



# தரம் 13 (2018) கலைப்பிரிவு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தரம் 13 (2018) வர்த்தகப்பிரிவு



## தரம் 13 (2017) கலைப்பிரிவு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தரம் 13 (2017) வர்த்தகப்பிரிவு



## க.பொ.த சாதாரணதரம் - 2016



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1956 - 2016

# பாடசாலையின் வரலாறு

ஸ்ரீ இராமநாதபுரம் மகாவித்தியாலயம்
1956
RAMANATHAPURAM
கற்றுணர்ந்து ஒழுகு

## வைரவிழா மலர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிளி/ இராமநாதபுரம் மகா வித்தியாலய தருவின் வளர்ச்சி

இலங்கைத்திருநாட்டின் வடபால் யாழ் மாவட்டத்தில் விவசாயம் செழிக்கவென கிளிநொச்சியாம் ஊரில் உருவாக்கப்பட்டு G.A.ஸ்ரீகாந்தவால் 1955ல் குடியேற்றியகுடியேற்றத் திட்டமாம் இராமநாதபுரம் கிராமத்தில் இக் கிராம விவசாயிகளின் பிள்ளைகள் கல்வியிலே உயரவென்று அரசால் அமைக்கப்பட்ட பாடசாலைக் கட்டடம் கொலனிஅதிபர் திரு.கிருஷ்ணபிள்ளைஅவர்கள் காலமதில் 1956-05-02ம் திகதி திரு.S.நமசிவாயம் அவர்களை ஆசிரியராகக் கொண்டு கல்வி இலாகாவால் யாழ்/இராமநாதபுரம் வடக்கு அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலை எனப் பெயர் சூட்டப்பட்டு பழைய கண்டி வீதிக்கு அருகே ஆரம்பித்து வைக்கப்பட்டதே இன்று நாம் காணும் கிளி/இராமநாதபுரம் மகா வித்தியாலயமாகும். இப்பாடசாலைஆரம்பிக்கப்பட்டு திரு.S.கனகசுந்தரம் எனும் தலைமை ஆசிரியர் பொறுப்பில் கையளிக்கப்பட்டது. அக்காலத்தில் தரம் 5 வரையே வகுப்புக்கள் நடைபெற்றன. ஆரம்பித்த காலத்தில் 90 மாணவர்கள் வரை கற்கத் தொடங்கினர். அதிபரின் கல்வி நடவடிக்கைக்கு உதவியாக திருமதி.மாணிக்கம் திருமதி.பொன்னம்மா எனும் இரு பெண் ஆசிரியர்கள் கடமையாற்றி வந்தனர் எனவும் முதற்பெண் ஆசிரியரான திருமதி.மாணிக்கம் அவர்கள் இவ்வூர் மக்களால் மாணிக்கக்கா என செல்லமாக அழைக்கப்பட்டதுடன் பத்துவருடங்களுக்கு மேலான காலம் பாலர் பிரிவில் கடமையாற்றியது. குறிப்பிடத்தக்கதாகும். பாடசாலையில் சேர்விலக்கம் வழங்கிய பதிவுகள் மேற்கொள்ளப்பட்ட போது கற்ற மாணவர்களிடையே பாலர் பிரிவில் அக்காலத்தில் அரிவரி என அழைக்கப்பட்ட வகுப்பில் இருந்த நடராசா ஆனந்தநாயகி என்பவரையே முதலாவது இலக்கத்தில் பதிவு செய்தனர். இக்காலத்தில் இருந்த ஆசிரியர்களுடன் திரு.திருமதி.சிதம்பரப்பிள்ளை ஆகிய இருவரும் இப் பாடசாலைக்கு பணியாற்ற வந்தனர்.

வளர்ந்துவந்தஎம் பாடசாலையை 1960ல் திரு.T.சங்கரப்பிள்ளை எனும் அதிபர் பொறுப்பேற்றார். இவர் குடியேற்றவாசிகளின் வீடுதோறும் சென்று அவர்களுடன் கலந்துரையாடி எம் பாடசாலை வளர்ச்சிக்காக மேலும் பல மாணவர்களை இணைத்துக் கொண்டார். மாணவர்களின் எண்ணிக்கை 150ற்கு மேற்பட்டது. கற்றல் செயற்பாட்டுடன் இணைப்பாடவிதானச் செயற்பாட்டிலும் ஊக்கம் காட்டினார். வகுப்புக்கள் 8 வரை உயர்த்தப்பட்டன. இல்லங்கள் பிரித்துவிளையாட்டுப்போட்டிநடாத்தினார். பச்சை, சிவப்பு, மஞ்சள் என்ற நிறங்களிலே பாரதி, நாவலர், விவேகானந்தர் என்று இல்லங்களுக்குப் பெயர் சூட்டிய வருடம் இவருடையதே. இப்பாடசாலைச் செயற்பாடுகளுக்கெல்லாம் அக்காலகொலணி அதிபர் கிருஷ்ணப்பிள்ளை சேதுராஜா ஓவசியர் என்பவர்கள் பாடசாலைக்குஅருகில் அமைந்திருந்த அவர்கள் விடுதிகளிலிருந்து ஆக்கமும் ஊக்கமும் அளித்தனர். ஊரின் உதவி பெற்ற தலைமை ஆசிரியர் சங்கரப்பிள்ளை அவர்கள் கலை விழாவும் நடாத்தினார். இவரது காலத்திலே தான் திரு.திருநாவுக்கரசு ஆசிரியரும் கடமையாற்றினார். 1962ஆம் ஆண்டிலேயே இவ்வூர் முதலாவது கலை விழாவைக் கண்டது இப்பாடசாலையிலேயே இவ்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதிபரை ஊர் மக்கள் உவந்தேற்றிருந்தனர் என்பதை 1963ம் வருடம் அவர் இடமாற்றம் பெற்றுச் சென்ற போது ஊர் கூடி நடாத்திய பிரியா விடை வைபவம் சான்றாகும். இவருடைய காலத்தில் பாடசாலைக்கு வருகை தந்த சைவப்பெரியார் ஆசிய ஜோதி முத்தையா அவர்களால் நாட்டப்பட்ட பலாமரம் இன்றும் பாடசாலைப் பிரதான மண்டபத்தின் முன்பக்கம் காட்சி தருவதுடன் இனிய கனிகளையும் தந்து நிற்கின்றது.

1963ல் வகுப்புக்கள் PROSSC வரை உயர்த்தப்பட்டது. அதன் பின்னர் SSCவகுப்புக்கள் ஆரம்பிக்கப்பட்டன. இதனால் இக்கிராமமக்கள் தமது சொந்த ஊர்களில் படித்த பிள்ளைகளையும் இங்கு கொண்டு வந்து சேர்த்தனர். இவருடைய காலத்தில் செல்வி. தமிழரசி சோமசுந்தரம், செல்வன். வல்லிபுரம் தம்பிராசா என்பவர்கள் மாணவர்களுக்கு பொறுப்பான சிரேஷ்ட மாணவர்களாக காணப்பட்டனர். தமிழரசி கிளிநொச்சி பிரதேச தடகள விளையாட்டுப் போட்டிகளில் பங்கு பற்றி வெற்றிவாகை சூடிப் பாடசாலைக்குப் பெருமை சேர்த்தார்.

1964இல் திரு.கந்தையா அதிபர் அவர்கள் கல்வியை மட்டுமல்ல மாணவர்களிடையே பக்தியையும் வளர்த்தார். பண்ணோடு தேவாரத்தைதானே சொல்லித் தருவார். வெள்ளிக்கிழமை தோறும் மாவடி அம்மன் ஆலயத்திற்கு அழகிய இருவரிசைகளில் ஆண், பெண் இருபாலாரையும் நடைபவனியில் அழைத்துக் கூட்டுப் பிரார்த்தனை நடாத்தி இறைவழிபாடு செய்யவும் பழக்கி அழைத்து வருவார்.

இக்காலப்பகுதியில் முதன்முறையாக SSCஎன்னும் சிரேஷ்ட கல்வித் தராதாரப் பத்திரத்திற்கு விண்ணப்பித்து பரீட்சை எழுதி எம் பாடசாலை மாணவர்கள் சித்தியும் அடைந்தனர். இக்காலமாணவர்களில் ஒருவர் தான் எமது பாடசாலை ஆரம்பப் பிரிவில் நீண்ட காலம் கடமையாற்றிய திருமதி. அன்னமுத்து சின்னத்தம்பி ஆசிரியை ஆவார். இவர் இப்பாடசாலையிலேயே படித்து படிப்பித்து இங்கேயே ஓய்வு பெற்ற சிறப்புக்குரியவர்.

1965 திரு.பொன்னம்பலம் அதிபராகக் கடமையேற்றார். இவர் மாணவர்கள் கல்வித் தராதரப் பரீட்சையில் (SSC)வெற்றி பெறுவதற்காக பாடுபட்டார். இவரின் காலத்தில் மாணவர் எண்ணிக்கை 250ற்கு மேல் காணப்பட்டது குறிப்பிடத்தக்கது.

1966ல் திரு.ஆ.மகாதேவன் அதிபர் பாடசாலையைப் பெறுப்பேற்றார். இவர் வல்வெட்டித்துறையைச் சேர்ந்தவர், சிதம்பராக்கல்லூரியின் அதிபராக இருந்தவர். இக்காலத்தில் பாடசாலை பெருமைக்குரிய வளர்ச்சிபெற்றது. கிளிநொச்சிப் பிரதேசத்தில் இருபாடசாலைகள் மகாவித்தியாலயமாகத் தரம் உயர்த்தப்பட்டது. அதில் ஒன்று எமது பாடசாலை தரமுயர்த்தப்பட்டு யாழ்/ இராமநாதபுரம் மகாவித்தியாலயம் என்ற பெயர் பெற்றது. இக்காலத்தில் 300 மாணவர்கட்கு மேல் கல்விகற்றனர். பாடசாலைக்கொடி உருவாக்கப்பட்டது. அதன் நிறம் கரும் சிவப்பு யாழ்ப்பாணத்தில் இருந்து வந்து கல்வி கற்ப்பித்தவர் பொ.சுப்பிரமணியம் அவர்கள் இவர் பாடசாலைக்கீதம் ஆக்குவதில் முன்னின்று உழைத்தவர். தனது விடாமுயற்சியால் மதிப்பிற்குரிய வீரமணி ஐயர் அவர்களைக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டு பிலஹரி இராகத்தில் ஆதிதாளத்தில் "வளர்புகழ் ஓங்குகவே"என ஆரம்பித்து "காலமெல்லாம் பணிசெய்தே வாழியவே" என வாழ்த்தி இயற்றுவித்த பெருமை திரு.பொ.சுப்பிரமணியம் அவர்களின் தனிப்பணியாகும் இயற்றுவித்தது மட்டுமன்றி மாணவர்கள் யாவரும் ஆர்மோனிய இசையுடன் அழகாகப்பாட வேண்டும் என்பதற்காக பொன்னான பொழுதையெல்லாம் மாலைநேரம் செலவுசெய்து மாணவர் மனங்களில் இசையை வளர்த்து பாடசாலைக்கீதத்தை இசையுடன் பாடவைத்த பெருமை திரு.பொ.சுப்பிரமணியம், சங்கீத ஆசிரியர் தியாகராஜா அவர்கள் இருவரையுமே சாரும் பாடசாலைக்கு என்று ஒரு மகுடவாசகம் ஆக்கப்பட்டது"ஏருக்கும் ஏட்டிற்கும் ஏற்றம் தருவோம்" இப்பாடலைச் சின்னத்தில் பொறிக்கப்பட்டது. நடுவில் ஒரு புத்தகம், அதன்மேல் சிட்டியில் ஏற்றியதீபம், சுற்றிவட்டவடிவில் நெற்கதிர் அதனைச் சுற்றி மகுடவாக்கியம் இராமநாதபுரம் வடக்கு அ.த.க பாடசாலை என்ற பெயர்மாறி இராமநாதபுரம் மகாவித்தியாலயம் என்று ஆனபோது அதிபர் மகாதேவன், ஆசிரியர் பொ.சுப்பிரமணியம் இருவரின் அயரா முயற்சியாலும் பாடசாலை புதுப்பொலிவு பெற்று, கொடி, கீதம் இலட்சினை எல்லாம் பெற்று புத்துயிர் பெற்றது புதிய அதிபர்விடுதி கிடைத்தது. பிரதானமண்டபத்தின் பின்புறம் அதே அளவுள்ள சீமெந்துக்கட்டிடம் கிடைத்தது விஞ்ஞானகூடம் ஒன்று வேப்பமரத்திற்கருகே காட்சி தந்தது. மாணவர்கள் G.C.E O/L என்று அழைக்கப்பட்ட க.பொ.த சாதாரணதரப் பரீட்சைக்குத் தோற்றி சித்திபெற்றார்கள் ஒற்றுமையுடன் பல ஆசிரியர்கள் பணிசெய்தனர். பொற்காலம் உதயமாகிவிட்டது என ஊரார் நம்பினார்கள் அதிபர் அவர்களால் பாடசாலை வேலிகள் சீரமைக்கப்பட்டு ஒருகட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்டது.

1969ல் திரு.காராளபிள்ளை அதிபர் அவர்கள் பொறுப்பேற்றார் இவருடைய காலம் பாடசாலையின் பொற்காலம்தான் பாலர்பிரிவில் ஆனந்தரத்தினா ரீச்சர், மனுவேற்பிள்ளை ரீச்சர், பார்பதி ரீச்சர், வள்ளியம்மை ரீச்சர், நாகம்மா ரீச்சர் மணியம் ரீச்சர் இன்னும் பலர் சிறந்த சேவை செய்தனர் பாடசாலையின் நல்லாசிரியர்கள் கூடி பணி செய்த காலம். இடைநிலைப் பிரிவிலும் நல்லாசிரியர்கள் பணி செய்தனர் இருந்தும் காராளபிள்ளை அதிபரால் புதிய பாடங்கள் அறிமுகம் செய்யப்பட்டது. பாலர்பிரிவில் கற்பித்த பார்பதி கொண்டு மனையியல் எனும் பாடத்தை O/L தரத்திற்கு கற்பிக்க வைத்து சித்திபெறவும் வைத்தார் பல்கலைக்கழகத்திற்கு பட்டம் பெற்று வெளியேறிய மாணவர்களைக் கொண்டுவந்து தன் சொந்தமுயற்சியில் சொந்தச் செலவில் சரித்திரம்,புவியியல், குடியியல் போன்ற பாடங்களைக் கற்பித்தார். O/L மாணவர்களின் கல்வியில் 100% சித்திபெற அரும்பாடுபட்டார். இவருடைய காலத்தில் O/L வகுப்பில் எட்டுப் பாடங்களுக்கு விண்ணப்பித்து எட்டுப் பாடங்களிலும் சித்தியடைந்தவர்களும் உண்டு கல்விச் செயற்பாடு மட்டுமன்றி இணைப்பாடவிதானச் செயற்பாட்டிலும் ஊக்கம் காட்டினார். 1969ம் ஆண்டு மாணவர்களை உடற்பயிற்சிப்போட்டியில் மாவட்டத்தில் பங்குபெறவைத்து வெற்றியும் ஈட்டவைத்தார். இவ்வெற்றிக்கு செல்வி.பத்மாவதி வள்ளியம்மை, பார்வதி அவர்கள் இணைந்து பங்காற்றி பாடசாலைக்குப் புகழ் சேர்த்தனர். இவருடைய காலத்தில் பாடசாலை துரித



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முன்னேற்றம் கண்டது. மாசிலாமணி C.O அவர்களின் உதவியுடன் தபாலகத்தின் பின்பக்கம் இருந்த காட்டுப்பகுதியை பாடசாலைக்குப் பெற்றுத் தருவதில் அரும்பாடுபட்டார். இவருடைய ஆரம்ப முயற்சியின் பயனே இன்று பாடசாலை நாற்புறமும் வீதியுடன் காட்சிதருகின்றது. ஆரம்பகாலத்தில் மேற்குவீதியும் வடக்கு வீதியில் பாதி அளவில் மட்டுமே பாடசாலைக் காணி காணப்பட்டது. இவருடைய காலத்தில் கல்விகற்றுப் பயன் பெற்ற பலர் அரச பதவிகளில் உள்ளனர். இவர்களில் சிறப்புப் பதவி வகிப்போராக றோயல் கல்லூரி பிரதி அதிபராக இருந்த திரு.மா.கணபதிப்பிள்ளை, கிளிநொச்சி வலயக்கல்வி அபிவிருத்தி பிரதிக்கல்விப் பணிப்பாளராகக் கடமையாற்றிய கோ.செல்வராஜா என்போரைக் குறிப்பிடலாம். ஆசிரியராகக் கடமையாற்றிய கமலாவதி உருக்குமணி, செந்தமிழ்ச்செல்வி தேவராணி, தபாலதிபர் நடராசா, தபாலதிபர் சோ.செல்வராசா, அதிபர் ஆலாலசுந்தரம்,மனேச்சர் கருணாநிதி, தொலைத்தொடர்பில் சேவைபுரிந்த புவனாம்பிகை இன்னும் பலரும் இவரது வளர்ப்புகளே இவர்கள் யாவரும் தமது நல்லாசன்களான காராளாபிள்ளை, சுப்பிரமணியம் ஆகியோருக்கு இப்போதும் தலைசாய்ந்தே வாழ்கின்றார்கள்.

1971ம் வருடம் அதிபர் இடமாற்றத்தினால் தியாகராஜா எனும் BSC அதிபர் எம் பாடசாலைக்கு கிடைத்தார் இவரது பதவிக்காலம் ஒரு வருடம்தான் அதன்பின் 1972-73 காலப்பகுதியில் திரு.விக்ஷ்ணு, திருமதி.விக்ஷ்ணு எனும் அதிபர்கள் வட்டக்கச்சி மகாவித்தியாலயத்திற்கும் இராமநாதபுரம் மகாவித்தியாலயத்திற்கும் நியமிக்கப்பட்டனர். இக்காலத்தில் பாடசாலை நிலை தளம்பத் தொடங்கியது. தொடர்ந்து அதிபர் அலோசியஸ் 1974ம் வருடமும், த.மார்கண்டு 1975, 76, 77ம் வருடத்திலும் அதிபர் சோமசுந்தரம் 1978, 79ம் வருடத்திலும் திரு.கோபாலப்பிள்ளை 80,81ம் வருடங்களிலும் அதிபர் பதவி வகித்த போதிலும் தளம்பல் நிலையிலிருந்து மீட்டு முன்னேற்றப்பாதையில் கால் பதிக்க முடியாநிலையில் பாடசாலை நிர்வாகம் செல்ல நேரிட்டது. 1982ம் ஆண்டு J.M.B ஜெயராசா அதிபராக வருகை தந்தார் இவருடைய காலத்தில் மாணவர்களின் கல்வி, ஒழுக்கம், விளையாட்டு ஆங்கிலக்கல்வி என்பவற்றில் முன்னேற்றம் காணப்பட்டது. இவர் ஓர் உடற்கல்வி ஆசிரியராக இருந்து அதிபரான காரணத்தால் உடற்கல்வியில் ஊக்கமும் காட்டினார். இவரது அயராத முயற்சியில் உடற்பயிற்சிப் போட்டியில் முதலாம் இடம்பெற வகைசெய்தார். தற்பொது ஆசிரியப்பணியாற்றி வரும் பராசக்தி, செல்வி. வீரசிங்கம் பராசக்தியாக அணியை வழிநடத்தி வெற்றிவாகை சூடினார். ஜெயராசா அதிபர் பாடசாலையைப் பல வழிகளிலும் முன்னேற்றமடையச் செய்ததால் கிராமத்தவர் உள்ளங்களில் இடம் பிடித்தார். இவரது திடீர் இடமாற்றத்தை தாங்கமுடியாத மக்கள் மாணவர்கள் 1986 ஜனவரி பாடசாலை முதல்நாள் வெளிநடப்புச் செய்து இடமாற்ற எதிர்ப்பைத் தெரிவித்தமை ஊரறிந்த உண்மையாகும். இந்நாளில் வருகைதந்த புதிய அதிபர் இராமநாதன் தன்னை மக்கள் பகிக்ஷ்கரிப்பதாக எண்ணி வேதனைப்பட்டார். அவரது வேதனையும் கல்விச்சாலை வளர்ச்சிக்கு உரமாய் அமைந்தது. இவர் ஆங்கில மொழியில் கல்வி கற்ற இந்தியப்பட்டதாரி. இவர் கல்விச்சாலை முன்னேற்றத்தில் பெரிதும் அக்கறையுடன் செயற்பட்டார். O/L வகுப்புக்களிற்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாட ஆசிரியர்கள் இல்லாத பாடங்களுக்கு தொண்டர் ஆசிரியர்களை நியமித்து பரீட்சைக்கு மாணவர்களைத் தயார்படுத்தினார் புலமைப்பரிசில் வகுப்பை திருமதி.கண்ணம்மா தனிகாசலத்திடம் பொறுப்பித்து இரு மாணவர்களைச் சித்தி வகை செய்வித்தார். அதில் ஒருவர் சா.சாந்தகுமார் நாட்டிற்காக மாவீரர் ஆகிவிட்டார். ஒருவர் எம் பிரதேசத்தில் வைத்தியராய் பணியாற்றும் த.சுவேந்திரன் ஆவார். எந்த ஆசிரியரின் மனமும் கோணாது வழி நடத்தி பாடசாலையை முன்னேற்றப்பாதையில் இட்டுச் சென்றார். அமைதியான நடை, மென்மையான பேச்சு, புன்சிரிப்பு, மாணவர்களுடன் ஒன்றித்த வாழ்வு அவருக்கு அணிகலனாய் அமைந்திருந்தது. தமது கடமைக்காலத்தில் கல்விக் கருத்தரங்கு ஒன்றிற்கு கொழும்பு சென்றிருந்த வேளை 1993ல் மாரடைப்பால் கொழும்பில் காலமானார் இவரின் இறுதி அஞ்சலி நிகழ்வு எமது வித்தியாலயத்திலேயே அன்றைய கல்விப்பணிப்பாளர் கந்தசாமி அவர்களால் ஒழுங்கு செய்து நடாத்தப்பட்டது இந்நிகழ்வின் போது பிரதிக்கல்விப் பணிப்பாளர்களாக விருந்த திரு.ப.அரியரத்தினம், திரு.த.குருகுலராஜா, திரு.கி.சின்னராசா அவர்களும் கலந்து இரங்கல் உரை ஆற்றிய வேளை மண்டபத்தில் எழுந்த கலந்த இரங்கல் உரை ஆற்றிய வேளை மண்டபத்தில் எழுந்த அழுகையொலி மாணவர்கள் அதிபர் மீது கொண்ட பற்றைப் பறைசாற்றி நின்றது. ஏழு வருடங்கள் அதிபராகக் கடமையாற்றியமை குறிப்பிடத்தக்கது. இவரது காலத்தில் 1990ல் சாரணியத்தையும் திரு.ம.ஜெகதீஸ்வரன் ஆசிரியர் பொறுப்பில் தொடங்கி வைத்தார்.

1993 இன் மீதிகாலத்தை இக்கிராமத்தைச் சேர்ந்த ச.கிருஷ்ணமூர்த்தி அவர்கள் பிரதி அதிபராகக் கடமையாற்றி பாடசாலையை நிர்வகித்தார். 1994ல் இவ்வூர்வாழ் அதிபரான திரு.வை.தனிநாயகம் பெறுப்பேற்றார். பற்றோடு பாடசாலையை நிர்வகித்தார். 1995 நடுப்பகுதியில் ஓய்வு பெற்றார். 1995 இன் மீதிக்காலத்தில் திரு.சிவசாமி அதிபராக நியமிக்கப்பட்டார். இவருடைய காலத்தில் யாழ்மாவட்ட மக்கள் தமிழீழப் போரினால் இடம்பெயர்வு கண்டனர். அவ்வாறு இடம்பெயர்ந்த மக்களில் ஒரு பகுதியினர் இப் பாடசாலையிலும் தஞ்சம் அடைந்திருந்தனர். இதனால் கல்விச் செயற்பாட்டிற்கு நெருக்கடி ஏற்பட்டது இக்காலத்தில் அதிபருடன் இணைந்து இக்கிராமவாசியான பிரதி அதிபர் திருமதி.இ.திருநாவுக்கரசு அவர்கள் அரும்பாடுபட்டு பாடசாலை நிர்வாகத்தை தக்க வைத்துக் கொண்டனர் சிவசாமி அவர்கள் ஒருவருடத்தில் மாற்றம் பெற்றுச் செல்ல பிரதி அதிபர், பொறுப்புடன் 1996ன் மீதிக்காலத்தை நிர்வகித்தார். இக்காலம் கல்விச் செயற்பாட்டைச் செய்வதற்கு இடம்பெயர்ந்து மக்களால் இன்னல்பட்ட காலமாகும். தனியார் வீடுகளிலும், அயற்கட்டிடங்களிலும் மரநிழல்களிலும் வகுப்புக்களை நடாத்திய காலமாகும். ஒருவாறு இம்மக்களை எல்லாம் GS, GA, கல்வித்திணைக்கள உத்தியோகத்தர்கள் உதவியுடன் குடியிருப்பபுக்களை உருவாக்கிஅ ங்கு குடியமர்த்திவிட்டு பாடசாலையை மீட்டெடுக்க 1996ம் வருடம் முடிவுற்றது.

1997ம் வருடம் திரு க.இரத்தினகுமார் அதிபராக பொறுப்பேற்றார். இவர் 1997 - 2006இன் இறுதிவரை ஒரு தசாப்தகாலம் பாடசாலையை நிர்வகித்திருக்கலாம் அவரது உயர்கல்விக்காக 2004ம் வருடம் கற்கை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விடுமுறைபெற்றுச் சென்றிருந்தார். இக்காலப்பகுதியில் திரு.இ.இராஜமகேந்திரன் அவர்கள் அதிபராக இருந்து பாடசாலையை நிர்வகித்தார் உயர்கல்வி முடிவடைய மீண்டும் பாடசாலையை திரு.இரத்தினகுமார் பொறுப்பேற்று 2006இன் இறுதிவரை அதிபராகக் கடமையாற்றினார். இதில் ஒருவருடம் பறிபோய்விட்டது. இவருடைய காலம் பாடசாலை வரலாற்றில் ஒரு முக்கியமான காலம் என்றால் மிகையாகாது அண்ணளவாக 1000 மாணவர்களைக் கொண்டு தரம் 1 - 13 வரை நடைபெற்ற எம்பாடசாலையில் மாணவர் தொகை இரட்டிப்பாகியது. இடம் பெயர்ந்த மாணவர்கள் சேர்வினால் மாணவர் தொகை 2000ற்கும் அதிகமாயிற்று தரம் 13ல் கலைப்பிரிவு மட்டும் இயங்கி வந்து 1997ல் வணிகப்பரிவும் ஆரம்பிக்கப்பட்டது. மாணவர் தொகை, கட்டடம் பற்றாக்குறை தளபாடம் போதமை, இதன் காரணமாக இருவேளைப் பாடசாலையாக நடாந்தப்பட்டது. 100ற்கு மேற்பட்ட ஆசிரியர் கடமையாற்றினார். கிளிநொச்சி வலயத்தில் உள்ள பாடசாலைகளில் மிகக்கூடுதலான மாணவர் தொகையைக் கொண்டிருந்தது எமது பாடசாலையாகும். (திரு.பூராஜா அதிபருக்கு உதவியாக) இடம்பெயர்ந்து இங்கு வந்த அதிபர்களான திரு.பூராஜா, திரு.அலைக்ஸ்சாண்டர் இடம்பெயர்ந்து வந்த நல்லாசிரியர் பலர் கடமையாற்றினர். தற்போதைய கிளிவலய ஆரம்பப்பிரிவுப் பணிப்பாளரான திரு.சி.கணேசலிங்கம் அவர்களும் அக்காலத்தில் இப்பாடசாலையில் தமிழ்ப்பாட ஆசிரியராகக் கடமையாற்றியது குறிப்பிடதக்கது. பாடசாலைக்கு முன்பாகவுள்ள அரசகாணியிலிருந்த நெசவுநிலையக்கட்டிடம் அழகுபடுத்தப்படடு அங்கு பாலர்வகுப்புக்கள் நடைபெற்றன.

அதிக மாணவர் தொகை கொண்ட பாடசாலை என்பதாலும் வசதியின்மைகளையும் கருத்தில் கொண்டு உலகவங்கி எம்பாடசாலைக்கென 150 இலட்சம் ரூபா பண ஒதுக்கீடு செய்தது. இதன் பயனாக எம்பாடசாலைக்கு மாடிக்கட்டிடங்கள் இரண்டு, அழகிய நூலகம், செயற்பாட்டுக்கூட்டம் அழகியற்கூடம், விஞ்ஞானகூடம், மனைப்பொருளியல் கல்விக்கூடம் என ஏழு கட்டிடங்கள் அமைக்கப்பட்டதன் பயனால் ஓலையினால் வேயப்பட்ட கொட்டில் வகுப்பறைகள் மறைந்தன. குழாய்நீர் வசதிகள் செய்யப்பட்டது. பூந்தோட்டம், சிறுவர்பூங்கா, மதில், பாடசாலை முகப்பு வாசல்வளைவு எனப் பாடசாலை புதுப்பொலிவு பெற்றது. இரவுவேளையில் மாணவர்கள் வந்திருந்து கற்றல், கற்பித்தல் செயற்பாட்டில் ஈடுபடுவதற்காக மின்சாரவெளிச்ச வசதியும் செய்து கொடுக்கப்பட்டது. பாடசாலைக்கு பகல்காவலாளி, இரவுக்காவலாளி என நியமிக்கப்பட்டு பாடசாலை பாதுகாக்கப்பட்டது. அதிபரின் 5S திட்ட நடைமுறையால் பாடசாலை தூய்மையாகப் பேணப்பட்டது. வெளிநாடுகளில் வசித்த பழையமாணவர்கள் எதவியால் கணினிப் பயிற்சிப்பிரிவு ஆரம்பிக்கப்பட்டு மாணவர் கணினி அறிவு பெற வகை செய்யப்பட்டது அதிபர் அலுவலகம் கண்ணாடி அலுவலகமாக மாற்றியமைக்கப்பட்டது.

இவை ஒரு புறம் நடக்க, கற்பித்தற் செயற்பாட்டின் தரத்தை வருடந்தோறும் வளர்ச்சி பெற்றுக் காணப்பட்ட புலமைப்பரிசில் சித்திப் பெறுபேறும், O/L பெறுபேறும் பல்கலைக்கழகத்திற்கு மாணவர்கள் பலர் தெரிவாகியமையும் பறைசாற்றி நின்றன. இவரது காலத்தில் திரு.ம.ஜெகதீஸ்வரன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆசிரியர் வழிநடத்தலில் அமரர் கெ.பிரசாந் என்ற மாணவன் சாரணர் ஜனாதிபதி விருது பெற்றமையும் புகழாகும். இவருடைய கடமைக்காலத்தில் 2003ல் விவசாய ஆசிரியர் திருமிதி.செ.உருக்குமணி அவர்களால் விவசாயப் பாடத்திற்காக வடிவமைக்கப்பட்ட பயிர்செய்கைப் போட்டியின் அறுவடைவிழா கோலாகலமாக கொண்டாடப்பட்டதும் குறிப்பிடத்தக்கது.

சமாதன காலப்பகுதியில் யாழ்மாவட்டத்தின் புகழ்பெற்ற ஆசிரியர்களைக் கொண்டு வகுப்புக்கள் நடாத்தியமையும் பழைய மாணவர்கள் வெளிநாடுகளிலிந்து நிதி சேகரித்து வழங்கியமையும் பாடசாலை வளர்ச்சிக்கு உறுதுணையாக அமைந்தது. 2006ல் புதியபாடமாக ICT அறிமுகப்படுத்தப்பட்டு கற்பிக்கப்பட்டு 2007 க.பொ.சா/த ற்கு மாணவர்களைத் தோற்ற வைத்து 100% சித்தியும் பெறவைத்தார் திருமதி.சிவாஜினி பரமேஸ்வரன், இவர் ஒரு விஞ்ஞானபாட ஆசிரியராக இருந்தபோதும் ICT ஐ கற்பிப்பதில் முழுமுயற்சியுடன் ஈடுபட்டு வெற்றியும் கண்டார். இணைப்பாடவிதாச் செயற்பாட்டைப் பொறுத்த அளவிலும் பெருமுன்னேற்றம் காணப்பட்டது. தமிழ்த்தினப்போட்டி, ஆங்கிலதினப்போட்டி, விளையாட்டுப்போட்டி, உடற்பயிற்சிப்போட்டி எனப்பல பக்கத்திலும் பெருமை சேர்க்க அதிபர் அரும்பாடுபட்டார். அவருக்கு ஒத்தாசையாக ஒற்றுமையுள்ள ஆசிரியர் குழாமும் காணப்பட்டது. உடற்பயிற்சிப் போட்டியில் தடகளப் போட்டி, பெருவிழயைாட்டுக்கள் என்பவற்றிலும் வெற்றிகள் பல் பெற்றுப் பாடசாலை புகழ் பூத்தது ஆங்கிலதினப் போட்டிகள் வெற்றி மாவட்டம் வரைச் சென்றது. தமிழ்தினப் போட்டிகளின் வெற்றிகள் மாகாணம் வரை மீண்டது 2002ம் ஆண்டு காத்தவராயன் கூத்து மாகாணம் வரை சென்று மீண்டது. இவ்வாறு பலவழிகளிலும் முன்னேறி மீண்டும் புகழ்பெற்ற பாடசாலையாகத் திகழ்ந்தது.

2007ல் திரு.க.முருகவேல் அவர்கள் அதிபாராக பொறுப்பேற்றார். இக்காலம் ஈழப்போரட்டத்தின் வேதனை மிகுந்த காலமாக இருந்தது. பெற்றார் பிள்ளைகளையும், பாடசாலை மாணவர்களையும் இழந்தும் பிரிந்தும் தவித்த காலம் கிராமத்தில் ஒவ்வொரு நாளும் அவலநிலை காணப்பட்டது. இவ்வேளை மாணவர்கள் கல்வியில் அக்கறை காட்டமுடியாது ஏங்கியகாலம். அதிபர் ஆசிரியர், கல்வி அதிகாரிகள் கல்வித்துறையில் கவனம் செலுத்தமுடியாத காலமாகப் போர்ச்சூழல் காணப்பட்டது. மாணவர்கள் வாழ்வு பாடசாலை வகுப்பறைப் பதுங்குகழிகளுக்குள் முடங்கிக் காணப்பட்டது. இருந்தும் அதிபர் அவர்கள் கல்வியின் முன்னேற்றதில் கரிசனையுடன் செயற்பட்டு மாணவர்கள் பரீட்சைக்குத் தயார்படுத்தப்பட்டனர். பெறுபேறுகளிலும் திறமைகிடைத்தது.

2008ல் திரு.சி. முருகானந்தம் அவர்கள் பாடசாலையைப் பொறுப்பேற்றார். இவர் பாடசாலையைப் பொறுப்பேற்ற போது கிளிநொச்சி இடம்பெயர்நத மக்களால் நிரம்பி வழிந்தது. தொடர்யுத்தம், குண்டுவீச்சு, எறிகணைவீச்சு யாவுக்கும் முகங்கொடுத்த அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள் 2008ம் வருட O/L பரீட்சை வரை கல்விச் செயற்பாட்டில் மட்டும் இயன்றவரை ஊக்கம் காட்டி பரீட்சைக்கு முகம் கொடுத்தனர் 06.01.2009ல் இப்பிரதேசம் முழுவதும் இடம் பெயர்ந்து விட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் மீள்குடியேற்றம் செய்யப்பட்டு 26.04.2010ல் மீளப் பாடசலை ஆரம்பிக்கப்பட்டபோது பாடசாலை சுடுகாடாக் காட்சியளித்தது. தொடர்ந்தும் மீளக்குடியேற வரும் மக்களின் முகாமாகப் பேணப்பட்டது. அதிபரின் முயற்சியால் இடிந்தகட்டிடங்கள் திருத்தப்பட்டு, சுற்றி வேலிகள் போடப்பட்டு பாடசாலைச் சுற்றுப்புறம் பூந்தோட்டங்களால் அலங்கரிக்கப்பட்டு மாணவர்கட்கு குழாய் நீர் வசதி செய்யப்பட்டு பாடசாலைச் சூழல் கவின் நிலைக்கு கொண்டு வரப்பட்டது. கல்வி நிலையை உயர்த்துவதற்காக பல்கலைக்கழக அனுமதி பெற்ற மாணவர்கள் மூலம் மேலதிகவகுப்புக்கள் நடாத்த கல்வியில் மேம்படவகை செய்தார் மாணவர்களைக் கல்வியில் ஊக்குவிப்பதற்காக பரிசளிப்புவிழா நடாத்தினார். முதன்முறையாக "இராமாமிர்தம்" எனும் சஞ்சிகை வெளிவர ஆவன செய்தார்.

2015ல் இடைக்காலத்தில் அதிபராக இப்பாடசாலையின் பழைய மாணவனாகிய திரு சுப்பிரமணியம் நடராசா அவர் பதியியேற்றார் "தான் கற்ற பாடசாலை தன்னுடைய பாடசாலை" என்ற பற்றோடு சேவை செய்தார் மாணவர்களுடன் மிகவும் கண்ணிய உறவைப் பேணியவர். வைரவிழா நினைவுத்தூபி, சரஸ்வதிசிலை என்பவற்றை ஸ்தாபித்த பெருமைக்குரியவர். மைதானத்தின் ஒருபகுதிக்கு மதில் அமைத்தமை வேலிகள் புனரமைக்கப் பட்டமை, அலுவலகக் கோவைகள் ஒழுங்கமைப்புச் செய்யப்பட்டமை, அலுவலகத்தை கவின் நிலைப் படுத்தியமை மாணவர் ஒழுக்கக் கோவை வெளியிட்டமை, மாணவர் பதிவுப் புத்தகம் செயற்படுத்தியமை, பாடசாலைக்கு கணினிகள் பெற்றுக் கொடுத்தமை மிகவும் குறிப்பிட கூடிய செயற்பாடுகள் ஆகும் மேலும் எமது பாடசாலையில் உயர்தர வகுப்புக்கள் ஆரம்பித்து கால்நூற்றாண்டை அண்மித்த நிலையில் முதல் முதல் 'இராமநாதம்' எனும் சஞ்சிகை வெளியிடக் காலாக இருந்த அதிபர் ஆவார்.

திரு.M.C.L.மனுவல் அவர்கள் எம்பாடசாலையைப் பொறுப்பேற்றுள்ளார் இவரது காலத்தில் எமது பாடசாலை வெளிநாட்டிலும் உள்நாட்டிலும் வாழும் பழைய மாணவர்கள் பெரும் முயற்சியால் வைரவிழாக் காண ஆவன செய்யப்படுகின்றது. வெள்ளிவிழாவின்றி, பொன்விழாவின்றி, வைரவிழாக்கான விழயைும் எமது பாடசாலைக்கு சிறந்த நிர்வாகத்திறமைமிக்க அதிபர் கிடைத்திருப்பது பாடசாலையின் முன்னேற்றத்திற்கு வழிகோலும் என்பதில் ஐயமில்லை. ஏனெனில் திரு.மனுவல் அதிபர் அவர்கள் எம்பாடசாலைக்கு புதியவர் அல்லர். உயர்வகுப்பு ஆசிரியராகவும், பாடசாலை நிர்வாகத்தில் பங்கு கொண்டவராகவும், ஒரு தசாப்த காலத்திற்கு மேல் எம்பாடசாலையில் ஆசிரியப்பணி புரிந்தவர். எமது பாடசாலையின் வருத்த துன்பங்களை தெரிந்தவர் அதை இனங்காணும் திறமையும் தீர்த்துக் கொள்ளும் பக்குவமும் தெரிந்தவர். அவர் ஓய்வுபெற சிறுகாலமே உள்ளது. எம் ஆசிரியர் சமூகம் ஒன்றிணைந்து சேவை செய்து மாணவர் குழாம் திறமைகளை வெளிப்படுத்தி எம்பாடசாலை ஒளிவீசி முன்னேற்றமடைந்து உயர்கல்விச் சாலையாக வாகை சூட அவர்பணி அமையும் என்ற நம்பிக்கையில் உள்ளோம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

60

1956 - 2016

# மாணவர் ஆக்கங்கள்

ஸ்ரீ இராமநாதபுரம் மகாவித்தியாலயம்
1956
RAMANATHAPURAM
கற்றுணர்ந்து ஒழுகு

## வைரவிழா மலர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பூமி பிறந்தது

எங்களைத் தாங்கும் பூமி பிறந்தது
எப்படி என்பதை அறிதம்பி
பொங்கி எரிகின்ற சூரியன் விட்டும்
பிரிந்து போனதோர் பொருள் தம்பி

பிரிந்து சென்ற பொருள் வான வெளியிலே
பெரிதாய் எரியும் சூரியனை
விரைந்து விரைந்து சுற்ற நெடுங்காலம்
வெப்பமும் மெல்லெனத் தணிந்ததடா

அறுபது ஆயிரம் ஆண்டுகள் தொடர்ந்து
அல்லும் பகலும் மழை கொட்ட
இறுக்கம் கண்டது பிரிந்த பொருள்
இருண்ட பெருங்கடல் சூழ்ந்ததடா

இன்று இருப்பது போல வெவ்வேறாய்
இருந்ததில்லையே கண்டங்கள்
ஒன்றே ஒன்று நிலப்பரப்பு, அதிலே
உயர் நீள் மரங்கள் இருந்ததடா

நூற்று ஐம்பது கோடி ஆண்டுகள்
நீண்டு கழிந்து மறைந்திட ஓர்
மாற்றம் நேர்ந்தது, உப்புக் கடலில்
உயிர் அது அணு தோற்றம் கண்டதடா

முதலில் தோற்றம் கடல் பாசியென
மூத்த விஞ்ஞானிகள் கொள்கை தம்பி
அதனைத் தொடர்ந்து ஓரணு ஈரணு
உயிர்கள் அசைவு கொண்டதடா

காலம் கரைந்து சென்றிடவே, நீர்
நிலத்தில் வாழும் உயிரினங்கள்
வாலுடை, பல்லி, பாம்பு, தவளை
போன்றன தோன்றி வாழ்ந்தனவே

படிப்படியாய் பல உயிரினங்கள் இந்தப்
பாரினில் தோன்றின, குரங்கு இனமே
அடிப்படை மனிதர் தேன்றுதலுக்கு என்பது
அறிஞர் டார்வின் முடிவு தம்பி

இன்று இந்தப் பூமியின் வயது
என்ன என்பதை நாம் அறிய
சொன்னார் ஆராய்ந்து அறிந்தோர் நானூற்று
ஐம்பது கோடி ஆண்டென்று

**ஜெ.கபீஷ்னா**
தரம் 7A

**மாலைக் கண் நோய் விட்டமின் A குறைபாட்டால் ஏற்படுகின்றது**
**விட்டமின் B குறைபாட்டால் பெரிபெரி நோய் ஏற்படுகிறது**
**பற்களை ஸ்கேவி நோய் பாதிக்கும்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## பள்ளியின் முதல் நாள் ...

அகவை ஐந்தை தாண்டி
ஆறாம் வயதில் அன்னையுடன்
அன்புக் கரம் பிடித்து
பள்ளி அன்னையின் வாசல் வந்தேன்.

பார்த்த பார்வையிலே பாலகர் - சிலர்
பட்டாம் பூச்சி போல் என்முன் வந்து
பாசம் கொண்டு கையை பிடித்து
பாடம் படிப்போம் வா! என்றனர்.

பயந்து சென்ற எனக்கு பலம் - வந்தது
அன்னையின் கரம் விட்டு
பள்ளித் தாயின் மடி மீது
முகம் புதைத்தேன்.

மனங்கள் பஞ்சாகப் பறந்தன
எண்ணங்கள் சிறகடித்து - பறந்தன
எண்ணும் எழுத்தும் - என்
கண் முன்னே வந்தன

அன்ன நடையும் அழகான உடையும்
அன்பான குரலும் அமுத வார்த்தையும்
அள்ளித் தந்த வண்ணம்
ஆசிரியர் தான் வந்தார்..

ஓடி விளையாடு பாப்பா - நீ
ஓய்ந்திருக்கலாகாது பாப்பா என்று
அத்தனை மாணவரும் கை தட்டிய
அன்பான பாடல் அது

அன்று தான் பள்ளி அன்னையின்
முதன் நாள் அரவணைப்பில் அகப்பட்டேன்
அத்தனை இன்பமும் பெற்றேன்.
இந் நாளில்....

ஆக்கம்
ப.கயலினி
தரம் 5A
கிளி/இராமநாதபுரம் ம.வி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கல்வியின் பெருமைக்கு நிகருண்டோ?

கல்வி செல்வங்களுள் உயர் செல்வமாம்
மனிதனை நல்வழி வாழ வழி செய்வது கல்வியே
கல்வி கற்றோன் செல்லும் இடமெங்கும் சிறப்பே
ஒழுக்கம் தனை போதித்தருள்வது கல்வியே.

கல்வி இன்றி மனிதனால் ஆவது ஏதுமில்லை
நம் கண் ஒப்பான பெருமை உடையது கல்வி
நல் தொழிலுக்கு வழி காட்டுவது கல்வியாகும்
வாழ்வின் நோக்கம் அதை புரிய வைப்பது கல்வியே

கல்விக்கு இன்றி மனிதனால் ஆவது ஏதுமில்லை
நம் கண் ஒப்பான பெருமை உடையது கல்வி
நல் தொழிலுக்கு வழி காட்டுவது கல்வியாகும்
வாழ்வின் நோக்கம் அதை புரிய வைப்பது கல்வியே

கல்விக்கு என்றும் அழிவில்லையாம்
கல்வி அதன் சிறப்புக்கு என்றும் குறைவில்லையாம்
கல்வி அதனை நன்கு கற்றுடவோம்
வாழ்வதனில் இன்பம் பெற்று உயர்ந்திடுவோம்

**இ.கவின்**
**தரம் 06**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஒற்றுமை

ஒற்றைத் துளியாய் வீழ்ந்து

வெள்ளமாகும் மழையிடமும்

கூடி வந்து கரை உடைக்கும்

அலையிடமும்

ஓடி வந்து மரம் வளைக்கும்

காற்றிடமும்

வானிலே சிறகு விரிக்கும்

சிட்டுக்களிடமும்

உணவு சேமிக்கும் எறும்புகளிடமும்

தேன் சேமிக்கும்

தேனீக்களிடமும்

கற்றுக் கொள் கற்றுக் கொள்

ஒற்றுமையை.

அ.மரிஸ்ரெலா
தரம் (7C).

**தினமும் ஏதாவது நல்ல விடயத்தை படிப்பதை வழக்கப்படுத்திக் கொள்ளுங்கள். நல்லவற்றைப் படித்து இயன்றளவு கல்வியறிவை வளர்த்துக் கொள்ளுங்கள்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# முதன்மைகள்

உலகில் உள்ள மலைகளில் - மிகவும்
உயர்ந்தது இமய மலை தம்பி
அலைதரு கடல்களில் பெரியதுவும் - மிக
ஆழமான பசுபிக் தம்பி

நதிகளில் நீண்டது நைல் நதியே - எதிப்து
நாட்டிற்கு வாய்ந்த பெரு நிதி
மதில்கள் சீனப் பெருஞ்சுவரே - மக்கள்
தொகையிலும் சீனா முதலிடமே

எவரெஸ்ட் முதலில் எட்டியுமே - புகழ்
ஈட்டினர் டென்சிங், கிலாரியுமே
புவியின் வடக்குத் துருவத்தை - முதலில்
ரபேட்பியர் சென்று அடைந்தாரே

சிறுத்தை புலிதான் விலங்குகளில் - அதி
வேகம் கொண்டது ஓடுவதில்
பறவை இனத்தில் - கம்மிங் குட்டியை
பையில் சுமக்கும் கங்காரு

சந்திர மண்டலம் மீதிலிறங்கி - முதல்
சாதனை படைத்தவர் நீல ஆம்ஸ்ட்ராங்
இந்திய நாடு கடல் வழியாக - வந்தவர்
வாஸ் கொட காமவே.

உலகில் உயர்ந்த விலங்கென்றால் - அது
ஒட்டகச்சிவிங்கி ஒன்றே தான்
விலங்குகளில் பெரியது ஆபிரிக்க இருள்
வனத்தில் வாழும் யானைகளே

அதிக வெப்பம் காணுமிடம் - நாம்
அறிவோம் அஜிஜியா என்று
அதிக மழையைக் கொட்டு மிடம் - இந்த
அகிலம் கண்டது சீராப்பூஞ்சி

நூலகங்களில் மிகவும் பெரியது - தம்பி
தேசிய கியூ நூலகமே
பாலை வனங்களில் பெரிது - தம்பி
ஸஹாரா பாலைவனம் பேரே.

ஜெ.கலையரசி
தரம் 7A



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தாய்மைக்கு



பத்து மாதம் தன்னுள்

என்னை வைத்துப் பாதுகாத்து

பரிதவித்து வலிபொறுத்துப் பிரசவித்து

தன் செந்நீரை எனக்காகப்

பாலாக்கி - பாசத்தோடு

சேர்ந்தே ஊட்டி

வளர்த்தவள் என் அன்னை!

உறவுகளை அறிமுகப்படுத்தி

பாரில் திகழ்ந்திட நல்வழி காட்டி

பிள்ளையின் புன்னகைக்காய்

ஏங்கிடும் ஒரேயொரு

தனித்துவமான ஜீவாத்மா அன்னை!

வாழ்வின் அத்தியாயத்தில்

ஒளி வீசும் அழகிய வதனம் - அது

என் அன்னையவளின் திருவதனம்!

ஆம் நித்தமும் நினைத்து

தொழுதிடும் தன்னிரகற்ற - என்

அன்னையின் பாதக் கமலங்களுக்கு

இக் கவிதை சமர்ப்பணம் !!!

ஜெ.மிதுசா
தரம் 07C.

**மனித மூளையின் பகுதிகள் எத்தனை?**

**3**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## என் அப்பா

அப்பா அப்பா என் அப்பா
அன்பு காட்டும் என் அப்பா
அல்லும் பகலும் எனக்காக
அயராது உழைக்கும் என் அப்பா

ஆசைப்பட்ட பொருள் எல்லாம்
அள்ளி வழங்கும் என் அப்பா
பள்ளியில் படிக்கும் எனக்காக
பணத்தைச் செலவிடும் என் அப்பா

அன்பால் எனை அரவணைத்து
அறிவுரை வழங்கும் என் அப்பா
குற்றம் செய்யும் எந்தனை
குறை களையும் என் அப்பா

தெரியாமல் செய்யும் குற்றங்களை
தெளிவுபடுத்தும் என் அப்பா
கண்ணியமானவர் என் அப்பா
காலம் பல வாழணும் என் அப்பா

சோ.ருஜிகா
தரம் 08A.

**மற்றவர்கள் பேசும் போதும் குறுக்கே பேசாதீர்கள். உங்களுக்குப் பேச வாய்ப்புக் கிடைக்கும் போது மட்டும் பேசுங்கள். பணிவாகவே பேசுங்கள். வாக்குவாதங்களில் ஈடுபடாதீர்கள். உண்மையை ஏற்றுக் கொள்ளுங்கள்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## வாழ்க்கையின் தத்துவம்

வாழ்கின்ற போது பணம் வேண்டும்

வாழ்ந்து முடிந்த பின் பணம் வேண்டும்

கூடியிருக்க நண்பர் வேண்டும்

அனைத்தும் நிலைத்துக் கிடக்க பொறுமை வேண்டும்

எதையும் விட்டுப் பிரியா மனம் வேண்டும்

விருப்பங்கள் நிறைவேற வேண்டும்

விலையில்லாத உணவு உலகுக்கு வேண்டும்

உண்மை அரசாள வேண்டும்

உலகில் போர் ஊமையாக வேண்டும்

ஊதியம் உழைப்புக்கு உடைமையாக வேண்டும்

உலகத்தில் உழைப்பவன் உயர்ச்சி காண வேண்டும்

உலகத்தில் அனைவரும்

உளம் ...... சுகம் ...... காண வேண்டும்.

*செ.வர்ஷாயினி*
**தரம்** :- 08 A.

**ஒரு மனித உடலில் வாழும் ஒட்டுண்ணி எது?**

**கோலோன்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## வெள்ளாடை மலர்கள்

பள்ளிக்கூடப் பட்டாம் பூச்சியாய்
பறந்து திரிகின்றோம்
சின்னஞ் சிறிய பாலகராய்
துள்ளி திரிகின்றோம்!

வெள்ளாடைச் சிட்டாய்
ஓடித் திரிகின்றோம்!
உள்ளமெல்லாம் இன்பத்துடன்
பாடித்திரிகின்றோம்!

அன்புள்ளம் கொண்டவராய்
வாழ்ந்து பார்க்கின்றோம்!
அறிவுரை பல கேட்க
ஆர்வம் கொள்கின்றோம்!

நீதிக் கதைகள் கேட்டு
தினமும் மகிழ்கின்றோம்!
ஆசானின் அன்பினிலே
வாழ்ந்து பார்க்கின்றோம்!

நூல்பல அறிந்து
கற்று மகிழ்க்கின்றோம்!
நிம்மதியோடு வாழ்ந்து
நிறைவு காணுகின்றோம்!

## சிறந்த நட்பு

வாழ வைப்பவன்
இறைவன்
வாழத் தெரிந்தவன்
மனிதன்
வீழ வைப்பவன்
துரோகி
தூக்கி விடுபவன்
நண்பன்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## புதுமை படைக்க எழுந்துவிடு சிறுவனே!

இன்றைய சிறுவனே நாளைய தலைவன் - நீ
காலத்தால் அழியாத அரும் பொருள் - நீ
ஞாலத்தில் மலர்ந்த அழகிய மல்லிகை - நீ
சேற்றிலே விளைந்த செந்தாமரை - நீ

உலகிலே மலர்ந்திட்ட - எழில்மிகு
மலர் சோலை தான் - நீ
உன் வரவிற்காய் - காத்திருந்து
வலம் வந்த உறவுகள் - எத்தனை எத்தனையோ!

முத்தமிழும் உனக்குண்டு - இங்கு
வித்தைகளும் பலவுண்டு - உனக்காய்

கற்றவற்றை மாண்புறவே நீ ஏற்றிடணும் - பாரினிலே
பொக்கிஷத்தின் பூசலார் - நீ
பார்போற்ற புதுமை படைத்து - விடு
உலகம் உன் விசால பார்வைக்காய்
விரிந்து கிடக்கிறது .......

டே.கீர்த்திகா
தரம் 11A



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கவிதைப் பூங்கா



**நான்கு தூண்கள்**

இனிய சொற்கள்
குறைகளை அன்பாக
சுட்டிக் காட்டுதல்

இரகசியங்களில்லாதபடி
பகிர்ந்து கொள்ளுதல்
மற்றவர்களிடம்
குடும்ப
விசயங்களைப்
பேசாதிருத்தல்
இவை தான் இனிய
இல்லறத்தின் நான்கு
தூண்கள்

**பக்தியும் தொண்டும்**

பக்தியும் தொண்டும்
ஒரு நாணயத்தின்
இரு பக்கம்
போன்றது
பானைக்குள
இருக்கும் தண்ணீரை
தூய்மையாகக்
காண்பது பக்தி
அதனை அள்ளிக்
குடிக்கும்படி
செய்வது தொண்டு

**அம்மா**

அம்மாவுக்கு என்று
தனியாக கவிதை
வேண்டாமே...
அன்பாகப் பழகிப்பார்
அம்மாவே கவிதை தான்

**எதிர்பார்ப்பு**

குயிலினின்
ஓசை மத்தியிலே
மலர்கள் நிறைந்த
சோலையிலே
சொர்க்கம் என்ற
பூமியிலே படைத்தான்
இறைவன் உன்னை
எத்தனை
எதிர்பார்ப்புக்களுடன்

**அன்பு**

உருவம் பார்த்து
அன்பு வைக்காதீர்கள்
அது கண்ணாடி போல்
உடைந்து விடும்
அழகைப் பார்த்து
அன்பு வைக்காதீர்கள்
அது றோஜா முள்போல்
குத்தி விடும்
உள்ளத்தைப் பார்த்து
அன்பு வையுங்கள்
அது தண்ணீர் போல்
தாகம் தீர்க்கும்

**அப்பா**

அன்பெனும்
தலைப்பில்
மிகச் சிறிய
கவிதை கேட்டார்கள்
நான் உடனே
அப்பா என்றேன்

*செ.நிக்கேசியாயினி*
**தரம்** :- 11 A.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நட்பு

என் மனம் வாடும் நேரங்களில்
எல்லாம் என்னை ஆறுதல் படுத்தவும் ......

நான் துயரங்களில் துவண்டு விடும்
வேளைகளில் என்னை சோர்வடைய
விடாமல் தோள் சாய்த்து
உற்சாகப் படுத்தவும் ............

என் கண்கள் கலங்கியனும் முன்பே
என்னை கலங்க விடாமல்
பாதுகாக்கவும் ........

நான் தோல்விகளை சந்திக்கும்
போதெல்லாம் எனக்காக
வேதனைப்படவும் ..........

நான் வெற்றிகளை பெற்றிடும் போது
மனதார வாழ்த்திடவும் ........

எனக்கு ஒரு நண்பி இருக்கிறாள்.

# FRIEND SHIP

A Friend give hope,
When life is low,
A friend is a Place
Wen you have
Now here to go,
A friend is honest,
A friend is true
A friend is Precious
And that
My Friend is you.

F - Few
R - Relation
I - In
E - Earth
N - Never
D - Die

ம.டனுஜிகா
தரம் 11C

எப்போதும் புன்சிப்போடு இருங்கள். மற்றவர்களுடன் இன் முகத்துடன் பழகுங்கள் உங்கள் குறைகளை குறைவாகவும் உங்கள் நிறைகளை அதிகமாகவும் எண்ணி மகிழ்வடையுங்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இந்துமாமன்றம்



## கிறிஸ்தவ மன்றம்



## தமிழ் மன்றம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மாணவர் தலைவர்கள் - 2017



## மாணவர் தலைவர்கள் - 2016



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆங்கிலமன்றம்



## கணித விஞ்ஞான மன்றம்



## சமூக விஞ்ஞான மன்றம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆங்கிலமன்றம்



## சமூக விஞ்ஞான மன்றம்



## கணித விஞ்ஞான மன்றம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வணிக மன்றம்



## அழகியல் மன்றம்



## சுகாதார மன்றம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆரம்பக் கல்வி மன்றம்



## உயர்தர மாணவர் மன்றம்



## மாணவர் பாராளுமன்றம்



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



## கண்ணாடி

என்னை மட்டுமல்ல
என் - வீட்டு
வறுமையையும்
தெளிவாகக்
காட்டுகிறது
என் வீட்டு உடைந்த
கண்ணாடி

## பெண்ணே

பேரழகி உன்னை
படைத்தவன்
பிரம்மனே
ஏற்றுக் கொள்கிறேன்
ஆனாலும் - உன்
உள்ளத்தை
உருவாக்கியவன்
ஊதாரிதான் என்று
உணர்ந்து கொண்டேன்
என்னை விட்டு நீ
இன்னொருவனைக்
கைப்பிடித்த போது

## நேரம்

நடந்து வருகிறேனென்று
நாழிகையைக் குறைப்பதில்லை
தொடர்ந்து செல்கிறேன் என்று
தொடங்குமிடம் மறப்பதில்லை
கண்ணீர் வந்தாலும்
கடந்து போக மறப்பதில்லை
இருந்தாலும் சொல்கிறேன்
உன்னைவிட அதிகமாக
உழைக்கும் - என்
கற்பனை என்று

## பென்சில்

என்னவோ எழுதுகிறாய்
என்னவோ பேசுகிறாய்
எதையோ புலம்புகிறாய்
எதற்காக அழுகிறாய்
எனக்கேனும் சொல்லிவிடு
எப்போதும் சொல்லாத - உன்
ஒரு தலைக் காதலுக்கு
கவிதை தருகிறேன்

**பா.சத்தியடயானி**
**தரம்** :- 12(2018)
**கலைப்பிரிவு.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பள்ளித் தாயே

இராமநாதபுரம் ம.வி
அகிலத்தின் சா.வி (சாதனை வித்தியாலயம்)
அதிபர் வழி நடத்த
ஆசான் அறிவுரைக்க
அறிவுக் கடலினிலே நீந்தும்
பறவைகளோ ஏராளம்

பத்து மாதங்கள் தாய் வயிற்றில்
பதின் மூன்று வருடங்கள் உன் மடியில்
பாலூட்டி சீராட்டி - என்னை
பண்புடன் கல்வி தந்தாய் நீயே
பேனா என்னும் ஆயுதம் தந்து
பரீட்சை எனும் போர்க்களத்தில்
என்னைப் பேராளியாக்கிய
பள்ளித் தாயே
வைர விழா காணும்
நீ தான் என்றும் என் வீரத் தாய்

வாழ்வு தந்த பள்ளியே
தாழ்வு வேண்டாம் என்றுமே
எனை வளர்த்த அன்னையே
என்றும் உந்தன் சேயாவேன்
வாழ்க! வாழ்க!! வாழ்க!!! நீயே.

**பி.சுடரினி**
**கலைப்பிரிவு** (2018)

**ஒரு நாளைக்கு இதயம் எத்தனை முறை துடிக்கும்?**
**100,000 முறை**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சுகமான வலிகளைத் தரும் பள்ளித் தருணங்கள்

அம்மாவிடம் இருந்து பிரிந்து
போக
முடியாமல்
அழுத தருணம்.

நாலு பேர்
சேர்ந்து நம்மை பள்ளிக்கு
இழுத்துச் சென்றாலும்
நம் வீட்டையே திரும்பி திரும்பி
பார்த்த
தருணம்.

வேர்வையை சட்டையிலே
துடைத்து விட்டு விளையாடிய
தருணம்
ஆசிரியர் அடித்தால்
வலிக்க கூடாது என்பதற்காக
எண்ணை தடவி
பள்ளிக்குச் சென்ற தருணம்
என்னிடம் ரப்பர் வைத்த
பென்சில்
இருக்கிறது என பெருமைப்பட்ட
தருணம்

புதிதாக வாங்கிய
பேனாவை நண்பனிடம்
காட்டி சந்தோஷப்பட்ட தருணம்

வகுப்பு நடைபெறும் போது
நண்பனிடம்
புத்தக கிரிக்கெட் விளையாடிய
தருணம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நண்பர் இல்லாமல்
தவிக்கும்
போது பெஞ்சின் மேல்
மை தெளித்து உதவிய தருணம்

சனி ஞாயிறு விடுமுறை
என்றாலும்...
மழைக்காக விடுமுறை விட்டால்
அளவில்லாத சந்தோஷத்தில்
துள்ளிக் குதித்திருப்போம்.

எல்லா நாட்களும் தாமதமாக
செல்லும் நாம்
பிறந்த நாள் என்றால்
மட்டும்
சீக்கிரமாவே பள்ளிக்கு செல்ல
துடித்திருப்போம்.

விடுமுறை நாளில் பிறந்த நாள்
வந்தால் வருத்தப்படுவோம்

அனைவரது சாப்பாட்டையும்
சாதி, மத
பேதம் பார்க்காமல்
பகிர்ந்து உண்டு மகிழ்ந்தோம்

எட்டு மணியளவில்
வருத்தப்பட்டோம்
இரண்டு மணி ஆனால்
சந்தோஷப்பட்டோம்
இப்போ அந்த நாளுக்காக
ஏங்கி நிற்கின்றோம்...!!!

ஆக்கம்
த.மிதுஷா
(2018 வர்த்தகப் பிரிவு)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## தேடலே, மானிட மேன்மை

பசுமை கொஞ்சும் பரந்த ஞாலம்
பரிமளிக்க வேண்டும் பாரு,
வாசிப்பெனும் வண்ணவித்து
மனிதருள் புதைந்தே விட்டால்
கோடான கோடி கொண்ட
அறிவுமகள் தானும் கொலுவிருக்க வந்திடுவாள்
உள்ளத்திலே தத்துவங்கள் - வேர்
ஊன்றியே நிலைத்து நிற்க
தெருவெல்லாம் முரசு கொட்டும்
திக்கெட்டும் அறிவகங்கள்
சிறக்க வேண்டும் மனிதநேயம்
சீராக வேண்டும் விழுமியங்கள்
தார்மீக எண்ணங் கொண்ட
தரமான சமூகம் தரணியிலே ஓங்க வேண்டும்
தங்கத்திரு நாட்டிலே நல்ல
படைப்புக்கலை பெருக வேண்டும்
காலத்தை வென்று நிற்கும்
கவின்பெறு கலைகள் தானும்
சிந்தையிலே தோன்றி நின்று
சீவியத்தை அளிக்க வேண்டும்.
தொழில்நுட்பம், கைத்தொழில்கள்
தோன்ற வேண்டும் அற்புதங்கள்
மாறிவரும் உலகிற்கேற்ற
மானிட வாழ்வில் நடத்தை மாற்றம்....
தேவைகளோ அதிகம், அதிகம்
தேடலே, மானிட மேன்மை
தேவதைகள் வாழ்த்தியம்ப
ஆம்ஸ்றோங்கும் ஆக்கிமீடிசும்
ஆபிரகாமும் ஆதர்சீ கிளாக்கும் - நம்மில்
ஆயிரம் ஆயிரம் அன்றாடம் தோன்றிடுவர்

பா.நவப்பிரியா
தரம் 13 (2018)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஒற்றுமையே பலம்

காகம் கறுப்பு கட்டெறும்பு கறுப்பு
நாளும் ஒற்றுமையாம் அது நமக்கேது
அதிபர் ஆசிரியர் மாணவர்கள் என
அனைவரும் பள்ளியில் ஒற்றுமை எனின்
விண்ணளவு எம் பாடசாலையை
வாழ்த்தும் இன்றைய சமுதாயம்

அப்பா அம்மா சொற்கேட்டு
அண்ணா அக்கா தம்பியுடன்
நாளும் பழகும் நண்பர்களிடம்
ஒற்றுமையுடன் நன்றாய் பழகினால்
எம்மை பிரிப்பதற்கு வெருண்டு
எதிரியை மன்னிப்போம் எம் கண்ணால்

தொழிலாளர் அனைவரும் ஒன்றுபட்டு
முதலாளியின் கீழ் ஒற்றுமையுடன்
முயற்சியே வெற்றி எனும் நோக்குடன்
வேகமாய் முன்னேறி செல்வார்களானால்
நாளை உயரும் நம்நாடு
பல நாடுகள் சேரும் எம்மோடு

**க.கரன்சிகா**
**கலைப்பிரிவு** (2018).



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மீண்டும் பிறக்க வரம் வேண்டும்

நந்தவனத் தேரில்
ஒரே நாரில் தொடுத்த மலர்களாய்
நாமிருந்த நாட்கள்.....
நகர்ந்து சென்றதுவே

நாழிகையில் தொடங்கி - பல
நாட்களாகி இன்று அதுவே
மாதங்களென உருப்பெற்று விட்டது
இந்த நிலையில் அந்த இனிய - நாட்கள்

துள்ளித் திரிந்த காலம்
மீண்டும் வாராப் பருவம்
நினைத்து ஏங்கும் உள்ளம்
தவியாய் தவிக்கும் நெஞ்சம்

சோறு இல்லை, உடுக்க நல்ல
உடுப்பு இல்லை.... அந்நாளில்
சந்தோஷத்துக்கு மட்டும்
குறையும் இல்லை

வகுப்பில் அடிக்கும் அரட்டை
அயர்ந்து விடும் குறட்டை
மாற்றிக் கொண்ட சட்டை
மனதில் பதிந்த சுவடு

கள்ளம் இல்லா உள்ளம்
கபடம் இல்லா பேச்சு
சிரிப்பை தவிர துயரம்
சிந்திக்காத பருவம்

பாடம் எடுக்கையில் வேடிக்கை
தேர்வு அறையில் படுக்கை
தோல்வி அடைவது வாடிக்கை
இதுதான்டா வாழ்க்கை
நட்புக்காய் சண்டை போட்ட
காலம் நினைவில் ...
என் தோழி எனக்கு மட்டுமே
மாறவில்லை எண்ணம்

வீட்டில் ஒரு கையால்
அம்மா சமைத்த உணவு
கல்லூரியில் பல கைகள்
வைப்பதால் வரும் நிறைவு!

சுயநலம் இல்லா நட்பு
சுதந்திரமாய் பழக
தடையில்லா பருவம்
பள்ளிக்கூடம் .... தானே

போட்டியாய் படித்த பாடங்கள்
இன்று வரை நினைவில் ...
எதிரியாய் நினைத்தது
இன்று வரை இல்லை

வேண்டும் பள்ளிப் பருவம் ...
மீண்டும் பிறக்க வரம் வேண்டும்
இறக்கும் வரை படிக்கும் வரம் வேண்டும்
என் பள்ளியிலே ....

**பா.திவ்யா**
**கலைப்பிரிவு** (2016).



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## பள்ளியின் எண்ணங்கள்

கள்ளமில்லா உள்ளத்தோடு
வெள்ளை நிற ஆடையோடு
துள்ளி வந்த பள்ளியின்
எல்லையில்லா எண்ணங்கள் .....

தாய்மையின் பாசத்தை மறந்து
தூய்மையின் பாசத்தை கற்க
பயத்தோடு பள்ளியில் புகுந்த
மறக்க முடியாத நாள் .....

பாசத்தோடு விரல் பிடித்து
பக்குவமாய் கற்பித்த எம் ஆசான்கள்
துன்பத்திலும் இன்பத்திலும்
அன்பாய் பழகிய நண்பர்கள்

அரட்டை அடித்த வகுப்பறை
அமைதியாய் கதைத்த நூலகம்
அனைவரும் இருந்த பிரதான மண்டபம்
அரசியல் பேச்சு தந்த அரங்கங்கள்

நிழலுக்கு ஒதுங்கிய பலாமரம்
நிமிர்ந்து வாங்கிய பரிசில்கள்
நினைக்க இனிக்கும் நினைவுகள்
மறக்க முடியா மகிழ்ச்சிகள்

எத்தனையோ கோடி இன்பத்தை
அள்ளி தந்த பள்ளிக்கு
இன்னொரு முறை சென்றிட
ஏங்குகின்றது நெஞ்சம் ....

ச.சுவர்ணா
கலைப்பிரிவு (2015).



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பிரிவுகள்

ஆண்டொன்றில் அடியெடுத்தேன்
அறிவு என்னும் களத்தை நோக்கி
அன்றெடுத்த என் கால்கள்
இன்று பதின் மூன்றில் நிற்கிறது

இத்தனைக்குள்ளும் அன்போடு அரவணைத்த
என் கல்லூரி அன்னை
அறிவோடு பழகிய என் நண்பர்கள்
அறிவுரைகள் பல கூறி கற்பித்த
என் ஆசான்கள்
இத்தனைக்கும் முற்றுப்புள்ளி இடப்பட்டு சிறைப்படுகிறது
என் கல்லூரி வாழ்க்கை!

காலங்கள் பல கடந்தாலும்
எம் கல்வி நிலை மாறாது
சொல்லாத உம் உறவு எனக்குள் வந்து
தென்றலாய் கசிந்த போது நான் உணரவில்லை
நிலையான எம் உறவுகளின் பிரிவு
இத்தனை தணலாய் தவிக்கு மென்று!

இத்தனைக்கும் மேலாக ஏழையின் கையிலிருக்கும்
சில்லறைகள் வற்றிவிட்ட திருவோட்டைப் போல்
வார்த்தைகள் வற்றிவிட்ட இதயத்தோடு
என் கல்லூரி உணர்வுகள் உன் வாசலிலேயே
காத்திருக்கிறது

தோல்வியே இல்லாத இத்தேடலில்
மறுபடியும் வரம் கொடு தாயே
மீண்டும் உன் மாணவியாக

ஜெ.டென்சியா
தரம் 13
கலைப்பிரிவு
(2017)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## வாசிப்பதனால் உண்டாகும் பயன்கள்

01. எமது மொழித்திறன் விருத்தியடைய வாசிப்பு அவசியமாகும்
02. பாடநூல்கள் மட்டுமன்றி பயனுள்ள வேறு நூல்கள், பத்திரிகைகள், சஞ்சிகைகள் போன்றவற்றையும் வாசித்தல் வேண்டும்.
03. வாசிப்பதன் மூலம் எமக்குத் தேவையான தகவல்களை இலகுவில் பெற்றுக் கொள்ளலாம்.
04. தினமும் நல்ல விடயங்களை வாசிப்பதன் மூலம் எமது சிந்தனைத் திறன் வளர்ச்சி அடையும்.
05. காலத்திற்குப் பொருத்தமான பொது அறிவு விடயங்களைத் தெரிந்து கொள்ளலாம்.
06. சொற்கள், சொற்தொடர்கள், வாக்கியங்கள், பந்திகளைப் பொறிமுறைக்கேற்ப வாசிக்கக் கற்றுக் கொள்ளலாம்.
07. பாடங்களில் ஏற்படும் சந்தேகங்களைத் தீர்த்துக் கொள்ள மேலதிக வாசிப்பு உதவி புரிகின்றது.
08. எமது சொல்வளம் அதிகரிக்க இது பிரதான காரணியாக உள்ளது எனலாம்.
09. புதிய கதைகள், பாடல்கள், விடுகதைகள் மற்றும் புதிர்களை தெரிந்து கொள்ளலாம்
10. ஒவ்வொரு நாளும் வாசிப்பதன் மூலம் ஞாபக சக்தியை வளர்த்துக் கொள்ளலாம்.
11. ஒரு மனிதன் பூரணத்துவம் அடைவதற்கு வாசிப்பு பெரிதும் உதவுகின்றது.
12. இது சுய எழுத்தாக்கத்திறனை அதிகரித்துக் கொள்ள உதவி செய்கின்றது
13. பேச்சாற்றல் வளர்வதற்கு தினமும் வாசிப்பது மிகவும் அவசியமாகும்.
14. எப்போதும் பயனுள்ள விடயங்களைத் தெரிந்து வாசிக்கப் பழகிக் கொள்ள வேண்டும்.
15. அறிவு விருத்திக்குத் துணையாகும் வாசிப்புப் பழக்கத்தை ஒவ்வொருவரும் கடைப்பிடித்தல் மிக அவசியமாகும்.

ஆக்கம்
வ.தனுஸ்ரிகா
தரம் 5A



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# புவியின் வெப்பநிலை அதிகரிப்பால் ஏற்படும் விளைவுகள்

இன்றைய காலத்திலே புவியானது பல அழிவுகளை நோக்கி சென்று கொண்டிருக்கின்றது. இன்றைய நவீன காலத்தில் வளர்ச்சியடைந்துள்ள தொழில்நுட்பங்களும் மற்றும் புவிக்கு கேடு விளைவிக்கின்ற பொருட்களை பயன்படுத்துவதும் இதற்கான காரணங்களாகும். இன்றைய காலகட்டத்தில் புவியின் வெப்பநிலை அதிகரித்தல் மிகவும் ஒரு பாரிய பிரச்சினையாக உள்ளது. புவியின் வெப்பநிலையை குறைக்க வேண்டுமானால் அவற்றுக்கிணங்க செயற்பட வேண்டும்.

புவியின் வெப்பநிலை அதிகரிப்பால் மனிதர் இறக்கும் வீதம் அதிகரித்துள்ளது. அது மட்டுமல்லாமல் மனிதன் பாரிய நோய்களுக்கும் உள்ளாக்கப்பட்டு வருகின்றான். வெப்பநிலை அதிகரிப்பால் கண்நோய், புற்று நோய், தலைவலி போன்ற நோய்களும் ஏற்படுகின்றது வெப்பநிலை அதிகரிப்பால் முக்கியமாக ஓசோன் படையானது தேய்வடைய முக்கிய காரணமாக ஐதரோ புளோரோ காபன், கலோன் மெதேன் ஆகிய வாயுக்கள் ஓசோன் படையில் சேர்வதும் வாசனைத் திரவியங்களில் பயன்படுத்தும் இரசாயனப் பதார்த்தங்கள் என்பனவும் ஓசோன் படைக்குச் சென்று பாரிய பிரச்சினைகளை உருவாக்கின்றன.

சூரியனிடம் இருந்து வெளிவரும் புற ஊதாக் கதிர்களை ஓசோன் படையே தடுக்கின்றது. இவ் ஓசோன் படையானது சில பாதிப்புக்களுக்கு உட்பட்டிருப்பதால் சூரியக் கதிர்களானது மனிதனுக்கு நேரடியாகப் பட்டு பெரும் பாதிப்பை ஏற்படுத்துகின்றது. இதனால் இப்பொழுது பிறக்கும் குழந்தைகள் சுகவீனம் அடைந்த நிலையில் பிறக்கின்றனர்.

வெப்பநிலை அதிகரிப்பால் காலநிலை மாற்றங்களும் ஏற்படுகின்றன. அதாவது வெப்பகாலமே அதிகம் நிலவுகின்றது. மாரிகாலம் மிகவும் குறைவாக காணப்படுகின்றது. மாரிகாலம் குறைவாகையால் பயிர்ச் செய்கைகள் பாதிப்புக்குள்ளாகின்றன. இதனால் மக்களுக்கு சரியான முறையில் உணவு கிடைக்காமையால் பஞ்சம், பட்டினி, வரட்சி, இறப்பு என்ற பிரச்சினைகள் நேருகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனிதனானவன் அதிக மரங்களை வெட்டுகின்றான். அதனால் மழைவீழ்ச்சி அற்று வெப்பநிலையே அதிகரிக்கின்றது. இயற்கையாக காணப்படும் மரங்களை அவற்றின் பெறுமதியும் பயன்பாட்டையும் அறியாமல் அவற்றை அழித்து விட்டு தளபாடங்களையும் மற்றும் வேறு உற்பத்திகளுக்கும் பயன்படுத்துகின்றார்கள். எமது முன்னோர் முன்னைய காலத்தில் மரங்களை தெய்வமாக நினைத்து வழிபட்டார்கள் ஆனால் இன்று நாமோ ஒரு சாதாரண விடயமாக அதனை அழித்து விடுகின்றோம்.

அது மட்டுமல்லாமல் பனிப்பாறை உருகுதல், கடல் நீர் மட்டம் அதிகரித்தல் என்பனவும் இடம் பெறுகின்றன. பனிப்பாறை உருவாவதால் நீர்மட்டம் அதிகரிக்கின்றது. இதனால் வெள்ளம் மற்றும் சுனாமி போன்ற அனர்த்தங்களும் ஏற்பட வாய்ப்புண்டு. கடலுக்கு அடியில் இருக்கும் தீவுகளுக்கு கடல் நீர் மட்டம் அதிகரிப்பால் அத்தீவுகள் கடலுக்குள் சென்று அழிவதற்கான பல வாய்ப்புக்கள் காணப்படுகின்றன. இப்போதைய கால கட்டத்தில் மாலைதீவானது கடலுக்குள் செல்வதற்கான அபாயம் காணப்படுவதாக விஞ்ஞானிகள் கூறுகின்றனர். இத் தீவானது கடலுக்குள் மூழ்குமாக இருந்தால் தீவு இருந்தமைக்கான சான்றுகள் கூட இல்லாமல் அழிந்து விடும்.

எனவே மக்கள் அனைவரும் ஒன்று சேர்ந்து புவியின் வெப்பநிலை அதிகரிப்பிற்கு ஏதுவான காரணிகளை இனங்கண்டு அவற்றை தடுக்க வேண்டும். அப்பொழுது தான் புவியின் வெப்பநிலை அதிகரிப்பில் இருந்து விடுபட்டு பசுமையான புவியில் வாழலாம்.

சி.ஜானுஜா
தரம் 11A

**உடலையும் உள்ளத்தையும் தூய்மைப்படுத்திக் கொண்ட பின் உங்கள் சிந்தனையைத் தொடங்குங்கள். உங்கள் குளியலறையை நீங்களே சுத்தம் செய்து நன்றாக வைத்துக் கொள்ளுங்கள்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# என்னைக் கவர்ந்த பெரியார் டாக்டர். A.P.J.அப்துல்கலாம்

**பிறப்பு**

1931ம் ஆண்டு அக்டோபர் மாதம் 15ம் நாள் ஜைனுலாப்தீனுக்கும் ஆஷியம்மாவுக்கும் மகனாக இந்தியாவின் தமிழ்நாடு மாநிலத்தில் பாம்பன் தீவில் அமைந்துள்ள இராமநாதபுரம் மாவட்டத்தில் இருக்கும் ஒரு சிறிய நகராட்சியான. இராமேஸ்வரத்தில் பிறந்தார். இவர் ஒரு இஸ்லாமிய குடும்பத்தைச் சேர்ந்தவர்.

**இளமைக்காலம்**

அப்துல்கலாம் இராமேஸ்வரத்திலுள்ள தொடக்கப்பள்ளியில் தனது பள்ளிப்படிப்பை தொடங்கினார். ஆனால் இவருடைய குடும்பம் ஏழ்மையில் இருந்ததால் இளம் வயதிலே இவர் தன்னுடைய குடும்பத்திற்காக வேலைக்குச் சென்றார். தன்னுடைய பள்ளி நேரம் போக மற்ற நேரங்களில் இவர் செய்தித்தாள் விநியோகம் செய்தார். இவருடைய பள்ளிப்பருவத்தில் இவர் ஒரு சராசரி மாணவனாக வளர்ந்தார்.

தன்னுடைய பள்ளிப் படிப்பை முடித்த பிறகு திருச்சிராப்பள்ளியிலுள்ள செயின்ட் ஜோசப் கல்லூரியில் இயற்பியல் பயின்றார். 1954ம் ஆண்டு, இயற்பியலில் இளங்கலைப் பட்டம் பெற்றார். ஆனால் இயற்பியல் துறையில் ஆர்வம் இல்லை என உணர்ந்த இவர் 1955ம் ஆண்டு தன்னுடைய விண்வெளி பொறியியல் படிப்பை சென்னையிலுள்ள M.I.D யில் தெடங்கினார். பின்னர் அதே கல்லூரியில் முதுகலைப் பட்டமும் பெற்றார்.

**விஞ்ஞானியாக A.J.P அப்துல்கலாம்**

1960ம் ஆண்டு வானூர்தி அபிவிருத்தி அமைத்தல் பிரிவில் (DRDO) விஞ்ஞானியாக தன்னுடைய ஆராய்ச்சி வாழ்க்கையை தொடங்கிய அப்துல்கலாம், ஒரு சிறிய ஹெலிகெப்டரை இந்திய இராணுவத்திற்காக வடிவமைத்து கொடுத்தார். பின்னர் விண்வெளி ஆராய்ச்சிக் கூடத்தில் (ISRO) தனது ஆராய்ச்சி பணிகளை தொடர்ந்தார். அவர் துணைக்கோள் ஏவுகணை குழுவில் (SLV) செயற்கைக்கோள் ஏவுதலில் முக்கிய பங்காற்றினார்.

1980 ஆண்டு SLV-II ரக்கெட்டை பயன்படுத்தி ரோகினி - I என்ற துணைக்கோளை விண்ணில் ஏவச் செய்தார். இது அவருக்கு மட்டுமல்லாது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்தியாவிற்கே ஒரு சாதனையாக அமைந்தது. 1963ம் ஆண்டு முதல் 1983ம் ஆண்டு வரை இந்திய விண்வெளி ஆராய்ச்சி கூடத்தில் பல பணிகளைச் சிறப்பாக மேற்கொண்டார்.

1999ம் ஆண்டு பொக்ரான் அணு ஆயுத சோதனையில் முக்கிய பங்கற்றியுள்ளார். இந்தியாவை அணு ஆயுத வல்லரசாக மாற்றிய A.P.J.அப்துல்கலாம், இதுவரை ஐந்து ஏவுகணை திட்டங்களில் பணிபுரிந்தார். அவர் அனைவராலும் இந்திய ராக்கட் படைப்பின் பிதாவாக போற்றப்படுகிறார்.

**குடியரசு தலைவராக A.P.J.அப்துல்கலாம்**

2002ம் ஆண்டு நடந்த குடியரசு தலைவர் தேர்தலில் வெற்றி பெற்று, இந்தியவின் 11வது குடியரசு தலைவராக ஜீலை 25ம் நள் 2002 இல் பதவியேற்றார். குடியரசு தலைவராவதற்கு முன், இந்தியாவின் மிகப்பெரிய விருதான "பாரதரத்னா" விருதை மத்திய அரசு இவருக்கு வழங்கி கௌரவித்தது. மேலும் பாரதரத்னா விருது பெற்ற மூன்றாவது குடியரசு தலைவர் என்ற பெருமையைப் பெற்றார்.

2007ம் ஆண்டு வரை குடியரசு தலைவராக இருந்த இவர் மக்களின் ஜனாதிபதி என்று அனைவராலும் அன்போடு அழைக்கப்பட்டார். 2007ம் ஆண்டு குடியரசுத் தேர்தலில் மீண்டும் போட்டியிட நினைத்த கலாம் பிறகு பல காரணங்களால் அந்தத் தேர்தலில் போட்டியிடப் போவதில்லை என முடிவு செய்து விலகினார்.

**மரணம்**

அப்துல்கலாம் அவர்கள் ஜீலை 27.2015 இல் இந்தியவின் மேகாலயா மாநிலத் தலைநகரான ஷில்லாங்கில் இந்திய மேலாண்மை கல்வி நிறுவனத்தில் மாணவர்களிடையே உரையாற்றுகையில் (மாலை சுமார் 6.30 மணியளவில்) மயங்கி விழுந்தார் தனியார் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் சிகிச்சை பலனின்றி காலமானார்.

**இறுதி மரியாதை**

இராமேஷ்வரத்தில் முழு இராணுவ மரியாதையுடன் 2015 ஜீலை 30ம் திகதி மேற்கொள்ளப்பட்ட நல்லடக்க நிகழ்வில் பிரதமர் நரேந்திரமோடி, கங்கிரஸ் பொதுச் செயலாளர் ராகுல் காந்தி உள்ளிட்ட முக்கிய அரசியல் தலைவர்கள் கலந்து கொண்டனர்.

**விருதுகள்**

2014 - அறிவியல் டாக்டர் பட்டம்

2012 - சட்டங்களின் டாக்டர், சவரா சம்ஸ்ருதி புரஸ்கார் விருது

2010 - பொறியியல் டாக்டர் பட்டம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| *2009* | - | *ஹீவர் மெடல், சர்வதேச வோன் கார்மான் விங்ஸ் விருது* |
| *2008* | - | *பொறியியல் டாக்டர் பட்டம்* |
| *2007* | - | *கிங் சார்லஸ் 11பட்டம், அறிவியல் கௌரவ டாக்டர் பட்டம்* |
| *2000* | - | *ராமானுஜன் விருது* |
| *1998* | - | *வீர் சவர்கார் விருது* |
| *1997* | - | *தேசிய ஒருங்கிணைப்பு இந்திரகாந்தி விருது, பாரத ரத்னா விருது* |
| *1990* | - | *பத்ம பூசன் விருது* |
| *1981* | - | *பத்ம பூசன் விருது* |

**A.P.J.அப்துல்கலாம் எழுதிய நூல்கள்**

*அக்னி சிறகுகள்*

*இந்திய 2020*

*எழுச்சி தீபங்கள்*

*அப்புறம் பிறந்தது ஒரு குழந்தை*

*அப்துல்கலாமின் எளிமையான வாழ்க்கையும் அவரது இனிமையான பேச்சும் எல்லோரையும் கவர்ந்தது என்றால் வியப்பில்லை. எதிர்கால இந்திய இளைஞர்கள் கையில் என்ற அவர் கனவு காணுங்கள் அந்த கனவை நினைவாக்க பாடுபடுங்கள் என்னும் வாக்கியத்தை இளைஞர்கள் மனதில் வேரூன்றச் செய்தவர்.*

*உலகம் போற்றும் விஞ்ஞானியான கலாம் தன்னுடைய பொன்மொழிகளாலும், கவிதைகளாலும் வாசகங்களாலும் அனைவரின் மனதிலும் இடம் பிடித்துள்ளார்.*

நாம் அனைவரும் ஒரே மாதிரி
திறமை இல்லாமல் இருக்கலாம்
ஆனால், அனைவருக்கும் திறமையை
வளர்த்துக் கொள்ள ஒரே மாதிரி
வாய்ப்புக்கள் உள்ளன.

**- டாக்டர் அப்துல்கலாம்.**

நீங்கள் உறங்கும் போது வருவது அல்ல கனவு
உங்களை உறங்கவிடாமல் செய்வதே கனவு.

**- டாக்டர் அப்துல்கலாம்.**

*பி.சீர்நிலா*

*தரம்* 12

(2018)

*வர்த்தகப் பிரிவு.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கல்வியின் சிறப்பு

இன்றைய உலகின் இன்றியமையாத ஒன்றாக திகழ்வது யாதெனில் கல்வியே ஆகும். எந்தவொரு சமூகத்தினரும் இக் கல்வியைக் கற்பதிலிருந்து விலகிச் செல்வது இன்றைய நவீன உலகில் மிகவும் அரிதாக கணப்படுகிறது. ஏனெனில் கல்வியின் சிறப்பை அனைத்து சமூகங்களும் புரிந்துள்ளன. இதனால் தான் இன்று கல்வியானது மனிதனின் அத்தியாவசிய தேவையாக இருக்கிறது.

கல்வியின் சிறப்பு பற்றி கூறும் போது கல்வி கற்பதன் சிறப்பு பற்றி கூறும் போது கற்றவன் எந்த இடத்திற்குச் சென்றாலும் அவன் பிற சமூகத்தால் மதிக்கப்படுகின்றான். இதற்கு காரணம் அவன் கற்ற கல்வியே.

கற்றவனுக்கு தனது நாடும் ஊருமே அல்லாமல் எந்த நாடும் ஊரும் தன்னுடைய ஊராகும். இப்படி கல்விச் சிறப்பு இருக்கும். ஒருவன் தான் மரணிக்கும் வரை கல்வி கற்காமல் இருந்து தனது காலத்தை கழிப்பது மிகவும் சிரமமானதாகும். இதனையே திருவள்ளுவர் மிகவும் அழகாக வர்ணித்திருக்கிறார்.

**யாதானும் நாடாமால் ஊராமால் என்னொருவன்**
**சாந்துணையுங் கல்லா வாறு**

என்று குறிப்பிடுகிறார். ஒருவன் தான் எவ்வளவு கல்வி கற்றாலும் அதனை செயல் வடிவில்தக்க வைத்துக் கொள்ள வேண்டும். இல்லையெனில் அவன் கற்ற கல்வியின் பயன் ஒன்றும் இல்லாமல் போய்விடும். இதனையும் திருவள்ளுவர் தனது திருக்குறளின் கல்வி என்ற அதிகாரத்தின் முதலாவது குறளில் தெளிவாக கூறுகின்றார்.

**கற்க கசடறக் கற்பவை கற்றபின்**
**நிற்க அதற்குத் தக.**

என்று கூறுவதிலிருந்து நாம் விளங்கிக் கொள்ளலாம்.

எண் என்று சொல்லப்படுவதும் எழுத்து என்று சொல்லப்படுவதும் இவை இரண்டினையும் அறிந்தோர் சிறப்பு மிக்க மக்களின் உயிர்களுக்கு கண் என்று சொல்லப்படுபவர் இந்த அளவிற்கு கல்வியின் சிறப்பு எடுத்துரைக்கப்படுகின்றது.

**கண்ணுடையர் என்பவர் கற்றோர் முகத்திரண்டு**
**புண்ணுடையர் கல்லா தவர்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கற்றவரின் சிறப்புப் பற்றி கூறும் போது ஒருவனின் முகத்திலுள்ள கண்ணானது கற்றவருக்குரிய அடையாளம் என்று சொல்லப்படுகிறது. அதே கண் கல்வி இல்லாதவருக்கு முகத்தில் இரண்டு புண் இருப்பதாக குறிப்பிடப்படுகின்றது. இதன் மூலம் கல்வியின் சிறப்பும் அதனைக் கற்றவனின் சிறப்பும் கூறப்படுகின்றது.

கல்வி, மனிதகுலத்துக்கே வழிகாட்டியாக அமைவதும் அதனைப் புரிந்து கொள்வதும் வாழ்க்கையில் அதன்பங்கை அறிந்து கொள்வதும் இன்றியமையாதது. கல்வி என்பது அறிவு சார்ந்தது. கல்வி உடையவர் எல்லா மக்களிடமும் நன்றாக பழகிக் கொள்வதோடு மட்டுமல்லாமல் அவர்களுடன் சந்தோசமாக சேர்ந்து வாழ்வதையே விரும்புவர் இவர்களை பிரிக்கின்ற போது இனி நாம் எப்போது மீண்டும் சேர்வோம் என்ற நினைவிலேயே பிரிகின்ற தன்மை கற்றவரிடம் இருக்கும் தன்மையாகும்.

மனிதன் ஆயுள் முழுவதும் கற்றுக் கெண்டே இருக்க வேண்டும். கற்க மறுப்பவன் வாழ மறுப்பவன் ஆகின்றான். கல்வி என்பது ஓர் ஆய்வு. கல்வி மூலம் சூழலை, அறிவை, சமூகத்தை பண்பாட்டு மரபை ஆராய்ந்து கொள்ளலாம்.

**கல்விக்காக உயிர் கொடுத்தோர் என்றும்**
**மரணிப்பதில்லை.**

இந்த வாசத்தை ஆராய்ந்த போது கற்றவனின் சிறப்பை காணலாம். அதாவது இக் கல்விக்காக உயிர் கொடுத்தோர் மரணிப்பதில்லை கல்வி கற்றவர் மரணித்து விடுவார். ஆனால் அவர் கற்பித்த கல்வி, இந்த உலகம் அழியும் வரை இருந்தே ஆகும். இதனை

**கல்விக்காக உயிர் கொடுத்தோர்**
**மரணிப்பதில்லை.**

எனக் கூறப்படுகிறது இதற்கு சிறந்த உதாரணமாக 1400 வருடங்களுக்கு முன் கற்பித்த புனித இஸ்லாம் மார்க்கம் இன்று வரை நடைமுறைப்படுத்தப்படுகிறது. இதனைப் போதித்தவர் மரணித்து விட்டார் இவர் கற்பித்தவை இன்றும் எம் மத்தியில் காணப்படுவதை காணலாம்.

**தாமின்புறுவது உலகின் புறக் கண்டு**
**காமுறுவர் கற்றிந்தார்.**

ஒருவன் தான் கற்ற கல்வியின் இன்பத்தை உணர்ந்தானாயின் அவன் மீண்டும் கற்பதையே விரும்புவான். இது கல்வியின் பண்பாக கருதப்படுகிறது. மாந்தர் தாம் கற்றதனை தரும் அறிவு என்பதும் வள்ளுவர் கண்ட வாழ்க்கை நெறியாகும். கல்வி மனித அடிப்படை உரிமைகளில் ஒன்று. அறிவியற் கல்வி, சமூக அறிவியற் கல்வி, அழகியல் கல்வி ஆகிய மூன்றும் வாழ்க்கைக்கும் அவசியமானவையாகும். ஒருவனுக்கு பெருமையையும் புகழையும் தரக்கூடிய செல்வம் கல்விச் செல்வமே அன்றி வேறில்லை.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்வி ஓர் அழியாச் செல்வம் என்று விளக்கிய வள்ளுவர் அந்த அழியாச் செல்வமாகிய கல்வியைக் கற்பதனால் வரும் சிறப்புகளையும் குறிப்பிடுகிறார். அது கண் போன்றது என்கிறார். கண் என்றால் தமிழில் ஒளி என்று பொருள் கல்வி எவ்வாறு ஒளியாக விளங்குகிறது என்பதையும் விளக்குறார்.

நம் வாழ்க்கையில் இன்பதுன்பங்கள் பலவற்றிற்கும் புறக்காட்சிகளும், நிகழ்ச்சிகளும் தானே காரணம். நாம் பார்க்கும் சில விபத்துக்கள் நம் உள்ளத்தைப் பெரிதும் பாதிக்கின்றன. நம் கண்முன்னாலே அடிக்கடித் தோன்றி மறைகின்றன. இந்தக் காட்சியை நாம் பார்த்திருக்காவிட்டால் எந்தப் பாதிப்பும் ஏற்படாது. மகிழ்ச்சியோ துன்பமோ நாம் பார்க்கும் காட்சி அல்லது நிகழ்ச்சியால் அமைகின்றது. இந்த அனுபவத்தைக் கூறுவதன் மூலம் கல்வியின் அடிப்படை எண்ணும் எழுத்தும் இலக்கியம், சமயம், தத்துவம், அறிவியல் கணிதம் எனக் கல்வியே கண் என்ற கல்வியின் சிறப்புக் கூறப்படுகின்றது.

கல்வி தொழிலுக்கு வழி காட்டுகிறது. கல்வி என்பது வாழ்க்கை வாழ்வதற்காக உதவும் கருவியாகும். அறிவியலும் சமூகமும் வாழ்நாள் முழுவதும் தொடரும் கருவியாகும். வாழ்க்கையின் நோக்கம் என்ன என்பதை இனங்கண்டு அதற்கேற்ப கற்க வேண்டும். வாழ்க்கையை நெறிப்படுத்தவும் மேம்படுத்தவும் கல்வியை பயன்படுத்த வேண்டும்.

கல்வி கற்பவரிடம் ஒழுக்கம் பண்பு நேர்மை, நீதி இவைகள் அனைத்தும் ஒருங்கே அமைந்து காணப்படும். எனவே கல்வியானது ஒரு மனிதனின் முக்கிய தேவையாக இருக்கிறது. எந்தவொரு சமூகமும் கல்வி இல்லாமல் இருப்பது இக் காலத்தைப் பொறுத்த வரை மிகவும் தாழ்வாகவும் இழிவாகவும் கருதப்படும்.

எனவே இவ்வாறு பார்க்கும் போது கல்வியின் முக்கியத்துவத்தை அறிய முடிகின்றது. ஒருவன் கல்வி கற்றால் எவ்வாறு சமூகத்தில் மதிக்கபடுகின்றான் என்பதை விளங்க முடியும் இவ்வாறு கல்வியை கற்று சமூகத்தில் சிறந்ததோர் பிரஜையாக வாழக்கல்வி உதவுகிறது என கல்வியின் மகத்துவம் நயக்கப்படுகிறது.


ஆக்கம்

செ.மதுஜா

கலைப்பிரிவு.

(2016)


**மனித மூளையை எக்ஸ்ரே எடுக்கும் கருவியின் பெயர் என்ன?**

**என்செ∴பலோகிராபி**




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## – வாழ்க்கையின் தத்துவத்தை கற்றுக் கொள் வாழ்வில் இனிதே எழுச்சி காண் –

அனைத்து மனிதர்களும் நேர்மையானவர்கள் அல்லர். அனைத்து மனிதர்களும் உண்மையானவர்களும் அல்லர். என்பதை தெரிந்து கொள்ள வேண்டும். ஆனாலும், மனிதர்களில் அயோக்கியர்களுக்கு இடையில் உண்மையான கதாநாயகர்களும் இருக்கிறார்கள். என்பதையும், சுயநல அரசியல்வாதிகளுக்கிடையில் அர்ப்பணிப்பு மிக்க தலைவர்களும் இருக்கிறார்கள் என்பதையும், பகைவர்களுக்கிடையில் நண்பர்களும் இருக்கிறார்கள். என்பதையும் உணர்ந்து கொள்ளுங்கள்.

பொறாமைக் குணம் வந்து விடாமல் கவனமாகப் பார்த்துக் கொள்ளுங்கள். மௌனமாக ரசித்து சிரிப்பதன் இரகசியத்தை கற்றுக் கொள்ளங்கள். எதற்கெடுத்தாலும் பயந்து சுருங்கிக் கொள்வது கோழைத்தனம் என்பதை புரிந்து கொள்ளுங்கள். புத்தகங்கள் என்ற அற்புத உலகத்தின் வாசல்களை திறவுங்கள். அதே வேளையில், இயற்கையின் அவசியத்தை இரசிக்கவும். வானில் பறக்கும் பறவைகளின் புதிர்மிகுந்த அழகையும், சூரிய ஒளியில் மின்னும் தேனீக்களின் வேகத்தையும், பசுமையான மலை அடிவார மலர்களின் வனப்பையும் ரசிக்க கற்றுக் கொள்ளுங்கள்.

ஏமாற்றுவதை விடவும் தோல்வியடைவது எவ்வளவோ மேலானது என்பதை கற்றுக் கொள்ளுங்கள். மற்றவர்கள் தவறு என்று விமர்சித்தாலும், தனது சுயசிந்தனை மீது அசைக்க முடியாத நம்பிக்கை வைத்துக் கொள்ளுங்கள். மென்மையான மனிதரிடம் மென்மையாகவும், முரட்டுகுணம் கொண்டவர்களிடம் கடினமாகவும் அணுக பயிற்சி எடுங்கள். கும்பலோடு கும்பலாக கரைந்து போய்விடாமல் எந்த சூழ்நிலையிலும் தனது சொந்த நம்பிக்கையின் படி சுயமாக செயற்படும் தைரியத்தைக் கற்றுக் கொள்ளுங்கள். அனைத்து மனிதர்களின் குரலுக்கும் செவி சாய்க்க வேண்டும். எனினும், உண்மை என்னும் திரையில் வடிகட்டி நல்லவற்றை மட்டும் பிரித்து எடுக்க கற்றுக் கொள்ள வேண்டும்.

துயரமான வேளைகளில் சிரிப்பது எப்படி என்றும் கண்ணீர் வருவதில் தவறில்லை. என்றும் கற்றுக் கொள்ளுங்கள். போலியான நடிப்பைக் கண்டால் எள்ளி நகையாடவும், வெற்றுப் புகழுரைகளைக் கண்டால் எச்சரிக்கையாக இருக்கவும், பயிற்சித்துக் கொள்ளுங்கள். தனது செயல் திறனுக்கும், அறிவாற்றலுக்கும் மிக அதிக ஊதியம் கோரும் சாமர்த்தியம் வேண்டும். ஆனால், தனது இதயத்திற்கும், தனது ஆன்மாவிற்கும் விலை பேசுபவர்களை ஒருபோதும் அனுமதிக்க கூடாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெருங்கும்பல் திரண்டு வந்து கூச்சலிட்டாலும், நியாயம் என்று தான் நினைப்பதை நிலை நாட்டத் தொடர்ந்து போராடுவதற்கு நம்பிக்கை கொள்ளுங்கள். அன்பாக இருங்கள். ஆனால், அதிக அன்பும் செல்லமும் காட்டி சார்ந்திருக்க வேண்டாம். ஏனென்றால், கடுமையான தீயில் காட்டப்படும் இரும்பு மட்டும் தான் பயன்மிக்கதாக மாறுகின்றது.

தவறு கண்டால் கொதித்து எழும் துணிச்சலை கற்றுக் கொள்ளுங்கள். அதேவேளை, தனது வலிமையை மௌனமாக வெளிப்படுத்தும் பொறுமையை கற்றுக் கொள்ளுங்கள். தன் மீது மகத்தான நம்பிக்கை கொள்ள வேண்டும். அப்போது தான் மனித குலத்தின் மீது மகத்தான நம்பிக்கை கொள்ள முடியும்.

**வாழ்க்கை மேம்பட சில சிந்தனைத் துளிகள்....**

01. நானே பெரியவன், நானே சிறந்தவன் என்ற அகந்தையை **(Ego)** விட்டு விடுங்கள்.
02. அர்த்தமில்லாமலும், பின்விளைவு அறியாமலும் பேசிக் கொண்டே இருப்பதை விடுங்கள். **(Loose Talkes)**
03. எந்த விஷயத்தையும், பிரச்சினையையும் நாசுக்காக கையாளுங்கள். **(Diplomacy)** விட்டுக் கொடுங்கள். **(Compromise)**
04. சில நேரங்களில் சில சங்கடங்களை சகித்துதான் ஆக வேண்டும் என்பதை உணருங்கள். **(Colerance)**
05. எல்லோரிடத்திலும் எல்லா விஷயத்தையும், அவர்களுக்கு சம்பந்தம் உண்டோ, இல்லையோ சொல்லிக் கொண்டிருக்காதீர்கள்.
06. உங்கள் கருத்துக்களில் இறுக்கமாக இல்லாமல் கொஞ்சம் தளர்த்திக் கொள்ளுங்கள். **(Flexibility)**
07. பெரியவர்களுக்குரிய மரியாதையைக் காட்டுவதற்கும், இனிய இதமான சொற்களை பயன்படுத்தவும் தவறாதீர்கள். **(Courtesy)**
08. புன்முறுவல் காட்டவும், சிற்சில அன்புச் சொற்களை சொல்லவும் கூட நேரமில்லாதது போல் நடந்து கொள்ளாதீர்கள்.
09. பிரச்சினைகள் ஏற்படும் போது அடுத்தவர் முதலில் இறங்கி வர வேண்டும் என்று காத்திருக்காது நீங்களே பேச்சைத் துவக்க முன் வாருங்கள்.

**கஷ்டம் வரும் போது கண்ணை மூடாதே ......**
**அது உன்னைக் கொன்றுவிடும்.**
**கண்ணைத் திறந்து பார்**
**நீ அதை வென்று விடுவாய் .**

**—அப்துல்கலாம்—**

**இ.டிலானி**
**தரம் 13**
**வர்த்தகம் (2018)**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## சிந்தனைத் துளிகள் ....

* யாரேனும் குறை கூறினால் அது உண்மையாக இருந்தால் உன்னைத் திருத்திக் கொள். பொய்யாக இருந்தால் சிரித்து பொருட்படுத்தாமல் விட்டுவிடு.
* கற்பனையை உன்வசப்படுத்து தீ கற்பனை வசப்படாதே. ஒழுங்கானவனை விட தவறு செய்து திருந்தியவன மேலானவன்.
* பொய்மை எப்போதும் ஓங்குவதும் இல்லை. உண்மை எப்போதும் தூங்குவதும் இல்லை.
* கோபமும், தாபமும் பலவீனத்துக்கு அறிக்குறிகள். அடக்கமும், மன்னிபுமே உயர்ந்த ஆண்மைக்கும், ஆற்றலுக்கும் அறிகுறிகள்.
* கோழையின் கிணற்றிலிருந்து ஊற்றெடுப்பதே கண்ணீர்
* எதிர்காலத்தை நம்பாதே அங்கே உன் கனவுகள் பலிக்கும் என்பது நிச்சயமல்ல
* நிகழ்காலம் தான் உயிர் உள்ள காலம் அந்தக் காலத்தின் மீது உன் கவனம் இருக்கட்டும்.
* கவலைப்படும் ஒவ்வொரு நிமிடமும் நாம் எத்தனையோ இன்பங்களை இழந்த விடுகிறோம்.
* நீ வாழ்க்கையில் முன்னேற வேண்டுமானால் உன்னுடைய கால்களால் நடந்து போ. மற்றவர்களின் முதுகின் மேல் ஏறிப்போக விரும்பாதே. அது உனக்கு ஆபத்து.
* தைரியம் எண்ணற்ற எதிரிகளை வெல்லும்
* என்று முதன் முதலாக நீ உன்னையே கேலி செய்து கொண்டு சிந்திக்கத் தொடங்குகிறாயோ அன்று தான் நீ வளர்ச்சியடைய ஆரம்பிக்கிறாய்.
* கட்டுப்பாடு இல்லாமல் வாழ்பவன். கௌரவம் இல்லாமலே இறப்பான்
* சுதந்திரமானவனாக இரு. எவரிடத்திலும் எதையும் எதிர்பார்க்காதே.
* தாம் பெற்ற பிள்ளைகளை வளர்ப்பது பெற்றோரது கடமை. அதற்கு நன்றிக் கடனாக இருப்பது பிள்ளைகளின் கடமை
* அளவற்ற பலமும், இரக்கமும் உள்ள இதயம் பெற்றவனே உண்மை வீரனாவான்
* மனிதர்களின் இதயங்களில் அதிகம் குடிகொண்டிருப்பவரே மாமனிதர்
* பொறாமை, கோபம், பேராசை இல்லாத வாழ்க்கைப் பாதையில் நீ பயணித்துப் பார் நீ வாழும் வாழ்க்கைக்கு அழகான அர்த்தம் புரியும்.
* உன் ஆசைகள் அனைத்தும் நிறைவேறினால், உலகத்திலேயே மிக மோசமான ஆள் நீயாகத்தான் இருப்பாய். - ஓஷோ -

சு.துவாரகா
வர்த்தகப் பிரிவு (2018)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நற்பண்புகள்

நற்பண்புகளே நல்லவருக்கு அடையாளம். புத்தகங்கள் மூலமாகவும் பழக்கத்தினாலும் மற்றவர்களை கவனிப்பதாலும் நற்பண்புகளை வளர்த்து கொள்ள முடியும். எந்தப் பொருளையும் அதற்குரிய இடத்தில் வைக்கும் பழக்கத்தை வளர்த்துக் கொள்ள வேண்டும். இதனால் இருட்டிலும் கூட அந்த பொருட்களைச் சிரமமின்றி எடுக்க முடியும். பொருட்களை எங்கோ வைத்து விட்டு அவற்றை தேடுவதில் செலவிடும் நேரத்தை இதனால் மிச்சப்படுத்த முடியும். வகுப்பறையிலோ, நூலகத்திலோ தும்முவதோடு அல்லது கொட்டாவி விடுவதையும் தவிர்த்தல் வேண்டும். அவை கண்ணியமற்ற செயல்களாகும். அப்படி கட்டாயமாக தும்மலோ அல்லது கொட்டாவியோ வந்தால் மற்றவருக்கு இடையூறு ஏற்படுத்தாமல் கைக்குட்டையால் முகத்தை மறைத்துக் கொள்ள வேண்டும். நெருங்கிப் பழகியவராயினும், பெரியவர்கள் ஆயினும் அவர்கள் பேசும் போது மரியாதை குறைவாகவோ அல்லது இடையிலேயோ பேசக்கூடாது.

நற்பண்புகளை எப்படி வளர்ப்பது? எண்ணங்களே ஒருவரை உருவாக்குகின்றன. அதனால் காலத்தால் போற்றப்படுகின்ற பெரிய மனிதர்களின் வாழ்க்கை முறைகளையும், போதனைகளையும், செயல்களையும், உயர்ந்த எண்ணங்களையும் முதலில் தெரிந்து கொள்ள வேண்டும். அப்படி தெரிந்து கொள்வது எம்மிடையே நம்பிக்கையையும் ஊக்கத்தையும் வளர்க்கிறது. புகைப்பிடித்தல், மது அருந்துதல் ஆகிய இவை ஒருவருடைய ஆரோக்கியத்தை குலைக்கின்றன. அதனால் இவற்றை முற்றிலும் தவிர்த்து விட வேண்டும். மாணவ பருவத்தில் பிரமாச்சரியத்துக்கு கவனிப்பு கொடுக்க வேண்டும். அடுத்தபடியாக மனமானது வளர்ச்சியின்றி தூய்மையற்றிருப்பது உடல் கேடு மற்றும் மன உளைச்சலுக்கு ஆளாக்கும். இவ்வாறு ஆகாமல் இருப்பதற்கு பிரார்த்தனை, தியானம், நல்ல நூல்களைப் படித்தல் போன்றவை எமக்கு சிறப்பாக துணை புரிகின்றன. சுவாமி விவேகானந்தரின் நல்லவராக இரு. நல்லதை செய், என்ற போதனையை நினைவில் வைத்திருந்தால் அது எமது குணத்தை மேம்படுத்துவதில் முக்கிய பங்கு வகிக்கும் அது நமது வாழ்க்கையை ஊக்கப்படுத்தி மிக உயர்ந்த நற்பண்புகளை வளர்க்கும்.

தொட்டில் பழக்கம் சுடுகாடு மட்டும்
நற்பண்புகளை கடைப்பிடித்து அனைவரும்
நலம் பெறட்டும்

வி.தனுஷாரணி
தரம் 06 B



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## சுவாமி விவேகானந்தரின் பொன் மொழிகள்

**வெற்றிக்கு உரிய நியதி**

நீ உன்னை ''பலவீனம்'' என்று
நினைக்கும் போதெல்லாம் - உனக்கு
மட்டுமன்றி நமது திருப்பணிக்கும்
தீமை செய்கிறாய் என்பதை அறிந்து கொள்
எல்லையற்ற நம்பிக்கையும்
வலிமையும் தான் வெற்றிக்குரிய நியதிகள்

**உறுதியுடன் நில்**

தடைகள் இல்லாமல் பெரிய காரியங்கள்
எப்போதாவது செய்யப்பட்டிருக்கிறதா?
போதிய அளவு அவகாசம் பொறுமை உறுதியான
சங்கல்பம் ஆகியவைதான்
வெற்றியைக் கொடுக்கும்.
சலனமில்லாத இரும்பு போன்ற உறுதியான
சங்கல்பங்களும் இதயங்களும் தான் எமக்கு
இருக்க வேண்டும். உறுதியுடன் நில்லுங்கள்.

**இது உன் நினைவில் இருக்கட்டும்**

ஒவ்வொரு நாடும் தன்னைத் தானே
காப்பாற்றிக் கொள்ள வேண்டும்!
ஒவ்வொரு மனிதனும் தன்னைத்
தானே காப்பாற்றிக் கொள்ள வேண்டும்
பிறர் உதவியை எதிர்பார்க்க கூடாது!
இதை நீங்கள் எப்போதும்
நினைவில் வைத்திருங்கள்

**நம் நாட்டிற்கு தேவை**

தூய்மையுடன் நேர்மையும்
உன்னிடம் இருந்தால்
எல்லாம் சரியாக அமையும்
இப்போது உன்னைப் போன்ற
நூற்றுக்காணக்கான
இளைஞர்கள் நம் நட்டிற்குத்
தேவைப்படுகின்றார்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**வீரனாக இரு**

ஒரு நல்ல இலட்சியத்துடன்
முறையான வழியைக்
கைக்கொண்டு தைரியத்துடன்
வீரனாக இரு!
ஓ சிங்கங்களே எழுந்து வாருங்கள்!
நீங்கள் செம்மறியாடுகள் என்ற
மயக்கத்தை உதறித்தள்ளுங்கள்

**என் வீரக் குழந்தைகள்**

தங்கள் பணியைச் செய்து
முடிப்பதற்கு நெருப்பில்
குதிக்க வேண்டிய
அவசியம் ஏற்பட்டால்
அப்படியே செய்வதற்கும்
என் குழந்தைகள் தயாராக
இருக்க வேண்டும்!

**வீரர்களாக எழுந்து நில்லுங்கள்**

இனி அழுகை என்பதே உங்களிடம்
இருக்க கூடாது! சுய வலிமை
பெற்ற வீரர்களாக எழுந்து நில்லுங்கள்
நீ வலிமை நிறைந்த ஒரு களஞ்சியமாக
உன்னை உருவாக்கிக் கொள்!

**மனிதர்கள் தான் வாழ வேண்டும்**

பணமும் மற்றவர்களும் தானாக வந்து சேரும்
நமக்குத்தேவை பணம் அல்ல எதையும் ஆக்குபவன்
மனிதன் தான் என்ன செய்ய முடியும்?
மனிதர்கள் தான் நமக்கு வேண்டும்! அதிக .
எண்ணிக்கையில் மனிதர்கள்
கிடைக்கும் அளவுக்கு நல்லது

**நாம் யார் தெரியுமா?**

நாம் எல்லோரும் கடவுளின் பிள்ளைகள்
இறைவனின் பிள்ளைகள்
ஆதலால் எதையும் செய்யக்கூடிய
ஆற்றல் நம்மிடம் இருக்கிறது

**கீழ்படியக் கற்றுக்கொள்**

கீழ்படியத் தெரிந்தவனுக்குத்தான்
கட்டளையிடவும் தெரியும்
முதலில் கீழ்படிவதற்குக்
கற்றுக்கொள்

தொகுப்பு
கு.டினோஜா
12 Com (2018).



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஈழத்து பூதந்தேவனார்

இலங்கை தமிழ் இலக்கிய வரலாற்றில் ஈழத்து பூதந்தேவனாருடன் தொடங்குவது மரபாக கணப்படுகின்றது. ஈழத்து பூதந்தேவனார் என்பவர் சங்க கால இலக்கியத்தில் வரும் ஒரு புலவர் ஆவார். இப்புலவர் சங்க இலக்கியங்களிலே நான்கு வகைப் பெயர்களில் அழைக்கப்படுகின்றார். இவரது பாடல்கள் அகநானூறு *88, 231, 307,* குறுந்தொகை *189, 343, 360,* நற்றிணை, *366* ஆகியனவாகும்.

இவ்வாறு குறுந்தொகை, அகநனூறு, நற்றிணை ஆகிய நூல்களில் வரும் ஏழு செய்யுள்களில் இருந்து ஈழத்து பூதந்தேவனார் பற்றிய குறிப்புக்களை அறிய முடிகின்ற போதிலும் இவர் ஈழத்தவர் என்பதற்கான எந்த ஒரு ஆதாரமும் இந்த நூல்களில் இடம்பெறவில்லை "ஈழத்து" என்ற அடைமொழியை மட்டும் வைத்துக் கொண்டு இவர் ஈழநாட்டினராக இருக்கலாம் என கருதுவோரும் உள்ளனர். உண்மையில் இவர் ஈழ நாட்டினர் தானா? என்பதற்கு வலுவான ஆதாரங்கள் எவையும் உள்ளனவா? என்று தேட வேண்டியது அவசியமாகின்றது.

"ஈழத்து" என்ற அடைமொழியுடன் இரண்டு இடங்களிலும் 'மதுரை ஈழத்து' என்ற அடைமொழியுடன் இரண்டு இடங்களிலுமாக அழைக்கப்பட்டவர். இவர் இலங்கையர் தானா? என்பதற்கான ஆதாரங்களினை தேடப் பலர் முற்பட்டுள்ளனர். சிலர் ஊகங்களின் அடிப்படையில் சில தரவுகளை முன் வைத்தனர். வேறு சிலர் "ஈழம்" என்ற அடைமொழியின் அடிப்படையில் வரலாற்று ரீதியான ஆதாரங்களைத் தேட முற்பட்டு இலங்கைக்கு வழங்கி வரும் பெயர்களில் இதுவும் ஒன்றாகையால் இவர் ஈழத்தவர் என சுட்டிக் காட்டினர்.

இவர் ஈழத்தில் இருந்து மதுரையில் சென்று வசித்ததன் காரணத்தினால் காலப் போக்கில் மதுரை ஈழத்து பூதந்தேவனார் என்ற பெயரில் அழைக்கப்பட்டிருக்கலாம் எனக் கருதவும் இடமுண்டு "இவர் ஈழ நாட்டில் இருந்து மதுரையில் தங்கிய பூதன் மகன் தேவன் எனப்படுவார்." (3) என்று நற்றிணைக்கு தெளிவுரை எழுதிய அ.நாராயனசாமி ஐயர் அவர்கள் குறிப்பிடுகின்றார். அவர் தொடர்ந்து கூறுகின்ற போது ஏடு எழுதுவோரின் பிழையினால் ஏற்றத்துப் பூதந்தேவனார் எனவும் குறிப்புக்கள் காணப்படுபவதாகவும் ஒரு சான்றினை தருகின்றார்.

மதுரை ஈழத்து பூதந்தேவனார் என்பவர் குறிஞ்சி, பாலை திணைக்களுக்கான ஏழு அகப்பாடல்களைப் பாடியிருக்க பூதந்தேவனார் என்ற புலவர் ஒருவர் மருதத்திணையைச் சிறப்பித்து பாடியிருப்பது நோக்கத்தக்கது. குறுந்தொகை (285), நற்றிணை (80) ஆகிய இரு செய்யுள்களும் இவரால் பாடப்பட்டிருக்கின்றன. மருதத்திணையினை சிறப்பித்துப்பாடி அகத்திணையிலே களவு நிகழ்ந்திருப்பதை கூறுவதாக இவருடைய பாடல்கள் காணப்பட மதுரைப் பூதந்தேவனாரோ.

"வாடை வீசும் குளிர்காலத்திலே
தலைவியைப் பிரிந்து செல்வோன்
மடமையுடையவன் ......."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்ற பொருள்பட குறிஞ்சித்திணை பாடல்களை பாடியுள்ளார். எனவே பாடல்களை திணை அடிப்படையில் நோக்குகின்ற போது இருவரும் வெவ்வேறு புலவர்கள் என கருத இடம் உண்டாயினும் மதுரை ஈழத்து பூதந்தேவனாரும், ஈழத்து பூதந்தேவனாரும் ஒருவரே எனகொள்ளும் நாம் "ஈழத்து" அல்லது மதுரை ஈழத்து என்ற அடைமொழி இல்லாத காரணத்தினால் இவரை மதுரை ஈழத்து பூதந்தேவனார் அல்லர் என இலகுவாக ஒதுக்கிட முடியுமா? என்பதை சிந்திக்க வேண்டியுள்ளது.

ஈழத்து பூதந்தேவனார் கடைச்சங்கப் புலவராக இருக்க வேண்டுமென்ற கருத்து வலுவுடையதாக உள்ளது. "பசும்பூட் பாண்டியனை" பாட்டுடைத் தலைவனாகக் கொண்டு பாடிய (அகம் 231) பாடல் ஒன்றின் மூலம் இவருடைய காலம் பற்றிய கருத்துக்கள் முன்வைக்கப்படுகின்றன. பசும்பூட் பாண்டியனை பரணர், நக்கீரர், மதுரைக் கணக்காயர் முதலியோரும் பாடி இருக்கின்றனர். எனவே இவர்கள் எல்லோரும் சம காலத்தினரா? என்ற ஐயரும் எழுகின்றது. எனினும்பசும்பூட் பாண்டியனின் காலத்தை மட்டும் வைத்துக் கொண்டு ஈழத்து பூதந்தேவனாரின் காலத்தை வரையறை செய்வதென்பது கடினமானது. எது எப்படியாக இருப்பினும் இவர் பசும்பூட் பாண்டியனுக்கு பிற்பட்டவர் அல்லர் சமகாலத்தவர் எனப் புலனாகின்றது. அதேவேளை பரணர், நக்கீரர், மதுரைக் கணக்காயர், மதுரை ஈழத்துப் பூதந்தேவனார் ஆகியோர் சமகாலத்தவர் என்று கூறுவதும் பொருத்தமானதல்ல.

ஈழநாட்டைச் சேர்ந்தவரான ஈழத்து பூதந்தேவனார் கி.பி 3ம் நூற்றாண்டைச் சேர்ந்தவர் என், பேராசிரியர் ஆ.வேலுப்பிள்ளை அவர்கள் பல சான்றுகளை முன்வைத்து 1998ல் யாழ்ப்பாண பல்கலைக் கழகத்தில் நினைவுப் பேருரை ஒன்றை நிகழ்த்தியமை குறிப்பிடத்தக்கது. இதேவேளை சங்கப் புலவரான முரஞ்சியூர் முடிநாகராயர் ஈழநாட்டைச் சேர்ந்தவர் என்றும் மன்னாரில் முசலி அதாவது முரஞ்சி என்ற கிராமத்தவர் எனவும் "ஈழமண்டலப் புலவர் சரிதம்" என்ற நூலில் ஆ.வேலுப்பிள்ளை அவர்கள் குறிப்பிடுகின்றார்.

ஈழத்து தமிழுக்கு இடையிடையிலான வணிக நிலைத் தொடர்பினை நாம் பட்டினப் பாலையில் இருந்து அறிந்து கொள்ள முடிகின்றது. நீண்ட காலம் தொட்டு ஈழத்துக்கும் தமிழகத்துக்கும் இடையறாத தொடர்பு இருந்து வருவதனை அவ்வப்போது வரலாற்று புவியியல் ஆய்வுகள் நிறுவியுள்ளமையையும் மறந்து விடக்கூடாதது. எனவே நீண்ட காலமாக வணிக பண்பாட்டு மொழித் தொடர்புகளினால் பிணைக்கப்பட்ட தமிழகத்துக்கு இலங்கைத் தமிழ்ப் புலவர் சென்று வாழ்வதென்பது இயலாத ஒன்றல்ல. அவ்வாறே, ஈழத்து பூதந்தேவனாரும் மதுரையில் சென்று வசித்திருக்க முடியும். நிறுவன ரீதியாக சங்கப்புலர்களை அனுசரித்து போற்றிய மதுரையில் இருந்து கொண்டு தனது இலக்கிய பணியினை மேற் கொண்டிருக்கலாம் என பல தளங்களினூடே இவரைப் பற்றிய ஆய்வினை முன்னெடுக்க முடிகின்றது. இவ்வகையில் ஈழத்து இலக்கிய வரலாற்றினை ஈழத்து பூதந்தேவனாருடன் தொடங்குவதே சிறப்பாகும்.

ந.ரஜிதா
கலைப் பிரிவு (2015).



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மனித உடல் பற்றிய தகவல்கள்

| | | |
|---|---|---|
| மனிதனின் சராசரி நாடித்துடிப்பு | - | நிமிடத்துக்கு 72 தடவைகள் |
| சராசரி வெப்பநிலை | - | 98.4f, 36.8c |
| மிக நீண்ட எலும்பு | - | தொடை எலும்பு |
| மிகச் சிறிய எலும்பு | - | காதிலுள்ள எலும்பு அஅ |
| எலும்புகள் அதிகமுள்ள பகுதி | - | கைகள் |
| எலும்புகளின் மொத்த எண்ணிக்கை | - | 207 |
| விலா எலும்புகளின் எண்ணிக்கை | - | 24 |
| மிக வன்மையான பகுதி | - | பல் மிளிரி |
| மிகப் பெரிய உறுப்பு | - | கல்லீரல் |
| மிகப் பெரிய சுரப்பி | - | ஈரல் |
| மிகப் சிறிய சுரப்பி | - | தைரொயிட் |
| மிகப் பெரிய அங்கம் | - | தோல் |
| உயிரற்ற கலங்களால் ஆக்கப்பட்ட பகுதி | - | நகம், மயிர் |
| முதலில் இறக்கும் பகுதி | - | மூளையின் கலங்கள் |
| உயிரணுவிலுள்ள நிறமூர்த்தங்கள் | - | 23 சோடி |
| குருதியின் வகை | - | A,B,AB,O |
| நாக்கிலுள்ள சுவை நரம்புகள் | - | 1000 |
| மிக வலிமையான தசைப்பகுதி | - | நாக்கு |
| எலும்புகளின் துணையின்றி அசையும் தசை | - | நாக்கு |
| மிகப் பெரிய தசை | - | இதயத் தசை |
| முரட்டுக்களின் எண்ணிக்கை | - | 230 |
| பிறப்பிற்கு பின்னர் வளர்ச்சி அடையாத பகுதி | - | கருவிழி |
| இரத்தம் செல்லாத பகுதி | - | கருவிழி |
| முதலில் உறங்கும் பகுதி | - | கண்கள் |
| தசைகளின் மொத்த எண்ணிக்கை | - | 639 |
| நரம்புகளின் மொத்த எண்ணிக்கை | - | 7200 |
| மிகப் பெரிய இணைப்பு | - | முழங்கால் |
| 8 மில்லியன் செல்களால் உருவாக்கப்பட்ட பகுதி | - | மூளை |
| சிந்தனை வேகம் | - | மணிக்கு 270KM |

ஜெ.மிதுசன்
தரம் 09.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## ஆச்சரியமான தகவல்கள் சில........

1. அன்னாசிப் பழத்திற்கு விதைகள் இல்லை.
2. அத்தி, பலா மரங்கள் பூப்பதில்லை.
3. அரேபியாவில் ஆறுகள் இல்லை.
4. அண்டார்டிக்காவில் மரங்கள் இல்லை.
5. இலங்கையில் எரிமலைகள் இல்லை.
6. உத்தரப் பிரதேத்தில் தென்னை மரங்கள் இல்லை.
7. யமுனை ஆறு கடலில் கலப்பதில்லை.
8. ஜோர்டான் நதியில் மீன்கள் இல்லை.
9. சிங்கப்பூரில் காக்கைகள் இல்லை.
10. ஹவாய் தீவில் பாம்புகள் இல்லை.
11. பூட்டானில் திரை அரங்குகள் இல்லை.
12. நேபாளத்தில் பகலில் மழை பெய்வதில்லை.
13. காந்தி அடிகள் விமானத்தில் பயணம் செய்ததில்லை.
14. பறவைகளுக்கு வியர்வை சுரப்பிகள் இல்லை.
15. மலைப் பாம்புகளுக்கு் விசம் இல்லை.
16. கிவி பறவைக்கு இறக்கைகள் இல்லை.
17. கடலில் முதலைகள் இருப்பதில்லை.
18. யானையின் தும்பிக்கையில் எலும்புகள் இல்லை.
19. நட்சத்திர மீனுக்கு மூளை இல்லை.

20 நண்டுக்கு தலை இல்லை.

21. ஆமைக்கு பற்கள் இல்லை.
22. வண்ணத்துப் பூச்சிக்கு வாய் இல்லை.
23. அனைத்து பாம்புகளுக்கும் காதுகள் இல்லை.
24. தமிழனுக்கு நாடு இல்லை.

**ச.கேனுஜா**
**தரம்** 09B.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## அப்துல் கலாமின் பொன் மொழிகள்

* நீங்கள் சூரியனைப் போல பிரகாசிக்க வேண்டுமானால் முதலில் சூரியனைப் போல எரிய வேண்டும் கடின உழைப்பு நேர்மைக்கு மாற்று எதுவும் இல்லை.

* கரைகளை கடக்கும் துணிவிருந்தால் தான் புதிய கடல்களை கண்டுபிடிக்க முடியும்.

* அதிகம் பயணிக்காத பாதைகளில் செல்லும் துணிவை வளர்த்தெடுங்கள் அதுதான் உண்மையான தலைமைப் பண்பு.

* ஒரு தேசம் ஊழலில்லாமலும், அறிவாளிகள் தேசமாகவும் இருக்க மூன்று பேரால் மட்டுமே மாற்றத்தை ஏற்படுத்த முடியும். தந்தை, தாய், ஆசிரியர் தான் அந்த மூன்று பேர்.

* அறிவு தான் உங்களை சிறந்தவர்களாகவும், பலமுள்ளவர்களாகவும் மாற்றுகிறது.

* கருணை இல்லாத அறிவியல் முழுமை பெறாது.

* ஒரு தேசத்தின் மகுடமே அதன் சிந்தனையாளர்கள் தான்.

* உங்களுக்கு சிறகுகள் உள்ளன தவழ்ந்து செல்லாதீர்கள் அதை கொண்டு மேலே பறந்து செல்லுங்கள்.

* தோல்விகளை எதிர் கொள்ளக் கற்றுக் கொள்ளுங்கள் அது தான் வெற்றிக்கான மிக முக்கியமான திறமை.

*யே.கின்சலா*
*வர்த்தகப் பிரிவு* (2018).

**எல்லோரிடமும் பண்போடு கண்ணியமாகப் பழகுங்கள். விட்டுக் கொடுக்கவும் பிறருக்கு உதவும் தயாராக இருங்கள். குறிப்பாக விரோதிகளிடத்தில் இவற்றைத் தவறாது மேற்கொள்ளுங்கள்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## கைத்தொலைபேசியின் அபாயம்

எந்நேரமும் கைத்தொலைபேசிகளுடன் உறவாடும் எம்மில் பலர். அவற்றினால் எனது பொழுது மகிழ்ச்சிகரமாக கழிகின்றது. தேவைகள் தொடர்புகள் நிவர்த்தி செய்யப்படுகின்றது என்பதையே அனேகம் கவனத்தில் கொள்கின்றோம். ஆனால் அவற்றினால் நமக்கும் நம் சூழலுக்கும் நிகழும் தீங்குகள் பற்றி கவலை கொள்வதே இல்லை. கையில் Smart Pone இருந்தால் அதுவே எமக்கு கௌரவம் எனப்பலர் எண்ணுவதுண்டு ஆனால் அதன் அபாயகர விளைவுகள் பற்றி எண்ணுவோர் எம்மில் எத்தனை பேர்? இவற்றில் இருந்து வெளியாகும் Emf **(Electormangnetic Field)** கதிர் தாக்கம் பற்றி கவலை கொள்வோர் எத்தனை பேர்? அபாயகரமான இந்த கதிரினால் படுபயங்கரமான விளைவுகள் ஏற்படுகின்றன.

காதுக்கு அருகே கைத்தொலைபேசிகளை வைத்து உரையாடும் பொழுது கைத்தொலைபேசிகளில் இருந்து வெளியாகும் 10% - 80% கதிர்கள் எமது மூளையில் 2 அங்குலம் வரையில் தாக்கம் செலுத்துகின்றது. இக்கதிர்கள் ஊடுருவலானது பெரியோரின் மூளையை விட சிறியோரின் மூளையில் அதிக ஆழம் வரை செல்வதாக ஆய்வுகள் நிறுவப்பட்டுள்ளன.

இது மட்டுமன்றி கைத்தொலைபேசியில் இருந்து வெளியாகும் நுஅக கதிர் தாக்கத்தினால் தலைவலி முதல் புற்று நோய் வரை பல்வேறு தாக்கங்கள் ஏற்படுகின்றன. குறிப்பாக இனம்புரியாத தலைவலி, கருச்சிதைவு, உயிரணு, மரபணு, சேதங்கள் உடலில் இயற்கையாகவுள்ள நோய் எதிர்ப்புச் சக்தி குறைபாடு மூளையில் கட்டிகள் வளருதல், மூளை புற்று நோய், மூளை நரம்புகளில் சிதைவுகள், மூளையில் இரத்தம் கண்டுதல், ஞாபக மறதி, கண்பார்வை குறைபாடு, இருதய அழுத்தம், மன அழுத்தம், இருதய நரம்பு மண்டல பாதிப்பு, காரணம் இல்லாத களைப்பு என பல பாதிப்புக்கள் ஏற்படுகின்றன.

கைத் தொலைபேசியின் பாவனையில் நிகழக்கூடிய விபரீதங்கள் பற்றி ஆய்வுகள் நடத்திய விஞ்ஞானிகள் மேலும் பல பயங்கரமான தகவல்களை வெளியிட்டுள்ளனர். கைத் தொலைபேசியானது இயங்கு நிலையில் இருக்கும் போது இரு பகுதிகளில் இருந்து Emf நுண்மின்காந்த அலை **(Microwave Eletromagneticrodiation)** கதிர்களை வெளிவிடுகின்றது. ஒன்று தொலைபேசியின் கதிரியக்க தொடர்பாடலில் **(antenna)** இருந்து வெளியாகின்றது. மற்றது தொலைபேசியின் உடல் **(Body)** இல் இருந்து வெளியாகின்றது. இவை இரண்டுமே ஆபத்தான கதிர்வீச்சுக்கள் தான் இவையே மூளை மற்றும் அதனுடன் தொடர்புடையே நரம்பு மண்டலத்தில் ஊடுருவி அதிக சேதம் விளைவிக்கின்றன.

இது மட்டுமல்லாது கைத்தொலைபேசியிலிருந்து வெளியாகும் வெப்பம் மனித உடற் கலங்களை கொல்கிறது அல்லது சிதைக்கின்றது.இதனால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதிகம் பாதிக்கப்படுவது காது அதனை அண்டியுள்ள கன்னத்தின் பகுதிகள் மற்றும் விரல், நகக் கண்கள் ஆகும்.

கைத்தொலைபேசிகளை தலை அருகில் வைத்துக் கொண்டு உறங்கும் பலர் கதிர் தாக்கத்தினால் அதிகம் பாதிக்கப்பட்டு நிம்மதியான ஆழமான தூக்கத்தை இழக்கின்றனர் என்பதும் நீண்டகால அடிப்படையில் புற்று நோய்த் தக்கங்களுக்கும் ஆளாகின்றனர் என்பதும் ஆராய்ச்சிகளில் நிருபணமாகியுள்ளது உண்மை. இது மட்டுமல்லாது மூளையை இயங்குவதற்கென இயற்கையாகவே எமது மூளையில் பல சமிக்ஞைகள் ஓடுகின்றன. அவை நாம் தலையருகே கைத்தொலைபேசிகளை வைத்து பயன்படுத்துவதால் ஏற்படும் கதிர் வீச்சுகளால் அதிகம் குழப்பமடைகின்றன.

அதன் காரணமாகவே மூளை மற்றும் நரம்புமண்டல வைத்திய நிபுணர்கள் தாம் கைத்தொலை பேசிப்பாவனையை எவ்வளவு முடியுமோ அவ்வளவு மட்டுப்படுத்தியுள்ளதுடன் தமது நோயாளிக்கும் இது பற்றி ஆலோசனைகளை வழங்குகின்றனர்.

எல்லா கைத்தொலைபேசிகளிலும் கதிர் வீச்சு பாதிப்பு உள்ளன என்றாலும் தர உத்தரவாதம் அற்ற நிறுவனங்களால் உற்பத்தி செய்யப்படும் தரக்குறைவான கைத்தொலைபேசிகளால் ஏற்படும் கதிர் வீச்சு தாக்கம் அதிகம் இதனால் விலை மலிவு என்பதற்காக தரமற்ற நிறுவன தயாரிப்புகளை வாங்கி பயன்படுத்துவோர் மிகவும் அவதானமாக இருக்க வேண்டும் இவ்வாறான தரமற்ற கைத்தொலைபேசிப் பாவனையாளர்கள் பலரது காதுகளுக்குள் இருந்து புழுக்கள் கண்டெடுக்கப்பட்டு அகற்றப்பட்ட சம்பவங்களும் இடம்பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. எனவே எம்மால் முடிந்தவரை கைத்தொலைபேசி பாவனையை குறைந்தளவு குறைப்போம்.

யா.தனுசியா
தரம் 11 (2016)

**மனித உடலில் வியர்க்காத பகுதி எது? - உதடுகள்**

**உயிர்மூச்சு என்றழைக்கப்படுவது எது? - முகளம்**

**மார்ப்பை பாதுகாக்கும் எலும்பின் பெயர் என்ன? - ரிப்ஸ்**

**இதயம் எந்தத் தசைகளல் ஆக்கப்பட்டது? - கார்டியத் தசை**

**நமது உடலில் மிகப் பெரிய உறுப்பு எது? - கணையம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# உங்கள் வெற்றிக்கு நீங்கள் தான் அடித்தளம்

ரியூசன் வகுப்பில் வழக்கம் போல் உற்சாகமாக காணப்பட்டான் மாணவன் கரன். ஆனால் அவனுடைய சக மாணவனும் நண்பனுமாகிய சுதன் உள்ளே வரும் போது அவனுடைய முகம் மாறியது. அவனுள் இருந்த உற்சாகம் அடங்கியது. இதைக் கவனித்த ஆசிரியர் கருணகரன் வகுப்பில் இதுபோல மாணவர்கள் ஒற்றுமையுடன் இல்லாதது குறித்து வருந்தினார். அதனையடுத்து கரனிடம் வகுப்பு முடிந்ததும் எம்மைச் சந்தித்து விட்டு பின்பு வீடு செல்லுமாறு உத்தரவிட்டார். வகுப்பு முடிந்தது மாணவர்கள் அனைவரும் கலைந்து சென்றனர் கரன் மட்டும் ஆசிரியருக்காகக் காத்திருந்தான். அனைவரும் சென்ற பின் ஆசிரியர் கருணாகரன், "சுதன் வகுப்பினுள் நுழையும் போது உன் உற்சாகம் தடைப்பட்டதைக் கவனித்தேன் ஏன்? என்ன காரணம்?" எனன் கேட்டார். கரன் சற்று அமைதியாக இருந்தான். பின், "நான் என்ன செய்தாலும் அவன் என்னைப் பாராட்டுவதில்லை. அவனுக்குப் பலமுறை பல சிறிய உதவிகளை நான் செய்திருக்கிறேன். அதற்கு அவன் நன்றியோ? பாராட்டோ தெரிவிக்கவில்லை. இதனால் அவன் மீது சற்று கோபமும், பொறாமையுடனும் இருக்கிறேன். அவனை தவிர்க்கவும் முயற்சி செய்கிறேன்" என்றான். அதனைக் கேட்ட ஆசிரியர் அவனிடம் பேச ஆரம்பித்தார்.

உலகத்தில் வெற்றி பெறுபவர்கள் அனைவரிடத்திலும் ஒரு விடயத்தை நீ பார்த்திருக்கலாம். முதலில் அவர்கள் தன்னை நேசித்திருப்பார்கள். தங்களைத் தாங்களே ரசிக்கத் தெரிந்தவர்களாக இருந்திருப்பார்கள். தங்களைத் தாங்களே பாராட்டிக் கொண்டிருத்ததையும் காணலாம். உன்னை நீ எந்தளவிற்கு நேசிக்கிறாயோ அந்தளவிற்கு உனக்கு தைரியமும் தன்னம்பிக்கையும் உருவாகும்.

ஒருமுறை புகழ் பெற்ற அமெரிக்க பௌதீகவியல் விஞ்ஞானியான றௌலேண்ட், ஏதோ ஒரு வழக்கு தொடர்பாக நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல வேண்டி இருந்ததாம். நீதிமன்றத்தில் சட்டத்தரணி அவரிடம், அமெரிக்காவில் சிறந்த பௌதீகவியல் விஞ்ஞானி யார் என நீங்கள் நினைக்கிறீர்கள்? எனக் கேட்டார். அதற்கு அவர் சற்றும் யோசிக்காமல் உடனே "நான் தான்" என பதிலளித்தார்.

அதற்கு அவருடைய நண்பர் உனக்கு இவ்வளவு தற்பெருமை கூடாது என கிண்டல் செய்ய நான் நீதிமன்றத்தில் உண்மை தவிர வேறு எதையும் பேசமாட்டேன் எனக் கூறியிருந்தேன். அதனால் வேறு வழியின்றி உண்மையைக் கூற வேண்டியதாயிருந்தது என்றாராம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதலில் உன்னை நீ எந்த அளவிற்கு நேசிக்கிறாயே? அந்த அளவில் உன்னில் துணிச்சலும் தன்நம்பிக்கையும் அதிகமாகும். இவை இரண்டும் அதிகமாக இருந்தால் உறுதியும் கடும் உழைப்பும் இயல்பாகிவிடும். இவ்விரண்டையும் இயல்பாகி விட்டால் வெற்றி உன்னைத் தேடி வரும்.

முதலில் உன்னுடைய முதல் ரசிகராக நீ தான் இருக்க வேண்டும். உன்னை முழுமையாக நேசிக்கும் முதல் நபராக நீதான் திகழ வேண்டும். நீயே உன்னைப் பாராட்டிக் கொள்ள வேண்டும். இன்றைக்கு உனக்கு ஏற்பட்ட சவாலான சூழலை வெற்றிகரமான சூழலைக் கடந்து வரவேண்டும். என்றால் உன்னை நீயே பாராட்டிக் கொண்டால் போதும் இதனால் உன்மீதான தன்னம்பிக்கை உன்னுள் அதிகரிக்கும்.

அப்துல்கலாமின் சிகை அலங்கரத்தையோ, அலெக்சாண்டர் பிளெம்பிங்கின் வளைவான மூக்கையோ அல்லது சச்சின் டெண்டுல்கரின் குள்ளமான உயரத்தையோ நாம் கணக்கில் எடுத்துக் கொள்வதில்லை. அவர்களின் வானுயர்ந்த சாதனைகள் தான் அவர்களின் அடையாளங்கள். இவர்கள் அனைவரும் தங்கள் குறைகளைப் பொருட்படுத்தாமல் தங்கள் திறமை மீது வைத்த நம்பிக்கையாலேயே இவர்கள் சாதித்தனர்.

உன்னுடைய தனித்தன்மையை அங்கீகரித்து அதற்குரிய மரியாதையைக் கொடுத்து பார், அப்போது தான் உன்னிலிருக்கும் தனித்தன்மை நேர்மறையான தாக்கத்தை இந்த சமூதாயத்தில் ஏற்படுத்தும். அது உன் வளர்ச்சிக்கும் முன்னேற்றத்திற்கும் பேருதவி புரியும். உன்னுள் பொறாமை என்னும் வஞ்சகத்தை மனதில் விதைத்து விடக்கூடாது. அவ்வாறு விதைத்தால் அது சிறிது சிறிதாக எம்மை ஆக்கிரமித்து வஞ்சகத்தை வளர்த்துவிடும். எனவே எதிர்மறை எண்ணங்களைக் கைவிட்டு தன்னம்பிக்கை உடையவராய் நாமே வாழவேண்டும். அதுவே எம் வெற்றிக்கு அடித்தளம்.

என்று விரிவான விளங்கங்களை கரனுக்கு கூறியதில் சந்தோஷமடைந்தார் ஆசிரியர் கருணாகரன்.

ஜெ.அனோஜா
தொழில்நுட்பவியல் 2018

**மனித உடலில் அதிக அளவில் காணப்படும் தாதுப் பொருள் எது? - கல்சியம்**

**மனித உடலில் எத்தனை மன தசைகள் காணப்படுகின்றது? - 639**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பொது அறிவு

1. விண்வெளிப் பயண விதிகளை வரையறுத்த முதல் விஞ்ஞானி யார்?
   சேர்.ஐசாக் நியூற்றன்

2. கம்பியில்லாத் தந்தி முறையைக் கண்டு பிடித்தவர் யார்?
   மார்க்கோனி

3. பியானோவைக் கண்டுபிடித்தவர் யார்?
   கிறிஸ்ட டோனி

4. மைக்ரோவேவ் அடுப்பைக் கண்டுபிடித்தவர் யார்?
   கால் பென்ஸ்

5. கைத்துப்பாக்கியைக் கண்டு பிடித்தவர் யார்?
   கோல்ட்

6. மனித உடம்பிலுள்ள மிகப் பெரிய சுரப்பி எது?
   கல்லீரல்

7. துருப்பிடித்தல் என்றால் என்ன?
   இரசாயன மாற்றம்

8. நெதர்லேண்டின் தேசிய சின்னம் எது?
   சிங்கம்

9. மங்கோலியின் தேசிய சின்னம் எது?
   சோயேம்போ

10. எளிமையான அமினோ அமிலம் எது?
    கிளைசின்

11. உலகிலேயே மிக உயரமான விமான நிலையம் எது?
    லாசா விமான நிலையம் - திபெத்

க.திரிசிகா

6B



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நேரத்தின் அருமை

எவனொருவன் தனது வாழ்வின் நேரத்தைச் சரியாக கடைப்பிடிக்கின்றானோ அவனே உண்மையான வெற்றியாளன். எமது அன்றாட செயற்பாட்டிற்கு வெற்றியை அடைவதற்கான ஏணியாக நேரமே துலங்கி நிற்கின்றது நேரத்தைச் சரியான முறையில் பயனுள்ள விதத்தில் கழிக்காதவன் வாழ்வில் முழுதையுமே இழந்தவனாவான் ஒரு சிறிய செயலை செய்வோமாயின் நேரத்தைத் தான் வீணாக செலவளிக்கின்றோம். எமது வாழ்வின் படகை ஓட்டிச் செல்வதற்கு நேரமே துடுப்புப் போன்று செயற்படுகின்றது.

நேரத்தைப் பற்றிய பொன் மொழிகள் காணப்படுகின்றன "காலம் பொன் போன்றது" என்பது இந்தியப் பழமொழி "ஓர் அங்குல நேரம் ஓர் அங்குலத் தங்கம்" என்கிறது சீனப் பழமொழி நேரம் எமது உடம்பிலுள்ள உயிரைப் போன்றது. அது போலத் தான் உயிரும் நேரமும் போனால் இறுதி வரைக்கும் எம்மிடம் திரும்பி வராது யார் நேரத்தை சரியாகப் பயன்படுத்தி விட்டார்களோ அவர்களே எதிர்கால நாயகர்கள் பல அறிவியலாளர்கள் நேரத்தை நல்ல முறையில் முகாமைத்துவம் செய்து சாதனை படைத்தவர்கள் என்பதை பல வரலாற்று நூல்களின் ஊடாக காண முடிகிறது. எமது இலட்சியத்தை நிறைவை அடைய வழிகோலும் நேரத்தை எவ்வாறு கழித்தோம் என்பது முக்கியமல்ல மாறாக எந்த விதத்தில் பயன்படுத்தினோம் என்பதே இங்கு கவனிக்கப்பட் வேண்டியது.

நேரத்தை நல்ல முறையில் முகாமைத்துவம் செய்யாதவன் குருடனுக்கு சமமானவன் ஆவான் தனிமையில் இருக்கும் போது தான் தனிமையின் தார்ப்பரியம் தெரியும் அதுபோல நேரத்தைக் கடைப்பிடிப்பவனுக்குத்தான் அதன் அருமை புரியும்.

ஒரு வருடத்தின் பயனை இறுதித் தேர்வில் தோல்வியுற்ற மாணவனைக் கேளுங்கள்.

ஒரு மாதத்தின் பயனை முன்கூட்டியே பிறந்த குழந்தையின் தாயிடம் கேளுங்கள்.

ஒரு வாரத்தின் பயனை பத்திரிகை ஆசிரியரிடம் கேளுங்கள்.

ஒரு நாளின் பயனை தினக் கூலியாளிடம் கேளுங்கள்.

ஒரு நிமிடத்தின் பயனை புகைவண்டியைத் தவற விட்டவரிடம் கேளுங்கள்.

ஒரு வினாடியின் பயனை விபத்தில் தப்பியவரைக் கேளுங்கள்.

ஒரு மில்லி வினாடியின் பயனை ஒலிப்பிக் பதக்கம் பெறத் தவறியவரைக் கேளுங்கள்.

நடிலக்ஷனா
தரம் 11A



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# புவியைப் பாதுகாப்போம்

சூரியக் குடும்பத்தில் உயிர்கோள் பூமி ஆகும். பூமி ஆனது பல்வகையான உயிர்கள் வாழ்வதற்கேற்ற சூழல் உள்ள கோள் ஆகும். நாம் பூமியை பஞ்சபூதம் என்று கூறுகின்றோம்.

ஆனால் இன்று புவியில் நாளுக்கு நாள் அதிகரித்து செல்கின்றது. இதற்கு காரணம் ஓசோன் படை சிதைவடைவதே காரணம் ஆகும். ஓசோன் படை என்பது சூரியனில் இருந்து புவியை நோக்கி வருகின்ற புறஊதாக்கதிர்களை வந்தடையாமல் பாதுகாப்பதே ஓசோன் படையாகும். ஓசோன் படையானது 17-50 Km க்கு அப்பால் படை மண்டலத்தில் ஒரு பாதுகாப்பு வலயமாக நிலைபெற்றிருக்கிறது. ஓசோன் வாயுக்கள் படை மண்டலத்திக்குள்ளேயே 90 வீதம் காணப்படுகிறது. ஆனால் ஓசோன் படை சிதைவடைந்து வருகிறது அதற்கு காரணம் மனிதர்களாகிய நாமே ஆகும். அதாவது எரிபொருள் தகனமடைதல், குளிரூட்டிக்குப் பயன்படுத்தப்படும் (CFC) குளோரா புளோரோ காபன் வளியில் சேர்க்கப்படல், மிதேன் ஹேலோன் போன்ற நச்சுவாயுக்கள் வளிக்கோளத்தை வந்தடைதல் இவை போன்ற காரணத்தாலும் ஓசோன் படை சிதைவடைந்து வருகின்றது.

ஓசோன் படை சிதைவடைதற்கு பாதகமான விளைவுகள் பல ஏற்படுகிறது. அவையாவன காலநிலை மாற்றம் பெறல், அதாவது உரிய காலங்களில் மழை பெய்யாமல் இருத்தல். வெப்பம் அதிகமாக காணப்படும் என்பன காலநிலை மாற்றங்களாக காணப்படுகின்றது. இதனால் பயிர் விளைச்சல் குறைவடைதல். அதாவது மழையில்லாது வெப்பம் அதிகமாக காணப்படுவதால் பயிர்கள் அனைத்தும் நீர் இன்றி கருகி விடும். இதனால் உயிர்களுக்கு தேவையான போசனை கிடைப்பதில்லை, உயிர் வாழ்வதற்கு ஒட்சிசன் வாயும் கிடைக்காமல் போவதற்கு ஒரு காரணமாக உள்ளது. இதனால் விவசாயிகள் பல பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்கின்றனர். இவை அனைத்தும் பயிர் விளைச்சல் குறைவதால் ஏற்படும் பிரச்சினை ஆகும்.

உயிர் பல்வகைமை குறைவதால் அதாவது அதிக வெப்பத்தால் விலங்குகள் மற்றும் மனிதர்கள், உணவு, நீர் இன்றி உயிர்களை இழக்கின்றன. இதனால் உயிர் பல்வகைமை குறைவடைந்து வருவதற்கு காரணமாக அமைகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தோல் தொடர்பான நோய் அதாவது சூரியனில் இருந்து வரும் புறஊதாக்கதிர்கள் வந்து மனிதர்களின் தோல்கலைத் தாக்குகின்ற போது தோலில் கடி, கொப்பளம் போன்ற நோய் ஏற்படுகின்றது. இதுவே நோய் தொடர்பான நோய்கள் ஆகும்.

சுவாசம் தொடர்பான நோய் அதாவது சூழல் முழுவதும் நச்சு வாயுக்கள் காணப்படுவதால் ஒட்சிசன் வாயு அருகிச் செல்வதை காணக் கூடியதாக உள்ளது. இதனால் மனிதன் தான் சுவாசிப்பதற்கு தேவையான ஒட்சிசன் வாயு இல்லாமல் பெரும் பிரச்சினைக்கு முகம் கொடுக்கின்றான். இதுவே சுவாசம் தொடர்பான நோய்கள் ஆகும்.

கண்நோய் பரவுதல் அதாவது புறஊதாக்கதிர்கள் புவியை வந்தடைவதால் அது காற்றுடன் கலந்து கண்நோயை பரப்புகின்றது.

கடந்த மாதம் யாழ்ப்பாணத்தில் அதிக வெப்பம் காரணத்தால் பாடசாலை மாணவர்கள் பல பிரச்சினைகளுக்கு முகம் கொடுத்துள்ளனர். மூன்று மாணவர்கள் மரணம் அடைந்துள்ளனர்.

ஓசோன் படையை பாதுகாப்பதற்கான உலக நாடுகள் பங்களிப்பு செய்துள்ளன. அதாவது மகா நாடுகள் நடாத்தப்பட்டுள்ளன. அவற்றுள் லியன்னா மகாநாடு, மொன்றியல் கூட்டமைப்பு, கிபோட்டோ உடன்படிக்கை என்பனவாகும்.

ஓசோன் படை சிதைவடைதால் காலநிலை மாற்றத்தால் உயிர்கள் அனைத்துக்கும் அச்சுறுத்தலாகவே உள்ளது. எனவே மனிதர்களாகிய நாம் இனி ஓசோன் படை சிதைவடையக் கூடிய செயற்பாட்டை செய்யாது ஓசோன் படையையும்பாதுகாத்து எம்மையும் பாதுகாத்து இயற்கை வளம் மிக்க புவியை பாதுகாத்து ஆரோக்கியமான வாழ்வை வாழ்வோம்.

**ந.அமுதா**
**தரம்** :- 10.

**மாலைக் கண் நோய் விட்டமின் A குறைபாட்டால் ஏற்படுகின்றது**

**விட்டமின் B குறைபாட்டால் பெரிபெரி நோய் ஏற்படுகிறது**

**பற்களை ஸ்கேவி நோய் பாதிக்கும்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சுற்றுச்சூழல் மாசடைவும் பாதுகாப்பும்

உலகம் எப்போது தோன்றியதோ அப்போதே சூழல் மிகச் சிறப்பாக அமைந்திருந்தது. மனிதன் எப்போது இயற்கையைப் போற்றி வழிபட ஆரம்பித்தானோ அப்போதே அவனுடன் நாகரிகமும் சேர்ந்து வளர ஆரம்பித்தது எனலாம். இதனால் நாளுக்கு நாள் மானிடர்களிடையே பண்பாடு, கலாசாரம், பழக்கவழக்கம் என்பனவும் மாற்றம் பெறுகின்றது. ஆரம்பகாலத்தில் இயற்கையை தெய்வமாக மதித்தவர்கள் தற்போதைய அறிவியல் வளர்ச்சி காரணமாக சூழலை மதிப்பதில்லை. இயற்கைச் சூழல் மாற்றமடைவதால் அதன் வளங்கள் குறைவடைகின்றன. ஆனாலும் அறிவியலும், நாகரிகமும், வளர்ந்தாலும் பண்பாடும் பயனும் என்றும் நிலைத்திருக்கப் பாடுபடுவதே இயற்கை சூழலோடு இயைந்த வாழ்வாகும். இயற்கைச் சூழல் கெட்டால் வளமான வாழ்வு கேள்விக்குறியாக்கப்படுகின்றது. சுற்றுச் சூழல் மாசடைவில் காற்று, நீர், நிலம், வான்வெளி, சமநிலைச்சீரழிவு என்பன உள்ளடங்குகின்றன.

சூரியக் குடும்பத்தில் உள்ள கோள்களில் மனிதன் வாழ்வதற்கு ஏற்ற கோள் பூமியாகும். பூமியில் பலவகை உயிர்கள் வழ்வதற்கு ஏற்ற சூழல் உள்ளது. நாம் பூமியின் அமைப்பை 'பஞ்ச பூதம்' எனக் குறிப்பிடுகின்றோம். நிலம், நீர், தீ, காற்று, ஆகாயம் எனும் அவற்றின் கூட்டு அமைப்பில் தான் உயிர்கள் தோன்றி வாழ்கின்றன. உயிர்கள் வாழ்வதற்கு இன்றியமையாதது உணவு, உடை, உறையுள் எனினும் வளி இல்லாமல் உயிர்கள் வழ முடியாது. சுவாசித்தலுக்கு தூய காற்று தேவை. ஆனால் இன்று காற்று அளவுக்கதிகமாக மாசடைந்து வருகின்றது.

தொழில் வளத்தால்பெருகி தொழிற்சாலைப் புகையாலும் வாகனப் போக்குவரத்தால் வெளியாகும் புகையாலும் காற்று மிகுதியாக மாசுபடுகின்றது. இப்புகை போதாதென்று வாயினாலும் சிலர் புகைவிடுகின்றனர். ஆரம்பகாலத்தில் அழகாகவும், அமைதியாகவும் இருந்த சூழல் தற்போது அழிந்து விடும் நிலைக்கு தள்ளப்பட்டுள்ளது. இதற்கு முக்கிய காரணமாக அதிவேக தொழில்நுட்ப வசதியும் பல்வேறு கண்டு பிடிப்புக்களும், மக்கள் தொகை அதிகரிப்பு அமைகின்றன.

மக்கள் பலர் புகைப்பிடிக்கும் பழக்கத்தினை கொண்டுள்ளார்கள் இவர்கள் தம் நலத்தை கெடுத்துக் கொள்வதுடன் பிறர் நலத்தையும் கெடுக்கின்றார்கள். காற்று மாசில் கலந்துள்ள கரியைத் தாவர வகை எடுத்துக் கொண்டு, பகலில் ஒளிச் சேர்க்கை மூலம் நமக்குத் தேவையான உயிர் வளியை வெளிவிடுகின்றது. ஆகவே தான் அதிகமான மரங்களை வளர்க்க வேண்டும் என்றும்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காடுகளை அழிக்கக் கூடாது என்றும் பிரசாரம் செய்கின்றார்கள். காடுகளை அழிப்பதால் காட்டு வளம் குறைவடைகின்றது. வரட்சி உண்டாகின்றது. மண்ணரிப்பு ஏற்படுகின்றது இவ்வாறு பல்வேறு அனர்த்தங்கள் உண்டாகின்றன.

தூய்மையான காற்றே உயிர்களின் நல்வாழ்விற்கு சிறந்த துணையாகும். தொழிற்சாலைக் கழிவுகள், வாகனப் புகை போன்ற தீங்கு விளைவிக்கக் கூடிய வாயுக்கள் காற்றில் கலந்து வளியை மட்டுமல்லாது அதனை சுவாசத்திற்கு உட்படுத்தும் மானிடர்க்கும் விளைவை கொடுக்கின்றது. "நீர் இன்றி அமையாதது உலகு" என்றார் வள்ளுவர். தண்ணீர் மக்களுக்கு மட்டுமல்ல அனைத்து உயிர்களுக்கும் மிகமிக முக்கியமாகும். செடி, கொடி, மரவகைகள் வளரவும் நீர் தேவை. உலகிலே நீரானது 97% ஆக கணப்படுகின்றது. அனைத்து செயற்பாடுகளுக்கும் தேவையான நீரை மழை வாயிலாகவும் பெற முடிகின்றது. அதில் ஒரு பகுதியையே நாம் பயன்படுத்துகின்றோம். மிகுதி கடலில் கலந்து வீணாகின்றது.

இதற்கு தான் பராக்கிரமபாகு என்ற அரசன் "வனத்திலிருந்து விழும் எந்தவொரு மழைத்துளியையும் கடலுடன் கலக்க விட மாட்டேன்....." என்றார். நன்னீர் பற்றாக்குறை நமக்கு ஏற்படுகின்றது. இதை ஈடுசெய்ய நிலத்தடி நீர்வளம் அமைகின்றது. தற்போது நிலத்தடி நீர்வளம் வற்றி வருகின்றது. கடல் நீர் அவ்விடத்தில் புகுந்து நிலத்தடி நீரை மாசுபடுத்துகின்றது. இரத்ததானம் செய்பவர்கள் கூட ஒரு அளவுக்கு தான் இரத்தத்தை கொடுப்பார்கள் அளவுக்கு அதிகமாக கொடுத்தால் என்னவாகும் அதே மாதிரி மண்ணின் இயற்கைச் சமநிலை சிதைந்து ஒரு நாளில் நிலநடுக்கம் கூட ஏற்படலாம். நீரை மாசுபடுத்துவதில் மக்களே பிரதான இடம் வகிக்கின்றார்கள். தங்களுடைய வேலைகளை சுலபமாக நிறைவு செய்வதற்காக நீரை மாசுபடுத்துகின்றார்கள். இதனால் வரும் பின்விளைவை இவர்கள் யோசிப்பதில்லை.

குளம், ஆறு, வாய்க்கால் போன்ற இடங்களில் கால்நடைகளை கழுவுதல், வாகனங்களைக் கழுவுதல், இறந்த பிராணிகளை கழுவுதல், தொழிற்சாலை கழிவுகளைக் கலக்க விடல் போன்றவற்றின் காரணமாக நீர்வளம் அதிகமாக பாதிக்கப்படுகின்றது. நீர் வளம் அதிகமாக பாதிப்பிற்கு உள்ளானால் இது மனித வளத்தையே பாதிக்கும் என்பது உண்மையானது.

நிலம் தான் நமக்குத் தேவையான உணவுப் பொருள் உற்பத்தியைப் பெருக்கித் தருகின்றது. மனிதன் தன் பேராசையால் உரங்களைப் பயன்படுத்தி உற்பத்தியை பெருக்கினான். இதனால் விளைநிலம் பாதிக்கப்பட்டது. விவசாய உற்பத்திக்குத் துணை நின்ற நுண்ணுயிர்கள் அழிந்து போயின. மண்புழுக்கள் இன வளர்ச்சி இல்லாமல் அழிந்தன. மகரந்த சேர்க்கைக்கு உதவும் வண்டு வகைகளும், பறவை இனங்களும் அழிந்து போயின. போதாதற்கு தொழிற்சாலைகளையும்,


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெரிய மாட மாளிகைகளையும் கட்டியதனால் நல்விளை நிலங்களை இழந்து நிற்கின்றோம். அத்துடன் பெருகும் குப்பை, கூழக் கழிவும், நீர்க்கழிவும் எஞ்சியுள்ள நிலத்தையும், ஆறுகளையும் மாசுபடுத்தி உயிர் வாழ்வை கேள்விக் குறியாக்கி விட்டது. மாசுபடாது இருக்கும் கடலைக் கூட நாம் விட்டு வைத்ததில்லை. ஏரி, குளங்களில் வாழ்ந்த மீனினமும், பறவையினமும் காணாமல் போய்விட்டன. கடலிலும் இதன் பாதிப்பு தெரியத் தொடங்கியுள்ளது.

சூரியக் கதிர் வீச்சிலிருந்து உலக உயிர்களைக் காத்து வரும் ஓசோன் படலம் சிதைந்து வருகின்றது. இதற்கு யார் காரணம்? நாம் தான் நாகரிகத்தின் பெயரால் தன் வாழ்க்கைக்கு பயன்படுத்தும் பல்வேறு சாதனங்கள் வெளியிடும் நச்சு காற்று மண்டலத்தை மாசுபடுத்தி மேலே சென்று ஓசோன் மண்டலத்தைப் பாதிக்கின்றது காற்றில் கலந்துள்ள கரிப்புகை சூரியனின் கதிர் வீச்சால் பூமிக்குள் புகும் வெப்பம் திருப்பிச் செல்லாமல் தடுக்கின்றது. ஆகவே பூமியின் வெப்பம் அதிகரிக்கின்றது. இதனால் ஏற்படக்கூடிய சில விளைவுகளை அவதானித்துப் பாருங்கள் இதனால் வரும் பிரச்சினைகளைக் கூறுகின்றேன்.

துருவப் பகுதிகளில் உள்ள பனிப்பாறைகள் உருகும், சிதையும் அவை உருகுவதால் கடலில் நீர்மட்டம் உயரும், பூமியின் நிலப் பகுதிகள் சில கடலுக்குள் மூழ்கும், பனிப்பாறைகள் நகர்வதால் பெரிய விபத்துக்கள் ஏற்படலாம். மலைகளின் அடிப்பகுதிகள் நொருங்கும் அதனால் நில நடுக்க நிகழ்வுகள் ஏற்படலாம். பருவ நிலைகள் மாற்றடமையும், அதனால் உரிய காலத்தில் வெப்பச் சூழல் தாறுமாறாக கடலின் இயற்கைச் சமநிலையைச் சிதைக்கும்.

நாம் பல்வேறு பொழுதுபோக்கு சாதனங்களைப் பயன்படுத்துகின்றோம். அவற்றில் ஒலிபெருக்கி மனிதனின் பேசும் ஆற்றலைவிட கேட்கும் ஆற்றலை தடுக்கின்றது. அதாவது பாதிப்படையச் செய்கின்றது. இரவை பகல் போல் மாற்றும் ஒளி வெள்ளம் கண்ணைப் பாதிப்படையச் செய்கின்றது. உயர்ந்த தொழில்நுட்ப வசதி காரணமாக கண்டு பிடிக்கப்பட்ட தொலைபேசி, தொலைக்காட்சி என்பனவும் மனிதனையும், சூழலையும் பல்வேறு வகையில் பாதிப்படையச் செய்கின்றன. காடுகளை அழிப்பதால் சூழல் சமநிலை சீர்குலைந்து பல்வேறு பிரச்சினைகளை ஏற்படுத்துகின்றது. இதனை ஈடுசெய்ய நாம் மேற்கொள்ளும் அறிவியல் முயற்சிகள் மேலும் சிக்கலையே ஏற்படுத்துகின்றன.

மனித இனமும் மற்ற உயிரினங்களும் இனி உலகில் வாழ வேண்டுமானால் நம் செயன்முறைகளை மாற்றிக் கொள்ள வேண்டும். இயற்கை வாழ்வு நெறிமுறைகளை கடைப்பிடிக்க வேண்டும். நாம் வாழும் உலகம் நம் முன்னோர்கள் நமக்காக விட்டுச் சென்றது என்பதையும் நம் சமுதாயத்தின் வருங்காலச் சந்ததியினருக்கு உரியது என்பதையும் கருத்தில் கொள்ள வேண்டும். இயற்கை வளங்களை சுரண்டி நாசம் செய்வதை நிறுத்த வேண்டும். இருக்கும் நீர் வளங்களைப் பாதுகாப்பதோடு, பெருகி வரும் மக்கள் தொகைக்கு ஏற்ப புதிய நீர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிலைகளை உருவாக்க வேண்டும். நிலத்தடி நீரை உறிஞ்சி எடுப்பதை கட்டுப்படுத்த வேண்டும். நிலத்தடி நீர் வளத்தை பெருக்க வேண்டும். ஓசோன் படலத்தை சிதைக்கும் செயலுக்கு காரணமான கருவிகளின் பயன்பாட்டை குறைக்க வேண்டும். நிலத்திலோ, கடலிலோ உள்ள நீர் வாழ் உயிரினங்களைக் காப்பாற்ற வேண்டும். அவை பெருக வழிவகை செய்ய வேண்டும். கழிவுகளால் நதிகளும், கடல்களும் மாசுபடுவதை தடை செய்ய வேண்டும். காற்று மாசைத் தடுப்பதோடு கிடைத்த இடங்களில் எல்லாம் மரம், செடி, கொடிகளையே வளர்க்க வேண்டும்.

ஒரு மரம் வெட்டினால் அதற்கு பதிலாக பத்து மரங்களை நாட்ட வேண்டும். வன விலங்குகளையும், பறவைகளையும் பாதுகாக்க வேண்டும். மழையைப் பெறுவதற்குரிய நெறிமுறைகளை கடைப்பிடிக்க வேண்டும். காடுகளை சிதைப்பதை நிறுத்த வேண்டும். மக்கள் தொகை பெருகாமல் இருப்பதற்குரிய நெறி முறைகளை இன, மத வேறுபாடுகளை நீக்கி அனைவரும் கடைப்பிடிக்க வேண்டும். அப்போது தான் தூய்மையான நன்மை தரும் சூழலை நாம் பெற்றுக் கொள்ள முடியும்.

விவசாயத்தில் பண்டைக் காலம் போல் இயற்கை உரத்தையும் பூச்சிக் கொல்லிகளையும் பயன்படுத்த வேண்டும். கால் நடை வளம் பெருகுவதற்கு உரிய வழிகளை உடனே கையாள வேண்டும். "அளவுக்கு மிஞ்சினால் அமிர்தமும் நஞ்சு" என்ற பழமொழியின் உட்கருத்தை தற்போது நாம் அனுபவித்துக் கொண்டிருக்கின்றோம். இதை மாற்றி எளிமையான வாழ்வை கடைப்பிடித்தால் மனித இனம் நிறைவான வாழ்வை பெற்று உய்யும் இயற்கையோடு இயைந்த இனிய வாழ்விற்கு நாம் எம்மை தயாரித்துக் கொள்ள முயற்சிகளை மேற்கொள்வோமாக! எம்மை சார்ந்துள்ள பறவை இனங்கள், விலங்கினங்கள், செடி, கொடி, மர வகைகள் என்பவற்றையும் பாதுகாத்து சுத்தமான சூழலுடன் தூய்மையான காற்றைச் சுவாசிப்போம்.

**செல்வி.சா.அபிராமி**

**தரம்** :- 13(2017)

**கலைப்பிரிவு.**

**மையோப்பியா என்ற நோய் மனிதனின் கண்களைத் தாக்குகிறது**

**நிமோனியா நோய் உடலின் நுரையீரல் உறுப்பைப் பாதிக்கும்?**

**மூளையில் உள்ள நியூத்திரன்களின் எண்ணிக்கை 1400**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## ஆன்மீக தத்துவங்கள் சில .......

**01. ஆலயங்களில் ஏன் மணி அடிக்கிறோம்?**

பெரும்பாலான ஆலயங்களின் நுழைவாயிலில் ஒன்று அல்லது இரண்டு மணிகள் தொங்கவிடப்பட்டிருக்கும். ஆலயத்திற்கு வரும் பக்தர்கள் முதலில் மணியினை ஒலிக்கச் செய்து பிறகு இறைவனை தரிசித்து பிரார்த்தனை செய்வார்கள்.

நாம் ஏன் மணியை அடித்து ஒலி எழும்புகின்றோம்? என்றால் மணியை அசைப்பதால் எழும் ஒலி மங்களகரமான ஒரு ஓசையாகக் கருதப்படுகின்றது. மணி அசைக்கும் பொழுது "ஓம்" என்ற ஒலி எழும்புகிறது. இது பிரபஞ்சமெங்கும் நிறைந்து விளங்கும் இறைவனின் பொதுவான திருநாமமாகும். இறைவன் மங்கள வடிவினன். ஆகவே அவ் இறைவனின் தரிசனம் பெற நமக்குள்ளேயும், வெளியேயும் மங்களகரமாய் இருக்க வேண்டும்.

ஆரத்தி எடுக்கப்படும் பொழுது மணி ஓசையை எழுப்புகிறோம். சில நேரங்களில் மணியுடன் சங்கு மற்றும் பிற இசைக்கருவிகளையும் ஒலிக்கச் செய்வதுண்டு. இவ்வாறு ஒலியை எழுப்புவதற்கு மற்றொரு காரணமும் உண்டு. அச்சமயம் ஏதேனும் அமங்கலமான ஓசையோ, அல்லது தெய்வீக சூழ்நிலைக்கு ஒவ்வாத ஓசையோ, பேச்சோ எழுமானால் பக்திப் பரசவத்துடனும், ஆர்வத்துடனும் இறைவனைக் கண்குளிரக் கண்டு மகிழும் பக்தர்களின் கவனம் சிதறாமலும், அவர்கள் மன அமைதி, கெடாமலும் இருக்கவே இம்மணி ஓசை அனுதினமும் நாம் செய்யும் பூஜையின் பொழுது சிவ சிவ என்று சொல்லிக் கொண்டே மணியை ஒலிக்கிறோம்.

**02. நாம் ஏன் தீபம் ஏற்றுகின்றோம்?**

நம் நாட்டில் அநேகமான ஒவ்வொரு தமிழர் இல்லத்திலும் நாள்தோறும் இறைவனின் முன் திருவிளக்கு ஏற்றப்படுகிறது. விடியற்காலை மற்றும் அந்தி நேரம் ஆகிய இரண்டு வேளைகளிலும் விளக்கு ஏற்றப்படுகிறது. ஒரு சில இல்லங்களில் இது அணையா தீபமாக வைத்து பாதுகாக்கப்படுகிறது. தினசரி பூஜை மற்றும் பண்டிகைகள், மங்கல சடங்குகள் மற்றும் திறப்பு விழாக்கள் போன்ற பொது நிகழ்ச்சிகளில் மங்கல தீபம் ஏற்றி வைத்துத்தான் தொடங்கப்படுகிறது.

**03. தீபத்தை ஏன் ஏற்றுகின்றோம்?**

ஒளி அறிவையும், இருள் அறியாமையும் குறிக்கின்றது. இறைவன் அறிவு (ஞானம்) மயமானவன் சைதன்ய தத்துவம். இறைவன் தான் அனைத்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஞானத்திற்கும் மூலமானவன், உயிர் அளிப்பவன், ஒளியூட்டுபவன். ஆகவே தான் ஒளியை இறைவனாகவே கருதி வணங்குகிறோம்.

ஒளி இருளை அகற்றுவது போல் அறிவு (ஞானம்) அறியாமையை அகற்றுகிறது. மேலும் அறிவு என்றும் எம்முடன் நிலைத்து நிற்கும் அழிவற்ற பெரும் செல்வமாகும். அறிவின் துணை கொண்டு இவ்வுலகில் நாம் அனைத்து சாதனைகளையும் செய்து முடிக்க முடியும். நமது செயல்கள் நன்மை தரக்கூடியதாகவோ, தீமை பயப்பனவாகவோ இருக்கலாம். எனவே, தீபத்தை ஏற்றுவதன் வாயிலாக, செல்வங்கள் அனைத்திலும் மிக உயர்ந்த அறிவுச் செல்வத்தைப் போற்றி வணங்குகின்றோம்.

03. துளசியை ஏன் வணங்குகிறோம்?

தமிழர் இல்லங்கள் பலவற்றில் வீட்டின் முன்புறத்திலோ, பின்புறத்திலோ, நடுமுற்றத்திலோ ஒரு துளசி மாடம், துளசி செடி வைக்கப்பட்டுள்ள ஒரு பீடம் உண்டு.

துளசியை வணங்க காரணம் எதுவெனில் ஸமஸ்கிருத மொழியில் "துலனா நாஸ்தி அதைவ துளசி" என்ற கூற்று உள்ளது. துளசிக்கு உயர்ந்த குணங்கள் உள்ளது என்பது இதன் பொருள் தமிழர்களுக்கு துளசி மிகப் புனிதமான செடிகளில் ஒன்றாகும். உண்மையில் துளசி ஒன்று தான் ஒருமுறை பூஜைக்கு பயன்படுத்தப்பட்ட பிறகும் நீரில் கழுவப்பட்டால் மீண்டும் பூஜைக்கு பயன்படுத்தத் தக்கதாக கருதப்படுகிறது. துளசி தன்னைத் தானே தூய்மைப்படுத்திக் கொள்ளும் சக்தி கொண்டதாக கருதப்படுகின்றது.

துளசியைப் பற்றி ஒரு கதை உண்டு. துளசி, சங்குசூட என்ற விண்ணுலக தேவனின் மனைவி பகவான் ஸ்ரீ கிருஸ்ணர் தன்னை ஏமாற்றி பாவச் செயல் செய்யுமாறு தூண்டினர் என்று அவள் நினைத்தாள். ஆகவே பகவான் ஸ்ரீ கிருஸ்ணர் கல்லாக மாறினார். அவளுடைய பக்தியையும் நேர்மை தவறாத நடத்தையையும் கண்டு மகிழ்ந்த பகவான் "தன் சிரசை அலங்கிக்கத்தக்க புனிதமான துளசிச் செடியாக அவள் திகழ்வாள்" என்று ஆசீர்வதித்தார். மேலும் துளசி இல்லையெனில் இறைவனுக்கு அர்ப்பணிக்கப்படும் எப்பொருளும் முழுமை பெறாது என்றும் திருவாய் மொழிந்தருளினார். இதன் காரணமாகத்தான் நாம் துளசியை வணங்குகிறோம்.

துளசி விஷ்ணு பத்தினியான லஷ்மியின் ரூபமாகவும் வணங்கப்படுகிறாள். நேர்மையான வழியில் நின்று, மகிழ்ச்சியான குடும்ப வாழ்க்கை வாழ விரும்புகிறவர்கள் துளசியை பூஜிக்கின்றனர். பகவான், துளசியை தனது தெய்வீக துணைவியாக ஏற்றுக் கொண்டார், என்று ஒரு புராணக் கதை உண்டு. துளசி உயர்ந்த மருத்துவ குணங்கள் வாய்ந்தது. "துளசியின் அடியில் எல்லாப் புனித



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தலங்களும் அமைந்துள்ளன. மேற்பகுதியில் அனைத்து தெய்வங்களும் குடிகொண்டுள்ளனர். நடுப்பாகத்தில் அனைத்து வேதங்களும் உள்ளன. அத்தகைய துளசியை நாம் சிரம் தாழ்த்தி வணங்குகிறோம்.

**04. நெற்றியில் திலகமிடுவதன் நன்மை**

திலகம் அதனை அணிபவரிடத்திலும், அவரைச் சூழ்ந்துள்ளவரிடமும் ஒரு தெய்வீகமான, புனிதமான உணர்வை ஏற்படுத்துகிறது. அது ஒரு மதச் சின்னமாக உள்ளது. அணிபவரின் சாதி மற்றும் மத உட்பிரிவிற்கு தக்கவாறு திலகத்தின் உருவமும், நிறமும் மாறுபடும். இவ்வாறே வழிபடப்படும் இறைவனின் உருவத்திற்கு ஏற்றவாறும் இவை மாறுபடும்.

முற்காலத்தில் பிராமணர்கள், சாஷ்த்திரியர்கள், வைசியர்கள், சூத்திரர்கள் ஆகிய நான்கு சாதியினமும் வெவ்வேறு வகையான திலகங்களை தரித்தனர். பிராமணர்கள் வெண்ணிறமான சந்தன திலகம் அணிந்தனர். அவர்களது. புனிதமான, அர்ச்சகர் அல்லது புரோகிதர் தொழிலையோ அல்லது அறிவு சார்ந்த தொழிலையோ அத் திலகம் குறித்தது. போர் புரியும் இனத்தைச் சேர்ந்தவர்களாக இருப்பதால் அவர்களது வீரத்தைக் குறிக்கும் வகையில் சஷ்த்திரியர்கள் சிவந்த நிறமுடைய குங்குமத்தை நெற்றியில் தரித்தனர். வைசியர்கள் மஞ்சள் நிறம் கொண்ட திலகத்தை அணிந்தனர். அது செல்வச் செழிப்பை எடுத்துக் காட்டியது. ஏனெனில் வைசியர்கள் செல்வத்தைப் பெருக்கும் தொழிலான வியாபாரத்தில் ஈடுபட்டனர்.

இறைவனுக்கு அர்ப்பணிக்கப்பட்ட சந்தனம், குங்குமம் மற்றும் பஸ்மம் முதலியன பிரசாதமாக அளிக்கப்படுகின்றன. அதனை நமது நெற்றியின் புருவங்களுக்கிடையே உள்ள பகுதியில் அணிகிறோம். இப் பகுதி நினைவாற்றல் மற்றும் சிந்திக்கும் திறன் ஆகியவற்றின் மையமாகும். திலகத்தை நெற்றியில் இடும்பொழுது பின்வரும் பிரார்த்தனை சொல்லப்படுகின்றது. “இறைவன் என் நினைவில் நிறைந்திருப்பாராக, புனிதமான இந்த உணர்வு என் செயல்கள் அனைத்திலும் பரவி நிற்கட்டும். என் செயல்கள் நேர்மையானவையாக இருக்கட்டும்”.

இந்த மனப்பாங்கை நாம் தற்காலமாக மறந்து விட்டாலும் பிறரது நெற்றியில் விளங்கும் திலகம் நமக்கு அப்பிரார்த்தனையை நினைவூட்டி விடும். இவ்வாறு திலகம் இறைவனது நல்லாசியின் அடையாளமாக விளங்குவதுடன் தவறான இயல்புகளினின்றும் தீய சக்திகளிலிருந்தும் நம்மைக் காக்கும் ரட்சையாகவும் விளங்குகிறது. திலகம் அணியும் மரபு தமிழ்களுக்கே உரித்தான ஒரு வழக்கமாகும். எந்த இடத்திலும் தமிழர்களை இனங்கண்டு கொள்ள இது உதவுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

05. பூஜை அறையின் அவசியம் என்ன?

பெரும்பாலான இல்லங்களில் பூஜைக்கென்று ஓர் அறை உள்ளது. இங்கு ஒவ்வொரு நாளும் திருவிளக்கு ஏற்றப்படுகிறது. சிருஷ்டியில் உள்ள அனைத்திற்கும் இறைவன் தான் உரிமையாளர் ஆகவே நாம் வசிக்கும் வீட்டிற்கும் உண்மையில் இறைவன் தான் சொந்தக்காரன் வீட்டில் உள்ள பூஜை அறை தான் இறைவனான அந்த எஜமானின் அறையாகும். இவ்வுலகில் வாழும் நாம் எல்லோரும் அவ்விறைவனுக்குச் சொந்தமான இடத்தில் குடியிருப்பவர்கள் தான். இவ்வெண்ணம் நம்மிடமுள்ள தவறான செருக்கையும் 'எனது' என்று சொந்தம் கொண்டாடும் எண்ணத்தையும் துடைத்தெறிந்து விடும்.

இறைவன் எங்கும் நிறைந்துள்ளவன். அவ்விறைவன் நம் வீட்டிலும் குடி கொண்டுள்ளான் என்பதை நமக்கு நினைவூட்டவே நம் வீடுகளில் பூஜை அறை உள்ளது. இறைவனின் திருவருள் அன்றி எவ்வித செயலையும் வெற்றிகரமாகவோ, எளிதாகவோ செய்து முடிக்க இயலாது. எனவே தான் விசேஷ நாட்கள் மட்டுமன்றி ஒவ்வொரு நாளுமே நாம் பூஜை அறையில் இறைவனின் அருளை வேண்டி அவனுடன் தொடர்பு கொள்கிறோம். புனித எண்ணங்களும், ஒலி அதிர்வுகளும் பூஜை அறை முழுவதும் நிறைந்து பரவி அங்கு உள்ளவரின் மனதில் தெய்வீக எண்ணங்களை உண்டாக்குகிறது. நாம் களைப்புற்று உள்ள பொழுதோ மனம் அமைதியற்றுள்ள பொழுதோ பூஜையறையில் சிறிது நேரம் அமர்ந்திருந்தால் நம் மனம் அமைதியடைகின்றது. உயர்ந்த ஆன்மீக நிலையை அனுபவிக்கிறோம். இதுவே பூஜையறையின் அவசியமாகும்.

கு.அஜந்தினி

*வணிகப்பிரிவு* - (2018).



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# தி – ரியல் – பிக் போஸ்
# The Real Bigg Boss

அன்று நினைத்து கூட பார்க்க முடியாத அளவில் இருந்த உலகம் இன்று சிறிது சிறிதாக எம் கைக்குள்ளேயே வந்து விட்டது. ஆம் இதனால் தோன்றியவனே "பிக்போஸ்" ஆம் பிக்போஸ் என்பவன் யார்? அதற்கான பதிலை அறிய முன் நாம் நிய உலகிற்கு செல்வோம்.

தற்போது அண்மைக் காலமாக பிரபல இந்திய தொலைக்காட்சி ஒன்று "பிக்போஸ்" என்ற ஒரு நிகழ்ச்சியை நடாத்தி வருகின்றது. இது நம்மில் பெரும்பாலானோருக்கு தெரியும். அங்கு 15 சினிமா பிரபலங்கள் 100 நாட்கள் ஒரே இல்லத்தில் பூட்டி வைத்து அவர்களின் அசைவுகளை கமரா மூலம் படம் பிடித்து அதை இவ் உலகிற்கு காட்டி வருகின்றனர். இது அந்த 15 பிரபலங்களுக்கும் தெரியும். இது போலதான் எமக்கும் ஆனால் எமது "பிக்போஸ்"ஐ யாருக்கும் தெரியாது. ஆம் அந்'த பிக்போஸ் எம்மை மேற்பார்வை செய்வதால் அவருக்கு என்ன நடந்து விடப் போகின்றது? இந்த கேள்விக்கு விடை காண முன் இனி வரும் காலங்களின் அதிக விலைமதிப்புள்ள சொத்து யாதாக இருக்க முடியும்? ஆபரணம், காணி, வீடு, போன், கார், பணம் இவை எதுவுமே இல்லை.

தகவல் ஆம் பூவுலகு, அனைத்து உயிரும் வாழும் இடம் என்பதில் இருந்து ஒரு சந்தையாக மாறி உள்ளதால் இங்கு விலை மதிக்க முடியாத சொத்து தகவல் மட்டுமே. இத் தகவல் ஒவ்வொரு செக்கனும் எமது கைபேசி மூலமாகவும், கணனி மூலமாகவும், செயற்கை கோள் மூலமாகவும் எம்மை விட்டு போய்க் கொண்டும் எமக்கு வந்து கொண்டும் உள்ளது.

இத் தகவல்களைப் பெற பல தனியாள் நிறுவனங்களும், கம்பனிகளும் பல இலட்சம், கோடி ரூபாய்களை செலவு செய்து வருகின்றன. ஏன் உங்கள் முகம் பொலிவு பெற வேண்டும் என்று நீங்கள் நினைக்கிறீர்கள் என்ற ஒரு தகவல் போதும் உங்களை பேசியல், கிறீம் இல் தொடங்கி பொடிலோசன், பேஸ்பேக் வரை உங்களை வாங்க வைத்து உங்கள் வருவாயில் பாதியை இந் நிறுவனங்கள் எடுத்துக் கொள்ள முடியும்.

இப்போது உங்கள் கைப்பேசியை எடுத்து "வாட்ஸ்அப்"இல் உங்கள் நண்பர் ஒருவருடன் தொலைபேசி வாங்க போவது தொடர்பாக கலந்தரையாடி பாருங்கள் இரண்டு நாட்களுள் உங்கள் முகப்புத்தக பக்கங்களில் கைபேசி தொடர்பான விளம்பரங்கள் தோன்றும். இது ஒன்றும் தற் செயலானது அல்ல. தற்செயலானது என நீங்கள் கருதினால் முகப்புத்தகத்தின் முதலாளி "Mark Zuckerberg" என்பவர் தான் வாட்ஸ்அப் இன் முதலாளியும் கூட.

இப்படியான தனிப்பட்ட உரையாடல்களில் இருந்து தகவல் எடுப்பது ஒரு புறம் என்றால் நம்மை பற்றி எமது தகவல்களின் மதிப்பு தெரியாமல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாமே இலவசமாக வழங்கி வருகின்றோம். எந்த இடங்களில் எல்லாம் எமது E-Mail முகவரி, தொலைபேசி இலக்கம் என்பவற்றை கொடுக்கிறோமோ அங்கெல்லாம் நம்மை அறியாமலே நம்மை பற்றி அறிய வழி செய்து கொடுக்கின்றோம்.

நாம் சிறப்பு அங்காடிகளில் பொருட்களை கொள்வனவு செய்ய எமது ATM அட்டைகளை பயன்படுத்தும் போது எமக்கு எந்த பொருள் அதிகம் விருப்பம், எவற்றை வாங்குகின்றோம் என்ற தகவலை நாம் வழங்குகின்றோம். நாம் Googleஇல் ஒரு சில எழுத்துக்களை தட்டச்சு செய்தவுடன் நாம் எதிர்பார்க்கும் பல சொற்கள் அங்கு வந்ததை கண்டு பெருமகிழ்வடைந்து இருப்போம். எமக்கு நேரம் மிச்சம் என எண்ணி சென்று விடுவீர்கள்.

ஆம்! ஒரு கணமேனும் எமக்கு தேவையானது Googleக்கு எப்படி தெரியும் என எண்ணியுள்ளீர்களா? அப்படி எண்ணியிருந்தால் இந்த மகிழ்ச்சி இருந்திருக்காது. எம்முடனே எம்மை வேவு பார்க்கும் கருவிதான் எமது கைப்பேசி. இதன் மூலம் நாம் எங்கு இருக்கின்றோம். எவ்வளவு நேரம் இருக்கின்றோம். என்ற தகவல் தெரிந்து விடும். இதனை நாம் பல திரைப்படம் மூலமாக கண்டிருப்போம். நாம் பயன்படுத்தும் Apps மூலம் எம்மை பற்றி எவ்வளவு தகவல்கள் வெளியேறிக் கொண்டுள்ளன. ஏன் எமக்கே தெரியாமல் "I agree" என்ற சொல்லை தெரிவு செய்து தரவிறக்கம் செய்து எம்மை பற்றிய தகவல்களை அறிய வழி செய்து கொடுத்துள்ளோம். உதாரணமாக நாம் TAXI அழைக்கும் apps ஐ எடுத்துக் கொண்டால் நாம் எந்த நேரம் எங்கு செல்வோம் எவ்வளவு நேரம் செல்வோம் என்ற தகவலை பெற்று விடுவார்கள். இதன் மூலம் இந்த நேரம் மட்டும் TAXI கட்டணத்தை உயர்த்த முடியும். இதனால் நாம் சலிப்படைய இந்த தகவலை கார் உற்பத்தி கம்பனி பெறும். இதனை கச்சிதமாக பயன்படுத்தி அந்த கம்பனி எமது முகப்புத்தக பக்கத்தில் தமது கார்களை விளம்பரம் செய்து எம்மை வாங்க வைத்து விடும். இப்படி எமது தகவல்களை பல நிறுவனங்கள் திரட்டிக் கொண்டுள்ளன. இதனை 2011ம் ஆண்டின் பிரபல ஆங்கில பத்திரிகையான "Forbes" பத்திரிகை ஒரு கட்டுரை கூறி இருந்தது. இப்படி எம்மை வைத்து தனியார் நிறுவனங்களும் கம்பனிகளும் பிக்பாஸ் நிகழ்வை நடாத்தி வருகின்றன. எமது தகவல்களை இப்படி நிறுவனங்கள் திருட இதனை "Hacker" திருடுவது பேராபத்தில் போய் முடிகின்றது. கடந்த டிசம்பர் 2016ல் "Yahoo" நிறுவனம் ஒருகோடிப் பயனாளர்களின் கணக்கு பற்றிய விபரம் திருடப்பட்டதாக கூறி இணைய உலகையே ஒரு தடவை உலுக்கி போட்டது. இத் தகவலைக் கொண்டு பலரது வங்கிக் கணக்குகளில் இருந்து பணம் களவாடப்பட்டதும் நிகழ்ந்தேறியது.

சமீபத்தில் "RANSOMWARE" என்ற வைரஸ் மூலம் பல முண்ணனி நிறுவனங்கள் முடக்கப்பட்டதும் குறிப்பிடத்தக்கது. இப்படியான சம்பவங்களுக்கு மத்தியில் உலக நாடுகள் என்ன செய்கின்ற என்ற கேள்வி உங்கள் மனங்களில் தோன்றும். ஆம்! இவ்வாறு தனியார் கம்பனி நிறுவனங்கள் திருடும் தகவல்களை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உலக நாடுகள் கேட்டு கெஞ்சிக் கொண்டு தத்தம் பங்கிற்கு திருடிக்கொண்டும் இருக்கின்றன. இவ்வாறு ஐக்கிய அமெரிக்கா திருடிய தகவல்களை அம்பலப் படுத்தியதால் தான் "Edward Noton" விரட்டி விரட்டி வேட்டையாடப்பட்டுக் கொண்டுள்ளான்.

இவர் அமெரிக்காவின் வடகரோலினாவின் எலிசபெத் நகரத்தில் *1983* யூன் *21*ல் பிறந்தார். பள்ளிப்படிப்பை முடிக்கவில்லை என்ற போதும் கணனி படிப்பில் ஆர்வமுள்ளவராக காணப்பட்டார். *2003*ம் ஆண்டு அமெரிக்க அரசு, ஈரான் அதிபர் "Saddan Hussein" இற்கு கட்டம் கட்டியிருந்த வேளை தேசப்பணியாற்றும் கனவுகளுடன் அமெரிக்க சிறப்பு இராணுவப் படையின் பயிற்சி திட்டத்தில் இணைந்தார். Nodon ஆனால் அங்கு அமெரிக்க அரசு ஜனநாயகத்தை நிலைநாட்ட செல்லவில்லை என்பதை வெகு விரைவில் அறிந்து கொண்டார். அங்கிருந்த பெரிய அதிகாரிகள் மக்களைப் பாதுகாக்காது துன்புறுத்தி வந்ததாக பிற்காலங்களில் அவர் அளித்த பேட்டிகள் மூலம் தெரியவந்தது. இவ்வாறிருக்க இக்காலப்பகுதியில் ஒரு விபத்தின் மூலம் அவரது இரு கால்களும் முறிவடைந்தன. இதனால் அவர் இராணுவத்தில் இருந்து விலகினார். இதன்போது மேரிலான் பல்கலைக்கழத்தில் இயங்கி வந்த தேசிய பாதுகாப்பு ஆணையகத்தின் இரகசியப் பிரிவு ஒன்றில் பாதுகாவலராக வேலை ஒன்று கிடைத்தது. அங்கிருந்து CIA இன் தகவல் தொடர்பு பாதுகாப்பு சேவையில் வேலை செய்ய ஜெனீவா அனுப்பப்பட்டார். அங்கிருந்து சுவிஸ் வங்கிகளின் கணக்கு விபரம் கணனி உதவியுடன் பல்வேறு உரையாடல்களை சேகரித்து அமெரிக்க அரசிற்கு வழங்கி வந்தார். இதனால்தான் தேச சேவை செய்வதாக பெருமிதம் கொண்டார். ஆனால் மெல்ல மெல்ல தான் சேகரித்த தகவல்கள் அமெரிக்க மக்களின் உரையாடல், மின்னஞ்சல் என அறிந்து அதிர்ச்சியடைந்தார். அமெரிக்கா மட்டுமல்ல லண்டன், சீனா, இந்தியா, இலங்கை போன்ற நாடுகளையும் அமெரிக்க அரசு வேவுபார்ப்பதை அறிந்து கொண்டார்.

அப்போதைய அமெரிக்க அதிபரான "George Bush" மீது கோபம் கொண்ட இவர் அதிபர் மாறினால் எல்லாம் மாறுமென எண்ணினார். *2008*ல் அதிபரான "Barack Obama" தெரிவு செய்யப்பட்டது அவருக்கு ஓரளவு நம்பிக்கையை கொடுத்தது. இதனால் இதிலிருந்து விலகிய இவர் ஜப்பானில் உள்ள தேசிய பாதுகாப்பு அலுவலகத்தின் ஓர் ஒப்பந்த ஊழியராக இணைந்து கொண்டார். ஆனால் Obama காலத்தில் இவ்வேவுபார்த்தல் மேலும் அதிகரித்தது. இதற்கான முடிவை தானே கொண்டு வருவதாக ஒரு முடிவிற்கு வந்தார். இதனால் ஹவாயில் உள்ள தேசிய பாதுகாப்பு ஆணையகத்தின் "Booz Allen" ஒப்பந்த நிறுவனத்தின் ஊழியராக வேலையில் இணைந்தார். தான் சேகரித்த தகவல்களை வெளிக்கொண்டு வரலாம் என முடிவிற்கு வந்தார். Noton இதனால் தான் கைது செய்யப்படுவார் எனத் தெரிந்தும் துணிந்து செயற்பட்டார். இதனால் தகவல்களுடன் ஹொங் ஹொங் சென்று தகவல்களை வெளியிட்டார். இதனால் அமெரிக்கவே அதிர்ந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போனது. Obama இவ்வாறு வேவு பார்த்தல் தேசிய பாதுகாப்பிற்கு மிகவும் முக்கியமானது. எனக் கூறினார். இத்தகவல்களின் நம்பகத்தன்மை குறித்து கேள்வியெழ இதை வெளியிட்டது தான் தான் என Notan வெளியே வந்தார். இதனால் இவரை ஒரு தீவிரவாதியாக சித்தரித்தது அமெரிக்க அரசு இதனால் இவர் ஹெங் ஹெங்கிலிருந்து தப்பித்து ரஷ்யா சென்றார். பின் கியூபா, Ecuabor இற்கும் சென்றதாக தகவல்கள் தெரிவித்தன. தற்போது இவர் ரஷ்யாவில் இருப்பதாக கூறப்பட்டாலும் சரியாகத் தெரியவில்லை.

இவ்வாறு வேவு பார்க்கும் வேலையை அமெரிக்க அரசு மட்டும் செய்யவில்லை. ஏனைய எல்லா நாடுகளும் செய்வது தெரிய வந்தது. இவ்வாறு வேவு பார்க்க வழி கோலுவது சமூக வலைத்தளங்களும் தேடல் பொறிகளும் தான். நாம் Face Bookஐ சாதாரணமாக பயன்படுத்தும் வரை பிரச்சினை இல்லை. அரசு தொடர்பான விடயங்களில் நுழைந்தால் நாமும் கண்காணிப்பு பொறியினுள் விழுவோம். இவ்வாறு மட்டுமல்லாமல் CCTV மூலமும் உலக மக்கள் கண்காணிக்கப்பட்டு வருகின்றனர். இதன்படி உலக சனத்தொகையில் 1மூ மட்டுமே கொண்ட பிரித்தானியா உலகில் உள்ள CCTV களில் 20% அங்கே பொருத்தி தனது மக்களைக் கண்காணித்து வருகின்றது. லண்டனில் 51000 CCTVயும் அங்கே சராசரியாக ஒரு மனிதன் CCTVயில் 300 தடவை இடம்பெறுகிறார் என்கிறது ஒரு புள்ளி விபரம்.

இவ்வாறு நீங்கள் எதிர்பாராமல் பார்க்கும், பழகும், பார்க்காமலே நட்பில் இணைந்துள்ள உங்களை நேரடியாக அல்லது மறைமுகமாக உங்களை கட்டுப்படுத்தும் ஒவ்வொருவனும் பிக்பாஸ் தான்.

**ஆக்கம்**
**வ.பிரவிந்தன்**
**2017 வர்த்தகம்**

**உலகிலேயே மிக**
**உயரமான அணை**
**கிராண்ட் டிக்கென்சி,**
**ஸ்விட்சாலாந்து**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# திணைத்துணை நன்றி

சந்துரு மயக்கத்தில் இருந்து தெளிந்தான். அவனின் அருகில் ஒரு பாட்டி தண்ணீர்ச் செம்புடன் நின்றுகொண்டிருந்தார். சந்துரு தன் சுயநினைவை மறந்து நடப்பதை அறியாது திகைத்து நின்றான். பாட்டி சந்துருவின் தோளினை தழுவியவாறு தனது வீட்டிற்கு அழைத்து சென்றார். உள்ளே சென்ற சந்துரு பசியினாலும் தாகத்தினாலும் அவதியுற்றான் பாட்டியிடம் சந்துரு குடிப்பதற்கு சிறிதளவு தண்ணீர் தரும்படி கேட்டான். பாட்டி தன் பேத்தியான கோமதியிடம் சிறிதளவு நீர் கொண்டுவரும் படி கூறினாள். பசியால் வாடிய சத்துருவுக்கு உள்ளே இருந்த கோமதி ஒரு குவளை நிறைய பால் கொண்டுவந்தாள். பாலினை அருந்திய சந்துரு பசியிலிருந்தும் தாகத்திலிருந்தும் விடுபட்டான். அருகில் நின்ற பாட்டி சந்துருவின் தலையை தடவியவாறு அவனைப்பற்றி வினாவத்தொடங்கினாள்.

பாட்டியிடம் சந்துரு தன்னைப்பற்றி கூற ஆரம்பித்தான். "நான் ஒரு குக்கிராமத்தில் வறிய குடும்பத்தை சேர்ந்தவன் எனக்கென்று வாழ்ந்தது என் தாயார் மட்டுமே தான் வேரு யாரும் எனக்கு உறவுகள் என்று இல்லை நான் அங்கிருந்த ஒரு சிறிய பாடசாலையில் தரம் 11 இல் கல்வி கற்றேன். வறிய நிலையிலும் எனது தாயார் மிகவும் கடினப்பட்டு வளர்த்தார். எனது தாயாரின் ஆசை கல்வித் துறையில் சிறந்து விளங்க வேண்டும் என்பதாகும். இவ்வாறு சந்தோசமாக இருந்த என் வாழ்வில் எதிர்பாராத சோகம் ஏற்பட்டது. திடீரென ஏற்பட்ட ஒரு விபத்தில் என் தாயை பறிகொடுத்து விட்டேன். துணை யாருமின்றி தனிமரமாக அவ் ஊரில் ஒரு சிற்றுண்டிசாலையில் வேலை பார்த்து அதன் மூலம் கிடைக்கும் வருமானத்தில் எனது பள்ளிப்படிப்பிற்கு உபயேகித்தேன். தரம் 11 பரீட்சையில் அதிக மதிப்பெண்கள் எடுத்து சித்தியடைந்தேன். மேலதிக படிப்பை தொடர வெளியூர் வந்தேன். அதிக நேரம் நடந்து பயணித்ததால் எனது கால்கள் வலித்தது பசியும் தாகமும் என்னை வாட்டியது. ஆதனால் நான் மயங்கி விழுந்து விட்டேன் என்னை மயக்கத்திலிருந்து தெளிவித்த உங்களுக்கு நன்றி. ஏன் தாயாரை இழந்தது தான் என்னால் தாங்க முடியாத துயரமாகும்." சந்துருவின் கதையைக் கேட்ட பாட்டியும் கோமதியும் கண்ணீரில் மூழ்கினார்கள்.

பாட்டிக்கு சந்துருவின் கதையின் மூலம் தனது குடும்பத்தில் நடந்த துயரச் சம்பவம் ஞாபகம் வந்தது. தனது கதையை சந்துருவிட்ம கூறினார். "அண்மைக்காலத்தில் வன்னியில் இடம்பெற்ற போரில் மகனையும் மருமகளையும் பறிகொடுத்து விட்டேன். என்னை ஆறுதல் செய்ய அவர்கள் விட்டு சென்றது எனது பேத்தியான கோமதி தான்." சந்துருவும் பாட்டியின் கதையை கேட்டு பரிதாபப்பட்டான். பாட்டி சந்துருவிடம் தம்முடனேயே வீட்டில் தங்கும் படி கூறினார் ஆனால் சந்துரு மறுத்துவிட்டான். தான் தனது மிகுதி படிப்பை மேற்கொள்ள வேண்டும் எனவும் தாயாரின் ஆசையை பூர்த்தி செய்ய வேண்டும் எனவும் கூறினான். முற்றும் இவ் ஊரில் உள்ள உயர்தரப் பாடசாலையில் தன்னை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சேர்து விடும் படி பாட்டியிடம் உரைத்தான். தான் விடுதியில் நின்று படிப்பை மேற்கொள்வதாக கூறினான் பாட்டியும் அதற்கு சம்மதித்தார். அதன்படி சந்துருவை பள்ளியில் சேர்த்து விட்டு பாட்டி வீடு திரும்பினார்.

வருடங்கள் பல உருண்டோடின சந்துரு தனது படிப்பை முடித்து சிறந்த அறுவைச்சிகிச்சை மருத்துவராக வெளிவந்தான். அவனுக்கு பாட்டியின் ஞாபகம் வரப் பாட்டியின் ஊருக்கு சென்றான். அங்கு பாட்டியின் வீட்டை அடைந்த அவன் அங்கு பாட்டியும் கோமதியும் இல்லாததை அறிந்தான். அங்குள்ளவரிடம் வினாவ, தொழில் தேடி வேறு ஊருக்கு சென்றுவிட்டதாக கூறினார்கள். கவலையுடன் வீடு திரும்பினான் சந்துரு அவன் தனியார் வைத்தியசாலையில் பணிபுரிய வழமை போல வைத்தியசாலைக்கு சென்றான். ஆவசர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சைக்காக ஒரு நபர் அனுமதிக்கப்பட்டுள்ளதாக தாதி கூறினாள். தனியார் மருத்துவமனை என்பதால் பணம் செலுத்தியே சிகிச்சை பெற வேண்டும். ஆனால் அந்நபர் சிகிச்சை கட்டணத்தைச் செலுத்தவில்லை என்பதையும் தாதி கூறினாள். சந்துரு பணம் செலுத்தாமைக்கான காரணத்தை அறிய அனுமதிக்கப்பட்டவரின் உறவினர்களிடம் விரைந்து சென்றான் தூரத்தில் ஒரு இளம் பெண் நிற்பதை கண்டான். அப் பெண்ணை அவனுக்கு எங்கோ கண்டது போல இருந்தது. சந்துரு ஓடி சென்று சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டவரை பார்த்தான். அவர் வேறுயாரும் அல்ல முன்னர் அவனுக்கு உதவிய பாட்டியே தான். சந்துருவின் கண்களில் இருந்து கண்ணீர் ஊற்றெடுத்தது. அவ் உறவினரையும் அவன் பார்த்தான்.

அவர் பாட்டியின் பேத்தி கோமதி ஆவாள் ஏதும் பேசாது பாட்டிக்கு உடனே சிகிச்சை மேற்கொண்டான். சிகிச்சை பலனளித்து பாட்டி குணமடைந்தார். அவன் வளர்ந்து பெரியவனாக இருந்ததால் பாட்டியாலும் கோமதியாலும் அடையாளம் காண இயலவில்லை. கோமதிக்கு பாட்டி குணமடைந்ததில் மிகுந்த சந்தோசம் ஆனாலும் கோமதிக்கு மனதிற்குள் பயமாகவே இருந்தது. தன்னிடம் சிகிச்சைக்கேற்ப பணம் இல்லை சிறிதளவு பணமே இருந்தது. என்பதே அவளது பயமாகும். பயத்துடன் காசு கட்டும் இடத்திற்கு சென்றாள். அங்கிருக்கும் கணக்காளரிடம் இருந்த பணத்தை கொடுத்து விட்டு மிகுதிப் பணத்தை பிறகு தருவதாக கூறினாள். அவள் ஏதும் பேசாது காசு கட்டியதற்கான பற்றுச்சீட்டை கொடுத்தாள். அதனை உடனே வாங்கி விரித்து பார்த்தாள் கோமதி சிகிச்சைக்கான பணம் செலுத்தப்பட்டு இருப்பதைப் பார்த்து திகைத்தாள். அச்சீட்டில் ஏதோ எழுதப்பட்டிருப்பதை பார்த்தாள். அதில் "ஒரு குவளை பாலுக்காக பணம் முழுவதும் செலுத்தப்பட்டது என எழுதப்பட்டிருந்தது. அவளுக்கு மகிழ்ச்சியில் கண்ணீர் ஊற்றெடுத்தது. அவ்விடத்திற்கு வந்த சந்துரு தான் யார் என்பதை கூறினான். கோமதியை அனைத்தவாறு பாட்டியை பார்க்க கூட்டிச்சென்றான்.

**ஆக்கம்**
**ந.சியானுகா**
**௨01௯ கலை**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1956 - 2016

# ஆசிரியர் ஆக்கங்கள்

ஸ்ரீ இராமநாதபுரம் மகாவித்தியாலயம்

1956

RAMANATHAPURAM

கற்றுணர்ந்து ஒழுகு

## வைரவிழா மலர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# புலமை I.Q


தரம் - 5 புலமைப் பரிசில் தோற்றும் மாணவர்களுக்கு கணிதத் திறன் முக்கிய பங்கு வகிக்கிறது. கணித பாடத்திற்கே கூடிய புள்ளிகள் வழங்கப்பட்டுள்ளது. பகுதி I வினாத்தாளுக்கு மாணவர்கள் சில உத்திகளைக் கையாளுவதன் மூலம் இலகுவாக விடைகளை தெரிவு செய்ய முடியும். அவ்வாறான வழிமுறைகள் ஒரு சில. இங்கே தரப்பட்டுள்ளன.

**1. முக்கோணிகளின் எண்ணிக்கை**


முக்கோணியில் வெளித் தோற்றத்திற்கு எத்தனை முக்கோணம் காணப்படுகிறதே அதன் முக்கோண எண்ணைக் கணிப்பதன் மூலம் பெறப்படும்.



$\frac{2x3}{2} = 3$



$\frac{3x4}{2} = 6$




$\frac{4x5}{2} = 10$

**2. சதுரங்களின் எண்ணிக்கை காணுதல்**


நிரல்களின் எண்ணிக்கையும் நிரைகளின் எண்ணிக்கையும் சமனாக இருக்கும் போது எத்தனை நிரை அல்லது நிரல் இருக்கிறதே அதுவரை உள்ள சதுர எண்களை கூட்டுவதன் மூலம் பெறப்படும்.



1x1 = 1
2x2 = 4
5



1x1 = 1
2x2 = 4
3x3 = 9
14




1x1 = 1
2x2 = 4
3x3 = 9
4x4 = 16
14



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**3. செங்கற்களின் எண்ணிக்கை காணுதல்**

உயரம், நீளம், அகலம் என்பவற்றின் எண்ணிக்கையை பெருக்குவதன் மூலம் பெறப்படும்.



உயரம் X நீளம் X அகலம்

2 X 3 X 2

=12

*4. சாந்திக்கு கிடைக்கும் தொகையின் மும்மடங்கு கமலா விற்கும் நான்கு மடங்கு விமலாவிற்கும் கிடைக்கக் கூடியவாறு 96 மாம்பழங்கள் பகிரப்பட்டது. எனின், விமலாவிற்கு கிடைக்கும் மாழ்பழங்கள் எத்தனை?*

| | | | | |
|---|---|---|---|---|
| சாந்திக்கு | - | 1 பங்கு என கொண்டால் | | |
| கமலாவிற்கு | - | 3 பங்கு | | |
| விமலா | - | 4 பங்கு | | |
| மொத்த பங்கு | = | 8 பங்கு | | |
| 8 பங்கு | = | 96 | | |
| 1 பங்கு | = | 96/8 | = | 12 |
| ஆகவே 4 பங்கு | = | 12X4 | | |
| | = | 48 மாம்பழங்கள் | | |

*5. முக்கோண வடிவான காணி ஒன்றின் ஒரு மூலையில் நின்று பார்க்கும் போது தூண்கள் காணப்படுகின்றன. எனின் அக்காணியைச் சுற்றி நடப்பட்ட தூண்களின் எண்ணிக்கை யாது?*

| | | |
|---|---|---|
| ஒரு பக்கம் தென்படுவது | = | 12 |
| முக்கோணத்திற்கு மூன்று பக்கம் | = | 3 |
| மொத்தமாகத் தென்படுவது | = | 12x3 |
| | = | 36 |
| மூன்று மூலையிலும் உள்ளது | = | 36-3 |
| நடப்பட்ட தூண்கள் | = | 33 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**6.** ஒரு சதுர வடிவக் காணியை ஒரு பக்திலிருந்து அவதானிக்கும் போது **20** கம்பங்கள் தென்படுகின்றன. எனின் அச் சதுரத்தைச் சுற்றி வர நடப்பட்டுள்ள மொத்த கம்பங்களின் எண்ணிக்கை யாது?

சதுரத்திற்கு நான்கு பக்கங்கள் என்பதாகும்.
**20** ஐ **4**ல் பெருக்கி **4** ஐக் கழிக்க வேண்டும்

| | | |
|---|---|---|
| 20 x 4 | = | 80 - 4 |
| கம்பங்கள் | = | 76 |

**7.** ஒரு வகுப்பில் உள்ள **30** மாணவர்கள் ஒவ்வொருவரும் தங்களுக்கிடையே காலை வணக்கம் தெரிவித்தனர். எனின் அவர்களுக்கிடையே பரிமாற்றப்பட்ட காலை வணக்கங்கள் எத்தனை?

$29 + 28 + 27 + 26 \ldots\ldots + 01 = 435$

அல்லது

$30 \times 29$
$= 435$

**8.** ஒரு குழுவில் உள்ள **10** பேர் தங்களுக்கிடையே கை குலுக்கல் மேற்கொண்டனர். எனின் அவர்களுக்கிடையே எத்தனை கைகுலுக்கல்கள் இடம்பெறும்.

$9 + 8 + 7 + 6 + 5 + 4 + 3 + 2 + 1 = 45$

அல்லது

$= 10 \times 9 \quad 2$
$= 45$

**9.** விடுதி ஒன்றில் உள்ள **20** மாணவர்கள் தங்களது பிறந்த தினத்திற்கு ஒவ்வொருவரும் வாழ்த்துமடல் அனுப்புகின்றனர். ஒரு வருடத்தில் அவர்களுக்கிடையே அனுப்பப்படும் வாழ்த்து மடல்கள் எத்தனை?

| | | |
|---|---|---|
| ஒருவர் அனுப்பும் வாழ்த்து மடல்கள் | = | 19 |
| 20 பேரும் அனுப்பும் வாழ்த்து மடல்கள் | = | 19 X 20 |
| | = | 380 |

**10.** பெட்டி ஒன்றில் **4** சிவப்புப் பந்துகளும் **6** கறுப்புப் பந்துகளும் உள்ளன பெட்டியில் இருந்து சிவப்பு பந்து ஒன்று எடுப்பதற்காக கூடியது எத்தனை பந்துகள் எடுக்க வேண்டும்.

7 பந்துகள்

முதல் 6 பந்துகளும் கறுப்பு பந்து எடுத்தால் 7 வது பந்து தான் சிவப்பு எடுப்பதற்கு வாய்ப்பு இருக்கலாம்.

திருமதி.பி.கிருபாலன்
(பயிற்றப்பட்ட ஆரம்பக்கல்வி, கல்விமாணி).



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மாணவர்களின் கல்வி வளர்ச்சியில் பெற்றோரின் பங்கு

"எந்தக் குழந்தையும் நல்ல குழந்தைதான் மண்ணில் பிறக்கையிலே அவர் நல்லவராவதும் தீயவராவதும் அன்னை வளர்ப்பினிலே" என்ற அழகிய பாடல் வரிகள் குழந்தையின் வளர்ச்சியில் பெற்றோரின் பங்களிப்பு எந்தளவிற்கு அவசியம் என்பதை வெளிக்காட்டுகின்றது. ஒரு குழந்தை தாயின் வயிற்றினில் கருவாகி உருவாகி கடவுளின் உன்னத படைப்பாக புவிதனில் பிறந்து பெற்றோரின் அரவணைப்பில் வளர்கின்றது. வளரும் பருவத்தில் ஊட்டும் அமுதத்தோடு பல நல்விடயங்களையும் ஊட்டி வளர்க்கின்ற பெற்றோரே குழந்தையின் முதல் ஆசான். குழந்தை தான் வாழும் இல்லமே அதன் முதல் கல்வி நிறுவனம் ஆகும். குழந்தை தனது தவழும் பருவத்தில் இருந்து எந்தவொரு ஆய்வையும் அது மனிதர்களோடு கொண்ட உறவாகவோ அல்லது தன்னைச் சுற்றியுள்ள சூழலோடும் இயற்கையோடும் கொண்ட உறவாக இருந்தாலும் பெற்றோருடன் இணைந்தே கற்றுக் கொள்கிறது.

குடும்பத்தில் பெற்றோர்கள் தமக்கிடையே கொண்டிருக்கின்ற உறவு பிள்ளையின் வளர்ச்சியையே பாதிக்கின்றது. பெற்றோர்களிடையே ஏற்படும் விரிசல்களும் வேண்டாத பழக்கங்களும் வன்முறைகளும் குழந்தையின் உள்ளத்தில் ஆழப்பதிந்து அழியாத வடுக்களாக உடல், உள தாக்கங்களையும் உருவாக்கி விடுகின்றது. இந்நிலையில் ஆரோக்கியமான வாழ்வும், ஆரோக்கியமான உறவும் பிள்ளையின் கல்வி வளர்ச்சிக்கு அவசியம் என்பதை பெற்றோர் உணர்ந்து செயற்பட வேண்டும். பெற்றோரின் ஒவ்வொரு செயற்பாடும் பிள்ளைகளிடத்தே கல்வியில் நாட்டத்தை ஏற்படுத்துவதாக அமைய வேண்டும்.

வீட்டோடு வாழ்ந்த பிள்ளைக்கு பாடசாலை பழக்கப்படாத ஒரு இடமாக இருக்கலாம். அதிக எண்ணிக்கையிலான புதிய மனிதர்களையும் சகபாடிகளையும் பார்க்கின்ற போது பய உணர்வை ஏற்படுத்துவதாக இருக்கலாம். இச்சந்தர்ப்பத்தில் பெற்றோர் தம்பிள்ளைகளைத் தைரியப்படுத்தி அவர்களுடனான தம் உடனிருப்பை உணர்த்தி வலுவூட்டி வழி நடத்துவதும் பெற்றோரின் கடமையாகும்.

பெற்றோர்களில் ஒரு சிலர் கல்வியின் அவசியத்தை உணர்ந்து பிள்ளைகளுக்கு கல்வியறிவூட்ட தொடர்ந்தும் செயற்படுகின்றனர். பாடசாலை கல்விக்கு புறம்பாக பிரத்தியேக வகுப்புகள் என பிள்ளைகளின் அறிவிற்காய் ஓயாது உழைக்கும் பெற்றோரையும் பார்க்கின்றோம்.

பாடசாலையிலே கற்கின்ற எல்லா மாணவரும் உயர்வான புள்ளிகளைப் பெறுவதில்லை. பல மாணவர்கள் கல்வியிலே ஆர்வம் அற்றவர்களாக புள்ளிகளை குறைவாக பெறுபவர்களாகவும் காணப்படுகின்றனர். கெட்டித்தனமாக கற்கும் மாணவர்கள் கல்வியிலே ஆர்வமாக இருப்பதோடு கல்விசார் ஒத்துழைப்பையும் ஆளுமையிலும் விருத்தியடைகின்றனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறைவாகத் துலங்கும் மாணவர்கள் பொதுவாக பெற்றோருடைய கண்காணிப்பில் இருந்து விலகியவர்களாகவே காணப்படுகின்றனர். பிள்ளை குழந்தையாய் இருக்கும் போது கூடவே இருந்து பெற்றோர் பிள்ளை வளர வளர அதிலிருந்து சற்று விலகுகின்றனர் இன்றைய சூழல் வாழ்க்கை முறை கணவன் மனைவி இருவரும் உழைக்க வேண்டிய நிலையை உருவாக்கி இருக்கின்றது. காலைமுதல் மாலை வரை தொழிலிடங்களில் பணியாற்ற வேண்டிய நிலை வீட்டுக் கடமைகளிலிருந்தும் பிள்ளைகளை வழிநடத்துவதிலிருந்தும் விலகல்களை ஏற்படுத்துகின்றது. அதுமட்டுமல்ல பெற்றோர்களினுடைய அறிவு மட்டம் இன்றைய சவால்களுக்கு முகம் கொடுக்க முடியாத நிலை கல்விச் செயற்பாடுகளில் உருவாகிவரும் மாற்றங்கள் போன்றனவும் பெற்றோரிடத்தில் கல்வி சார்பான நடவடிக்கைகளில் ஈடுபாட்டை குறைப்பதாக அமைகிறது.

ஒரு சில பெற்றோர் பிள்ளைகளை ஊக்குவித்தல் என்கின்ற அடிப்படையில் அவர்கள் விரும்புவதையெல்லாம் வாங்கிக் கொடுக்கிறார்கள். பிள்ளைகள் அதை சாதகமாகப் பயன்படுத்திக் கொண்டு அவற்றோடு தம் காலத்தை விரயமாக்குவதால் கல்வியில் பின்னடைகின்றனர். பொதுவாக தரம் 05 வரை பிள்ளைகளோடு கூடவே பெற்றோரும் செயற்படுவர் பிள்ளைகளும் பெற்றோருக்கிணங்கி நடப்பவர்களாக காணப்படுவர். அது பிள்ளைகளுக்கு சாதகமான சூழலாக இருக்கும். இருப்பினும் இடைநிலைப் பிரிவிற்குள் பிள்ளைகள் நுழையும் போது அப்பாடவிதானத்துடன் நேரடியாக ஈடுபட முடியாத நிலையும் பெற்றோர் தம் கண்காணிப்பை குறைத்துக் கொள்கின்றனர். அத்துடன் பிள்ளைகளும் தங்கள் விருப்பத்திற்கேற்ற வகையில் செயற்பட முனைவர். வகுப்பு படி நிலைகள் உயர உயர பிள்ளைகள் தாமாகவே கற்க வேண்டும் என்ற எதிர்பார்ப்பு பெற்றோரிடத்தில் எழுகின்றது. இந்நிலையும் பிள்ளைகளின் கல்வியில் பாதிப்பை ஏற்படுத்துகின்றது.

பெற்றோருடைய பொருளாதார நிலையும் மாணவர்களின் கல்விச் செயற்பாட்டில் பாதிப்பை ஏற்படுத்தும். வறுமை நிலை பிள்ளைகளுக்கு போசாக்கான உணவை வழங்க முடியாத நிலையை ஏற்படுத்துவதோடு கல்விக்கான மேலதிக செலவைச் செய்வதற்கும் கற்றல் உபகரணங்களைப் பெற்றுக் கொள்வதற்கும் இது தடையாக அமையும். சில பெற்றோர் தம் பிள்ளைகளின் கல்வி வளர்ச்சி பற்றி அக்கறை அற்றவர்களாக காணப்படுவர். சில பெற்றோர் அதீத நம்பிக்கை கொண்டவர்களாக நடத்தை கோலங்களை சரியாக மதிப்பிடாமையினால் பிள்ளைகளின் கல்வி பாதிப்படைய காரணமாகின்றார்கள்.

பாடசாலைக் கல்வியைப் பொறுத்த வரை பெற்றோருக்கும் ஆசிரியருக்குமான தொடர்பு மிகவும் அவசியமானதாகும். குறைவான ஆற்றுகையுடைய மாணவர்களைப் பொறுத்தவரை அவர்களுடைய பெற்றோர் ஆசிரியர் தொடர்பு குறைவானதாகவே காணப்படுகின்றது. சில பெற்றோர் தம் பிள்ளைகள் குறைவாகப் புள்ளிகள் பெற்றிருந்தால் வெட்க உணர்வில் பாடசாலைக்கு வருவதைத் தவிர்த்துக் கொள்கின்றனர். இவர்கள் பாடசாலையில் நடைபெறும் கூட்டங்களுக்கோ சந்திப்புக்களுக்கோ வருகை தராமல் இருப்பதனால் பிள்ளைகளிடம் எதிர்பார்க்கப்படும் விடயங்களை அறிந்து கொள்ளாமல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செயற்படுவதும் பிள்ளைகளின் கல்வியைப் பாதிக்கின்றது. இவ்வாறு பெற்றோரின் பங்களிப்பின்மை மாணவர்களிடத்தில் தாழ்வு மனப்பான்மையையும் உருவாக்கும். இது மாணவர்களிடத்தில் பாடசாலை வரவைக் குறைப்பது மட்டுமன்றி பொருத்தமற்ற நண்பர்களுடனான சகவாசம், களவு, பொய் போன்ற செயற்பாடுகளை செய்ய தூண்டிவிடுகின்றது.

கல்விச் செயற்பாடுகளில் பெற்றோர் தங்களது பங்களிப்பை அதிகரிக்க வேண்டும். அதிலும் விசேடமாக குறைவான திறமையை வெளிக்காட்டுகின்ற பிள்ளைகளது பெற்றோர் சிறப்பான முறையில் தங்களது பிள்ளைகளை வழிகாட்ட வேண்டும். ஆசிரியர்களோடு அடிக்கடி தொடர்பு கொண்டு பிள்ளைகள் பற்றிய குறைநிறைகளை விளங்கிக் கொண்டு அதற்கேற்ற வகையில் பெற்றோர் தம் பிள்ளைகளோடு அணுகிக் கொள்வது அது மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்கு பெரும் பங்காற்றுவதாக அமையும். இன்னும் சிறப்பாக பாடசாலையில் மேற்கொள்ளப்படும் பிரத்தியேக செயற்பாடுகளில் மாணவர்கள் ஒத்துழைப்பதற்கு பெற்றோரே அவர்களை ஊக்கப்படுத்த வேண்டும். பெற்றோர் தம்மிடம் காணக்கூடிய பாடசாலை சமூகம் பற்றியதவறான எண்ணங்கள், நம்பிக்கைகள் போன்றவற்றில் இருந்து விலகி பாடசாலை சமூகத்தைப் பற்றிய உயர்வான சிந்தனையும் கொண்டு விளங்குவது சாலச் சிறந்ததாகும்.

இவ்வாறாக பெற்றோருடைய பங்களிப்பை பாடசாலையிலும் வீட்டிலும் அதிகரிக்கின்ற பொழுது குறைவாக உள்ள மாணவரிடத்தில் அறிவை விருத்தி செய்யக் கூடிய மாற்றங்களை ஏற்படுத்தலாம். ஆசிரியர்களுடைய செயற்பாடுகளோடு பெற்றோரின் செயற்பாடும் ஒருங்கிணையும் போது கற்றல், கற்பித்தல் செயன்முறை வினைத்திறன் மிக்கதாகவும் விளைதிறன் மிக்கதாகவும் அமையும்.

*அருட்சகோதரி.ஞு.மரியகொறந்றி சியோன்*
*ஆசிரியர்*
*கிளி/இராமநாதபுரம் ம.வி*

**உலகிலேயே மிக உயரமான ஏரி எது?**
**லெகோ டிட்டிக்காசா (ஆழம் 1, 214 அடி)**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# சாதனையாளர்கள் விருது



சி.சிவகௌரி
சமூகக் கல்வி போட்டி
2ம் இடம் (2003)
வடக்கு கிழக்கு மாகாணம்



சி.ஸ்ரீமிதுலா
உயரம் பாய்தல்
1ம் இடம் (2005)
வடக்கு கிழக்கு மாகாணம்



ந.கதீஷன்
5ம்தர புலமைப் பரிசில்
2ம் இடம் (2005)
மாவட்டநிலை



இ.றதீபா
க.பொ.த உ/த (கலை)
3ம் இடம் (2004)
மாவட்டநிலை



த.கீதரோகிணி
க.பொ.த உ/த (கலை)
2ம் இடம் (2006)
மாவட்டநிலை



த.கார்த்திகா
க.பொ.த சா/த
10A (2007)



ப.புகிலன்
க.பொ.த உ/த (வர்த்தகம்)
2ம் இடம் (2009)
மாவட்டநிலை



மு.துர்க்காயினி
க.பொ.த உ/த (வர்த்தகம்)
3ம் இடம் (2009)
மாவட்டநிலை



பொ.கயன்
க.பொ.த உ/த (கலை)
2ம் இடம் (2009)
மாவட்டநிலை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சாதனையாளர்கள் விருது



கி.நிசாளினி
க.பொ.த.உ/த (கலை)
3ம் இடம் (2009)
மாவட்ட நிலை



மு.அபிராமி
க.பொ.த.உ/த (வர்த்தகம்)
3ம் இடம் (2010)
மாவட்டநிலை



க.லக்கீரன்
ஈட்டி எறிதல்
2ம் இடம் (2012)
மாகாணம்



தெ.பிரதா
க.பொ.த உ/த (வர்த்தகம்)
1ம் இடம் (2013)
மாவட்டநிலை



க.நிலக்சன்
குண்டு போடுதல்
4ம் இடம் (2014)
மாகாணம்



ரா.அகல்யா
மனைப்பொருளியல்
விஞ்ஞான திறனாய்வு
1ம் இடம் (2016)
மாகாணம்



ர.விதுஷா
மனைப்பொருளியல்
விஞ்ஞான திறனாய்வு
2ம் இடம் (2016)
மாகாணம்



தமிழ்த்தினப்போட்டி
இராவனேசன் கூத்து
3ம் இடம் (2015) மாகாணம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சாதனையாளர்கள் விருது



வி.கபில்தேவ்
சித்திரப்போட்டி
1ம் இடம் (1999)
தேசிய மட்டம்



ஜெ.ஜெயமாருதி
தமிழ்மொழித்தின பேச்சுப்போட்டி
1ம் இடம் (2003)
தேசிய மட்டம்



சி.துவாரகா
சைவபரிபாலன சபை பேச்சுப்போட்டி
1ம் இடம் (2004)
அகில இலங்கை



செ.தாரணி
சைவபரிபாலன சபை பேச்சுப்போட்டி
1ம் இடம் (2005)
அகில இலங்கை



கெ.பிரசாந்
ஜனாதிபதி சாரணர் விருது
2006



ஜெ.ஜெயமாருதி
தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை
2ம் இடம் (2003) மாவட்டம்
க.பொ.த சா/த (2009) - 9A

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# கடந்த காலங்களில் பணியாற்றிய அதிபர்கள்



திரு.K.சிவசாமி
1995 - 1997



திரு.K.இரத்தினகுமார்
1997 - 2004
2005 - 2007



திரு.R.இராஜமகேந்திரன்
2004 - 2005



திரு.K.முருகவேல்
2007 - 2008



திரு.S.முருகானந்தன்
2008 - 2015



திரு.S.நடராசா
2015 - 2017

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடந்த காலங்களில் பணியாற்றிய அதிபர்கள்



திரு.S.கனசுந்தரம்
1956 - 1960
எமது பாடசாலையின் முதலாவது அதிபர்



திரு.T.கோபாலபிள்ளை
1980 - 1982



திரு.J.M.P.ஜெயராசா
1982 - 1986



திரு.S.இராமநாதன்
1986 - 1993



திரு.V.தனிநாயகம்
1994 - 1995

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 20வயது கரம் அணி



## பாண்ட்



## மனைப்பொருளியல், விஞ்ஞான திறனாய்வு போட்டி - மாகாணம் - 2016



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

17வயது எறிபந்தாட்ட அணி



17வயது எறிபந்தாட்ட அணி



20வயது எறிபந்தாட்ட அணி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 20வயது எறிபந்தாட்ட அணி



## சதுரங்க அணி



## 20வயது கரம் அணி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 18வயது உதைபந்தாட்ட அணி



## 16வயது கரப்பந்தாட்ட அணி



## 18வயது கரப்பந்தாட்ட அணி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 16வயது வலைப்பந்தாட்ட அணி



## 18வயது வலைப்பந்தாட்ட அணி



## 20வயது வலைப்பந்தாட்ட அணி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஆரம்பக் கல்வி மாணவர்களிடையே தன்னம்பிக்கையை ஏற்படுத்துவதன் அவசியமும் தேவைப்பாடும்

"எனது மனோ நிலையே அன்றைய நாளின் வானிலையாகும். வளம் பெறுவதிலும், வழி தவறுவதிலும் எனது ஆளுகையே அதீதமாகிறது. எனது செயல்கள் மாணவனுக்கு மகிழ்ச்சி தரலாம், மனச்சோர்வு தரலாம், நோய் தரலாம், நோய் அகற்றலாம், மாணவர் உலகம் வியக்கும் மானிடனாகலாம். அல்லது எதிர் மானிடனாகலாம்."

றொஸ் என்னும் அறிஞரின் அற்புதமன கருத்து இது. எண்ணற்ற கனவுகளுடனும், பல்வேறு சூழ்நிலைகளிலிருந்தும், பிள்ளைகள் பாடசாலை நோக்கி வருகின்றனர். இவர்களின் எண்ணங்களையும், கனவுகளையும் படம் போட்டு நேர்த்தி செய்ய வேண்டிய பாரிய பொறுப்பை ஆசிரியர்கள் ஏற்றுள்ளனர்.

எமது பிரதேசங்களில் ஏற்பட்ட அசாம்பாவிதங்கள் சமூகத்தில் பல்வேறு தாக்கங்களை ஏற்படுத்தியுள்ளது என்றால் மிகையில்லை. அத்தகைய நிலைமைகளால் தான் நாம் இப்படி இருக்கிறோம். என்று தொடர்ந்து கூறிக் கொண்டிருப்பதிலும் எவ்வித பயனுமில்லை. நாம் எமது சமூகத்தை நோக்கி நேர்வழி ஒன்றில் கொண்டு செல்ல வேண்டிய கட்டாய பணியில் நம்மை அறியாமலேயே திணிக்கப்பட்டுள்ளோம் என்பது தான் உண்மை.

அவ்வகையிலே, ஆரம்பக் கல்வி மாணவர்களைப் பொறுத்தவரை பூத்துக் குலுங்கத் தயாரகவுள்ள இளம் மொட்டுக்கள் என்று கூறலாம். இம்மொட்டுக்கள் வாழும் குடும்பச் சூழல், சமூகச் சூழல் எத்தகையது என ஆராய்வோமானால் சொல்லொணாத் துயரங்கள் நம் கண் முன்னே வந்து நிற்கும். எடுத்துக் கட்டாக தாய் தந்தை பிரிவு, தாய் அல்லது தந்தையின் மரணம், தந்தை, தாயின் மறுமணம், மதுபாவனை போன்ற இன்னோரன்ன பிரச்சினைகளால் நேரடியாகவும், மறைமுகமாகவும் தாக்கப்படும் சிறு பிள்ளையின் மனநிலையை மாற்றுவதென்பது முயற்கொம்பு தான். எனினும் "பதறாத காரியம் சிதறாது" என்பதற்கமைய ஆசிரியர்கள் ஒவ்வொருவரும் தம்மிடம் வரும் பிள்ளைகளின் குடும்பப் பின்னணியை நித்தம் அவதானிப்பவராக இருக்க வேண்டிய கட்டாயம் உள்ளது எனலாம்.

பல்வேறு எண்ணப் போராட்டங்களால் குவியப்படுத்தப்பட்டுள்ள இத்தகைய பிள்ளைகளிடம் தன்னம்பிக்கையை வளர்த்தல் ஆசிரியர்களது பாரிய பொறுப்பாகும். ஒரு தனி மனிதன் சுயமாக செயற்படுபவனாக சமூகத்தினால் அடையாளப் படுத்தப்படுபவனாக இருக்க வேண்டுமெனில், அவனது தன்னம்பிக்கை தான் அவனை வழிப்படுத்தும். தன்னம்பிக்கையை ஏற்படுத்தக் கூடிய பருவம் ஆரம்பக் கல்விப் பருவமாகும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இத்தகைய முக்கியத்துவம் வாய்ந்த தன்னம்பிக்கையை ஆரம்பக் கல்வி மாணவர்களிடையே வளர்ப்பதற்கு ஆசிரியர் தன்னம்பிக்கை உள்ளவராக இருத்தல் கட்டயமானதாகும். இத்துடன் பெற்றோரும் பிள்ளைகளை தன்னம்பிக்கை உள்ளவர்களாக வளர்ப்பதற்குரிய ஆலோசனைகளையும், வழிகாட்டல்களையும் வழங்க வேண்டும். பிள்ளை செய்யும் ஒவ்வொரு சிறிய நற்செயலையும் பராட்டி ஊக்குவித்தல் தன்னம்பிக்கையின் முதற்படி நிலை எனலாம். அதே நேரம் பிள்ளையிடம் காணப்படும் மற்றப்பட வேண்டிய நடத்தைகளை இனங்கண்டு அவற்றை மாற்றுவதற்கு சிறந்த உத்திகளைக் கையாளுதல் மூலம், பிள்ளை சுயமாகவே தன்னில் ஏற்படும் நடத்தை மாற்றத்தை உணரச் செய்தல் வேண்டும். என்னால் முடியும் என்ற நிலைக்கு பிள்ளை வருவதற்கு இச் செயல் உதவியாக அமையும்.

மேலும், வீட்டில் கற்றலுக்கு உதவுபவர்கள் இல்லாத பிள்ளைகளுக்கு "ஆசிரியர் எப்போதும் தனக்கு உதவுவார்". என்ற நம்பிக்கையை ஏற்படுத்துவது அவசியமாகும். பிள்ளைகளின் பிரச்சினைகளை பரிவுடன் கேட்டலும், தேவையான பரிகார நடவடிக்கைகள் மேற்கொள்வதன் மூலமும் இத்தகைய பிள்ளைகளிடையே சிறந்த மாற்றத்தைக் கொண்டு வர இயலும்.

சில ஆரம்பக் கல்விப் பிள்ளைகள் ஆக்கச் செயற்பாடுகளை வீட்டிலுள்ள பெரியவர்களைக் கொண்டு செய்து வர முயலுவர். இதற்குரிய பிரதான காரணம் பெற்றோர் தம் பிள்ளைகள் மீது அவநம்பிக்கை உள்ளவர்களாக இருக்கின்றமையே என்றால் மிகையில்லை. இச் செயற்பாடு தொடர்ந்து நடைபெறுமானால் நாளடைவில் பிள்ளைகள் தன்னம்பிக்கையற்றவர்களாக மாறிவிடுவர். இந்நிலையை முளையிலேயே கிள்ளியெறிய வேண்டும். அழகோ, அழகில்லையோ, காத்திரமானதோ, காத்திரமற்றதோ, பிள்ளை செய்ய வேண்டிய செயற்பாடுகளை பிள்ளையைக் கொண்டே செய்வித்தல் வேண்டும். பிள்ளையை வழிப்படுத்துபவராக ஆசிரியர் இருத்தல் போதுமானது. இவ்வகிபங்கு பெற்றோருக்கும் பொருந்தும்.

ஆரம்பக் கல்வி வகுப்புகளிலே கற்கும் பிள்ளைகளிடையே தன்னம்பிக்கையை கட்டியெழுப்புவதன் மூலம் அடுத்து வரும் படி நிலைகளில் தாம் சந்திக்கும் எச் செலயலையும், நேரான தன்மையில் நோக்கும் நிலைக்கு வருவார்கள்.

பொறுப்புக்களை ஒப்படைத்தல் பிள்ளைகளிடையே தன்னம்பிக்கையை ஏற்படுத்துவதில் பாரிய செல்வாக்குச் செலுத்தும் காரணியாக உள்ளது. ஆரம்பப் பிரிவில் கற்கும் ஆசிரியர்கள் சிலர், தமது வகுப்பு மாணவர்கள் சிறியவர்கள். இவர்களால் ஒப்படைக்கும் பொறுப்புக்களை சரிவரச் செய்ய இயலாது. என நினைக்கின்றனர். தரம் 3,4,5 இல் உள்ள மணவர்களுக்கு சரியான வழிப்படுத்தலுடன் பொறுப்புக்களை வழங்கினால் இவர்களை நிறைவேற்றுவதைப் போல தரம் 6,7,8 மாணவர்கள் நிறைவேற்றுவார்கள் என்று கூற முடியாது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆரம்பப் பிரிவில் உள்ள பிள்ளைகள் எப்போதும் எதையாவது செய்து கொண்டிருக்க விரும்புவார்கள். இவர்களுக்கு தேவையானது சரியான வழிப்படுத்தல் மட்டுமேயாகும். இத்தகைய வழிப்படுத்தல் மூலம் இப் பிள்ளைகள் சமூகத்தில் தன்னம்பிக்கையுடன் வாழ வழி உண்டாகும் என்பது திண்ணம்.

தன்னம்பிக்கை தான் வாழ்வின் முன்னேற்றத்துக்கு அத்தியாவசியமானது என்பதை ஆரம்பக் கல்வி மணவரிடையே ஊட்ட வேண்டியது ஆசிரியர்களதும், பெற்றோரதும் தலையாய கடமையாகும். தன் வாழ்க்கை சரியானதொரு செல்நெறியில் செல்வதற்கு தன்னம்பிக்கை இருக்க வேண்டும் என்பதை ஆரம்பக் கல்விப் பிள்ளைகளுக்கு விளக்கம் கொடுக்க இயலாது. மாறாக தன்னில் நம்பிக்கை ஏற்படக் கூடியவாறான செயற்பாடுகளை திட்டமிட்டு செயற்படுத்துவதன் மூலம் வெற்றி பெற முடியும்.

கற்றல், கற்பித்தல் செயற்பாடுகளில் மட்டுமன்றி, பாடசாலையில் நடைபெறும் இன்னோரன்ன செயற்பாடுகள் அனைத்திலும் தன்னம்பிக்கை உள்ளவராக பிள்ளைகள் மிளிர வேண்டும். அத்தகைய பிள்ளைகள் மூலமே நாளைய சமூகம் உயர் நிலை அடைய முடியும்.

இதனை நோக்காகக் கொண்டு, ஆசிரியர்களும், பெற்றோர்களும் பிள்ளைகளை ஊக்குவிப்பவர்களாகவும், பாராட்டுபவர்களாகவும், வழிப்படுத்துபவர்களாகவும், தகவல் வழங்குபவர்களாகவும், நல்ல நண்பர்களாகவும், சகோதரர்களாகவும் பல்வேறு வகிபாகங்களை ஏற்று செயற்பட வேண்டும். மாறாக அதீதமாக கண்டிப்பவர்களாக இருப்பதில் எவ்வித பயனும் ஏற்படப் போவதில்லை.

பெற்றோரதும், ஆசிரியர்களதும் எதிர்பார்ப்புகள் மட்டுமே திணிக்கப்பட்ட பொம்மைகளாக, குறிப்பாக ஆரம்பக் கல்விப் பிள்ளைகள் மாறிக் கொண்டிருக்கும் நிலையில், பிள்ளைகளில் பலர் தன்னம்பிக்கையற்றவர்களாக மாறி வருகின்றமை கண்கூடு. எனவே இந்நிலை விரைவாக மாற வேண்டும். தன்னம்பிக்கையுள்ள சமூகமே நின்று நிலைக்கும் எதையும் எதிர் கொள்ளும். என்னும் வகையில், பிள்ளைகளைச் சரியாகக் கையாண்டு தன்னம்பிக்கை மிக்க, ஆழக்கால் பதிக்கும் புத்துயிர் மிக்க சமூகமொன்றை உருவாக்க உறுதி பூணுவோமாக!

**திருமதி.சுரேஸ்குமார் ரஜிதா** (B.A, P.G.D.E)
**ஆரம்பக் கல்வி ஆசிரியர்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கற்கும் காலம் மிகச் சிறிதே

கதிரவனின் ஒளி
விண்ணில் பட்டு பிரகாசித்திடும்
மண்ணுலகும் விண்ணுலகும்
நித்தம் நினைந்து மகிழ்ச்சிக் கடலில்
ஆழ்ந்திடும்

கற்றவர் பணி மறப்பதற்கில்லை
காற்றமுத்தமும் மாறுவதில்லை
சொற்பதமாய்ப் போற்றும்
துளி உலகை அசைத்திட
திறம் கொண்டு செயற்பட வேண்டும்

கற்கும் காலம் மிகச் சிறிதே
அக் காலத்தை வீணாக்காதே
பாலைப் பருகும் அன்னம் போன்று
உலகில் தேவையனவற்றை
தேடிப் பெற்றிடவே
காலம் யாவும் அர்ப்பணித்து
எறும்புகள் போல்
அயராத முயற்சி கொண்டு
அல்லும் பகலும்
கல்வியை கண்ணாக நினைத்து
பெற்றிட வேண்டும்

துன்பம் வரினும்
துணிவுடன் அதனை எதிர் கொண்டு
துடிப்புடன் செயற்பட்டிட
செயற்திறனும் ஊக்கமும் கொண்டு
செயற்பட வேண்டும்
கற்கும் காலம் மிகச் சிறிதே

ஆக்கம்
திரு.செ.ராஜேஸ்வரன் (M.A)
முன்னாள் ஆசிரியர்.
கிளி/இராமநாதபுரம் ம.வி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வணிகத்திட்டம் (BUSINESS PLAN)

**வணிக எண்ணம்** (Business Idea)

தனிநபர் / அமைப்பொன்றின் தேவை / விருப்பங்களை பூர்த்தி செய்யக் கூடிய உற்பத்திகள் தொடர்பாக முயற்சியாளனிடம் உருவாகின்ற மனநிலை / உளநிலை வணிக எண்ணம் ஆகும்.

தேவை விருப்பங்களை ஆதரமாக கொண்டே வணிக எண்ணங்கள் தோற்றுவிக்கப்படுகின்றன.

**தேவை விருப்பம்** ⟹ **வணிக எண்ணம்** ⟹ **வாய்ப்புக்கள்**

**சிறந்த வணிக எண்ணம் ஒன்றின் பண்புகள்**

1. இலகுவாக உற்பத்தி செய்ய முடிதல்
2. நட்ட அச்சம் குறைவு
3. தேவைகளை திருத்தமாக பூர்த்தி செய்யக் கூடியதாக இருத்தல்
4. ஒப்பீட்டு நலன்களை கொண்டிருத்தல்
5. வாடிக்கையாளரிடம் நடத்தை மாற்றத்தை ஏற்படுத்த கூடியதாக இருத்தல்.

**வணிகத் திட்டம்** (Business Plan)

* வணிக மொன்றின் இலக்கு, நோக்கம் என்பவற்றை அடைந்து கொள்வதற்கான முறையினை விபரிக்கின்ற அட்டவணை.
* வங்கிகளுக்கு / அக்கறை கொண்ட தரப்பினருக்கு வணிகம் தொடர்பான உடன்பாட்டையும் உறுதிப்படுத்தல்களையும் வழங்குவதற்கான தகவல்களை உள்ளடக்கிய ஆவணம்.
* வணிகத்தின் வெற்றி தொடர்பான உறுதிப்படுத்தல்களை வழங்குவதற்கான தகவல்களை எழுத்து வடிவில் தொகுத்த ஓர் ஆவணம்.

**வணிகத் திட்டம் தயாரிக்கப்படும் சந்தர்ப்பங்கள்**

1. புதிய வணிகத்தை ஆரம்பித்தல்
2. தற்போதைய வணிகத்தை விரிவுபடுத்தல்
3. தற்போதைய வணிகத்தை நவீனமயப்படுத்தல்
4. வெவ்வேறு வணிகங்களை ஒன்றிணைத்தல்
5. மற்றொரு வணிகத்தை கொள்வனவு செய்தல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**வணிகத்திட்டத்தின் முக்கியத்துவம்**

1. வணிகத்தை கொண்டு நடாத்துவதற்கு வழிகாட்டியாக அமைதல்
2. வணிகத்தின் மீது அக்கறை செலுத்துவோருக்கு வணிகத்தை பற்றி சிறந்த தெளிவினை பெற்று கொடுத்தல்
3. நிதி வசதிகளை இலகுவாக பெற்று கொள்வதற்கு
4. சிறந்த தீர்மனங்களை மேற் கொள்வதற்கு
5. முகாமை செயற்பாடுகளை சிறப்பாக மேற்கொள்வதற்கு
6. எதிர்கால இலக்குகளை அடைவதற்கு
7. தேவையான தகவல்களை தேவையான நேரத்தில் தேவையான நபர்களுக்கு வழங்குவதற்கு
8. பெரிய ஒப்பந்தங்களை மேற்கொள்வதற்கு
9. தேவையற்ற அனாவசிய செயற்பாடுகளை தவிர்ப்பதற்கு
10. முதலீட்டாளர்கள் முதலீட்டு தீர்மானங்களை மேற்கொள்வதற்கு

**வணிக திட்டம் தயாரிக்கும் முறைகள்**

1. சுயமாக தயரித்தல்
2. வணிக திட்டம் தயாரிக்கும் நிறுவனங்கள் / நிபுணர்கள் மூலம்
3. வேறு நிறுவனங்களின் திட்டத்தை பின்பற்றுதல்

**வணிக திட்டம் தொட்பில் கவனம் செலுத்த வேண்டிய பிரதான விடயங்கள்**

1. தெளிவான எல்லை – **Focus**
2. வாடிக்கையாளர் – **Customers**
3. இலக்கு – **Goals**
4. நிதி – **Financial**

**வணிக திட்டத்தின் பிரதான பகுதிகள்**

1. உள்ளடக்கம் / பொருளடக்கம்
2. நிறைவேற்று சுருக்கம்
3. வணிக விபரம்
4. சந்தைப்படுத்தல் திட்டம்
5. செயற்பாட்டு திட்டம்
6. மனிதவள திட்டம்
7. நிதி திட்டம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உள்ளடக்கம் (Table of Contents)

* வணிகத் திட்டத்தின் எந்தெந்த தலைப்புகள் எந்தெந்தப் பக்கத்தில் அமைந்துள்ளது என்பதை காட்டும் ஒரு வழிகாட்டியே உள்ளடக்கம் என்பதாகும்.
* இது ஆவணத்தின் முன் பக்கத்தில் அமைந்திருக்கும்.
* இது வணிகத்திட்டத்தின் முக்கியமான ஒரு பகுதி அல்ல.

## நிறைவேற்று சுருக்கம் / கட்டளை சுருக்கம் (Exceutive Summary)

* வணிக திட்டத்தில் கூறப்பட்டுள்ள அடிப்படையிலான விடயத்தை சுருக்கி பொழிப்பாக்கி கூறுவதாக இது காணப்படுகிறது.
* திட்டத்தின் அனைத்து பாகங்களுக்கூடாகவும் கூற வரும் ஆதாரமான அம்சத்தை திரட்டித் தருவது கட்டளை சுருக்கமாக காணப்படுகிறது.
* வணிகத் திட்டத்தின் அனைத்து பகுதிகளும் எழுதி முடிக்கப்பட்ட பின்னரே நிறைவேற்று சுருக்கம் தயாரிக்கப்படும்.
* நிறைவேற்று சுருக்கம் ஓரிரு பக்கங்களை கொண்டதாக காணப்படும்.

## வணிக விபரம் (Business Description)

வணிகம் எத்தகையது அது வழங்குகின்ற பொருட்கள், சேவைகள் எவை அதனால் வாடிக்கையாளர் பெறும் போட்டி நலன்கள், சிறப்பம்சங்கள், வணிகத்தின் உரிமையாளர், நிறுவன கட்டமைப்பின் தன்மை போன்றவை விபரிக்கும் பகுதியாக இது காணப்படுகிறது.

1. வணிகத்தின் பெயர் முகவரி, வரலாறு
2. வணிகத்தின் நோக்கம், குறிக்கோள், தூரநோக்கு
3. தோற்றுவிப்பாளர்
4. நிறுவன கட்டமைப்பு முறைகள்
5. பணிப்பாளர் சபை, இயக்குனர் சபை
6. முதலீட்டின் அளவு, நிகழ்கால பெறுமதி, உழைப்பு வீதம்
7. முதலீட்டின் தன்மை
8. விசேட அம்சங்கள்

## சந்தைப்படுத்தல் திட்டம் (Marketing Plan)

சந்தை போட்டி தன்மை, விநியோக வழிமுறை, விற்பனை போன்ற சந்தையுடன் தொடர்பு பட்ட தகவல்களை விரிவாகக் காட்டும் பகுதி சந்தைப்படுத்தல் திட்டம் என்பதாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சந்தைப் படுத்தல் திட்டத்தில் உள்ளடங்கும் விடயங்கள்

1. தொழிற்சாலை, சந்தைப்பகுப்பாய்வு
2. சந்தைப்படுத்தவுள்ள பொருட்கள் சேவைகள்
3. இலக்கு சந்தை
4. போட்டி பகுப்பாய்வு
5. திட்டமிடப்பட்ட விற்பனை
6. போட்டியாளர் சந்தைப்படுத்தல் உபாயங்கள்
7. உத்தேச சந்தைப்படுத்தல் உபாயங்கள்
8. சந்தைப்படுத்தல் செலவு

**செயற்பாட்டு திட்டம் (Operation Plan)**

உற்பத்தி நடைமுறைகள், உற்பத்திக்கான இயந்திர உபகரணங்கள், உற்பத்தி மட்டம், தொழிற்சாலை நிறுவுதல், பேண வேண்டிய தேசிய சர்வதேச நியமங்கள், தேவையான அனுமதிப்பத்திரங்கள் போன்றவற்றை பற்றி விபரமாக கூறும் ஆவணமாக இது காணப்படுகிறது.

**செயற்பாட்டு திட்டத்தில் உள்ளடங்கும் விடயங்கள்**

1. உற்பத்தி திட்டம்
2. இயந்திர உபகரணங்களின் தேவை
3. மூலப் பொருட்களின் தேவை
4. ஊழியர்களின் தேவை
5. உற்பத்தி பொது மேந்தலை கிரயம்
6. மொத்த உற்பத்தி கிரயம், அலகு கிரயம்
7. தொழிற்சாலைகளின் இட அமைவுத்திட்டம்
8. கழிவு முகாமைத்துவம்

**மனிதவள திட்டம் (Human Plan)**

நிறுவன நோக்கங்களை செயற்திறனாக அடைவதற்கு தேவையான மனித வளத்தை வரையறுப்பதும், அம் மனித வளத்தை பெற்றுக் கொள்ளும் வழிமுறைகளை விபரமாக காட்டுவதுமான பகுதியாக மனித வள திட்டம் காணப்படுகிறது.

**மனிதவள திட்டத்தில் உள்ளடங்கும் விடயங்கள்**

1. அமைப்பு முறையும், அமைப்பு வரைபடமும்
2. பதவிகளும் பொறுப்புக்களும்
3. மனித வளத்துக்கான வருடாந்த செலவு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கல்விசாரா ஆளணியினர்



## முகாமைத்துவக் குழு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மலர்க்குழு



## விழாக் குழு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வைரவிழா ஆண்டில் பாடசாலை ஆளணியினர்




இருப்பவர்கள் இ.வ : ஸ்ரீ.திலீபன், ந.ஜெயபாலசிங்கம், செ.ஜசிந்தா, ச.மகேந்திரன், க.ஜெயக்குமார், ஸ்ரீ.இளங்குமரன், சு.நடராசா(அதிபர்), ம.கணேசலிங்கம், ஆ.நடராசா, அருட்சகோதரி.ம.கொறற்றிலியோன், ச.புண்ணியமூர்த்தி, பெ.பூஸோகராசா,

நிற்பவர்கள் : 1ம் வரிசை : ஜெ.ஜனகன், சி.ஜெயராஜிதன், பி.கஸ்தூரி, ஆ.மோகனகுமார், செ.கிருத்திகா, ச.பிரபதாஸ், ஸ்ரீ.பிரதீபன், க.லக்சாந்தினி, யோ.சங்கீதா, பி.கிருபாலன், அ.விஜயராணி, ஜெ.கவிதா, நி.ஜெகதீஸ்வரன், கௌ.குமாரதாஸ், சி.சூரியகுமார், சு.சண்முகநாதன், ம.சிவநேசன்,

நிற்பவர்கள் 2ம் வரிசை : இ.நிசாந்தன், சி.சத்தியசீலன், வே.ஜெயக்குமார், வே.யோகப்பிரகாஸ், ந.கிரிஜா, யூ.வேஜின்மேரி, கௌ.தவேஸ்வரன், யோ.கிருஸ்ணப்பிரியா, மே.சசிகரன், சி.தம்சலா, ப.ஜோன்ஜெகநாதன், ச.சிந்துஜா, ஸ்.பகீரதன், பி.யூட்வில்பிரட், சி.செந்தூரன், சி.சுதாகரன், த.ஜெயசுதன், ச.கலையமுதன்,

நிற்பவர்கள் 3ம் வரிசை : ப.ரமேஸ், ச.ஜங்கரன், சு.றஜிதா, த.றேமன், ஜீ.விவேகானந்தராசா, பி.சுதாஸ்கரன், க.யாழினி, பி.நிஸாந்தி, வீ.சுகிதா, ஜெ.றஜிதேவி, ஸா.றொபேட்கஸாசியஸ்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




இருப்பவர்கள் இ.வ : வே.யோகப்பிரகாஸ், அருட்சகோதரி.ம.கொறற்றிலியோன், ஆ.யோகனகுமார், பெ.பூலோகராசா, ஆ.நடராசா, ட.சிவநேசன், தி.திலீபன்(பிரதி அதிபர்), M.C.L மனுவல்(அதிபர்), ஸ்ரீ.இளங்குமரன்(உதவி அதிபர்), ஜீ.விவேகானந்தராசா, இ.புண்ணியமூர்த்தி, ம.கணேசலிங்கம், ந.ஜெயபாலசிங்கம், ச.மகேந்திரன், அருட்சகோதரி.செ.ஜசிந்தா, திரு.வே.ஜெயக்குமார்.

நிற்பவர்கள் : ச.பிரபதாஸ், கோ.கிருஸ்ணபிரியா, நி.ஜெகதீஸ்வரன், த.றேமன், சு.சண்முகநாதன், பி.கிருபாலன், வ.கலையரசன், ச.கலையமுதன், ஸ்ரீ.பிரதீபன், சி.சூரியகுமார், ப.ஜோன்ஜெகநாதன், பு.பகீரதன், ஜெ.ஜனகன், சு.குமாரதாசன்


நிற்பவர்கள் 2ம் வரிசை : ந.கிரிஜா, பி.நிஷாந்தி, ம.சுஜந்தரூபி, சு.ரஜிதா, ஸ்.பகீரதன், ப.அனோஜா, ஜெ.கவிதா, ச.சிந்துஜா, நி.துர்க்காயினி, க.மதுமதி, சி.ஜெயராஜிதன் பி.கஸ்தூரி, யூ.வேஜின்மேரி, க.யாழினி, செ.சிந்துஜா

நிற்பவர்கள் 3ம் வரிசை : சி.கம்சலா, மே.சசிகரன், க.லக்சாந்தினி, யோ.சங்கீதா, இ.நிசாந்தன், பி.யூட்வின்பிரட், சி.சத்தியசீலன், கு.குணதீபன், சி.செந்தூரன், அ.விஜயராணி, வீ.சுகிதா, பி.சுதாஸ்கரன், கௌ.தவேஸ்வரன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரதி அதிபர்




திரு.தி.திலீபன்
(B.sc, PGDE, SLPS - 2)




திருமதி.ஸ்ரீ.இளங்குமரன்
(B.A, PGED, SLTS - 1)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனிதவள திட்டத்தின் அனுகூலங்கள்

1. எதிர்கால ஊழியத் தேவையை எதிர்வு கூற முடிதல்
2. ஊழியக் கிரயத்தை எதிர்வு கூற முடிதல்
3. ஊழியத்தை வினைத் திறனாகப் பயன்படுத்த முடிதல்
4. எதிர்கால ஊழியத் தேவையை முன்னரே அறிவதால் அதைப் பெறும் வழிகளை உறுதி செய்து ஊழியப் பற்றாக்குறை ஏற்படுவதை தடுக்க முடிதல்
5. அவசர ஆட்சேர்ப்பினால் ஏற்படக் கூடிய மேலதிக செலவுகளைத் தடுக்க முடிதல்
6. ஊழியரின் பயிற்சித் தேவைகளை இனங்காண முடிதல்
7. ஊழியரின் அபிவிருத்தித் தேவைகளை இனங்காண முடிதல்
8. தேர்ச்சி வாய்ந்த ஊழியர்களை திட்டமிட்டு சேர்த்துக் கொள்ள முடிதல்

நிதித் திட்டம் (Finacial Plan)

வணிக மொன்றின் மதிப்பிடப்பட்ட சகல நிதித் தகவல்களையும் விபரமாகத் தருகின்ற பகுதி நிதித் திட்டம் எனப்படும்.

நிதித் திட்டத்தின் முக்கியத்துவம்

1. தேவையான நிதியினை வரையறை செய்ய முடிதல்
2. நிதி பெறும் வழிகளை தீர்மானம் செய்து இலகுவதாகப் பெறுவதற்கு
3. முதலீடு தொடர்பான தீர்மானங்களை மேற்கொள்வதற்கு
4. எதிர்காலத்துக்கான பற்றாக் குறையை மதிப்பிட்டு அதை பெற முன்கூட்டியே ஏற்பாடு செய்ய முடிதல்
5. எதிர்கால காசு மிகையினை மதிப்பிட்டு அதனை முதலிடுவதற்கான ஏற்பாட்டை முன்னரே மேற்கொள்ள முடிதல்

நிதித் திட்டத்தில் உள்ளடங்கும் விடயங்கள்

1. மதிப்பிடப்பட்ட கிரயம் / செயல் திட்ட கிரயம்
2. மதிப்பிடப்பட்ட இலாப நட்டக் கூற்று / வருமானக் கூற்று
3. மதிப்பிடப்பட்ட காசுப் பாய்ச்சல் கூற்று
4. கடனை மீளச் செலுத்தும் அட்டவணை
5. மதிப்பிடப்பட்ட ஐந்தொகை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வணிக திட்டமொன்றை தயாரித்து முன்வைக்கும் போது அதில் உள்ளடக்கப்பட வேண்டிய பிரதான பகுதிகள்

1. முன்பக்கம்
2. உள்ளடக்கம்
3. நிறைவேற்றுச் சுருக்கம்
4. வணிக விபரம்
5. சந்தைப்படுத்தல் திட்டம்
6. செயற்பாட்டுத் திட்டம்
7. மனித வளத் திட்டம்
8. நிதித் திட்டம்
9. பின் இணைப்புக்கள்

வணிகத் திட்டத்தை தயாரிக்கும் போது கவனம் செலுத்த வேண்டிய விடயங்கள்

1. கவர்ச்சிகரமாக முன்பக்கத்தை வடிவமைத்தல்
2. தரமான காகிதத்தைப் பயன்படுத்தல்
3. உள்ளடக்கத்தை சரியாக முன் வைத்தல்
4. மேலதிக தகவல்கள், விளக்கங்களை பின் இணைப்பில் சேர்த்தல்
5. அவசியமான தகவல்களை முக்கியத்துவப்படுத்திக் காட்டுதல்
6. ஒவ்வொரு பாகத்தையும் புதிய பக்கத்தில், ஆரம்பித்தல்
7. விடயங்களைத் தெரிவு படுத்த அட்டவணைகள், வரைபடங்கள், படங்கள் என்பவற்றைப் பயன்படுத்தல்
8. உப பிரிவுகளை பொருத்தமான இலக்கங்களால் வேறுபடுத்தல்
9. உண்மையான உறுதிப்படுத்தக் கூடிய தகவல்களை மட்டும் உள்ளடக்குதல்
10. தேவையற்ற தொழினுட்ப விடயங்களைத் தவிர்த்தல்

உசாத்துணை நூல்கள்

(i) வணிகக் கல்வி நூல் - ஜகத் பண்டார நாயக்க

(ii) இணையதளம் - வணிக திட்டம்

**திரு.த.ஜெபசுதன்** (B.Com, PGDE)

**ஆசிரியர்**

**கிளி/இராமநாதபுரம் மகா வித்தியாலயம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# தமிழ் இலக்கியத்தில் நயம் தரும் தூதுப் பண்பு

தமிழ் இலக்கியத்தில் எண்ணற்ற இரசனைகள், சிறப்புக்கள் பொதிந்துள்ளன. அத்தகைய இலக்கியங்களில் தூதுப் பண்பும் ஒரு முக்கிய சிறப்பம்சமாக இடம்பெற்றுள்ளது. 96 வகையான சிற்றிலங்களில் தூதுப் பிரபந்தம் அதாவது தூது இலக்கியம் ஒரு பிரிவாக காணப்படுகிறது. இலக்கியம் ஒன்றின் இரசனைக்கு தூது எனும் பண்பு அடித்தளமாக அமைகின்றது.

இலக்கியங்களில் பல வகையான தூதுக்கள் உள்ளன. அவை அரசியல் சார்ந்த தூதுக்கள், காதலுக்காக விடப்படும் தூதுக்கள், போருக்காக விடப்படும் தூதுக்கள் எனப் பல செய்தி ஒன்றை மற்றொருவருக்கு தெரியப்படுத்தும் பொருட்டு தூது அனுப்பப்படுகின்றது. ஓர் தூது எவ்வாறு இருக்க வேண்டும், தூது உரைப்பவரின் தகுதிகள் என்பன பற்றி வள்ளுவர் ஒரு அதிகாரத்தையே திருக்குறளில் வைத்துள்ளர். அவ்வாறு தூது உரைப்பவன் ஒருவனின் தகுதிகள் எவை என வள்ளுவர் பின்வருமாறு கூறுகின்றார்.

அன்புடைமை ஆன்ற குடிப்பிறத்தல் வேந்தவாம்
பண்புடைமை தூதுரைப்பான் பண்பு

அதாவது அன்பான குணமும், நல்ல குடிப்பிறப்பும், மன்னன் விரும்பும் சிறந்த பண்பும் தூது உரைப்பவனின் தகுதிகளாகும் என வள்ளுவர் கூறுகின்றார். மேலும், தூது உரைப்பவன் ஒருவனின் பண்புகளாக வள்ளுவர் பின்வரும் குறளில் கூறுகின்றார்.

அன்பறிவு ஆராய்ந்த சொல்வன்மை தூதுரைப்பார்க்கு
இன்றி யமையாத மூன்று

அன்பு, அறிவு, ஆராய்ந்து சொல்லும் சொல் வன்மை ஆகிய மூன்றும் தூது உரைப்பவன் பண்புகளாகும்.

குறிப்பாக அஃறினைப் பொருட்களையே பெரும்பாலும் தூது விடும் பண்பாக அமைந்துள்ளதையும் காணலாம். தூதுக்கு எதையெல்லாம் அனுப்பலாம் என்பதை பின்வரும் பாடல் தெளிவுறுத்துகிறது.

இயம்புகின்ற காலத் தெகினமயில் கிள்ளை
பயன்பெறுமே கம்பூ வை பாங்கி நயத்த குயில்
பேதை நெஞ்சம் தென்றல் பிரமரம் ஈரைந்தும்
தூதுரைத்து வாங்கும் தொடை

அதாவது எகினம் எனப்படும் அன்னம், மயில், கிளி, மேகம், மைனா எனும் பூவை, தோழி, குயில் உள்ளம், தென்றல், பிரமரம் எனும் வண்டு எனவாறு பத்தும் தூது அனுப்பப் பயன்படுபவை எனப் பாடல் கூறுகிறது. இவற்றில் தோழி,


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிளி என்பவற்றைத் தவிர ஏனைய எட்டும் பேசக்கூடியவை அல்ல. கிளி கூட சொன்னதைத் திருப்பி அப்படியே சொல்லுமே தவிர ஒரு வார்த்தை கூட பேசத் தெரியாது.

இராமாயணத்தில் அங்கதன் தூது, மகாபாரதத்தில் கிருஷ்ணன் தூது, மேலும், சஞ்சயன் தூது, உலூகன் தூது, கந்தபுராணத்தில் வீரபாகுதேவர் தூது என அரசியல் தூதுக்கள் பல. இவை போருக்கு முன்னர் போரா? சமாதானமா? எனும் நிலையறிய அனுப்பப்பட்ட தூதுக்கள். இராமன் இராவணனிடம் அங்கதனையும், தருமன் கண்ணனை துரியோதனிடமும், திருதராட்டினன் சஞ்சயனை பாண்டவரிடமும், முருகன் சூரனிடம் வீரபாகுதேவரையும் தூதுவர்களாக அனுப்புகின்றனர். ஆனால் இவையனைத்தும் இறுதியில் தோல்வியில் முடிவடைகின்றன.

ஆனால் இவற்றை விட காதலுக்காக விடப்பட்ட தூதுக்களே எம் இலக்கியங்களில் அதிகம் இடம்பெற்றுள்ளன. காதலன் ஒருவன் தன் காதலிக்கோ அல்லது காதலி ஒருத்தி தன் காதலனுக்கோ தன் மனநிலை பற்றி தூது விடப்பட்டுள்ள காட்சிகளே அதிகம்.

ஆண்டாளின் நாச்சியார் திருமொழியில் இரண்டு தூதுக்கள். ஒன்று குயில் விடு தூது, மற்றது மேக விடு தூது. இரண்டும் கண்ணனிடம் அனுப்பட்டவை. தன் காதலை, தான் கண்ணன் மீது கொண்ட அன்பினை, அவனை பிரிந்திருப்பதன் வேதனை என்பவற்றையெல்லாம் இவ் இரண்டின் வாயிலாக உரைக்கின்றாள் ஆண்டாள்.

கண்ணன் மீது அளவு கடந்த காதல் கொண்ட ஆண்டாள் தன் உடல் மெலிந்து காதல் நோயால் வருந்துகிறாள். இந் நிலையில் வானில் செல்லும் மேகங்களை அழைத்து தன் நிலையை கண்ணனிடம் உரைக்குமாறு வேண்டுகின்றாள். மேகத்திடம், "குளிர் நீர் கொண்டு மேலே விளங்குகின்ற முகில்களே, நிலத்தை கேட்டுப் பெற்றுக் கொண்டவன் இருக்கின்ற திருமலையில் பொழியும் கொண்டலே, நான் கொசுக்கள் உண்ட விளாம்பழம் போல் உடல் மெலியும் படி என்னுள்ளே புகுந்து என் நிறையை அழித்த நாராயணனுக்கு என் காதல் துன்பத்தைத் தெரிவியுங்கள்.

சலங்கொண்டு கிளர்ந்து எழுந்த தன் முகில்காள் மாவலியை
நிலங்கொண்டான் வேங்டத்தே நிரந்து ஏறிப்பொழிவீர்கள்
உலங்கு உண்டவிளங்கனி போல் உள் மெலியப் புகுந்து என்னை
நலங் கொண்ட நாரணற்கு என் நடலை நோய் செப்புமினே

மேலும், திருமலையில் தேன் நிறைந்த மலர்கள் சிதறும்படித் திரள் திரளாக வானில் ஏறி மழை பொழியும் முகில்களே, விண்ணில் வளர்ந்து எழுகின்றீர் கூரிய நகத்தினால் இரணியன் உடலை கிழித்துப் போட்டவன் என்னிடம் கொள்ளை கொண்ட கைவளையல்களை திருப்பி தருவதனால் என் நிலையை அவனுக்கு சொல்லுங்கள்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேகத்திடம் மட்டுமன்றி குயிலிடமும் தன் நிலையை தன் காதல் துன்பத்தை உரைக்கின்றார் கண்ணனை நினைத்து என் எலும்புகளும் உருகிப் போயின. இணை வேல் கண்களும் இமை மூடவில்லை. நெடுங்காலமாகப் பிரிவின் துன்பக் கடலிலே அழுந்தி அதில் இருந்து மீள வைகுந்தன் என்ற தோணியைப் பெறாமல் தடுமாறிக் கொண்டிருக்கிறேன். காதலர்கள் பிரிவுத் துயரை நீயும் அறிவாயன்றோ? பொன் மேனியுடைய கருடக் கொடியையுடைய கண்ணனை இங்கே வரும்படி கூவுவாயாக.

**என்பு உருகி இன வேல் நெடுங் கண்கள்**
**இமை பெருந்தா பல நாளும்**
**துன்பக் கடல் புக்கு வைகுந்தன் என்பது ஓர்**
**தோணி பெறாது உழல்கின்றேன்**
**அன்பு உடையாரைப் பிரிவு உறு நோயது**
**நீயும் அறிதி குயிலே**
**பொன் புரை மேனிக் கருளக் கொடி உடைப்**
**புண்ணியனை வரக் கூவாய்**

**என ஆண்டாள் குயிலிடம் வேண்டுகிறாள்.**

இது மட்டுமன்றி, முன்பு மூன்று உலகங்களையும் அளந்து கொண்டவனை விரும்பி நான் ஆசைப்பட அதற்கு நான் துன்பப்பட்டிருக்கின்ற நேரத்தில் தென்றல் காற்றும், முழுநிலவும் என்னை உள்ளே பிளந்து புகுந்து துன்புறுத்தும் நியாயத்தை அறியவில்லை. ஓ குயிலே என்னுடைய நலத்தை விரும்பும் நீயும் இந்தச் சோலையிலே இருந்து ஏற்கனவே மெலிந்திருக்கின்ற என்னை துன்பப்படுத்தாமல் இன்றே நாராயணன் விரும்படி நீ கூவாமல் போனால் இச் சோலையிலிருந்து உன்னை துரத்தி விடுவேன். என ஆண்டாள் தன் மன வேதனையை உரைக்கின்றாள்.

திருமாலைப் பாடிய ஆழ்வார்களில் நம்மாழ்வாரும் ஒருவர். அவர் திருமாலை காதனாக கருதி தன்னை அவனது காதலியாக பாவனை செய்து பாடல் பாடியவர். அவரது திருவாய் மொழியில் தன் நிலையை நாரை, அன்னம், குயில், குருகு, வண்டு என்பவற்றின் ஊடாக கண்ணனுக்கு தெரிவிக்கின்றார். திருமாலிடம் நாரையைத் தூது விடுகிறார். 'காதலின் சுவையறிந்த கருநாரையே! வளமார்ந்த வண் வண்டூர் என்னும் மலைநாட்டுத் திருப்பதியிலே எம்பெருமான்வாழ்கின்றார். அப்பதியை நீ எளிதில் அறிந்து கொள்ளலாம். வேத கீதம் அங்கு முழங்கியபடியே இருக்கும். அங்கே சென்று எம்பெருமான் அடிதொழுது நான் படும்பாட்டை எடுத்துரைக்க வேண்டும்; என்று விண்ணப்பம் செய்கின்றார்.

நந்திக்கலம்பகம் எனும் இலக்கியத்தில் தூது சிறப்பான ஓர் அங்கமாக விளங்குகிறது. காதலுக்காக மேகம், கிளி என்பனவற்றை தூது விடுகின்றாள் மங்கையொருத்தி. நந்தி வர்மன் மீது காதல் வயப்பட்ட அம்மங்கை, நந்திவர்மனிடம் கிளியை அழைத்து தூது விடுகின்றாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொழுது கண்(டு) ஆய் அதிர் கின்றது
போக நம் பொய்யற்கு (எ)ன்றும்
தொழுது கண்டேன் என்று சொல்லு
கண்டாய் தொல்லை நூல் வரம்பு
முழுது கண்டான் நந்தி மல்லை அம்
கானல் முதல்வனுக்குப்
பழுது கண்டாய் இதைப் போய்ப்பகர்
வாய் சிறைப் பைங்குருகே (நந்திக்கலம்பகம்., பா.08)

*அதாவது, தலைவியானவள் மலைப் பொழுது கண்டு மயங்குகிறாள். அப்போது ஓர் கிளியைக் காண்கிறாள் அக் கிளியிடம், "கிளியே, சூரியன் மறைந்து விட்டது. நான் நந்திவர்மனிடம் காதல் கொண்டதை என் தாய் அறிந்து கொண்டாள். அந்த நந்திவர்மன் பழமையான நூல்களைக் கற்றவன். அழகிய கடல் துறைக்குத் தலைவன். ஆனால் அவன் பொய் பேசுகின்றவன். ஏனெனில் என்னிடம் வருவேன் எனக் கூறியவன். ஆனால் இன்னும் வரவில்லை. எனவே எப்போதும் அவனையே எண்ணி வருந்திக் கொண்டிருக்கும் என் நிலையை அவனிடம் கூறுவாயாக".*

*நந்திவர்மன் நகரில் இருக்கும் தன் காதலிக்கு தன் நிலையைக் கூற மேகத்தை தூது விடுகின்றான் ஓர் தலைவன்.*

ஓடுகிற மேகங்கள் ஓடாது தேரில் வெறும்
கூடு வருகுதென்று கூறுங்கள்! நாடியே
நந்திச் சீராமனுடை நல்நகரில் நல்நுதலைச்
சந்துச்சீர் ஆமாகில்தான் (நந்திக்கலம்பகம்., பா.17)

*அதாவது, ஆகாயத்தில் விரைவாக ஓடுகின்ற மேகங்களே, ஓடும் அளவிற்கு ஆற்றல் இல்லாத தேரிலே காதல் எனும் அன்பை மட்டும் கொண்டு ஒரு உயிரற்ற வெறும் கூடு வருகின்றது என நந்திவர்மனுடைய நல் நகரில் வாழும் அழகிய நெற்றியினை உடைய என் காதலியிடம் சொல்லுங்கள் என மேகத்தை தூது விடுகின்றான்.*

*தி.சரவணமுத்துப்பிள்ளை தத்தை விடு தூது எனும் இலக்கியத்தை பாடியுள்ளார். தத்தை என்பது கிளி. காதலன் ஒருவன் தன்னைக் காதலித்த காதலி தன் பெற்றோர் சொற் கேட்டு தன்னை விட்டு பிரிந்து சென்றதையும், அவள் பெற்றோர் செய்து வைக்க விரும்பும் ஆடவனை திருமணம் செய்து கொள்ள உடன்பட்டதையும் அறிகின்றான். இந் நிலையில் தன் காதலியை மறக்க முடியாத தலைவன், தன் காதலியின் நலன் மீது அக்கறை கொண்டு கிளியின் வாயிலாக தன் உள்ளத்து உணர்வுகளையும், காதலியின் பிரிவால் தான் அடையும் துன்பம் என்பவற்றையும் தூதாக வெளிப்படுத்துகின்றான்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேன் ஓங்கு பும் பொதும்பர் செறிந்து பசும் தழை பரப்பி
வான் ஓங்கு தேமாவில் வாழும் பைங்கிளியை
மான் ஓங்கு மை விழி என் வஞ்சியிடைப் பைந்தொடிபால்
நான் ஈங்கு புகழும் மொழி நல்கிளியே கூறாயே
நங்கை அவள்பால் சென்று நலம்பெற நீ கூறாயே

அதாவது "தேன் நிறைந்த பூஞ்சோலையில் பசுமையான கிளைகளை கொண்டிருக்கும் மாமரத்தில் வாழும் பசும் கிளியே, மான் ஏங்கி நிற்கும் மை தீட்டப்பட்ட விழிகளையும், வஞ்சிக் கொடி போன்ற இடையினையும் கொண்ட என் காதலியிடம் நான் இங்கு கூறுபவற்றை சென்று கூறுவாயாக" என கிளியிடம் தலைவன் வேண்டுகிறான்.

மேலும், தன் காதலியிடம் தான் கொண்டுள்ள பெரும் காதலை அவள் இல்லாது விடின் தான் இறந்து விடுவேன் எனும் மனநிலையையும் கிளியிடம் கூறுகிறான். தன் காதலி அன்னம் போன்ற நடையுடையவள், அழகிய பொன்நிற மலர்க் கொம்பு போன்றவள். தன் இதயத் தாமரையில் வீற்றிருக்கும் இலக்குமி போன்றவள், அவள் தாமரை போன்ற முகம் பார்க்காது, அவளது கரும்பு போன்ற இனிய சொற்களை கேளாது தான் உயிர் வாழ மாட்டேன் - என கிளியிடம் இயம்பினான் தலைவன்.

அன்னம் நடை மை விழியாள் அம்பொன் மலர்க் கொம்பு அனையாள்
என் இதய தாமரைக்கு ஓர் இலக்குமியாம் பெண் அரசி
கன்னல்மொழி கேளாது கஞ்சமும் நோக்காது
மன்னிலத்து வாழேன் மடிந்திடுவான் மங்கையர்க்கு
மற்று இப்பழி சேரும் என மாழ்குவேன் பைங்கிளியே

மேலும், தலைவன் கிளியிடம், என் காதலியிடம் பின்வரும் மொழிகளையும் கூறுவாய். 'பெண்ணே, உன்னைக் காதலித்தே சோர்வடைகின்றான், மேலும் அவன் மெலிவானாகில் அவனது உடலில் உயிர் தங்கியிருக்காது, நான் உன்னிடம் அடைக்கலம் புகுந்தேன், என்னிடம் இரக்கம் காட்டுவாயாக ..........

கொங்கு அலர் புஞ் சோலை வளர் மாங்கிளியே கோதையிடம்
நங்காய் நின் காதலித்தே நலிவான் மெலிவானால்
தங்காது உயிர் என்றான் தான் நின் சரண் என்றான்
நங்காய் இரங்காய் எனவே நவில்வாய் பசுங் கிளியே
நாரியர் பால் என் நிலையை நவில்வாய் பசுங் கிளியே

என தன் நிலையை கூறுமாறு கிளியிடம் தலைவன் உரைக்கின்றான். நளவெண்பாவில் தூதாக அன்னம் அனுப்பப்படுகின்றது. நளனும், தமயந்தியும் தம் காதலுக்காக அன்னத்தையே மாறி மாறி தூதாக அனுப்பியுள்ளனர். மலர்ச் சோலை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒன்றில் சென்ற நளன் அங்கு ஓர் அன்னத்தை கண்டு அதனுடன் உரையாடுகின்றான். அன்னம் உனக்கு தகுந்த மங்கை தமயந்தி என்பதை உரைக்கின்றது. தமயந்தியின் அழகு நலன்களைக் கேட்ட நளன் தமயந்தியின் மீது காதல்வயப்பட்டு தன் உள்ளத்தை அவள்பால் பறி கொடுக்கின்றான். நளனது அந் நிலையினைக் கண்ட அன்னம் நான் உனது காதலை தமயந்தியிடம் சென்று உரைத்து எப்படியேனும் உன்னை அவளுடன் சேர்த்து வைப்பேன் எனக் கூறி தமயந்தியிடம் பறந்து செல்கின்றது.

அன்னமானது, தமயந்தியிடம் வந்து நளன் பற்றி உரைத்ததும் தமயந்தியும் நளன் மீது காதல் கொள்கின்றாள். தன் உள்ளம் தன்னை அறியாமலேயே நளனிடத்தில் சென்று விட்டதை உணர்கின்றாள். பின்னர் மனமானது துடிதுடித்து அன்னத்திடம் "இளமை பொருந்திய அழகிய அன்னமே, நான் கூறுபவற்றை சென்று நீ உரைத்தால் என் உயிரை எனக்கு விருப்பத்தோடு கொடுத்தாய் ஆவாய்".

'வாவி உறையும் மடவனமே! என்னுடைய
ஆவி உவந்தளித்தாய் ஆதியால். - காவினிடைத்
தேர்வேந்தற் கென்னிலைமை சென்றுரைத்தி' என்றுரைத்தாள்
பார்வேந்தன் பாவை பதைத்து

என மொழிந்தாள் தமயந்தி. இதனைக் கேட்ட அன்னம் தமயந்திக்கு ஆறுதல் கூறி தமயந்தியின் காதலை நளனிடம் வந்து உரைத்தது.

திருஞானசம்பந்தரும் தன் தேவார திருப்பதிகத்தில் தூது பற்றி பாடுகின்றார். சிவபெருமானிடத்தில் அன்பு கொண்டு தன்னை பெண்ணாக பாவித்து சிவபிரான் மீது காதல் கொண்டதாகவும், அக்காதலால் தான் அடைந்த நிலையினை ஓர் கிளியின் வாயிலாக தூதாக உரைக்கின்றார்.

சிறையாரும் மடக்கிளியே இங்கே வா தேனோடு பால்
முறையாலே உணத்தருவேன் மொய் பவளத் தொடுதரளம்
துறையாருங் கடல் தோணி புரத்தீசன் துளங்குமிளம்
பிறையாளன் திருநாமம் எனக்கொருகால் பேசாயோ.

அதாவது, அழகிய சிறகுகளை உடைய இளமையான கிளியே, என்னிடத்தில் வருவாயாக, நான் உனக்குத் தேனையும், பாலையும் உனக்கு உண்ணத்தருவேன். நீ திருத்தோணிபுரத்தில் உறையும் இளம்பிறை சூடிய பெருமானின் திருநாமத்தை ஒரு முறை என் காதுகள் குளிரக் பேசுவாயாக எனப் பாடுவது அப் படலாகும்.

கம்ப ராமாயணத்தில் இரண்டு தூதர்கள் வருகிறார்கள். ஒருவன் அனுமன். இன்னொருவன் அங்கதன். அங்கதன் போர்க் காலத்தில் ராமபிரானால் தூதனாக ராவணனிடம் அனுப்பப்படுகிறான். ஆனால், அனுமன் அப்படி அனுப்பட்டவன் அல்ல. போருக்கு முன்பே சீதாப் பிராட்டியைத் தேடி இலங்கை சென்றவன் அவன். அங்கே ரவணனை நேருக்குநேர் சந்தித்து ராமபிரானின் தூதனாகத் தானே விரும்பி இயங்கியவன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவ்வாறு அனுமன் இலங்கை சென்று திரும்பி வந்த பின் இராவணனுடன் யுத்தம் புரிவதற்கு ஆயத்தமாகவிருந்த போது இராவணன் நிலையறிவதற்கு ஓர் தூதை அனுப்புவதற்கு இராமன் தீர்மானிக்கின்றார். அதன் படி இராவணனிடம் தூது அனுப்ப வாலி மகன் அங்கதனை தெரிவு செய்கிறான் இராமன். மீண்டும் அனுமனை தூது அனுப்பினால் எம்மிடம் வலிமை கொண்ட வேறு வீரன் இல்லை என இராவணன் கருதக்கூடும் என்பதனால் அங்கதனை அழைத்து நீ இலங்கை வேந்தன் இரவணனிடம் சென்று நான் கூறும் செய்தியை உரைப்பாயாக என இராமன் வேண்டினார்.

'நம்பி! நீ நண்ணலார்பால் சென்று இரண்டு
உரையின் ஒன்றைச் செப்பினை தருதி' என்றான்.

மேலும், அங்கதனை நோக்கி, உயர்ந்த அணிகளையணிந்த சீதாதேவியைச் சிறையிலிருந்து விடுதலை செய்து தன்னுடைய உயிரை இழக்காமல் பெறுதல் நல்லதா? அல்லது உன்னுடைய பத்துத் தலைகளும் என் அம்புகளினால் (இரராமனின்) கண்டதுண்டமாக்கப்பட்டு போர்க்களத்தில் கிடப்பது நல்லதா? நான் (இராமன்) கூறியவற்றுள் இரண்டில் ஒன்றையே தேர்ந்து சொல்லுக, என்று இராவணனிடம் கூறிவருக என்றான் இராமன்.

ஏந்திழையாளை விட்டுத்
தன் உயிர் பெறுதல் நன்றோ?
அன்று எனின் தலைகள் பத்தும்
சின்ன பின்னங்கள் செய்ய
செருக்களம் சேர்தல் நன்றோ?
சொன்னவை இரண்டின் ஒன்றே
துணிக எனச் சொல்லிடு என்றான்

எனக் கம்பர் அந்நிலையினை காட்டுகின்றார். மகாபாரதத்தில் கிருஷ்ணன் தூதுச் சுருக்கம் எனும் பகுதி தூதுப் பண்பினை எடுத்துக் காட்டும் இடமாகும். பாண்டவர்களில் மூத்தவரான தருமன் சாம, தான, தண்ட, பேதங்களில் தேர்ச்சி பெற்றவன் கண்ணன் என்பதாலும் பாண்டவர்களிடம் அன்பு கொண்டவன் என்பதாலும் கௌரவர்களில் துரியோதனனிடம் கண்ணனைத் தூது அனுப்புகின்றார்.

நீ தூது நடந்து அருளி எமது நினைவு
அவர்க்கு உரைத்தல் நினைவின் வண்ணம் ....

என கண்ணனைப் பார்த்து கூறுகின்றான் தருமன்.

மேலும், கௌரவர்களிடம் சென்று குரு நட்டில் தமக்கான பங்கினை பெறும் படியும், அதைத் தருவதற்கு துரியோதனன் மறுத்தால் ஐந்து ஊர்களைப் பெறுமாறும், அதையும் தர மறுத்தால் ஐந்து இல்லங்களைக் கேட்கும் படியும் அதையும் மறுத்தால் போரினை வேண்டி வருக என கண்ணனிடம் உரைக்கின்றார் தருமர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முந்து ஊர் வெம் கொடியோன் மூதூரில்

நடந்து உழவர் முன்றில் தோறும்

நந்து ஊரும் புனல் நாட்டின் திறம் வேண்டு

நாடு ஒன்றும் நல்கான் ஆகில்

ஐந்து ஊர் வேண்டு அவை இல் எனில் ஐந்து இலம் வேண்டு

அவை மறுத்தால் அடு போர் வேண்டு

கிந்தூரத் திலக நுதல் சிந்துரத்தின்

மருப்பு ஒசித்த செங்கண் மாலே.

எனும் பாடலில் வில்லிபுத்தூராழ்வார் அந்நிலையினை தெளிவுறுத்துகின்றார்.

சத்தி முற்றப்புலவர் பசியும், குளிரும் தன்னை வாட்ட நாரையை அழைத்து தன் மனைவியிடம் தூது விட்டமையை அனைவரும் நன்கு அறிவர். அப் புலவர் நாரையிடம், பனங் கிழங்கை பிளந்தார் போல் அலகு கொண்ட நாரையே நீயும் உன் இல்லாளும் தென் திசையில் விளையாடிக் களைத்து விட்டு வடக்கு திசை வழியே செல்லும் போது சத்திமுத்தம்; என்னும் எங்கள் ஊர் குலத்தினில் தங்கி சற்று இளைப்பாறி கொள்ளுங்கள். அந்த சமயம் பொருள் ஈட்டச் சென்ற என் தலைவன் எப்போது வருவான் என மழை பெய்து நனைந்து போன சுவர் இருக்கும் கூரை வீட்டில், தலைவன் வரும் சேதியை அறிவிக்கும் முகமாக வீட்டுச் சுவர் மீது உள்ள பல்லியையே பார்த்திருக்கும் என் மனைவியிடம் சொல்லுங்கள். மன்னனைப் பார்க்க வந்த நேரம் இருண்டு போனதால், இந்த மதுரையம் பதியில் ஓர் மூலையில் உள்ள சத்திரத்தில் ஆடை இல்லாமல் குளிரினால் கை கால்களை கட்டிக் கொண்டு பெட்டிக்குள் இருக்கும் ஒரு பாம்பு போல இருக்கின்ற உன் தலைவனை கண்டேன் என்று கூறுவாயா?

"நாராய் நாராய் செங்கால் நாராய்

பழம்படு பனையின் கிழங்கு பிளந்தன்ன

பவளக் கூர்வாய் செங்கால் நாராய்

நீயும் நின் பெடையும் தென் திசைக்கு மரியாடி

வடதிசைக்கு ஏகுவீராயின்

எம்மூர் சத்திமுத்த வாவியுள் தங்கி

நனைசுவர் கூரை கனைகுரல் பல்லி

பாடு பாத்திருக்கும் எம் மனைவியைக் கண்டு

எங்கோன் மாறன் வழுதிக் கூடலில்

ஆடையின்றி வாடையில் மெலிந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கையது கொண்டு மெய்யது பொத்தி
காலது கொண்டு மேலது தழீஇப்
பேழையில் இருக்கும் பாம்பென உயிர்க்கும்
ஏழையாளனைக் கண்டனம் எனுமே''

என்று நாரை விடு தூதாக அமைந்துள்ள பொருள் பொதிந்த இந்த பாடல்.

இவை மட்டுமன்றி, சீவகசிந்தாமணியில் நாயகியர் எட்டுப் பேரில் குணமாலை என்பவள் கிளியை சீவகனுக்கு தூது விடுகின்றாள். மேலும், சங்க இலக்கியங்களான குறந்தொகை (பாடல் 266, 392) நற்றிணை (பாடல் 54,70,83, 102, 277, 376), புறநானூறு முதலான இலக்கியங்களில் தூது பற்றிய செய்தி பேசப்பட்டுள்ளது. மேலும், உமாபதிச் சிவாச்சாரியரால் நெஞ்சு விடு தூது, இணுவில் சின்னத்தம்பிப் புலவரால் பஞ்சவன்னத் தூது என பல வகையான தூதுக்கள் எமது தமிழ் இலக்கியங்களில் இடம்பெற்றுள்ளன.

இவ்வாறு தூதுப் பண்பானது இலக்கிய இரசனையையும், கலை உணர்வையும், இலக்கிய நயத்தையும் வாசகர் உள்ளங்களில் ஏற்படுத்துகின்றன என்பதில் துளியளவும் ஐயமில்லை.

**உசாத்துணை நூல்கள்**


01. நலாயிர திவ்ய பிரபந்தம்

02. நளவெண்பா

03. நந்திக் கம்பகம்

04. வில்லிபாரதம்



**இ.நிஷாந்தன்**

**ஆசிரியர்**

**கிளி/இராமநாதபுரம்.ம.வி.**


**இதயத் துடிப்பைச் செய்யும் வேதிப் பொருள் - அசிட்டில் சோலைன்**

**சைலண்ட் கில்லர் எனப்படும் நோய் - இரத்த அழுத்த நோய்**

**இம்மியூனிட்டி என்றால் - எதிர்பபாற்றல்**

**பாராமென்சியா என்றால் - மிகச் சிறந்த ஞாபகம்**




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மனித வாழ்வு

பிறப்பு எனும் நான்கெழுத்தால் உற்பவித்து,

பாடசாலை எனும் நான்கெழுத்தால் பழக்கம் கற்று,

நண்பர் எனும் நான்கெழுத்தால் நட்புடன் பழகி,

படிப்பு எனும் நான்கெழுத்தால் பசியும் மறந்து,

களிப்பு எனும் நான்கெழுத்தால் கல்வியும் முடித்து,

வாழ்க்கை எனும் நான்கெழுத்தால் வாழ்வும் பெற்று,

மக்கள் எனும் நான்கெழுத்தால் பிள்ளைகள் பெற்று,

மகிழ்வு எனும் நான்கெழுத்தால் மனிதநேயம் காத்து,

ஆதரவு எனும் நான்கெழுத்தால் ஆரவாரமற்று அடக்கமாய்,

இறப்பு எனும் நான்கெழுத்தால் இறைவனடி சேர்தலே,

மனிதன் எனும் நான்கெழுத்து உயிரின் வாழ்வு வட்டமாகும்.

**நமது உடலில் மிகவும் கெட்டியான தோல் எங்குள்ளது?**

**பாதத்தில்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கவலையற்ற காலம்

கள்ளமில்லா வயதினிலே
களிப்போடு கைகோர்த்து
கலவன் பாடசாலை சென்று
கவலைகள் மறந்து

சிட்டுக் குருவி போல
சிறகுகளை விரித்தே
சின்னப் பிள்ளைகள் நாம்
சிறிய கைகளை விரித்து

பறந்து திரிந்து
பரவசப் பட்டு
பச்சை வெளியெங்கும்
பட்சியெனப் பறந்து

நண்பர் கூட்டமாய்
நட்புக்கரம் நீட்டி
நடப்பவற்றைக் கண்டும்
நடுங்கியபடி நின்றும்

மிரட்சியோடு நோக்கி
மிரளவும் செய்து
மிக்கத் தாழ்மையுடன்
மிகப் பெரியவரை மதித்தும்

மாணவர் நாம்
மகிழ்வுடன் கற்று
மகனென நல் மகளென
மரியாதையுடன் நடந்து

பாடசாலைக்குப் பெருமை சேர்த்து
பாலகர் நம் வாழ்வினை
பக்குவமாய் பஞ்சு போல
பாடசாலை வாழ்வை பயனுள்ளதாக்குவோம்.

## மனித வாழ்வு

பிறப்பு எனும் நான்கெழுத்தால் உற்பவித்து
பாடசாலை எனும் நான்கெழுத்தால் பழக்கம் கற்று
நண்பர் எனும் நான்கெழுத்தால் நட்புடன் பழகி
படிப்பு எனும் நான் கெழுத்தால் பழக்கம் கற்று
களிப்பு எனும் நான்கெழுத்தால் பசியும் மறந்து
வாழ்க்கை எனும் நான்கெழுத்தால் வாழ்வும் பெற்று
மக்கள் எனும் நான்கெழுத்தால் பிள்ளைகள் பெற்று
மகிழ்வு எனும் நான்கெழுத்தால் மனிதநேயம் காத்து
ஆதரவு எனும் நான்கெழுத்தால் ஆரவாரமற்று அடக்கமாய்
திறப்பு எனும் நான்கெழுத்தால் இறைவனடி சேர்தலே
மனிதன் எனும் நான்கெழுத்து உயிரின் வாழ்வு வட்டமாகும்.

திருமதி.ஜோன் ஜெகநாதன் பரிமளகாந்தி
ஆசிரியர்
கிளி/இராமநாதபுரம்.ம.வி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நீயும் ஒரு நாள்...

பார்த்துப் பார்த்துப் பாலூட்டி
பசியாற சோறூட்டி
பார்போற்ற வாழ்ந்திடவே
பசியோடு தவமிருப்பாள்

பஞ்சமதில் மூழ்கிடினும்
பஞ்சமிலாக் கனவுகளோடு
நெஞ்சச் சுமைகளையும்
வங்கியின் சேமிப்பாக்கிடுவாள்

சுமைகளையும் சுகமாகத் தாங்கி
சுத்தமான கற்றைச் சுவாசிக்க
சுற்றத்தையும் வெறுத்திடுவாள்
சுதந்திரமும் இழந்திடுவாள்

அவனியிலே தன்பிள்ளை
பவனி வரவே பாடுபட்டு
பல்கலையும் கற்றிடவே
பல்கலைக் கழகம் அனுப்பிடுவாள்

பிள்ளை கேட்பவை யாவையும்
வள்ளல் போல் அளித்திடவே
உள்ளத்து வேட்கைகளை
தள்ளித்தான் வைத்திடுவாள்

தன்பிள்ளை வாழ்விற்காய்
எண்ணிலா கனவுகளை
தன்னோடு தான் சுமந்து
மண்மீது உலவிடுவாள்

என்பிள்ளை என்றென்றும்
விண்ணோங்கு புகழுடனே
விஞ்ஞானியாய் மெய்ஞ்ஞானியாய்
வாண்மையுடன் வாழ வாழ்வளிப்பாள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தன் எண்ணங்கள் பலதையும்
புகழ்கின்றாள் தாயவள்
தன்பிள்ளை என்றென்றும்
புகழுடன் வாழ்ந்திடவே ஏங்குகின்றாள்

பொறிக்கித் தனம் இல்லா பொறியியலாளனாய்
அராஜகம் இல்லா ஆட்சியாளனாய்
அவனியில் வாழ்ந்திடவே அன்னையவள் எண்ணிடுவாள்
அன்பைப் பொழிந்திடுவாள் அயராது உழைத்திடுவாள்

குடிகள் நலமாய் வாழவே
குன்றின் மணியாய் விளங்கிடு
குடிகாரனாய் மாறி
குன்றி விடாதே என் மகனே

பாடசாலைப் பையில்
பாடப் புத்தகமே வைத்திடு
பாழடிக்கும் குண்டுகளாய்
கஞ்சாவை வைக்காதே

பண்பை வளர்க்கவே பாடுபட்டேன்
பறாம் பாக்கை உண்ணவல்ல மகனே
நெஞ்சில் உரமும் நேர்மையுமே
நான் விதைத்தேன் உன்னிடத்தில்

கஞ்சாவும் அபினும் எப்படி வந்தது
பொன்னான உன் வாழ்வில்
என் கனவுக்கு குண்டு போட்டு
ரணமாக்காதே என் மகனே

பேஸ்புக்கும் இன்ரநெற்றும்
போனோடு கொண்டலைந்து
பேயாக அலைகின்றாயோ
நாயாக என்னைப் பார்க்கின்றாயோ!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மதுவுக்கு சோரம் போய் விட்டாயோ!
மாதாவை சிறிதேனும் எண்ணாது
மகவுக்காய் வாழுகின்ற எனக்கு
மகத்தான பரிசளித்தாயோ!

மடிமீது நீ உதித்தவேளை
பேருவகை நான் கொண்டேனே
கருவிலிருந்து வெளியேறிய
பெருமவஸ்தை கூட மறந்து.

பத்து மாதம் சுமந்த சுகங்கள்
பத்து இரண்டு வருமுன்னே
பறிபோனது ஏனோ என் மகனே
பாவி என் செய்வேனோ

படிக்கத் தானே பள்ளி அனுப்பினேன்
தண்ணி அடிக்க ஏன் கற்றுக் கொண்டாய்
புகைப் பிடிக்கும் உன்னிலை எண்ணி
கண்ணி வெடியாக வெடிக்குதடா என் மனம்

கத்தி வெட்டும் குத்துச் சண்டையுமா
உன் வாழ்வின் எதிர்காலம்?
பொத்தி வைத்த ஆசைகளெல்லாம்
உன் செயலால் வேகுதடா என் மகனே

பாடசாலையில் தடம் பதிக்கும்
உன் பாதச் சுவடுகள் இன்று
மாஞ்சோலையிலும் மரத்தடியிலும்
பள்ளி கொள்வதேன் சொல்லு?

பச்சிளம் பாலகனாய்த் தானே
பார்க்கிறேன் இன்றும் உன்னை
பாராமுகமேன் மகனே
பாவியவள் எண்ணம் பாராய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என் கனவுகளுக்கு அர்த்தம் சொல்
உன் வாழ்வுக்கது அத்திவாரம்
உன் செயல்களில் இல்லை
நான் கண்ட எதிர்காலம்

உள்ளம் குமுறுதடா
உதிரம் கொட்டுதடா
உதவாக் கரையாய் நீ
உருவெடுத்த நிலை கண்டு

நீயும் ஒருநாள் தாயாய் தந்தையாய்
வாழும் நாள் வருமே மகனே!
அப்போது உணர்வாய் நீ
இப்போது நான் பட்ட துயரை

திருமதி.சிகௌ.தவேஸ்வரன்
ஆசிரியை
கிளி/இராமநாதபுரம்.ம.வி.

இதயத்தை சுற்றியுள்ள உறை
பெர்கார்டியம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பாடசாலையை அடிப்படையாகக் கொண்ட கணிப்பீட்டு வேலைத்திட்டம்

கல்விச் செயற்பாடுகள் காலத்தின் தேவைக்கு ஏற்ப மறுசீரமைக்கப்பட்டு கற்றல் கற்பித்தல் செயற்பாடுகள் வினைதிறன் மிக்கவையாக அமைய வேண்டும் என்பது சமூகத்தின் எதிர்பார்ப்பாக காணப்படுகின்றது. இதற்கிணங்கவே கல்விச்செயற்பாடுகள் மறுசீரமைக்கப்படுகின்றது.

பாடசாலைக் கல்விச் செயற்பாடுகளில் கணிப்பீடு என்பது முக்கியமான விடயமாகும். பாடசாலையை அடிப்படையாகக் கொண்ட வேலைத்திட்டம் 1998ம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டதுடன் 2004ம் ஆண்டு 6-13 தரங்கள் வரையிலும் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன.

**பாடசாலையை அடிப்படையாகக் கொண்ட கணிப்பீடு என்றால் என்ன?**

பாடசாலையை அடிப்படையாகக் கொண்ட கணிப்பீடு என்பது வகுப்பறைக்குள் கற்றல் கற்பித்தல் செயற்பாடுகள் நடைபெறுவதற்கிடையில் மேற்கொள்ளப்படும் செயற்பாடொன்றாகும். குறிப்பிட்ட மதிப்பீடுகளை எழுத்துப் பரீட்சை ஒன்றின் மூலம் மதிப்பிட முடியாத கற்கைத்திறனை உறுதியாக்கிக்கொள்வதைப் பற்றியதான கணிப்பீட்டை குறித்து நிற்கின்றது. இக் கணிப்பீட்டு முறை என்பது வெறுமனே எழுத்துப் பரீட்சை முறையல்ல மாணவர்கள் கற்கும் போது அவர்களுடைய இயலுமை மற்றும் இயலாமையினை இனங்கண்டு எதிர்பார்க்கும் தேர்ச்சி மட்டத்திற்கு பிள்ளைகளைக் கொண்டு செல்லக்கூடிய மதிப்பீட்டு செயற்பாடாகும்.

**பாடசாலையை அடிப்படையாகக் கொண்ட கணிப்பீட்டின் இலக்குகள்**

- கற்றல் கற்பித்தல் செயற்பாடுகளில் மாணவர் தேர்ச்சியை அபிவிருத்தி செய்தல்.
- தனி மற்றும் குழுவாக மாணவர்களின் கற்றல் சந்தர்ப்பங்களை இனங்கண்டு தேவையானவற்றை பெற்றுக்கொடுத்து எதிர்பார்க்கப்படும் தேர்ச்சி மட்டத்தை அடையச்செய்தல்.
- எழுத்து மூலம் கணிப்பிடமுடியாத மாணவர் திறமையை மதிப்பிடல்.
- மாணவர்களின் இனங்காணப்பட்ட விசேட திறமைகளை மேலும் அபிவிருத்தி செய்தல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- தவணை, பொதுப் பரீட்சைக்கு தோற்றமுடியாத சந்தர்ப்பத்தில் மாணவர்களை பற்றி தீர்மானம் மேற்கொள்வதற்கு
- மாறுபட்ட கணிப்பீட்டு வகைகளை பயன்படுத்துவதனூடாக பல்வேறுபட்ட செயற்பாடுகளில் மாணவர்களை ஊக்குவித்தல்.
- மாணவரை கணிப்பீடு செய்யும் தரவுகளை அடிப்படையாகக் கொண்டு பெற்றோருடன் தொடர்பாடலை ஏற்படுத்துதல்.
- ஆசிரியர்களின் கற்றல்,கற்பித்தல் செயற்பாட்டின் வினைதிறனை அதிகரித்தல்.
- ஆசிரியர்களை கணிப்பீட்டு செயற்பாட்டில் இணைத்து கொள்வதனூடாக அவர்களிக் வினைதிறனை விருத்தி செய்தல்.

**கணிப்பீட்டின் மூலம் மாணவர்கள் அடையும் நன்மைகள்**

- மாணவர் தேர்ச்சி மட்டம் பற்றிய புரிந்துணர்வை ஏற்படுத்துவதற்கு.
- எழுத்துமூல பரீட்சைப் புள்ளிக்கு மேலதிகமாக தேர்ச்சி மட்டத்துடன் கூடிய விரிவான தகவகளைப் பெறுவதற்கு.
- மாணவர் தங்களுடைய பலம், பலவீனங்களை அறிந்து கொள்வதற்கு..
- மாணவர்களின் சுயகற்றலை ஊக்குவிப்பதற்கு.
- இலகுவாக பொதுப்பரீட்சைக்கு தயாராகுவதற்கு.

**பாடசாலையை அடிப்படையாக கொண்ட கணிப்பீட்டு சந்தர்ப்பங்களை தெரிவுசெய்தல்**

பாடசாலையை அடிப்படையாகக் கொண்ட கணிப்பீட்டுச்செயற்பாட்டின் போது கற்றல் கற்பித்தல் செயற்பாட்டின் தர வளர்ச்சியை உறுதி செய்தல் வேண்டும். இதன் மூலம் பாடசாலையினூடாக பெற்றுக்கொடுக்கப்படும் பெறுபேறுகளில் தரவிருத்தியும் போதுமான வளர்ச்சியும் ஏற்படும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**பாடசாலையை அடிப்படையாகக் கொண்ட கணிப்பீட்டு வேலைத்திட்டத்தின் கீழ்**

- ஒவ்வொரு பாடசாலைக்கும் பொருத்தமான விதத்தில் கணிப்பீட்டை திட்டமிடல்.

- மாணவர்களின் கற்கை நிலையமான வகுப்பறை மற்றும் அதற்கு வெளிச்சூழல் மாணவரின் மதிப்பீட்டு நிலையமாக அமைவது பற்றி கவனம் செலுத்துதல்.
- குறித்த வேலைத்திட்டத்தை முழு நாட்டிற்கும் பொதுவான செயற்றிட்டமில்லாது ஒவ்வொரு பாடசாலைக்கும் பொருத்தமான விதத்தில் சிறிய திட்டமாக அமைதல் என்பன முக்கியத்துவம் மிக்கதாக காணப்படுகின்றது. 2017ம் ஆண்டு புதிய கணிப்பீடுத்திட்டத்தின் கீழ் அனைத்து தரங்களிலும் (6-13) தவணை ஒன்றிற்காக ஒரு கணிப்பீட்டினை மேற்கொண்டு தவணை அறிக்கையிலேயே பதிவிட வேண்டும்.

**பாடசாலைகளில் பாடசாலையை அடிப்படையாகக் கொண்ட கணிப்பீட்டு திட்ட நடைமுறைகள்**

பாடசாலைகளிலே கல்வித்தர மேம்பாட்டினை விருத்தி செய்யும் நோக்கில் அறிமுகப்படுத்தப்பட்ட கணிப்பீட்டு முதல் திட்டமானது 1998ம் ஆண்டிலிருந்து நடைமுறைப்படுத்தப்படுகின்றது. இத்திட்டத்திலும் புதிய திருத்தங்கள் ஏற்படுத்தப்பட்டு 2017ம் ஆண்ட யூன் மாதம் தொடக்கம் சுற்றுநிருப இல 23 இன் கீழ் 2017 அமைவாக கணிப்பீட்டு செயற்பாடுகள் மேற்கொள்ளப்படுகின்றன.

கணிப்பீட்டு செயற்பாடுகள் பாடசாலையை அடிப்படையாகக் கொண்ட ஆசிரியர்களினாலேயே திட்டமிட்டு நடைமுறைப்படுத்தப்படுகின்றமையானது மிகப் பொருத்தமாக கணிப்பீட்டு சந்தர்ப்பங்களை தெரிவு செய்வதற்கும் மாணவர் கற்ற வகையில் அதனை செயற்படுத்துவதற்கும் ஆசிரியர்களுக்கும் சந்தர்ப்பம் கிடைத்துள்ளன இதனூடாக மாணவரின் கல்வித்தர விருத்தியை சிறப்பாகவும் வினைத்திறனாகவும் மேற்கொள்ள முடியும்.

ஆயினும் பாடசாலையிலே ஆசிரியர்களினால் பொருத்தமற்ற முறையிலும் கணிப்பீட்டு நடைமுறைகள் மேற்கொள்ளப்படுகின்றன. இதனால் அகவயத்தன்மையுடைய செயற்பாடுகள் வகுப்பறையில் இடம்பெறுகின்றன. இவ்வாறு செயற்பாடுகள் இடம்பெறுவதற்கு நடைமுறையில் பல பிரச்சினைகள் காணப்படுவதும் காரணமாகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- மாணவர்களின் ஒழுங்கீனமான வரவு கணிப்பீட்டு செயற்பாடுகளுக்கு மிக முக்கியமானது மாணவர்களின் வரவாகும். அனைத்து மாணவர்களும் தவறாது சமூகமளிக்கும் போதே அகவயத் தன்மையற்ற கணிப்பீட்டு செயற்பாடு இடம்பெறும். குறிப்பாக கிராமப்புறப் பாடசாலைகளில் மாணவர் வரவு குறைவாகக் காணப்படுகின்றது.

- ஆசிரியரின் வேலைப்பளு அதிகரித்தல். கணிப்பீட்டு வேலைத்திட்டங்கள் பாடசாலை மட்டத்தில் திட்டமிட்டு செயற்படுத்தப்படுவதால் ஆசிரியர் வேலைப்பளு அதிகரிப்பின்றது. வகுப்பறைச்செயற்பாடுகளுக்கு மேலதிகமாக பதிவேடுகளை மேற்கொள்ளவென எழுத்து வேலைகளும் காகிதாதி வேலைகளும் கோவைப்படுத்தல்களும் அதிகரித்தே காணப்படுகின்றது.
- ஆசிரியர்களிடம் கணிப்பீட்டுச்செயற்பாடுகளை நடைமுறைப்படுத்தல் பற்றிய விளக்கமின்மை காணப்படுகின்றது.
- புதிதாக உள்ளீர்ப்புச்செய்யப்படும் ஆசிரியர்களுக்கு கணிப்பீட்டு நடைமுறைப்படுத்தல் தொடர்பாக போதியளவு பயிற்சி வழங்கப்படுவதில்லை.

இவ்வாறான பல பிரச்சினைகள் ஆசிரியர்களினால் எதிர்நோக்கப்படுவதால் பாடசாலை மட்ட கணிப்பீட்டுத் திட்டத்தினூடாக எதிர்பார்க்கப்படும் இலக்குகள் வினைத்திறனாக அடையப்படவில்லலை என்பதே அனைவரதும் எண்ணக்கருத்தாகும்.

தற்போது 2017ம் ஆண்டிலிருந்து நடைமுறைப்படுத்தப்படும் கணிப்பீட்டுச் செயற்பாட்டிலே ஆசிரியரது வேலைப்பளுவை குறைக்கும் வகையில் கணிப்பீட்டுத் திட்ட நடைமுறைப்படுத்தல்கள் காணப்படுகின்றன. எனவே ஆசிரியர்கள் பாடசாலை மட்ட கணிப்பீட்டு வேலைத்திட்டம் பற்றிய முழுமையான தகவல்களைப்பெற்று அதற்கேற்ற வகையில் வினைத்திறனாக செயற்படுவதனூடாக கற்றல்-கற்பித்தல் தர விருத்தியையும் அதிகரித்து மாணவர் தேர்ச்சி மட்டங்களையும் அதிகரிக்க முடியும். இதனால் ஆசிரியர் செயற்பாட்டில் வாண்மை விருத்தியும் அதிகரிக்கும் ஆசிரியர்கள் தமது பிரதேசங்கள், பாடசாலைகள், மாணவர்களை கருத்திலக்கொண்டு அதற்கேற்ற வகையில் கணிப்பீட்டு சந்தர்ப்பங்களை தெரிவு செய்து நடைமுறைப்படுத்துவதற்கு உரிய திட்டமிடல்களை மேற்கொள்ள கடப்பாடும் பொறுப்புமுடையவர்களாவர்.

*திருமதி.க.லக்சாந்தினி*
(BBA,PGDE)
*ஆசிரியர்*
*கிளி/இராமநாதபுரம் ம.வி*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# Importance of Education

Home is the first palce of Education and parents are The first teacher in everyone's life. In our childhood, we get first impression of Education from our home especially from our mother our parents let us know the importance of good education in our life. when we become three or four years old, we are sent to the school for the proper,regular and sequential studywhere we have to do many excms and then we get a pass certificate for one class. slowly we go a head by passing our one by one class unit we get passed successfully till 13 th standard. Then start the preparation for getting admission to the technical or professional degree which is called as higher study.

Higher study is very necessary for all to get good and technical job in life. we bcome well educated person in life by the efforts of our parents and teachers. they are our real well wishes of us who helps us in leading our life towards success. now a days many governmental programmes have been implemented to enhance the education system , so that everyone may get access to the proper education. lets of advertisement are shown on television and news to make people a ware of the advantages and importance of education especially in the rural areas as people are backward or rural areas do not want to study because of poorness and improper understanding to wards education Earlies the education systems was so tough and costly. poor people were not able to get higher studies affer the 13 th standard. there was so much difference and in equality in the society among people. there are many steps taken and implemented by the srilankan government to make education system accessible for all levels of people. people from back ward areas, poor people and people living good life may get equal access to the education and success in the future well educated people make the real pillar of the country and lead it a head in the future. so education is the tool which can make every impossible thing possible in the life, society and nation.

**Sister. Jasintha**

**Teacher**

**Kn/Ramanathapuram m.v**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# Dr. A.P.J. Abdulkalam

Not all people in the world get the tribute of being loved by everyone. Dr Abdul kalam was one such person whose marks remain in everyone's hearts.

Dr. A.P.J Abdulkalam was a missile man of india he is popularly known as the people's president of India. His full name was AvulPakirJainulabdeent Abdulkalam He was a great scientist and 11th president of India. He was born in Rameswaram,tamil Nadu, in a poor Tamil Muslim family on 15th of October in 1931 to the Jainulabudeen and Ashiamma. He started supporting his family financially in his early age. He has completed his graduation from the St. Joseph's college, Thiruchirappalli in 1954 and Aerospace engineering from the madras Institute of Technology, Chennai in 1960.

He joined DRDO as a senior scientific assistant in 1958 where a small team developing a prototype hover – craft was headed by him later he joined the Indian Space Research organization (ISRO) in 1969 as a project director. He was the first scientist who served as the president of India from 2002 – 2007 without any political background.

For his excellence and brilliance he was awarded the prestigious Bharat Ratna in 1998, Padma Vibhushan in 1990, and Padma Bhushan in 1981.

kalam as an author is inspiration to the youngsters. His books are very inspirational and most famous among them were "India 2012" , "Ignited Minds", Mission India", "Wings of fire" and " Luminous Sparks" Through this, he tried to create a vision to the youngsters of the country.

Kalam was mainly interested in work. He was not interested in going abroad. He wanted to serve his mother land first. Ever since becoming the head of the Indian state he had been interaction with children all over the country. His advice to the youngster of the nation was to "dream dream and convert these in to thoughts and later in to actions"

Such a Valuable soul met its end due to a cardiac accident on 27th July 2015, while delivering a lecture at the Indian Institute of management, Shilling.

**Mrs.S.Menaga**
**Teacher**
**Kn/Ramanathan Maha Vidyalayam**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கிளி/இராமநாதபுரம் மகா வித்தியாலயத்தின் சாரணிய செயற்பாடு

கிளிநொச்சி இரமநாதபுரம் மகா வித்தியாலயத்தில் 22.02.1990ம் திகதி வியாழக்கிழமை சாரணர் அங்குரார்ப்பண விழா இடம்பெற்றது. இத்தினத்தில் சாரணர்களுக்கு சின்னம் சூட்டும் நிகழ்வும் இடம் பெற்றது.

1989 ஆம் ஆண்டு எனக்கு இப்பாடசாலையில் தொண்டர் ஆசிரியராக சேவையாற்றும் வாய்ப்பு கிடைத்தது அப்போது திரு. த. இராமநாதன் அவர்கள் அதிபராக கடமையாற்றிக் கொண்டிருந்தார். அன்பான அதிபர், ஆசிரியர்கள் நற்பண்புள்ள, பாசமான மாணவர்கள் ஆகியோருடன் பழகும் வாய்ப்பு கிடைத்தது இவர்களின் செயற்பாடுகள் என்னைக் கவர்ந்தன. நல்ல கீழ்பணிவுள்ள மாணவர்களாகவும் இருந்தார்கள். இதனால் இப்பாடசாலையில் சாரணர் இயக்கத்தைஆரம்பிக்க வேண்டும் என எண்ணிஅதிபரிடம் அனுமதி கேட்டேன். அவரும் தனது மனப்பூர்வமான சம்மதத்தைத் தெரிவித்தார் அத்துடன் ஆசிரியர்களாகக் கடமையாற்றிக் கொண்டிருந்த திரு. ஆ. கருணாநிதி சாரணர் ஆசிரியர் பயிற்சி பெற்றிருந்த திரு. கோ. செல்வராசா, திரு.கே.பாலகெங்காதரன் ஆகியோரும் உப அதிபர் திரு வே. சிவசுந்தரம் அவர்களும் எனக்கு பூரண ஒத்துழைப்பை வழங்கி இருந்தனர். சாரணர்களுக்கான பயிற்சியளிப்பதில் என்னுடன் ஆசிரியர் திரு.கே.பாலகெங்காதரன் அவர்களும், ஆசிரியர் திரு.கோ.செல்வராசா அவர்களும் இணைந்து கொண்டார்கள் தொடர்ச்சியான பயிற்சியின் பின் சாரணர்களுக்கான முதலாவது சின்னம் சூட்டும் நிகழ்வு 22.02.1990 ஆம் ஆண்டு வியாழக்கிழமை இடம்பெற்றது. இன்றைய தினமே சாரணர் அங்குரார்ப்பண விழாவும் நடைபெற்றது.

தொடர்ந்து கிளிநொச்சி மாவட்டத்தில் நடைபெறும் போட்டி நிகழ்வுகளிலும் பொது நிகழ்வுகளிலும் இராமநாதபுரம் ம.வி சாரணர்கள் சேவையில் ஈடுபட்டனர். 20.04.1990 இல் கிளிநொச்சிகல்விஅதிகாரிதிரு. நா.பொன்சபாபதிசேர் அவர்களின் ஒழுங்குபடுத்தலில் எமது பாடசாலைச் சாரணர்கள் 30 பேரும், கண்டாவளை ம.வி சாரணர்களும், பொறுப்பாசிரியர் திரு.ப.சோமசுந்தரம் அவர்களும் இரணைதீவு றோ.கவித்தியாலயத்தில் சாரணர் பாசறை ஒன்றை நடாத்தினோம். அத்துடன் அங்குள்ள சாரணர்களுக்கும் பயிற்சியும் அளித்தோம்.

இவ்வாறு சாரணர் பாசறை வருடாந்தம் நடத்தப்பட்டு வந்தது. தொடர்ச்சியாக சாரணர்களுக்கு பயிற்சிகள் வழங்கப்பட்டு தேர்ச்சிச் சின்னங்களும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வழங்கப்பட்டன. இராமநாதன் அதிபரின் திடீர் மறைவிற்கு பின் திரு.வை. தனிநாயகம் அதிபர் அவர்கள் அதிபராக பொறுப்பேற்றார். இவரதுகாலத்திலும் சாரணியம் சிறப்பாக செயற்பட்டது இவரும் தனது பூரண ஒத்துழைப்பை வழங்கினார் இவரது காலத்திலும் சாரணர் பயிற்ச்சிப்பாசறை சிறப்பாக நடாத்தப்பட்டது. கிளி/வன்னேரிக்குளம் ம.வியில் நடைபெற்ற மாவட்டப்பாசறை விழாவிலும் கலந்து கொண்டோம். பல மாவட்டவிளையாட்டுப் போட்டிகள் ஆலயங்கள் போன்றவற்றிலும் சாரணர்கள் திறமையாக செயற்பட்டு பலரதும் பாரட்டுக்களையும் பெற்றனர். ஊற்றுப் புலம் பகுதியில் காடுவெட்டி இடம்பெயர்ந்து வந்தவர்களை குடியமர்த்தும் செயற்பாட்டிலும் அப்போதைய கோட்டக்கல்விப் பணிப்பாளர் திரு. நா. பொன்சபாபதி அவர்களின் தலைமையில் பல ஆசிரியர்களும் செயற்பட்டனர். இவையெல்லாம் ஒருவரலாற்றுப் பதிவாகும். தொடர்ந்து திரு.மு.சிவசாமிஅதிபர் அவர்கள் அதிபராக இருந்தகால கட்டத்திலும் சாரணியம் மிகவும் சிறப்பாக இயங்கிக் கொண்டிருந்தது. இவ்வதிபரும் தனது முழுமையான ஒத்துழைப்பை வழங்கியிருந்தார்.

திரு.மு.சிவசாமி அதிபரைத் தொடர்ந்து எமது பாடசாலைக்கு திரு.வே.க.இரத்தினகுமார் அவர்கள் அதிபராக கடமையேற்றார். நாட்டில் ஏற்பட்ட அசாதாரண நிலையால் யாழில் இருந்து இடம் பெயர்ந்து வந்தவர்களில் அவரும் ஒருவர் இவரது வருகை எமது பாடசாலைக்கு புதுப்பொலிவுடன் பல சாதனைகயை நிலைநாட்ட வழி வகுத்தது. இவர் சிறந்த நிர்வாகத் திறமை உடையவர் அனைவரையும் ஒருங்கிணைத்துச் செயற்படக் கூடிய திறமை உண்டு இவரது காலத்தில் சாரணியம் மேலும் வளர்ச்சி கண்டது. இவர் சாரணியத்தில் ஈடுபாடுடையவராக இருந்ததாலும் சாரணியத்தின் மீது நம்பிக்கைஉடையவராக இருந்ததாலும் சாரணிய செயற்பாட்டைக் கொண்டு நடாத்துவது எனக்கு இலகுவாக இருந்தது. எந்த நேரத்திலும் எந்த உதவியும் செய்யத் தயாராக இருந்தார். இதனால் பல பயிற்சிப் பாசறைகளை நடாத்தி சாரணர்களுக்குத் தேவையான பயிற்சியை வழங்கக் கூடியதாக இருந்தது. தேசிய சாரணர் ஜம்போறிகளிலும் பங்குபற்றக் கூடியதாக இருந்தது. இதனால் எமது சாரணர்களுக்கு பல புதிய அனுபவங்களை பெறக்கூடியதாக இருந்தது. அந்த நாள் ஞாபகத்தை அந்த மாணவர்கள் இப்பொழுதும் ஞாபகப்படுத்திக் கதைப்பதுண்டு.

இவ்வாறு தொடர்ந்து பயிற்சிகளை அளித்து கிளிநொச்சி மாவட்டத்தில் இருபது வருடங்களுக்குப் பிறகு ஒரு ஜனாதிபதி சாரணனை உருவாக்கக்கூடியதாக இருந்தது. இதற்கு திரு.விக்கினேஸ்வரன் ஆசிரியரின் உதவியும், எனது குரு திரு.மா.புவனேந்திரன் ஆசிரியர் அவர்கள் எமது பாடசாலைக்கு வந்து தங்கி நின்று பயிற்சிகளை அளித்தார் இதற்கு எமதுஅதிபர் திரு.க. இரத்தினகுமார் அவர்கள் தனது முழு ஒத்துழைப்பையும் வழங்கியிருந்தார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவரது காலத்திலேயே கிளி/இராமநாதபுரம் ம.வியில் வரலாற்றில் முதன்முதலாக ஒரு ஜனாதிபதி சாரணனை என்னால் உருவாக்க முடிந்தது செல்வன்.கெங்கேஸ்வரன் பிரசாத் என்ற சாரணனே இப்பாடசாலையில் இருந்து முதல் ஜனாதிபதி சாரணர் விருதைப் பெற்றுக் கொண்டார்.

எனது கடின முயற்சியின் விளைவாகவும் திரு.மா.புவனேந்திரன். திரு.சி.விக்கினேஸ்வரன் ஆகியோரின் அயராத முயற்சியாலும் அதிபர் திரு.க.இரத்தினகுமார் அவர்களின் ஒத்துழைப்பாலும் இச்சாதனையை நிலைநாட்டக் கூடியதாக இருந்தது. இரத்தினகுமார் அதிபரின் காலப்பகுதியில் சாரணியத்துடன் கல்வி விளையாட்டுப் போன்ற இணைபாடவிதானச் செயற்பாடுகளிலும் பாடசாலை முதல் நிலைபெற்றது. மாவட்டத்திலேயே சுத்தத்திற்கு முதல் நிலைப் பாடசாலையாக திகழ்ந்தது. 5S செயற்பாடு முழுமையாக செயற்படுத்தப்பட்டது. பாடசாலைப் பௌதீகவளம் உயர்வடைந்து பலமாடிக்கட்டிடங்கள் உருவாகின. மாவட்டத்திலேயே கண்ணாடியால் வடிவமைக்கப்பட்ட அலுவலகத்தை உருவாக்கிவைத்திருந்த அதிபர் என்ற பெருமை இவரையே சாரும். மொத்தத்தில் இரத்தினகுமார் அதிபரின் காலம் இராமநாதபுரம் ம.வியின் பொற்காலம் என்றே கூறலாம்.

தொடர்ந்து திரு இராஜமகேந்திரன் திரு.க.முருகவேல் ஆகியோர் அதிபர்களாகக் கடமையாற்றிய காலத்தில் சாரணிய செயற்பாடு தொடர்ந்து முன்னெடுக்கக் கூடியதாக இருந்தது இவர்களும் தமது பூரண ஒத்துழைப்பை நல்கியிருந்தனர்.

திரு.க.முருகவேல் அதிபரின் காலப்பகுதியில் பலபாசறைகளை நடாத்தினோம் அத்துடன் மீண்டும் ஒரு ஜனாதிபதி சாரணனை உருவாக்கும் முயற்சியில் ஈடுபட்டேன். நாட்டில் நிலவிய அசாதாரண சூழ்நிலை காரணமாக குறித்த காலப்பகுதிக்குள் சாரணர் தலைமைக்காரியாலயம் செல்ல முடியாத சூழ்நிலை ஏற்பட்டதால் இது கைகூடவில்லை எனினும் சாரணிய செயற்பாடு தொடர்ந்து 31.12.2007 வரை என்னால் சிறப்பாக செயற்படுத்த முடிந்தது.

திரு.ம.ஜெகதீஸ்வரன்
(ஜனாதிபதிசாரணன்)
முன்னாள் சாரணர் பொறுப்பாசிரியர்
(கிளி/இராமநாதபுரம் ம.வி)
ஆசிரியர் கிளி/வட்டக்கச்சி.ம.வி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## யோகா என்பது...

யோகா என்பதன் பொருள் உருங்குதல, இணைத்தல் , சேர்தல், ஒருமுகப்படுத்தல் என்பதாகும். அப்படி, ஒன்றுசேர்க்கப்படும், ஆற்றலை எப்படிப் பயன்படுத்துவது என்பதைப் பற்றி யோகா கற்றுக்கொடுக்கப்படுகின்றது.

சுவர் இருந்தால் தான் சித்திரம் வரைய முடியும். என்பது போல உடல்நலம் இருந்தால் தான் நீண்டகாலம் வாழமுடியும். அத்தகைய உடல உறுப்புக்களை கட்டுக்கோப்புடன் வைத்திருக்க ஆசனப்பயிற்சிகளை மேற்கொள்ள வேண்டும். அதேபோல மனத்தூய்மையைப்பேணுவதற்கு மேற்கொள்ளவேண்டிய பயிற்சியே யோகாசனமாகும்.

அதிகாலையில் எழுந்தவுடன் சிறிது தூரம் உலாவுதல் காலைக்கடன்களை முடித்து பின்னரே பயிற்சியைத் தொடங்க வேண்டும். காலை 5-7 மணி வரையும் மாலை 5-7 மணி வரையும் செய்து கொள்ளலாம். வெறும் வயிறோடு தான் ஆசனங்களைச் செய்ய வேண்டும். பெரும்பாலானவர்களுக்குக் காலையில் செய்வது தான் வசதியாயிருக்கும். மாலையில் செய்பவர்கள் ஆகாரத்திற்குப் பின் ஆறு மணிநேரம் கழித்துப்பயிற்சிகளை ஆரம்பிக்கலாம்.

வீட்டுக்குள்ளேயாயினும் வெளியிடமாயினும் சுத்தமான காற்றேபட்டமுள்ளதாக இருக்க வேண்டும். வெறும் தரையில் செய்யக்கூடாது. ஒரு விரிப்பின் மீது அமர்ந்து ஆசனப்பயிற்சிகளை செய்து முடிக்க வேண்டும்.

உடற்பயிற்சியை விரும்புபவர்கள் யோகாசனம் ஒரு நாளும் உடற்பயிற்சியை ஒரு நாளும் மாறிமாறி செய்ய வேண்டும். நோய் உள்ளவர்கள் உடல்நிலைக்கேற்ப தகுந்த பயிற்சிகளை யோகா நிர்ணர்களை அருகில் வைத்துக்கொண்டு அவரின் ஆலோசனைப்படிதான் செய்யவேண்டும்.

யோகாசனப் பயிற்சிகளை ஆரம்பிக்கும் போது மனதை ஒருநிலைப்படுத்தி ஆசனத்தை செய்ய வேண்டும். பயிற்சி நேரத்தில் பேசக்கூடாது. ஆசனப்பயிற்சிகளை ஆரம்பிக்கும் போது ஐந்து நிமிடம் பத்மாசனத்தில் அமர்ந்து நாடி சுத்தி செய்யவேண்டும். ஆசனப்பயிற்சியின் கடைசியில் சாந்தி ஆசனம் செய்ய வேண்டும்.

ஒரு மனிதன் குறைந்தது எட்டு மணிநேரமாவது தூங்க வேண்டும். அல்லது ஆறு மணிநேரமாவது உறங்க வேண்டும். அவ்வாறு இரவில் தூங்கமுடியவில்லையெனின் அதனை ஈடு செய்யும் வகையில் பகலில் தூங்கும் நேரத்தை சரி செய்ய வேண்டும். தூக்க நேரம் குறையும் போது உடல் நலப்பாதிப்பு ஏற்படும். குளிர்ந்த நீரில் குளிப்பது நல்லது. அதே போல வெகு நேரம் குளிப்பது நல்லதல்ல அதை விடுத்து அரை மணிநேரம் குளித்தாலும் உடல்நலக்குறைவை ஏற்படுத்தும். ஆசனம் செய்பவர்கள் காபி,டீ,கொக்கோ,குடிபொடி,புலால் உட்கொள்ளக்கூடாது. இறுக்கமான உடைகள் அணியக்கூடாது.

பெண்கள் மாதவிலக்கான காலங்களில் ஆசனம் செய்வதை தவிர்க்கவும் அதேபோல், கர்ப்பம் தரித்த முதல் மூன்று மாதம் வரை எல்லா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆசனங்கயும் செய்யலாம். பிரசவத்திற்குப் பின்புளந்த ஆசனமும் முதல் ஒரு மாதத்திற்குச் செய்யக்கூடாது.

**யோகாசனம் மூலம் ஏற்படும் நன்மைகள்**

01. உடலை வளையும் தன்மையுடையதாகச் செய்து நரம்புகளை வலுப்படுத்துகின்றது.
02. இரத்த ஓட்டத்தை நன்கு இயக்குகின்றது.
03. பொதுவாக தேகஆரோக்கியத்தை பாதுகாக்கின்றது.
04. உடல் உறுப்புக்கள் வளர்ச்சியடைகின்றது.
05. நல்ல சுவாசம் நடைபெற உதவுகின்றது.
06. நல்ல உடற்கட்டமைப்பை உருவாகிகின்றது.
07. குறைந்த சக்திகளைக் கொண்டு நிறைந்த வேலைகளை செய்ய முடிகின்றது.
08. மனஅமைதி, நல்ல புத்துணர்ச்சி, உற்சாகம் ஏற்படும்.
09. நோயற்ற வாழ்விற்கு வழிவகுக்கும்.

**யோகாசனம் பின்வரும் நோய்களைக்குணமாகும்.**

01. நரம்புத்தளர்ச்சி
02. ஆஸ்த்மா
03. முகப்பரு,தோல்வியாதி
04. தீராத மலச்சிக்கல்
05. வீரியக்குறைவு, விந்து நோய்கள்
06. வயிற்றுவலி, வயிற்றுப்போக்கு
07. தொந்தி
08. கீழ்வாதம்
09. குடலிறக்கம்
10. குக்ஷ்டம்

இன்று உலகில் பல சவால்களுக்கு முகம் கொடுத்து மனிதன் வாழ்வதனால் யோகாவிற்கு முக்கியத்துவம் வழங்கப்படுகின்றது. 2015ஆம் ஆண்டு ஆனி மாதம் 18ம் திகதி முதலாவது உலக யோகாதினம் அனுஷ்டிக்கப்பட்டது. இரண்டாவது யோகாதினம் 18.06.2016 ஆம் ஆண்டு யாழ்ப்பாணம் துரையப்பா விளையாட்டரங்கில் அனுஷ்டிக்கப்பட்டது. வடமாகாணத்தைச் சேர்ந்த 15000 மாணவர்கள் பங்கு கொண்டனர். மாணவர்களுக்கு விழிப்புணர்வூட்டும் முகமாக இந்தியத்துணைத்தூதரகத்துடன் கல்வி அமைச்சும் இணைந்து இந்த யோகாப்பயிற்சியை மேற்கொண்டமை குறிப்பிட்த்தக்கது.


**ஆக்கம்**

**திருமதி.ஸ்ரீமிதுலா பிரதீபன்**

**ஆசிரியர்**

**கிளி/இராமநாதபுரம் ம.வி**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கற்றுக் கொள்ளுங்கள்...

வாழ்க்கை முழுவதும் வாழக் கற்றுக் கொள்ளுங்கள்
இதுவெற்றியின் இரகசியம்

சிந்திப்பதற்குக் கற்றுக் கொள்ளுங்கள்
இதுஆற்றலின் ஆணிவேர்

தியானம் செய்யக் கற்றுக் கொள்ளுங்கள்
இது மன வலிமையின் உயர்ச்சி

அன்பு செலுத்தக் கற்றுக் கொள்ளுங்கள்
இது ஆத்ம திருப்தியாக்கும்

பிரார்த்தனை செய்யக் கற்றுக் கொள்ளுங்கள்
இது வாழ்கையின் உயரிய இன்பம்

நேரம் ஒதுக்கக் கற்றுக் கொள்ளுங்கள்
இது வெற்றிக்கு வழிகோலும்

நன்றி சொல்லக் கற்றுக் கொள்ளுங்கள்
இது உங்களை நற்பிரஜையாக்கும்.

மன்னிப்பதற்குக் கற்றுக் கொள்ளுங்கள்
இதுவே நீங்கள் கொடுக்கும் வெகுமதியாகும்

வேலை செய்யக் கற்றுக் கொள்ளுங்கள்
இது வெற்றியின் வெகுமதி

தோல்வியை ஏற்றுக் கொள்ள கற்றுக் கொள்ளுங்கள்
இதுவே உங்கள் வெற்றியாக மாறும்

**க.மதுமதி**
***ஆசிரியர்***
***கிளி/இராமநாதபுரம் மகா வித்தியாலயம்***



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நெஞ்சை விட்டு அகலாத நினைவுகள்

1986ம் ஆண்டின் கடைக்கூறில் பட்டதாரி ஆசிரியையாக நியமனம் பெற்று கிளிநொச்சி மாவட்டத்தின் இராமநாதபுரம் மகா வித்தியாலயத்தில் பொறுப்பேற்ற அந்த இனிய நாள் இன்றும் பசுமையாக என் இதயத்தை வருடுகின்றது. நிழல் தரு விருட்சங்கள் சூழ்ந்த பிரதேசத்தில் கம்பீரமாக நிமிர்ந்து நின்ற அறிவுக் கேந்திரத்தில் எனது கடமைகளை மன நிறைவோடு ஆற்றுவதற்கு அமைந்த பொருத்தமான சூழல் அனைத்தும் மறக்க முடியாதவை.

அன்றைய காலகட்டத்தில் அதிபராகக் கடமையாற்றியவர் திரு.த .இராமநாதன் அவர்களாவார். அவர் எனது உறவினராவதால் அவர்களது குடும்பத்தவர்களுடன் தங்கியிருந்து நான் அருகிலுள்ள பாடசாலைக்குச் செல்வது இலகுவாக இருந்தது.

பாடசாலையில் அன்பு நிறைந்த ஆசிரியர்கள் எனக்குக் கற்பித்தலின் பால் ஆர்வத்தை தூண்ட வைத்த மாணவச் செல்வங்கள் அன்பார்ந்த பெற்றோர்கள் அவர்களது மதிப்பார்ந்த செயற்பாடுகள் அனைத்துடி எனக்கு புதிய தெம்பினையும் கடமையுணர்வையும் தூண்டச் செய்த தூண்டிகள் எனலாம்.

யுத்த மேகங்கள் சூழ்ந்த நேரம் போக்குவரத்தில் எதிர்நோக்கும் இடர்பாடுகள், உயிருக்கு உத்தரவாதம் இல்லாத சூழல், இத்தகைய நெருக்கடியான காலகட்டத்தில் கூட கடமையாற்ற வேண்டிய நெருக்கடியான நிலை. இத்தகைய சந்தர்ப்பத்தில் கூட எங்களைப் பாதுகாத்து எமக்கு வழித்துணையாக பல்வேறு வகையான உதவிகளை வழங்கிய அன்பு உள்ளங்களாகிய மாணவர்களையும் பெற்றோர்களையும் என்றும் என் உள்ளத்தில் வைத்திருப்பேன்.

நியமனம் கிடைத்த ஆரம்பத்தில் அதிபர் விடுதியில் தங்கியிருந்த நான் பின்னர் ஆசிரியைகளுடன் சேர்ந்து ஆசிரியர் விடுதியில் தங்கினேன். சுக துக்கங்களை அன்புடன் பகிர்ந்து கொள்ளும் அன்பான ஆசிரியைகளுடன் அரட்டை அடித்து ஆனந்தமாக கழித்த இனிய நாட்கள் என்றும் மறக்க முடியாதவை.

எம்முடன் விடுதியில் தங்கியிருந்த மூத்த ஆசிரியை பார்வதி ரீச்சர், யோகா ரீச்சர், மங்களம் ரீச்சர் , பெய்சியா ரீச்சர் , நந்தினி ரீச்சர் இவர்களுடன் எமது விடுதிக்குமுன் வீட்டிலிருந்து எம்முடன் கற்பித்த சாந்தநாயகி ரீச்சர் எனக்கு தமது குடும்பத்தில் ஒருவராக கருதி உணவளித்து என்னுடன் பழகிய அவர்களது குடும்பத்தவர்களை என்றும் மறக்க முடியாது.

யாழ்ப்பாணத்திலிருந்து சென்று கற்பிக்கும் ஆசிரியர்கள் வெள்ளியில் நேரத்துடன் சென்று திங்களில் பிந்தி வருவார்கள் என்ற மனப்போக்கை மாற்றி விடுதியிலே தங்கியிருந்து மாணவர்களுக்கு மேலதிக வகுப்புகள் எடுத்து அவர்களது பெறுபேற்றை அதிகரிக்கும் அர்ப்பணிப்பான சேவையில் ஈடுபட்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர்களின் மனங்களை வென்றோம். கல்விப் பெறுபேற்றிலும் இணை பாடவிதானச் செயற்பாடுகளிலும் பாடசாலை உயர்நிலை பெற்று விளங்கியது.

அதிபராக திரு.த.இராமநாதன் கடமையாற்றிய போது திரு.கிருஸ்ணமூர்த்தி, திரு.செல்லையா, திரு.அப்பையா, திரு.ஆ.கருணாநிதி, திரு.சிவசுந்தரம், திரு.சிவப்பிரமம், திரு.கோ.செல்வராஜா, திரு.ஜெகதீஸ்வரன், கண்ணம்மா ரீச்சர், அன்னமுத்து ரீச்சர், இந்திரா ரீச்சர், மீனா ரீச்சர், பூலக்சுமி ரீச்சர், யோகா ரீச்சர், சிவபாலன் ரீச்சர், லக்சாந்தி ரீச்சர், யமுனா ரீச்சர் (விடுதியில் தங்கியிருந்தவர்களை இங்கு குறிப்பிடவில்லை) ஆகியோருடன் இணைந்து கற்பித்த இனிய நாட்கள் என்றும் மறக்கமுடியாதவை. (எனக்கு ஞாபகத்தில் இருந்தவர்களை மட்டும் குறிப்பிட்டுள்ளேன். 30 வருடங்களுக்கு முன் நடைபெற்ற சம்பவங்கள் ஆதலால் சிலரது பெயர்கள் விடுபட்டிருக்கலாம் அவர்கள் மன்னித்துக் கொள்ள வேண்டும்.)

எனது தொழிலை நேசிக்க அன்பினால் எவரையும் வெல்லலாம். என்ற அரிய தத்துவத்தை எனக்குக் கற்றுத் தந்தது இராமநாதபுரம் மகா வித்தியாலயமே. இங்கு நான் குறிப்பிடுவது மாணவர்களையும் ஆசிரியர்களையும் பெற்றோரையும் தான் மாணவர்களுக்கு அன்புடன் எனக்குத் தெரிந்ததைக் கற்பித்தேன் அவர்கள் விருப்பத்துடன் கற்றார்கள். இன்று உயர் பதவிகளில் உயர் நிலையிலிருக்கும் அவர்கள் இப்போதும் என்னை மறக்காமல் இருக்கின்றார்கள் என்பதே என்னை இறும்பூதடைய வைக்கின்றது.

தமிழ்மொழி மீதும் தமிழ் மீதும் கொண்ட ஆராத பற்றின் காரணமாக திருமதி.இந்திரா, திரு.நாவுக்கரசர் நானும் இணைந்து தமிழ்த்தினப் போட்டிகள், தமிழோடு தொடர்பான ஏனைய போட்டிகளிலும் மாணவர்களைப் பங்குபற்றச் செய்து வெற்றிகளை ஈட்டினோம்.

இல்ல மெய்வல்லுநர் போட்டிகள் நடைபெறும் போது மாணவர்கள் ஓடும் போது நாமும் சேர்ந்து ஓடி அவர்களை உற்சாகப்படுத்திய நிகழ்வுகள் அனைத்தும் மறக்க முடியாதவை. எனது முதல் நியமனம் இந்தப் பாடசாலை ஆதலால் அதிபர் குடும்பத்தவர்கள் என்னை அழைத்ததைப் போன்று ராகினி என்ற பெயர் நிலைத்து ராகினி ரீச்சர் என்றால் மட்டுமே எல்லோருக்கும் தெரியும். எனது பெயரான இராஜினிதேவி என்பதோ திருமணத்தின் பின் திருமதி சிவலிங்கம் என்பதோ இராமநாதபுரத்தில் பெரும்பாலானவர்களுக்குத் தெரியாது.

நான் யாழ் மாவட்டத்திற்கு இடமாற்றம் கோரிய போது என் மீது கொண்ட அளவற்ற பாசத்தின் காரணமாக கல்வித் திணைக்களம் சென்று போராடிய பெற்றோர் அன்பை என்றும் மறக்க மாட்டேன். எனது குடும்ப நிலையை எடுத்துக் கூறி அவர்களுக்கு எனது நிலையைப் புரிய வைத்தேன்.

இராணுவ நடவடிக்கையின் காரணமாக விடுதியில் இருப்பது பாதுகாப்பில்லை என்று கருதிய நாம் தேவாலயத்திற்கு அருகிலுள்ள திரு.சாமிநாதன் வீட்டில் குடியேறினோம். அவர்களும் அவர்களின் குடும்பம் சார்ந்த அனைவரும் எமக்கு செய்த உதவிகள், பாதுகாப்புகள் அனைத்தும் என் நெஞ்சில் என்றும் பசுமையான நினைவுகள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நான் இடமாற்றம் பெற்றுவரும் போது என்னைப் பிரிய மனமின்றி தம் அன்பை வெளிப்படுத்த எனக்களித்த விருதுகள், நினைவுப்பரிசுகள் அனைத்தையும் இன்றும் போற்றிப் பூசிக்கின்றேன். இருபத்தேழு வருடங்களின் பின் அண்மையில் நான் இராமநாதபுரம் வந்தபோது பாடசாலை அன்னையின் அபரிமிதமான வளர்ச்சிகண்டு புளாங்கிதமடைந்தேன். இன்று நான் பிரதி அதிபராக கடமையாற்றும் கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரியில் இராமநாதபுரம் மகாவித்தியாலயத்தில் என்னிடம் கல்வி கற்ற மாணவி சிவமலர் சோதிநாதன் அரசியல் விஞ்ஞானம் கற்பிக்கின்றார்.

பத்திரிகையில் எமது பாடசாலை பற்றி வரும் செய்திகளை வாசித்து மகிழ்ச்சியடைவதுடன் திருமதி. ஜெ. இராஜமகேந்திரன், திருமதி. சி. சோதிநாதனுடனும் இது தொடர்பாக கருத்துக்களைப் பரிமாறிக் கொள்வேன்.

யா/கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரிக்கு இடமாற்றம் பெற்று வந்த பின் நான் முன்பு கையாண்ட அன்பு வழியைக் கையாண்டு மாணவர்கள் ஆசிரியர்களுடன் பழகியதுடன் அர்ப்பணிப்புடனும் சேவையாற்றி மாணவர்கள், ஆசிரியர்கள் மனங்களை வென்று உயர் பதவிகளைப் பெறுவதற்கான தன்னம்பிக்கையை ஊட்டிய பாடசாலை என்பதோடு இன்று ஒரு எழுத்தாளராக என்னை நிலைநிறுத்தக்களம் அமைத்த அன்னையாக எமது பாடசாலையைப் போற்றுகின்றேன்.

வைரவிழாக்காணும் எமது அன்னையின் கல்விப் மென்மேலும் வளர்ந்து புதிய சாதனைகளைப் படைக்க வேண்டும். கல்வியிலும் இணைபாடவிதானச் செயற்பாடுகளிலும் பல சாதனைகளைப் படைக்க வேண்டும் அதற்கு எல்லாம் வல்ல பரம் பொருளின் அருள் கிடைக்க அவன் அருளை வேண்டி நிற்கின்றேன்.

**திருமதி.இராஜினிதேவி சிவலிங்கம்**
**பிரதி அதிபர்**
**யா/கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பழைய மாணவர் ஆக்கங்கள்

## வைரவிழா மலர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## ஏற்றமுறு வாழ்வு தந்து மகத்துவமாகின்றாய்.....

உலக இருள் அகல சூரியன்
மன இருள் அகல
கல்வி பெற்றுக் கவின் பெற்ற
மனிதன் புனிதனாகிறான்

தாயின் கருவறையில் உயிரானோம்
கல்லூரியின் வகுப்பறையில் உருவாகினோம்
உணர்வுள்ள மனிதனாக்கியது கல்லூரி
நண்பர்களைத் தேடித்தந்தது கல்லூரி

காலமெல்லாம் அறிஞர்களையும்
கல்விமான்களையும் உருவாக்கி
உலகமெல்லாம் பெயர் சொல்ல
உலவவிட்ட என் இனிய மகா வித்தியாலயமே!

உன் பெயர் சொல்லும் பிள்ளைகள்
உன் மடி தவழ்ந்து கல்வியில் சிறந்தவர்கள்
உலகத்தின் ஒவ்வொரு மூலையிலும் - உனது
வரலாறு பதிவாகிக் கொண்டிருக்கிறது

நிலையாய் நின்று சேவையாற்றிய உன் வரலாற்றுக்கு இன்று "வைரவிழா"
வான்புகழ் தந்து வளம் பல சேர்ந்து
வரலாகின்ற வித்தியாலயமே
வாழ்க பல்லாண்டு!

காலகாலமாய் தாய்மடி தவழும் - என்
கிராமச் சிறார்கள் நிச்சயம் - உன்
மடியிலேயே மனிதர்களாகின்றனர்
வரலாறுகளை பிரசவிக்கும்
கல்வித்தாய் மடியாய் நிமிர்கின்றாய்

இனிய வித்தியாலயமே! உணர்வுள்ள மனிதம்
உருவாக என் இனம் ஏங்கிக் கிடக்கிறது
உரிமைகளை இழந்து அடிபட்டுப் போனாலும்
உன்னிலிருந்து எழுந்த கல்வியை எவராலும்
அழிக்க முடியாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாணவச் செல்வங்களாய் உனது ஆலயம் புகுந்து
செப்பனிட்டவர்கள் ஆயிரமாயிரம் பேர்
கலங்கரை விளக்காய் சேவை தருகிறாய்
கலைதந்து, பண்பாடுகாத்து, முத்தமிழ் வளர்த்து
மனித மனங்களில் மகத்துவமாகிறாய்

நிலை தந்த கல்வி வரலாற்றில்
கோடான கோடி மாணவர் தம்
சிரம் தாழ்த்தி உன்னை வாழ்த்துகின்றனர்
மனிதம் வாழ வழி வகுக்கும் வித்தியாலயமே
வைரவிழா மட்டுமல்ல நூற்றாண்டு கடந்தும்
மனங்களை வென்று மனிதாபிமானம்
வாழப் பாடு படு!

கல்வி தந்து வளர்க!
கலை வளர்த்து எழுது!
பண்பாடு காத்து நிமிர்க!
முத்தமிழ் வளர்த்து மகிழ்க!
நிலை கொண்டு வாழ்க!
மெய்ப்பட வாழ்க! வளர்க!
இராமநாதபுரம் மகிழ்ந்து வாழ்க! வளர்க!

வாழ்த்துக்களுடன்
தேவிகா சந்திரராஜ்
கனடா
(பழைய மாணவி)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# காயத்திரி மந்திரத்தின் மகிமைகள்

எமது நல்வாழ்விற்காக இறைவனால் அருளப்பட்டதே காயத்திரி மந்திரமாகும். இம்மந்திரம் வேதமந்திரங்களில் மிக முக்கியத்துவம் வாய்ந்தது. எல்லா நிலைகளிலும் வாழ்வை வளப்படுத்த வல்லது. கோடிக்கணக்கான மக்களால் காலம் காலமாக இம்மந்திரம் ஜெபிக்கப்பட்டு வருகிறது. மாணவர்களுக்கு இம்மந்திரம் மிகவும் பயன்தரக்கூடியது.

**காயத்ரி மந்திரம்**
**ஓம் பூர்புவ ஸ்வக;**
**தத் ஸவிதுர் வரேண்யம்**
**பர்கோ தேவஸ்ய தீமஹி**
**தியோ யோ ந; ப்ரசோத யாத்**

**விளக்கம்**

ஓம் மாதா முக்காலம், மூவுலகம், முக்குணம் ஆகியவற்றில் உறைபவளே எனது புத்தியைக் கூர்மையடையச் செய்து சூர்யப்பிரகாசம் எல்லா இருளையும் அகற்றுவது போல் எனது சகல அறியாமையையும் அகற்றி எனது புத்தியை சாந்த, சித்த, நிர்மலமானதாகப் பிரகாசிக்கச் செய்யும் படி யான் உன்னைத் துதிக்கின்றேன்.

சிருஷ்டி (படைத்தல்) தத்துவத்தின் அதிதேவதையான பிரம்மன், காத்தல் தத்துவத்தின் அதிதேவதையான மஹா விஷ்ணு, அழித்தல் தத்துவத்தின் அதிதேவதையான ருத்ரன் (சிவன்) ஆகியோரின் சக்திகளான காயத்ரி, ஸாவித்ரி, ஸரஸ்வதி ஆகிய மூன்றும் சேர்ந்த சக்தி வடிவமே காயத்ரிதேவி.

காயத்ரி மந்திரம் பார்வைக்குச் சிறியது ஆனால் அதனுள் புதைந்து கிடைக்கும் பொருளும் சக்தியும் ஆழங்காண முடியாத கடலைப் போன்றது. இது முனிவர்கள், ரிஷிகள், சித்தர்களின் சாதனா மந்திரம். புடம்போட்ட தங்கம் அழுக்கு நீங்கி மின்னுவதைப் போலக் காயத்ரி மந்திர உச்சாடனம் இதனைச் சாதனை செய்பவர்கள் சித்தம் சுத்தமாகி, அறிவு கூர்மையாகி விரைவில் இறைவனை நெருங்க முடியும்.

"காய", "த்ரி" என்ற இருபகுதியும் இணைந்து உருவானது காயத்ரி. காயம் என்பது உடல். த்ரி என்பது காப்பாற்றப்படுதல் (சழவநஉவழைப) இதை முழுமையாகப் பார்த்தால் இம்மந்திரம் அதனை ஜெபிப்பவர்களுக்கு அக, புற பாதுகாப்பை வழங்கும் என்பதே அதன் அர்த்தமாகும்.

**மந்திரத்தில் வரும் பதங்களுக்கான விளக்கம்**

ஓம் - ப்ரணவம் அல்லது பரப்ரம்மம்
ப்ரணவ தத்துவம் அஷ்ட ஐஸ்வரியங்களைப் பிரதிபலிக்கிறது. அவையாவன தனம், தான்யம், அரசு, பசு, புத்திரர், தைரியம், வாகனம், சுற்றம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | |
|---|---|
| பூர் | - பூலோகம் - பஞ்ச பூதங்களிலான நிலம், நீர், தீ, காற்று, ஆகாயம் ஆகிய ப்ரகிருதிகளை உள்ளடக்கியது. |
| புவ | - புவனலோகம் - நம் முன்னோர்கள் வாழும் உலகம் |
| ஸ்வக | - சுவர்க்கலோகம் - தேவலோகம் |
| தத் | - பரமாத்மா - கடவுள் |
| ஸவிதுர் | - இத்தகைய எல்லாத் தோற்றங்களையும் தோற்றுவித்து இயக்குகின்ற |
| வரேண்யம் | - வழிபடுதற்குரிய பொருள் |
| பர்கோ | - அஞ்ஞானத்தை அழித்து ஞானத்தை அளிக்கும் ஒளி |
| தேவஸ்ய | - தெய்வீக உண்மையாக விளங்குகின்ற |
| தீமஹி | - நாம் தியானிப்போமாக |
| தியோ | - புத்திகூர்மை |
| யோ | - எது |
| ந | - எங்களது |
| ப்ரசோதயாத் | - பிரகாசிக்கச் செய்வாயாக |

காயத்ரி ஐந்து முகங்கள், பத்துத்திருவிழிகள், பத்துக்கரங்களைக் கொண்டவர்

**ஐந்து முகங்களும் பின்வருவனவற்றைக் குறிப்பன**

| | |
|---|---|
| 1. பஞ்ச பூதங்கள் | - நிலம், நீர், தீ, காற்று, ஆகாயம் |
| 2. பஞ்ச கோசங்கள் | - அன்மையகோசம், பிராணமயகோசம், மனோமயகோசம், விஞ்ஞாமையகோசம், ஆனந்தமயகோசம் |
| 3. பஞ்ச பிராணங்கள் | - பிராண, அபான, வ்யான, உதான, சமான |
| 4. பஞ்சதன் மாத்திரைகள் | - ஸப்தம், ஸ்பரிசம், ரூபம், சுவை, வாசனை |
| 5. பஞ்ச இந்திரியங்கள் | - கண், காது, மூக்கு, வாய், தோல் |

**பத்துக் கரங்கள் குறிப்பன**

| | |
|---|---|
| 1. வரஹஸ்தம் | - வரம் தருவது |
| 2. கடகம்(வளையல்) | - ஆபத்துக் காலத்தில் காப்பது |
| 3. சாட்டை | - தீய சக்திகளைச் சாட்டை கொண்டு நீக்குதல் |
| 4. அங்குசம் | - இந்திரியங்களை அடக்கியாளும் திறன் தரும் |
| 5. சங்கு | - அசுரகுணத்தை விரட்டியடிக்கும் |
| 6. அபயஹஸ்தம் | - பயத்தை நீக்கி அபயமளிக்கும் |
| 7. சக்கரம் | - தீய சக்திகளையழித்து அச்சுறுத்தும் |
| 8. தாமரைமலர் | - அருள்பாலித்தல் |
| 9. அட்சய பாத்திரம் | - அன்னபூரணி, சாதகனுக்கு வாழ்நாள் பூராக உணவுப் பஞ்சமில்லாது ஒழிக்கும் |
| 10. கதாயுதம் | - தீமைகளைப் பொடிப் பொடியாக்கும் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காயத்திரி தேவியின் பத்து திருவிழிகளின் தத்துவம்

எம்மைச் சுற்றியுள்ள பத்துத்திசைகளும் கருணை பொங்கப் பார்த்துக் கொண்டிருக்கின்றன. பத்துத் திசைகளாவன :- எட்டுத் திசைகளோடு ஆகாயம், பூமி, என்பன இந்தப் பார்வை துஷ்ட நிக்ரஹ (தீயசக்திகளையழித்தல்), சிஷ்ட பரிபாலனம் (நல்லவர்களைக் காத்தல்) ஆகிய இரண்டையும் செய்கிறது.

## காயத்ரி மந்திரம் தோன்றியவிதம்

இதுபற்றி வேதத்தில் ஒரு குறிப்புக் காணப்படுகிறது. ஸ்ரீமந் நாராயணன் இந்தப் பிரபஞ்சத்தை சிருஷ்டிக்கச் சங்கல்பித்த போது அவருடைய திருவதனத்திலிருந்து தேவதைகளுள் அக்னியும் மந்திரங்களுள் காயத்ரி மந்திரமும் தோன்றின. எனவே பிரபஞ்சத் தோற்றத்தோடு காயத்ரி மந்திரமும் இருந்து வந்திருக்கிறது. எனவே இது முடிவில்லாதது முதன் முதலில் விஸ்வாமித்ர முனிவரால் தான் கண்டு பிடிக்கப்பட்டது.

இவர் செய்த கடுந்தவத்தின் பயனாக சிவன்பார்வதி தோன்றிக் காயத்ரி மந்திரத்தின் மூலரிஷியாக விளங்கும் பாக்கியத்தை அருளினர்.

## மந்திரத்தை ஜெபிக்கும் முறை

காலை, மதியம், மாலை வேளைகளில் பூஜை அறையிலோ, கோயில்கள், தியான மண்டபங்களிலோ, ஆறுகுளக்கரைகளிலோ செய்யலாம். உட்கார்ந்து மந்திர சாதனை செய்யும் போது எமது உடலில் இருந்து பூமிக்கு மின்காந்த அலைகள் ( Electro Magnetic Waves) கடத்தப்படாத ஓர் இருக்கையில் அமர்தல் அவசியம். (புற்பாய், மான்தோல், பருத்தி அல்லது பட்டுவஸ்திரம் போன்றன) வடக்கு அல்லது கிழக்குத்திசை நோக்கி பத்மாசனம், சித்தாசனம் போன்ற ஒரு நிலையில் இருத்தல் சிறந்தது. முள்ளந்தண்டு நேராக இருத்தல் அவசியம். கைகளைச் சின்முத்திரையாக வைக்க வேண்டும். கையின் பெருவிரல் நுனியைக் கொண்டு சுட்டுவிரல் நுனியில் தொட்டுக் கொண்டு மற்றைய மூன்று விரல்களையும் விலக்கி நேராக வைத்திருக்க வேண்டும்.

தவிர இந்த மந்திரத்தை எங்கும் எப்பொழுதும் எவரும் உச்சாடனம் செய்யலாம். எங்கெல்லாம் இம் மந்திரம் ஓதப்படுகிறதோ அங்கெல்லாம் காயத்ரி பிரசன்னமாகி அருள் பாலிக்கிறாள்.

## காயத்ரி மந்திரத்தை ஜபிப்பதால் கிடைக்கும் பயன்கள்

காயத்ரி மந்திர அட்சரங்களை முறையாக உச்சரித்துச் செல்லும் போது அதனால் ஏற்படும் காயத்ரி ஒலி அலைகள் (Vibration) எமது உடலிலுள்ள ஒவ்வொரு அணுவிலும் தாக்கி அங்குள்ள மாசு மறுக்களைப் போக்கி தூய்மைப்படுத்துகின்றன. உடலிலுள்ள அணுக்கள் ஒவ்வொன்றும் ஆற்றல் மிகுந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சக்தியைப் பெறுகிறது. புத்தி கூர்மை, மனவலிமை, உடல்வலிமை, சிந்தனாசக்தி, அருஞ்செயலாற்றும் திறமை போன்றன ஏற்படும். இதனால் வெற்றி, புகழ், கிட்டுகின்றன. பிரயாணங்கள் செய்யும் போது விபத்துக்களிலிருந்து பாதுகாக்கும். ஆயுள், ஆரோக்கியம் ஏற்படும்.

உடலை, இரத்தத்தை மனதைச் சுத்தி செய்யக் கண்ட மருந்துகளைப் பயன்படுத்துபவர்கள் சரியான முறையில் காயத்ரி உபாசனை செய்து வருவார்களேயானால் எந்த மருந்தும் தேவையில்லாபடி மெய்யறிவு தோன்றி மகா சக்தி தோன்றும்

நியாயமான கோரிக்கையை வைத்து குறிப்பிட்ட நேரத்தில் (மாலை 5 மணி) குறிப்பிட்ட காலத்திற்கு (1மாதம் அல்லது 3 மாதம்) தனியாகவோ கூட்டாகவோ சேர்ந்து 108 தடவை ஜபித்து வந்தால் கோரிக்கை நிறைவேறுவதைப் பலர் உணர்ந்திருப்பர். ஸ்ரீ சத்ய சாயி சேவா நிலையங்களில் காயத்ரி மந்திரம் ஓதும் பயிற்சி ஒழுங்காகவும் சிறப்பாகவும் நடைபெற்று வருவதைக் காணலாம்.

## காயத்ரி மந்திர ஆய்வுகள்

ஹல்டன் என்ற பிரித்தானியாவைச் சேர்ந்த ஒரு விஞ்ஞானி உலகிலுள்ள ஒவ்வொரு பொருளையும் ஏதோ ஒரு சக்தி இயக்குகிறது என்பதை இப்போதான் விஞ்ஞானம் ஏற்றுக் கொண்டிருக்கிறது. ஆனால் அதை விஸ்வாமித்ர முனிவர் "ஸவிதுர்" என்ற சொல் மூலம் அன்றே கூறியுள்ளார். என்கிறார்.

ஆதர் ஹொயிஸ்லர் என்ற ஹங்கேரி நாட்டு விஞ்ஞானி. இவர் பெனாறிஸ் பல்கலைக்கழகத்தில் மேற்கொண்ட ஆராய்ச்சி முடிவில் "அணுசக்தியால் வரக்கூடிய பேராபத்தைத் தடுத்து நிறுத்தக் கூடிய சக்தி காயத்ரி மந்திரத்திற்கே உண்டு" எனக் கூறியுள்ளார். போபால் என்ற இடத்திலேற்பட்ட நச்சு வாயுக்கசிவால் பல்லாயிரக்கணக்கானோர் பலியாகினர். ஆனால் மூன்று குடும்பம் மாத்திரம் உயிர் தப்பினர். இதற்கான மூல காரணத்தை ஆராய்ந்த விஞ்ஞானிகள் குழு அவர்கள் தினசரி காலை, மாலை காயத்ரி மந்திரத்தைச் சொல்லும் வழக்கத்தைக் கொண்டவர்களெனக் கண்டறிந்தனர்.

மேலும் காயத்ரி சாதனை அதன் மகிமைபற்றி சுவாமி சிவானந்தர், இராமகிருஸ்ணர், விவேகானந்தர், ஸ்ரீசேஷாத்ரி சுவாமிகள், யோகி அரவிந்தகோஸ் போன்றோரும் கருத்துக்கள் கூறியுள்ளனர். நாமும் ஜபித்து நன்மை பெறுவோமாக

**உசாத்துணை நூல்**

*01.* வேதமாதா காயத்ரி மந்திர மகிமைகள் - சத்திய சாயி சேவா நிறுவன வெளியீடு - *2009*

*02.* ஞானபூமி - *1986* ஜனவரி

திருமதி.இ.திருநாவுக்கரசு
பிரதி அதிபர் (ஓய்வுநிலை)
கிளி/இராமநாதபுரம் மகா வித்தியாலயம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# எம் கல்லூரித் தாய்க்கு

கல்லூரித் தாய்க்கு
கவி எழுத வந்தேன்
அன்றில் இருந்து இன்றுவரை
ஆறாய் வாய்க்கால் வழிந்தோடும்
இருபோக நெல்விளையும்
இன்பமாய் நாம் வாழ
வயலும் வயல்சார்ந்த மருத நில மண்ணில்
வற்றாத வளம் கொழிக்கும் நெல் மணிகள்
சொத்தாகக் கொண்டுள்ள தென்னம் தோப்பும்
சுவைமிக்க மாங்கனியும் வாழைகளும்
வற்றாத கற்பகதருவாம்
கல்விக் கண் திறக்கும்
கருவறை கூடமாய் எம் கல்லூரி

ஆறில் இருந்து அறுபது வரை தாலாட்டி
அறிவூட்டி அப்பப்போ வெறுப்பேற்றி
அடியோடு வெறுக்காமல்
அடிபோட்டு செவி முறுக்கி அறிவுரைத்து
புடம்போட்ட தங்கமாய் மெருகேற்ற
புகழுடனே வந்தீர்கள்
எப்போதும் நினைவிருக்கும் ஆசான்கள்
அப்பப்போ வந்து போகும் நினைவலைகள்
இனம்காட்டி கலையோடு கல்வி நிறைவாக
இயல், இசை, நாடகம் ஈர்த்தெம்மை
எமக்குள்ளே நிலை கொள்ள வேண்டுமென
எமை முத்தமிட்டு முத்தமிழ் கதை கொண்டு
அரங்கேற்றி "ரொட்டிக்கோ" மைதானத்தில்
அவை போற்ற வெற்றிக் களம் கண்டு
கண்ணிமைக்காது எமை ரசித்த உத்தமியே

உன்னைப்போல் செயல் கொண்ட
உத்தம பத்தினிக் கல்லூரி யாரெங்கும் இருந்தாலும்
வட்டக்கச்சி கல்லூரி மாணவர்கள்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அங்கிருந்து இங்கு வந்து கற்கச் செய்த காலமது
ஏனோ இமை காட்ட யாருமில்லை
பட்டப்படிப்பிற்காய் கண்டிசென்று
முட்டி மோதி பயிற்றுவித்தும்
தரணியிலே பாடுபட எமை ஈந்தாய்
கண்ணிமைக்காது காத்திருந்த தேவதையே - நீ
கணக்காளர், பொறியியலாளர், மருத்துவர்கள்
ஆசான்கள் என எண்ணற்ற துறையோடு
ஆய கலையோடும் கல்வியோடும்
மிடுக்கோடு உலகெங்கும் இருந்தாலும்
அப்பப்போ எமை வளர்க்க - வந்துபோன
அறிவுக் கல்விமான்களும் ஆங்காங்கே
நீடுழீ வாழட்டும் என வாழ்த்தும் என்தாயே
எனக்கும் வரம் தந்தாய் நல்வாழ்த்தும் தந்தாய்
என்னைக் கருவுற்ற மண்ணிலே தொழிலும் தந்தாய்
கல்வி தந்தாய் ஊர் சந்ததிக்காய் தவம் இருந்தாய்
கவியால் நான் எழுத வார்த்தை உண்டோ?
எமக்கு வேறென்ன இதை விடவும் வேண்டும் அம்மா...
எப்போதும் உம்மோடு நாமிருக்க வாழ்த்திடுவோம்
நின் மடியில் சரணடைவோம் எம்தாயே!
நீடுழி வாழ்க! வாழ்க!!

**திருமதி.ருக்மணி செல்வராசா**
**ஆசிரியை (ஓய்வுநிலை)**
**பழைய மாணவி**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இரணைமடு நீர்த்தேக்கம்

வடமாகாணத்தின் பாரம்பரிய சொத்தாகிய இரணைமடு நீர்த்தேக்கமானது இற்றைக்கு பல ஆண்டு காலமாக யாழ்ப்பாணம், கிளிநொச்சி ஆகிய மாவட்டங்களுக்கு நீரைப் பெற்றுக் கொடுத்து வீட்டுத் தேவைகளையும். விவசாயத்தேவைகளையும் பூர்த்தி செய்திருக்கின்றது. அந்த வகையில் இந்தக்கட்டுரையின் மூலமாக இரணைமடு நீர்த்தேக்கத்தினது அமைவிடம், ஆரம்பக்கட்டுமானம், பிற்கால அபிவிருத்தி, நீரத்தேக்கம், குடியேற்றம் நீர் பெறும் பரப்பளவு மற்றும் பொருளாதார சமூக விடயங்கள் பற்றி வெளிக் கொணரலாம்என்று எதிர்பார்க்கின்றேன்.

இரணைமடுக்குளத்தின் அமைவிடம் பற்றி நோக்கின் இக்குளமானது கிளிநோச்சி மாவட்டத்தில் யாழ் கண்டிவீதியில் 157 3/4 மைல் கல்லால் கிழக்குப் பக்கமாகத் திரும்பி வில்சன் வீதி வழியாக 4 1/2 மைல் தூரத்தில் குளக்கட்டு அமையப் பெற்றுள்ளது. இக்குளத்தின்னால் முதன் முதலாக கட்டப்பட்ட புதுக்குளம் இதற்கான ஆரம்ப அறிக்கையினையும் மதிப்பீட்டினையும் நீர்ப்பாசனப் பணிப்பாளராக இருந்தார். T.S வாட் அவர்களால் 1902 ஆம் ஆண்டு 2ம் நீரினைத் தேக்குவதற்காகத் தயாரித்து சமர்ப்பிக்கப்பட்டது. இந்நீர்ப்பாசனத்தின் வேலைகள் 1906ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டு 1922 ஆம் ஆண்டு நிறைவேற்றப்பட்டது. எல்லா வேலைகளும் முன்னணி தொழிலாளர் படையணியினால் முற்றுமுழுதான மனித வலுவினால் நிறைவேற்றப்பட்டது. இக்குளமானது கனகராயன் ஆற்றில் ஆதிகாலத்திலிருந்துஇரண்டு மடுக்களை இணைத்ததன் மூலம் ஈர் அணைமடு உருவாக்கப்பட்டது. ஈர் அணைமடுக்கள் சேர்ந்து இரணைமடு உருவாகியது. இக்குளத்தின் பிற்கால அபிவிருத்தியானது 1951இல் மேற்கொள்ளப்பட்டது. அந்தவகையில் 1951 ஆம் ஆண்டு 30 அடியாக உயர்த்தப்பட்டதுடன் மேலதிக துருசுகளான வலதுகரைத் துருசும் கட்டப்பட்டது. இதன்போது மேலதிக பாய்ச்சல் நிலங்கள் வலது இடதுகரை வாய்காலில் உள்வாங்கப்பட்டது குறிப்பாக இக்குளத்தின் நீரேந்து பிரதேசமாக 906 சதுச Km களும் குளக்கட்டின் நீளமாக (அணை) 9850 அடியும் காணப்படுகின்றது. இயல்பு விழுதல் வாளாகவும், அளவு இடதுகரை முழுவதுமாகவும் நீளம் 600 அடியாகவும் காணப்பட வலதுகரை உடைப்புபகுதி 20.1 ஆகக் காணப்படுகின்றது.

மேலும் இரணைமடுக்குளம் பற்றிய கட்டுமான விபரம்பற்றி கால அடிப்படையில் நோக்குவோமாயின்

**1948 – 1953 காலப்பகுதி**

குளத்தின் நீர்மட்டம் கடல்மட்டத்திலிருந்து 94.99' ஆகவும் (30')
நீர் கொள்ளளவு 93,500 ஏக்கர் அடியாகவும் கட்டப்பட்டது.

**1966 – 1967 காலப்பகுதி**

திருவையாறு ஏற்றுநீர்ப்பாசனத்தின் முதலாம் கட்டம் 306
ஏக்கர்களுக்கு (102 குடும்பங்களுக்கு) நீர் வழங்கலுக்கு ஸ்தாபிக்கப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**1975 – 1977 காலப்பகுதி**

குளத்தின் நீர்மட்டம் கடல்மட்டத்திலிருந்து 100.06' ஆகவும் (34') நீர் கொள்ளளவு 106.500 ஏக்கர் அடியாகவும் அதிகரிக்கப்பட்டது.

**1976 – 1977 காலப்பகுதி**

திருவையாறு ஏற்று நீர்பாசனத்தின் 2ஆம். 3ஆம், 4ஆம் கட்டங்கள் ஸ்தாபிக்கப்பட்டது. மொத்தமாக 1400 ஏக்கர் மேட்டுநில காணிகளுக்கு நீர் விநியோகிக்கத் திட்டமிடப்பட்டது.

**1983 ஆம் ஆண்டு காலப்பகுதி**

பாரிய மண் சரிவு ஏற்பட்டு 1000 இற்கு மேற்பட்ட விவசாயிகளின் பலநாள் ஒத்துழைப்புடன் 100.000 இற்கு மேற்பட்ட மண் மூடைகள் அடுக்கி கட்டு பாதுகாக்கப்பட்டது.

**1986 – 1987 காலப்பகுதி**

திருவையாறு ஏற்று நீர்ப்பாசனத்திட்டம் நடைமுறையில் இருந்து கைவிடப்பட்டது.

இக்குளத்தின் நீரியல் ஆய்வுகளை அடுத்து நோக்குவோம்.

* நீர்த்தேக்கத்தின் பெயர் - இரணைமடு
* ஆள்கூறு – A/19 (8.35 X 6.57)
* நீர்ப்பாசனப் பரதிப் பணிப்பாளர் பிராந்தியம் - கிளிநொச்சி
* மாவட்டம் - கிளிநொச்சி
* நதிப்படுக்கை - கனகராயன் ஆறு
* மொத்த நீர்க் கொள்ளளவு – 106.500 ஏக்கர் அடி
* நீரேந்து பரப்பு :- 906 சதுர km
* விவசாயப் பரப்பளவு :- 8354 ஹெக்ரேயர்
* நீரேந்து சாய்வு – 1% இற்கும் குறைவு
* நீர் கொண்டு வரும் ஆற்றின் நீளம் - 90km
* பிரதேசத்தின் தன்மை - வரண்டது சிறுபகுதி மத்திமம்.

இக்குளம் பிரதேசத்தின் குடியேற்றம் பற்றியும் குடியேற்றங்கள் நீர் பெறும் பரப்பளவுகள் பற்றியும் அடுத்த நோக்குவோம்.

**குடியேற்றங்கள்**

கணேசபுரம் - 1936
உருத்திரபுரம் 1ம் வாய்கால் - 1950
உருத்திரபுரம் 8ம் வாய்கால் - 1952
வட்டக்கச்சிக் குடியேற்றம் - 1953
முரசுமோட்டை – 1954



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

* இராமநாதபுரம் - 1955
* வட்டக்கச்சி EYS – 1953
* றைஆறு ம.வ.திட்டம் - 1952
* வெளிக்கண்டல் ம.வ.திட்டம் - 1956
* வில்சன் வீதி ம.வ திட்டம் - 1959
* திருவையாறு பகுதி 1 ஏற்று நீர்ப்பாசனம் - 1966
* திருவையாறு பகுதி 2, 3 ஏற்று நீர்ப்பாசனம் - 1972
* வட்டக்கச்சி இளைஞர் குடியேற்றத்திட்டம் - 1955
* உமையாள் புரம் கி.வி திட்டம் - 1961
* கோரக்கன் கட்டு கி. வி திட்டம் - 1968
* வெலிக்கண்டல் கி. வி திட்டம் - 1966
* ஊரியான் கி. வி திட்டம் - 1967
* பரந்தன் ம.வ திட்டம் - 1959
* கோரக்கன் ம.வ திட்டம் - 1960
* பரந்தன் வெளி ம.வ திட்டம் - 1960

**நீர் பெறும் பரப்பளவு**

01. வட்டக்கச்சி வலதுகரை 1750ஏக்கர்
02. இராமநாதபுரம் வலதுகரை 1482 ஏக்கர்
03. D1, D2, D3, மகிழங்காட்டுப்பகுதி இடதுகரை 1773 ஏக்கர்
04. D3 பன்னங்கண்டி 2680 ஏக்கர்
05. D3, No – 05 முரசுமோட்டை இடதுகரை 2550 ஏக்கர்
06. RB -04, D3 ஊரியான் இடதுகரை 2092 ஏக்கர்
07. D4. D4 றைஆறு கணேசபுரம் இடதுகரை 1740 ஏக்கர்
08. D5 பரந்தன் இடதுகரை 1764 ஏக்கர்
09. D5, D6, D7 கிளிநொச்சி இடதுகரை 2598 ஏக்கர்
10. D8 பெரிய பரந்தன் இடதுகரை 1270 ஏக்கர்
11. D9, D10 இடதுகரை 1997 ஏக்கர்
12. திருவையாறு மேட்டுநிலம் இடதுகரை 1113 ஏக்கர்

மேலும் இக்குளமானது 2005 – 2006 காலப்பகுதியில் உலகவங்கியின் சுமார் 100 கோடி ரூபா நிதியுதவியுடன் வடக்குக்கிழக்கு நீர்பாசன அபிவிருத்தித்திட்டத்தின் கீழ் அணைக்கட்டு வேலைகள் மீள்நிர்மாணம் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டது.

குளத்தின் நீர்மட்டம் கடல் மட்டத்திலிருந்து 102.96 அடியாக (36') அதிகரிப்பதற்கும் நீர் கொள்ளளவு 120,000 ஏக்கர் அடியாக அதிகரிப்பதற்கும் ஆய்வு வேலைகள் முடிவடைந்து வேலைகள் ஒப்பந்தக்காரரிடம் பாரம் கொடுக்கப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேலும் இந் நீர்ப்பாசனத்திட்டத்தின் மூலமான பொருளாதார சமூக, அரசியல் நிலைமைகள் பற்றி எடுத்து நோக்குவோம். பொருளாதார ரீதியிலும் இந்நீர்ப்பாசனத்திட்டம் பின்வரும் வகையில் செல்வாக்குச் செலுத்தியுள்ளதனை நாம் அவதானிக்க முடிகின்றது.

சிறுபோகத்தில் உப உணவுப் பயிர்களைச் செய்வதே பொருளாதார ரீதியிலும் நீர்தட்டுப்பாட்டின் அடிப்படையிலும் நல்லது என விவசாயத் திணைக்களத்தினரும், பொருளாதார வல்லுனர்களும் கூறினாலும் கிளிநொச்சி வயல்களின் மண்ணின் தன்மை காரணமாக மாறி மாறி பல்வகைப் பயிர்களைச் செய்வது தொழிநுட்ப ரீதியாகவும் பொருளாதார ரீதியாகவும் போட்டித்தன்மை வாய்ந்ததல்ல என விவசாயிகளும் விவசாய நிபுணர்களும் கூறுகின்றனர்.

ஆகவே வடமாகாணத்தின் நெற்களஞ்சியமாக விளங்கும் கிளிநொச்சி மாவட்டத்தின் விவசாயம் இத்திட்டத்தால் பாதிக்கப்படும் நிலை ஏற்படலாம். குறிப்பாக சிறுபோகம் நிச்சயமாகப் பாதிக்கப்படுவதற்கான வாய்ப்புக்கள் உள்ளதை தெளிவாக அவதானிக்க முடிகின்றது. ஆனால் இது பற்றிய ஆய்வு எதுவும் செய்யப்பட்டு அதற்கான மாற்றீடு இத்திட்டத்தில் உள்ளடக்கப்பட்டதை அவதானிக்க முடியவில்லை

விதைக்கப்பட்ட வயல்கள் நீர் விநியோகத'தைப் பேணுவதற்காக கைவிடப்படுமாறு கோரப்படுமானால் அல்லது தொடக்கத்திலேயே சிறுபோகம் செய்வதற்கான பரப்பளவைக் குறைக்குமாறு கோரப்படும் போது விவசாயிகளுக்கு நிவாரணம் வழங்க புதிய புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் ஒப்புக் கொள்ளப்பட்டதாயினும் அதற்கான பொறுப்பு வடக்கு மாகாண சபையிடமே ஒப்படைக்கப்பட்டுள்ளது. இது தொடர்பில் தெளிவான பொறிமுறை எதனையும் அவதானிக்க முடியவில்லை நீர் விநியோகத்துக்காகக் குளத்திலிருந்து நீரைப் பெற்று விற்பனை செய்து வருமானமீட்டவுள்ள தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபைக்கு இதில் எந்தப் பெறுப்புமிருப்பதாகத் தெரியவில்லை.

திட்டத்தின் கீழ் வடமாகாணத்தில் செலவு செய்யவென 2000 கோடி ரூபா வரை கடனாக வழங்கப்படுகின்றது இந்நிதியில் திட்டம் தவறானதெனக் கைவிடப்படுமானால் பெருமளவு நிதியை வடமாகாண சபை இழக்க வேண்டி வருமென்ற வாதமும் முன்வைக்கப்பட்டது. ஆனால் இந்நிதியில் மிகச்சிறிய பகுதியே மாகாண சபையின் அதிகாரப் பரப்பினுள் வருகின்றது. அத்தோடு இத்திட்டதை வடமாகாணத்தைச் சேர்ந்த ஒப்பந்தக்காரரைக் கொண்டோ அல்லது உள்ளூர் பணியாளர்களைக் கொண்டோதான் செய்ய வேண்டும் என எவ்விதிகளும் கடன் ஒப்பந்நத்தில் இல்லை.

இத்திட்டதில் நோக்கத்தை (Scope) மாற்ற Asian Development Bank அனுமதிக்காது என்றும் கூறப்பட்டது.

இத்திட்டத்தை வடமாகாணசபை தவிர்த்தால் ஆசிய அபிவிருத்தி வங்கியோ அல்லது அதுபோன்ற ஏனைய நிறுவனங்களோ வருங்காலத்தில் வடமாகாணசபைக்கு உதவமாட்டாது என்று பரப்பப்படும் தகவல்கள் தவறானவை ஆகும் மேலும் ஆசிய அபிவிருத்தி வங்கி 07.01.2014ஆம் திகதியில் நாளிதழில் இவ்வகையான வாதங்களை மறுத்துமுள்ளன



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேலும் ஒரு திட்டத்திற்கு பெருமளவு நிதி கிடைக்கின்றது என்பதற்காக அத்திட்டத்தால் ஏற்படும் நிச்சயமான பாதிப்புக்களை மக்களின் நியாயமான அச்சங்களை நிராகரித்து ஒரு மக்கள் அரசு செயற்பட முடிந்தது. மேலும் இத்தவறான திட்டம் மக்களின் நிஜமான பிரதிநிதிகளின் சம்மதத்துடன் உருவாக்கப்பட்டதுமல்ல இந்நீர்பாசனத் திட்டமானது பொருளாதாரம் போலவே சமூகம் மற்றும் அரசியல் விடயங்களில் செல்வாக்குச் செலுத்தியுள்ளதைக் காணலாம் அந்த வகையில் சமூக அரசியல் நிலைகளை நோக்குவோம்.

இக்குளம் குறிப்பாக விவசாயத்துக்கென்றே உருவாக்கப்பட்டது. இதன் நீரை நம்பி விவசாயம் செய்யுமாறே பெருமளவு மக்கள் இப்பிரதேசத்தில் குடியேற்றப்பட்டார்.

இக்குளத்தின் உரிமையாளர்கள் இக்குளத்தை நம்பி விவசாயம் செய்து வரும் விவசாயிகள் தான் இக்குளத்தை மேலும் அபிவிரத்தி செய்து இப்போது பயிர் செய்யும் 21000 ஏக்கர்களுக்கு மேலதிகமாக இன்னமும் 15000ஏக்கர் பயிர் செய்ய வேண்டும் என்பதும் விவசாயிகளின் நீண்ட நாள் எதிர்பார்பாக உள்ளது.

தெற்கில் பல இடங்களில் எள்ளது போல வருடத்துக்கு 03 போகங்களுக்கு இல்லாவிட்டாலும் 02 போகங்களுக்கு முழுமையாகப் பயிர் செய்ய முடியாதா என்பது அவர்களின் ஆவலாகும்.

முன்னர் ஒன்றாக இருந்த குடும்பங்கள் எல்லாம் இன்று பல குடும்பங்களாக விரிவடைந்துள்ளதால் காணிகள் பங்கிடப்பட்டு இவற்றின் பரப்பளவு சிறியதாகி வருவதாகக் கூறும் விவசாயிகள் அவர்களின் பரம்பரைகளுக்கு மேலும் காணிகளைப் பெற்று பொருளாதார ரீதியில் பயன்தரக் கூடிய அளவில் பயிர் செய்ய வேண்டும் என்ற நியாயமான எதிர்பார்பைக் கொண்டுள்ளனர்.

வன்னியில் குறிப்பாக கிளிநொச்சியில் எதிர்கால உட்கட்டுமான பொருளாதார குடிப்பரம்பல் அபிவிருத்திகளுக்கான வாய்ப்புக்களும் தேவைகளும் வடமாகாணத்தினதும் வடமாகண மக்களினதும் இருப்புக்கு அவசியம் என்பதுவும் இங்கு கருத்தில் எடுக்கப்பட வேண்டும்.
குடி நீருக்கும் விவசாய நீருக்குமான தட்டுப்பாடு முறையே யாழிலும், கிளிநொச்சியிலும் ஏற்படும் போது தவிர்க்க முடியாத நிலையில் வடக்கு மாகாண சபையே வேறு மாகாணங்களிலிருந்து இரணைமடுக்குளத்துக்கு நீரைக்கோர வேண்டிய இக்கட்டான நிலை ஏற்படலாம். இதன் மூலம் தற்போது வடமாகணத்தின் ஆளுகைக்குள் உள்ள இரணைமடுக் குளமும் அதன்கீழ் நீர்ப்பாசனம் பெறும் நிலங்களும் கை விலகிப்போகலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குளத்தின் நீர் இருப்பு குறையும் காலங்களில் விவசாயிகளுக்கும் நீர் விநியோகப் பயனாளிகளுக்கும் இடையில் ஏற்படக்கூடிய நீர்ப்பங்கீட்டுக்கான போட்டிகள் பிரதேசங்களுக் கிடையிலான புதிய முரண்பாடுகளை ஏற்படுத்தலாம்.

இன்று கிளிநொச்சி மாவட்டம் வளர்ந்து வரும் பிரதேசமாக உள்ளதால் நகரமயமாக்கத்தினை நோக்கி நகர ஆரம்பித்திருப்பதனாலும் மாறிவரும் அரசியல் சமூக பொருளாதாரக் காரணிகளுக்கு அமைய தமிழ் மக்கள் வன்னியை நோக்கிச் சென்று குடியேறுவதை ஊக்குவிக்க வேண்டிய சூழ்நிலை உள்ள நிலையில் இங்கு அமுலாக்கப்படும் எந்த அபிவிருத்தித் திட்டமும் குறுகிய, நீண்ட எதிர்காலங்களில் இம்மாவட்டத்தின் இருப்பைப் பாதிக்காது பார்த்துக் கொள்ள வேண்டியது வடமாகாண சபையின் முக்கிய கடமைகளுள் ஒன்றாகும்

எதிர்காலத்தில் உலகில் ஏற்படக் கூடிய நீருக்கான தட்டுப்பாடு நாடுகள், பிரதேசங்கள் மற்றும் மக்களிடையிலான போட்டிகளையும் ஈற்றில் போர்களை ஏற்படுத்தலாம் என நிபுணர்களும் ஐநா அமைப்பும் எதிர்வு கூறுகின்றன இதனைத் தவிர்க்கும் முகமாக சிறிய நீர் முகாமைத்துவ அலகுகளை (water Resource Management unit) உருவாக்கல் என்ற ஆலோசனையை நாடுகள் கடைப்பிடிக்க வேண்டும் என்ற ஆலோசனையை நிபுணர்களும் ஐநா அமைப்பும் முள்ளவக்கின்றனர் அதாவது ஒவ்வொரு பிரதேசமும் தமக்குரிய நீர்மூலங்களை தமது பிரதேசங்களிலுள்ளேயே தேடிக்கொள்ள வேண்டும் என்பதுவும் பிரதேசங்கள் என்பது நாடுகளுக்குள்ளேயே உள்ள இயலுமானவரை சிறியதான புவியியல் சமூக அலகுகளாக இருக்கவேண்டும் என்பதும் இக்கருத்தின் சாராம்சமாகும்.

உலகில் பல்வேறு வகையிலும் நீர் மாசுபட்டு நீர்தட்டுப்பாடு ஏற்படுகின்றது. அந்த வகையில் குறிப்பாக நவீன விஞ்ஞானக் கண்டுபிடிப்புகள், கடலுக்கடியிலான அணுவாயுதப் பரிசோதனை, கைத்தொழிற் பேட்டைகளின் அதீத வளர்ச்சித் தொகைப் பல்வேறு காரணிகளால் நிமிடத்துக்கு நிமிடமாக நீர் மாசுபட்டே செல்கின்றது. இதனைக் கருத்திற் கொண்டே எதிர்காலத்தில் சிறுநீரைக் கூட நன்னீராக்குவதற்கு துயியடு திட்டமிட்டிருக்கிறது. மேலும் சமுத்திர நீரை நன்னீராக்கும் திட்டம் அமுற்படுத்தப்பட்டுள்ளது.

ஆகவே இவற்றையெல்லாம் கருத்திற் கொண்டு இரணைமடு நீர்த்தேக்கத்தைப் பேணிப் பாதுகாக்க வேண்டியதும் அதனைப் பராமரித்துப் பயன் பெற வேண்டியதும் நமது ஒவ்வொருவரினதும் தலையாய கடமையாகவே உள்ளது.

**ஆ.சிவமோகன்**

**(பழைய மாணவன்)**

**செயலாளர்**

**இரணைமடு கமக்காரர் அமைப்புக்களின் சம்மேளனம்**

**கிளிநொச்சி**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கிளிநொச்சி மாவட்டத்தின் அபிவிருத்தியில் வட்டக்கச்சி பிராந்தியத்தின் பங்கு சமூகப் பொருளாதார நோக்கு

# Role of Vaddakkachi region to contribute District Development of Kilinochchi

கிளிநொச்சி மாவட்டத்தின் வளர்ச்சி என்பது இலங்கை பொருளாதார வரலாற்றில் ஒரு கணிசமான கனதியான பங்களிப்புடன் கூடிய வளர்ச்சியாக கருதப்படுகிறது. ஏனெனில் இலங்கையின் மொத்த நெல் உற்பத்தியில் 6 சதவீத பங்களிப்பை வழங்கும் ஒரு மாவட்டம் என்ற வகையிலும் 25 நிர்வாக மாவட்டங்களில் இறுதியாக பிரகடனம் பெற்றது என்ற வகையிலும் மாகாண அடிப்படையில் வடக்கு மாகாணத்தின் போக்குவரத்து மையம் (Taransports HUP) என்ற வகையிலும் மிகச் சிறந்த விவசாய நிலப்பரப்பையும் வாய்ப்பான நீர் மூலங்களையும் கொண்ட மைய நகரம் என்ற வகையிலும் இன்று பரவலாக மதிப்பிடப்பட்டு வருகிறது. அத்துடன் இம்மாகாணத்தின் மொத்த நிலப்பரப்பில் 18 சதவீதத்தினையும் 43599 குடும்பங்களை உள்ளடக்கிய 141766 மக்கள் வாழும் ஒரு நிர்வாக மாவட்டம் என்ற வகையில் இம்மாவட்டத்தின் அபிவிருத்தி மதிப்பிடப்பட்டு வருகிறது. வரலாற்று நோக்கில் மிகவும் பழைமை வாய்ந்த பண்பாட்டு நகரமாக கிளிநொச்சி இருந்தது என இலங்கையின் முதன்மை தொல்லியலாளர்களில் ஒருவரான கலாநிதி சிரான் தெரணியகல குறிப்பிடுகிறார்.

கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள இரணைமடுப் பகுதியில் மேற்கொண்ட ஆய்வுகள் இக் கருத்துக்கு புதுவெளிச்சத்தை ஏற்படுத்தியுள்ளது எனக் கூறலாம். அவர் இங்கு மேற்கொண்ட ஆய்வுகளின் போது கிடைத்த ஆதாரங்களிலிருந்து இற்றைக்கு 125000 ஆண்டுகளுக்கு முன்னரே இப்பிராந்தியத்தில் மேலைப்பழங்கற்கால மக்கள் வாழ்ந்துள்ளனர் எனவும் இவர் நாடோடிகளாக மிருகங்களை வேட்டையாடியும் பழங்களையும் கிழங்கு வகைகளையும் காய்கறிகளையும் உண்டு வாழ்ந்து வந்தனர் என்பதனையும் இங்கு கிடைத்த கல்லாயுதங்கள் உறுதி செய்கின்றன. இவ் ஆதாரங்கள் இலங்கையின் முதலாவது மனிதக் குடியிருப்பின் தொடக்கப் புள்ளியாக இரணைமடுவை அடையளப்படுத்தியதன் மூலம் கிளிநொச்சியின் வரலாற்று தொன்மை வெளிச்சத்துக்கு வந்தது (ப.புஸ்பரட்ணம் 2014) எனினும் செறிவான மனிதக் குடியிருப்புகள் என்பது 1950 களில் பின்னர் உருவாக்கப்பட்ட குடியேற்றக் கிராமங்களின் அபிவிருத்தியினால் தான் ஏற்பட்டுள்ளது. குடியேற்ற முறைமையின் கீழ் அபிவிருத்தி செய்யப்பட்ட 103 கிராமங்கள் காணப்படுவதுடன் அவை இம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாவட்டத்தில் காணப்படும் 95 கிராம அலுவலர் 60 கிராம அலுவலர் பிரிவுகள் உள்ளடக்கப்பட்டுள்ளது 58 கிராம விஸ்தரிப்பு திட்டங்கள் 21 மத்திய வகுப்பு குடியேற்ற திட்டங்கள் படித்த வாலிபர் குடியேற்ற திட்டங்கள் 15 குடியான்கள் குடியேற்ற திட்டங்கள் உள்ளடக்கிய 37746 ஏக்கர் நிலங்கள் குடியேற்ற முறைக்கூடாக அபிவிருத்தி செய்யப்பட்டுள்ளது. இந்த குடியேற்ற கிராமங்களில் முதலில் யாழ்ப்பாண சமூகத்தை சார்ந்தவர்களும் தொடர்ந்து மலையக வம்சாவளியினரும் குடியேறினர்கள் எனினும் இம் மண்ணிலேயே பிறந்து வாழும் குடியேற்ற பிரதேசத்தில் பிறந்தவர்களால் உருவாகிய புதிய சமூக அமைப்பே இப்போது கிளிநொச்சி சமூகமாக உருப்பெற்றுள்ளது. இது தனக்கே உரிய கிளிநொச்சி பண்பாட்டுடன் இருந்து வருகிறது அவ்வகையில் குடியேற்றங்களில் உருவாகிய பிரதான வளர்ச்சிகளில் மூலகாரணமாக இருந்த பிரதேசங்களை நாம் சமூக அடிப்படையில் பார்க்க முடியும் அதிலும் குறிப்பாக கிளிநொச்சியின் எழுச்சியை நிர்ணயித்த கரைச்சி பிரிவில் நான்கு வலயங்களை நாம் குறிப்பிட முடியும் அவையாவன.

1. உருத்திரபுர பிரதேசம்
2. வட்டக்கச்சி பிரதேசம்
3. அக்கராயன் பிரதேசம்
4. உதயநகர் பிரதேசம் என்பனவே அவையாகும்.

இப்பிரதேசங்கள் கரைச்சி பிரிவின் 42 கிராம அலுவலர் பிரிவுகளை உள்ளாக்கியவையாக அமைந்துள்ளன. அதில் வட்டக்கச்சி பிரதேசம் குறித்த ஆய்வாகக் மட்டுமே இதனை நான் ஆராய, பகிர முனைந்திருக்கின்றேன் உண்மையில் 1953ம் ஆண்டில் இரணைமடுவின் வலது கரை வாய்க்கால் நிர்மாணம் செய்யப்பட்டதுடன் 7 மைல் நீளமான இவ் வாய்க்காலை அடிப்படையாக கொண்டு வட்டக்கச்சி கொலனி கிராமம் 3 ஏக்கர் வயல் நிலங்களும் 2 ஏக்கர் உயர் நிலங்களும் கொண்ட 2070 ஏக்கர் நிலங்கள் 394 குடும்பங்களுக்கு பிரித்து வழங்கப்பட்டது. இதனை தொடர்ந்து 1954ம் ஆண்டில் வட்டக்கச்சி சிவிக் சென்ரர் பகுதியில் 3 ஏக்கர் வயல் நிலமும் 2 ஏக்கர் உயர் நிலமும் கொண்ட 267 ஏக்கர் நிலப்பரப்பு 89 பேருக்கு வழங்கப்பட்டது. இப்பிராந்தியத்தின் குடியேற்றங்களின் தொடக்கமாக இவ்விரு பிரதேசங்களையும் கொள்ள முடிவதுடன் 1955ம் ஆண்டில் இரணைமடு குளத்தின் அணைக்கட்டு 28 அடியிலிருந்து 30 அடியாக உயர்த்தப்பட்ட போது 3 ஏக்கர் தாழ் நிலமும் 2 ஏக்கர் உயர் நிலமும் கொண்ட 2325 ஏக்கர் நிலங்கள் 465 குடும்பங்களுக்கு இராமநாதபுரம் பகுதியில் வழங்கப்பட்டது. இவ்வகையில் குடியேற்ற கிராமங்களின் தொன்மை கிராமங்களாக வட்டக்கச்சி, சிவிக் சென்ரர், இராமநாதபுரம், கல்மடுநகர் ஆகிய 3 கிராமங்களும் அமைந்ததுடன் இக் கிராமங்களில் தான் அனைத்து உட்கட்டுமான வளர்ச்சிகளும் உருவாக்கப்பட்டமையால் விவசாய வருமானத்துடன் இயங்கும் விவசாய சமூகம் ஒன்று வளர்ச்சி பெறத் தொடங்கியது. இதேவேளை நெத்தலியாற்று படுக்கையை ஆதாரமாக கொண்டு நிர்மாணிக்கப்பட்ட கல்மடுக்குளத்தினை அடிப்படையாக கொண்டு மத்தியதரவர்க்க குடியிருப்பு என்ற



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வகையில் 1958 ம் ஆண்டில் 10 ஏக்கர் தாழ் நிலம் 5 ஏக்கர் உயர் நிலம் என்ற அடிப்படையில் 45 குடியேற்ற வாசிகளுக்கு 450 ஏக்கர் தாழ் நிலங்களும் 250 ஏக்கர் உயர் நிலங்களும் வழங்கப்பட்டு கல்மடுநகர் திட்டம் ஆரம்பிக்கப்பட்டது. இவ்வகையில் இவ் ஆரம்ப கிராமங்களின் சனத்தொகைச் செறிவு கிராம விஸ்தரிப்பு திட்டங்களை தூண்டிவர புதுக்காடு, அழகாபுரி, ஆலடி, மாயவனூர், சம்புக்குளம், மாவடியம்மன் போன்ற கிராமங்கள் விஸ்தரிப்பு திட்டங்களாக மக்கள் குடியேறி அபிவிருத்தி செய்ய முடிந்திருக்கின்றது.

வட்டக்கச்சி ஒரு பிராந்தியமாக கொள்வதற்கான பல சமூக காரணிகளை நாம் அடையாளப்படுத்தலாம் அவையாவன.

1. கல்வியின் தனித்துவம்

கிளிநொச்சி மாவட்டத்தில் பல்கலைக்கழக கல்வி பெறும் மாணவர்களில் 20 சதவீதத்துக்கு குறையாதவர்கள் வருடாந்தம் இப்பிரிவிலிருந்து தெரிவு செய்யப்படுதல்.

2. உற்பத்தியில் தனித்துவம்

இம் மாவட்டத்தின் பிரதான பயிரான நெல் மற்றும் உப உணவு உற்பத்தியிலும் பழச் செய்கையிலும் தென்னை உற்பத்தியிலும் கணிசமான பங்கு வழங்கும் பிரதேசமாக இது இருத்தல்.

3. பொதுச் சேவை மற்றும் தகைமை சார் பணி நிலைகள்

அரசாங்க சேவை மற்றும் தனியார் துறை முதலீட்டு துறை என்பவற்றில் இப்பிராந்தியம் கணிசமான எண்ணிக்கையை கொண்டவர்களாக இருப்பதுடன் புலம் பெயர்ந்தோரிலும் அதிகமானவர்கள் இப்பகுதியினை சார்ந்தவர்களாகவே காணப்படுகின்றனர்.

மாவட்டத்தை பிரதி நிதித்துவப்படுத்தும் பாராளுமன்ற உறுப்பினர் நாடாளாவிய சேவைகள், மற்றும் வைத்தியர்கள், பொறியியலாளர்கள், பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் என பலதரப்பட்ட தகைமைசார் புத்தி ஜீவிகள் இப்பிராந்தியத்தில் இருந்து உருவாகி இருப்பதுடன் மாவட்டத்தில் அதிக தொகையாக இப் பிரிவினர் வாழும் ஒரு பகுதியாகவும் இதனை வகைப்படுத்த முடியும்.

4. சிறந்த சுய தொழில் ஆற்றலுள்ளோரும் அனைத்து பதவிகளிலும் தம்மை அலங்கரிப் போராக இப் பிரதேச சனத்தொகை காணப்படுதல்.

இவ்வகையில் நவீன முறையிலான மாவட்ட அபிவிருத்தியில் காத்திரமான பங்கு வழங்கக் கூடிய இப்பிரதேசத்தை கூறுபோடும் வகையில் 7ம் யூனிட், சம்புக்குளம் மற்றும் கல்மடு நகர் என்பன கண்டாவளை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரதேச செயலர் பிரிவுக்கு மாற்றப்பட்டமை, கவலையளிப்பதுடன் அது சமூக ஊட்டத்தின் மீது பாரிய தாக்கத்தை செயல்படுத்தியுள்ளது. அதேபோல இரணைமடுவின் புதிய கட்டுமான நகர்வின் பின் இப் பிரதேசம் தரை வழித் தொடர்பை மேலும் பலப்படுத்த முடியுமாயினும் நீர் உரிமை பெறும் அளவில் பாரிய மாற்றம் எதனையும் குறிப்பிட முடியாதுள்ளது.

**உசாத்துணை நூல்களின் விரிப்பு**


1. Arumugam.S Water Resource of Ceylon Pt.s
   Untilization and develoment
   Water resource Board Publication - 1969

உ. கிளிநொச்சி மாவட்ட தொன்மையின் மூலங்கள்
   மாவட்ட பண்பாட்டு பேரவை வெளியீடு – 2015

3. அ.கேதீஸ்வரன்
   கிளிநொச்சி மாவட்டத்தில் நீர்ப்பாசன விவசாயமும் நீர் முகாமைத்துவமும்
   முதுகலைமாணிப் பட்ட ஆய்வு, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் 2001.



*அமரசிங்கம் கேதீஸ்வரன்* B.A (Hons) ECN, M.ph.L (ECN) Dip In Planning
*உதவி திட்டதிடல் பணிப்பாளர்*
*மாவட்ட செயலகம்*
**(பழைய மாணவன்)**


**எப்போதும் உடைகளை நேர்த்தியாக அணிந்து கொள்ளுங்கள். புது முகங்கள் நம்முடன் பழகுவதற்கு முன்னர் நம் உடையைப் பார்த்துத் தான் நம் தரத்தை எடை போடுகின்றனர்.**




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# 1956 – 1965 காலப்பகுதியில் பயின்ற மாணவி ஒருவரின் இராமநாதபுரம் மகாவித்தியாலயம் மீதான ஒரு நோக்கு

1956ம் ஆண்டு எனது எட்டு வயதில் மூன்றாம் வகுப்பில் இந்தப்பாடசாலையில் இணைந்து கொண்டேன். அந்த சமயத்தில் 5ம் வகுப்புவரையுமே வகுப்புக்கள் இருந்தது ஆனால் அடுத்தடுத்த வருடங்களிலேயே 8 வகுப்புவரை படிக்கக் கூடிய சூழ்நிலைகள் ஏற்பட்டன. அந்த நிலையில் ஓடுகளால் வேயப்பட்ட ஒரு கட்டிடமே இருந்தது வகுப்புக்கள் எண்ணிக்கை அதிகரிக்க கிடுகுகளால் வேயப்பட்ட கொட்டில்கள் விஸ்தரிக்கப்பட்டன.

அக்காலத்தில் காரை நகரைச்சேர்ந்த திரு.கனகசுந்தரம் அவர்கள் அதிபராக இருந்தார் அதேபோல் அல்லவாயைச் சேர்ந்த திரு திருமதி சிதம்பரப்பிள்ளை ஆகிய இருவரும் ஆசிரியர்களாகக் கடமையாற்றியிருந்தார்கள். 1960 இல் யாழ் நல்லூரைச் சேர்ந்த திரு.சங்கரப்பிள்ளை அவர்கள் அதிபராக இணைந்து கொண்டார் அத்துடன் பாடசாலையும் தரமுயர்த்தப்பட்டு JSC தரம் ளுளுஊ தரம் வரை மாற்றம் கண்டது.

இந்தக்காலப் பகுதியில் கரவெட்டியைச் சேர்ந்த திருமதி.கந்தப்பு அவர்கள் பூமிசாத்திர ஆசிரியராகவும் இலக்கியம் மற்றும் தமிழ் மொழிப் பாடங்களை அதிபர் திரு.சங்கரப்பிள்ளை அவர்களும் திரு.திருநாவுக்கரசு ஆசிரியரும் இணைந்து கற்பித்தார்கள். ஆரம்பவகுப்பு இடைநிலை வகுப்பு ஆசிரியர்களாக திருமதி. நாகம்மா, நெல்லியடியைச் சேர்ந்த திருமதி.நாகராஜா வட்டக்கச்சி படித்த வாலிபர் திட்டத்தைச் சேர்ந்த திரு.கோபாலபிள்ளை ஆகியோர் கடமையாற்றியதை ஞாபகப்படுத்தக் கூடியயதாகவுள்ளது 1962 - 1963 காலப்பகுதிகளில் நான் மாணவத் தலைவராகவும் இருந்தமை பெருமையாகவுள்ளது மேலும் 1964ம் ஆண்டு கிளிநொச்சிப் பிரதேச தடகள விளையாட்டுப் போட்டியில் மிகச்சிறப்பான முறையில் அனைத்து விளையாட்டிலும் முதலாம் இடம் பெற்று சம்பியன் பட்டத்தை வென்றதும் அதனைத் தொடர்ந்து வட்டுக்கோட்டையில் நடைபெற்ற வடமாகாண போட்டிகளிலும் வெற்றிபெற்ற போதும் குடும்ப சூழ்நிலை காரணமாக தேசியதர மட்ட போட்டியில் பங்குபற்ற முடியாது போனமை துரதிஸ்ரமே. எனது இவ்விளையாட்டுத்துறை வளர்ச்சிக்கு பெரிதும் உறுதுணையாக இருந்து ஊக்கமளித்த திருமதி.கந்தப்பு ஆசிரியை என் வாழ்வில் என்றுமே மறக்க முடியா நல்லாசான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதே போன்று கலைத்துறையிலும் சிறப்பாக செயற்பட உந்துதலாக இருந்து வழி நடத்தியவர் ஆசிரியர் திருநாவுக்கரசு அவர்களே. இவரின் நெறியாள்கையில் கண்ணகியாக வேடமேற்று நடித்து பெரும் வரவேற்பைப் பெற்றதும் மறக்க முடியாத பாடசாலைக் காலங்கள்.

தொடர்ந்து உடனடியாக திருமண பந்தத்தில் இணைந்தது அன்றைய சூழ்நிலையில் தொடர்ந்து எத்துறையிலும் கால்பதிக்கக் கூடிய சூழ்நிலையை உருவாக்கிக் கொள்ள முடியவில்லை.

ஆனால் எனது பிள்ளைகளை அவ்வாறு உருவாக்கி விட்டது பெருநிறைவைத் தருகின்றது. குறிப்பாக எனது மூத்த மகன் சிவசிறி யாழ்பல்கலையில் பட்டம் பெற்று தான் படித்த காட்லிக் கல்லூரியிலே ஆசிரியராக விளையாட்டுத் துறையில் செயற்பட்டுள்ளார்.

இதனைப் போன்றே என் தம்பியின் மகள் ஜனா இப்பாடசாலையிலேயே கல்வி கற்று யாழ்பல்கலைக் கழகத்தில் சட்டத்துறையில் கல்வி பயின்று வழக்கறிஞராக வெளியேறுவதும் பெருமையான விடையமே.

அன்றைய மாணவராக
செல்வி.சோமசுந்தரம் தமிழரசி
(திருமதி.தங்கராசா தமிழரசி)
புலோலி மந்தி
பருத்தித்துறை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## எமது கிராமமும் பாடசாலையும்

'கற்கை நன்றே கற்கை நன்றே பிச்சை புகினும் கற்கை நன்றே" என்ற முதுமொழிக்கிணங்க எம் கிராமச்சிறார்கள் கற்க வேண்டும் கற்று உயர வேண்டும் கல்வியறிவுடைய கிராமமாக மிளிரவேண்டும் என்பதற்காக அரசால் அமைத்துதரப்பட்ட யாழ்/இராமநாதபுரம் வடக்கு அரசினர் தமிழ்கலவன் பாடசாலை இக் கிராமத்தில் 02/05/1956 ல் ஆரம்பிக்கப்பட்டது. இப் பாடசாலையில் தரம் 5 வரை வகுப்புக்கள் காணப்பட்டன. JSC,SSC என பாடசாலை வகுப்புக்கள் ஆரம்பிக்கப்பட்டு 1963 ல் உயர்தர பரீட்சைக்கு மாணவர்களைத் தோற்றுவித்தது. 1968 ல் யாழ் /இராமநாதபுரம் ம.வி தரமுயர்த்தப்பட்டு 1984 முதல் கிளி/இராமநாதபுரம் ம.வி என்ற பெயரில் ஊருக்குக் கல்விச்சேவையாற்றிவரும் எம் பாடசாலைக்கும் கிராமத்தவர்கட்கும் உள்ள நெருக்கம் பற்றிய ஒரு பார்வை. ஆதியிலே வேலி இல்லை. காணியின் அளவோ 3 ஏக்கர். மனிதர்கள் மாணவர்கள் கால்நடைகள் என்பனவற்றின் வாழ்விடமாக திகழ்ந்தது. நாலா பக்கத்தாலும் வகுப்பறைக்குள் நுழையும் வாய்ப்பு இருந்தது.

நேரம் தவறிப் பாடசாலைக்கு வந்தாலும் அதிபர் ஆசிரியர் கண்ணில் படாமல் வகுப்பறையினுள் நுழையும் திறமையும் மாணவர்களுக்கு இருந்தது.கற்க விரும்பிய மாணவன் வகுப்பறைக்குள் களவாக நுழைவான். எனைய பிந்திய மாணவர்கள் தபாலகத்தின் பின்னாலுள்ள பற்றைக்காட்டில் பதுங்கி இருப்பார்கள். இவ்வாறு கல்வியின் முக்கியத்துவம் தெரியாத சிறார்களாக அன்று இருந்தார்கள். நேரம் பார்ப்பதற்கு மணிக்கூடு இன்றி வேறு தொலைத்தொடர்பு ரேடியோ வசதி கூட இன்றி காலடியால் நிழலை அளந்து 10 அடிக்க மேல் இருக்கும் பொழுது பாடசாலை செல்வார்கள். ஒவ்வொரு வீடுகளிலும் உள்ள நண்பர்களைத்தேடி கால்நடையாக நடந்து கூட்டிக்கொண்டு கூட்டம் கூட்டமாகப் பாடசாலை செல்வார்கள். இதுவே 1960 களின் முன் உள்ள மாணவர்நிலை. இவர்களை ஊரில் உள்ள சில பெரியவர்கள் அவதானித்து இழைத்து வந்து பாடசாலையில் விட்ட சந்தர்பங்களும் உண்டு.

சில புதிய மாணவர்கள் பாதை மாறிச்சென்று ஊர் கூடி அவர்களைத்தேடிக் கண்டுபிடித்த செயற்பாடுகளும் அக்காலத்தில் காணப்பட்டது. செல்வி. செல்லத்துரை பகிரதி இவ்வாறு காணாமற் போய்விட்டார்.ஊர்மக்கள் சேர்ந்து தேடி குஞ்சுமீன் பிள்ளையார் கோயிலுக்கு அருகில் கண்டுபிடித்தனர். இவ்வாறு மக்கள் பல ஊரில் இருந்து வந்து குடியேறி இருந்தாலும் யாவரும் பாடசாலைப்பிள்ளைகளை தம்பிள்ளைகளை போல் கவனித்து வந்தனர் பாடசாலைப்பிள்ளைகளின் பெற்றோர் என்ற வகையில் ஒன்றித்து வாழ்ந்தனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடசாலையை சுற்றி வாழ்ந்த குடும்பத்தவர்கள் தமது கிணறுகளில் நீர் பருக உதவினர். இல்ல விளையாட்டுப் போட்டிகள் நடந்தவேளை கோயிற் திருவிழாக்கள் போல் ஊர்மக்கள் இரவுபகலாக வந்து உதவி செய்து பாடசாலை விழாவை திருவிழா போல் செயற்படுத்தினார். தாமோதரம்பிள்ளை அவர்களின் தட்டிவான் ஒரு நாளுக்கு ஒருமுறை கிளிநொச்சிக்கு பயணிகளை ஏற்றி இறக்கி வந்தாலும் ஆசிரியர்குழாம் தம்முர் சென்று திரும்புவதற்கு வந்தது குறிப்பிடதக்கது. பாடசாலை முன்னேற்றத்தில் ஒவ்வொரு உத்தியோகத்தரும் உதவி புரிந்தனர். இவ்வாறு உதவிய பண்பு வளர்க்கப்பட்டு பாடசாலை துப்பரவு செய்யப்படவேண்டிய சந்தர்ப்பங்களில் சிரமதானம் மூலம் துப்பரவு செய்து உதவினார்கள். ஒவ்வொரு குடும்பத்தவர்களும் தமது பிள்ளைகள் யாவரையும் இப்பாடசாலையை நம்பி கல்விபெற அனுப்பி வைத்தனர். பெற்றோரின் ஒத்துழைப்பு பாடசாலை வளர்ச்சிக்கு நீர் பாய்ச்சியது போன்று காணப்பட்டது. ஆசிரியர்களும் தம்மை நம்பி வந்த பிள்ளைகளிற்கு நல்வழி காட்டிக்கற்பித்தனர். கற்பிக்க வந்த ஆசிரியர்கட்கு போக்குவரத்து வசதியில்லை தங்குமிட வசதியில்லை சாப்பாட்டு வசதியில்லை அக்காலத்தில் இவ்வூரில் சாப்பாட்டுக்கடைகள் இல்லை. பாசாலையில் பிள்ளைகட்கு கொடுக்கப்படும் பணிஸ் கூட கிளிநொச்சி யாழ் பேக்கரியிலிருந்து துவிச்சக்கரவண்டி மூலம் பெட்டியில் கட்டிவந்தே கொடுக்கப்பட்டது. இவ்வூர்வாசிகள் சிலர் ஆசிரியர்கட்கு காலைச்சாப்பாட்டிற்காக பலகாரவகை செய்து கொடுத்து உதவினர். சங்கக்கடை வாச்சர் நடராசா அவர்கள் திருநாவுக்கரசு ஆசிரியருக்கு தங்குமிட வசதியும் சாப்பாட்டு ஒழுங்கும் செய்து கொடுத்தமையால் அவர் மாணவர்கட்கு நான்கு பாடம் தானே கற்பித்து பரீட்சைக்கு தயார்ப்படுத்தினார்கள். தமிழ், தமிழ் இலக்கியம் சமயம் சுகாதாரம் என நான்கு பாடங்களையும் இவரே கற்பித்தமை குறிப்பிடத்தக்கது. மாவடியம்மன் ஆலயத்திற்கு அருகேயிருந்த முதியவரும் மனைவியும் ஒன்று சேர்ந்து உணவு ஆகாரம் செய்த எம் ஆசிரியர்கள் எல்லோருக்கும் வயிறு குளிரப்பணியாற்றினர் அவர்களை இவ்வூர் மக்களால் மறக்கமுடியாது. ஏனெனில் இவர்களே வருகைதரும் ஆசிரியர்களை வரவேற்றுப் பசியாற்றி மாணவர் கல்விக்கு மறைமுகமாக பணியாற்றியமை குறிப்பிடத்தக்கது. இவ்வாறு அவர்களின் வயிறு பணி செய்யாது விட்டிருந்தால் இப் பாடசாலைக்கு வந்த ஆசிரியர்கள் சாப்பாட்டு வசதியும் இல்லை என்று இடம்மாற்றம் பெற்று சென்றிருப்பார்கள். அவர்கள் வீட்டிற்கு அருகிலிருந்த ஐயாத்துரை வாத்தியார் வீடு பெண் ஆசிரியர் விடுதி போன்று பெண்களுக்கு உதவியமையும் குறிப்பிடத்தக்கது. இவ்வாறு பல குடிமக்கள் உதவியால்தான் கிளி/ இராமநாதபுரம் மகாவித்தியாலயம் வளர்ச்சி கண்டது. 1966 ல் வருகைதந்த சங்கீத ஆசிரியர் தியாகராஜாவிற்கு குடும்பத்துடன் வாழக்கூடிய உதவியை அயலில் வசித்த திரு.காசிப்பிள்ளை அவர்கள் செய்து கொடுத்தார். திரு. பொ.சுப்பிரமணியம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆசிரியர் குடும்பத்துடன் வாழ்வதற்கு அயலில் இருந்த கந்தசாமி அண்ணை தனது வீட்டையே கொடுத்து உதவினார். இவர்களுடைய உதவிகள் தன்நலம் கருதியதாக அமையவில்லை பொதுநலம் கருதியதாக வாடகை ஏதும் இன்றியே கொடுத்து உதவினார்கள். இதனால் இவர்களுடைய பிள்ளைகளும் எம் பாடசாலை மாணவராகி எண்ணிக்கை அதிகரித்ததும் ஒருவித வளர்ச்சியே. நெல் அளக்கும் மாணிக்கப்பா என்ற சோமசுந்தரத்தார் தன்னூரில் இருந்து இங்கு பணியாற்ற வந்த ஆசிரியப் பெருந்தகைக்கும் இயன்ற உதவிகள் புரிந்து வந்தார்.அவரின் மகளாகிய தமிழரசி துணிச்சல் உள்ள சிரேஸ்ட மாணவி எல்லோருக்கும் இயன்ற உதவிகள் செய்து அவர்களின் நன்மதிப்பை பெற்ற மாணவியாகத் திகழ்ந்தார். இவரது முன்னேற்றத்திற்கு அனைத்து ஆசிரியர்களும் துணைநின்றனர். தமக்கு உதவிய பரோபகாரக்குடும்பத்தவரை கல்வியில உயர வைக்க ஆசிரியர்கள் பின் நிற்கவில்லை. குருகுல கல்வி போன்று தம் வீடுகளுக்கு மாணவர்களை அழைத்து கல்வி புகட்டி வந்தனர். இவ்வாறாக பாடசாலை சமூக உறவு சிறந்து வளர்ந்து வந்தது. பழையமாணவர் என்று அழைக்கும் பக்குவத்தில் 1963 ல் பரீட்சை எடுத்தவர்கள் காணப்பட்டார்கள். இவர்கள் தமது பாடசாலை என்று தம்மால் இயன்ற உதவிகள் எல்லாம் செய்து கொடுத்தனர். இவர்களில் குறிப்பிடத்தக்கவர்களாக எங்கள் பாடசாலையில் கற்று தபாற்பியோனாக கடமையாற்றிய ஆ.யோகராசா இலங்கைப்போக்குவரத்து சபையில் சாரதியாகக் கடமையாற்றிய வ.தம்பிராசா மற்றும் சோ.மயில்வாகனம், சோ.பரமசாமி சி.கனகரத்தினம், ஜீவரத்தினம் ,ந.சிவராசா, நடராசா போன்றோர்கள் அன்றைய பழையமாணவர்களாக பாடசாலைக்கு இயன்ற வகையில் உதவியவர்கள். இவர்களில் பெற்றோர்களாக தேவைப்பட்ட வேளை எல்லாம் உதவியவர்களில் அயலில் வசிக்கும் கந்தசாமி அண்ணை மெசின்காரக்கதிரவேலண்ணை சோ. மயில்வாகனம் அண்ணை சிவராசா எனப்படும் காந்தி அண்ணை இன்னும் இவர்கள் பிண்னணியில் பலர் தமது விவசாயவாகனத்தைப் பாடசாலைத் தேவைக்கு கொடுத்துதவினார்கள். கந்தசாமி அண்ணை ஒலிபெருக்கி வைத்திருந்தவர். மாணவர்கட்கு உடற்பயிற்சி பழக்கும் போது பாடசாலைக் கூட்டத்தின் போதெல்லாம் தனது செலவில் தன்வீட்டிலிருந்தே பாடசாலைத் தேவைக்கு உதவுவார். இக்காலத்தில் காலை உடற்பயிற்க்கு ஒலிபெருக்கி பாவிப்பது போன்று இருபந்தைந்து வருடங்களுக்கு முன்பே பாடசாலை மாணவர்கள் காலைப்பயிற்சி செய்ய கந்தசாமி அண்ணை உதவினார். அக்காலத்தில் அவரது மகன் மயூரன் எங்கள் பாடசாலையில்தரம் 11 ல் கல்வி பயின்றமை குறிப்பிடத்தக்கது. நன்மை செய்தால் நல்லது கிட்டும் இவரது பிள்ளைகள் மூவர் பட்டதாரிகளானது நற்பணியின் பயனாகும். மெசின்காரக்கதிரவேலண்ணை சோ. மயில்வாகனம் அண்ணை என்றால் மாணவருக்கு பலருக்கு இவர்களை தெரியும் ஏனெனில் வாகனவசதி அற்ற



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அக்காலத்தில் பிள்ளைகளைப் போட்டிகட்கு கிளிநொச்சிக்கு அழைத்துச் செல்லும் ரதம் இவர்களின் உழவு இயந்திரமே. இவ்வாறு அச் சமூகம் பாடசாலைக்கெனப் பல உதவிகள் புரிந்தனர். இவற்றைக்கொண்டு நோக்குகையில் கிராமமும் பாடசாலையும் ஒன்றித்துச் செயற்பட்டதைக் காணமுடிகிறது. மேலும் ஒரு படியாக செல்வி. நா. ஜமுனேஸ்வரி திருமதி சின்னராசாவாகியும் இன்றுவரை எமது வித்தியாலயம் கணிதத்தில் உயர்வை பெறப்பணியாற்றியுள்ளார். எமது பாடசாலை ஆண்பிள்ளைகள் பெருவிளையாட்டுக்களில் வெற்றிபெற திருமண பந்தத்தின் மூலம் இக்கிராமத்திற்கு வருகை தந்த கிருஸ்ணபவான் அவர்கள் அரும்பாடுபட்டு எம் பாடசாலைக்காக உழைத்துக் கொண்டே இருக்கிறார். இவ்வாறான பரோபகாரிகளும் இக் கிராமத்தில் இருக்கத்தான் செய்கிறார்கள். இதற்கு ஒரு படி மேலாக செல்வி.ராதா.காசிப்பிள்ளை எனும் ஆசிரியை தான் வெளிநாடு செல்லும் போது தன் தந்தையார் ஞாபகார்த்தமாக பாடசாலைக்கு இரும்புகேற் தொகுதி ஒன்றைச் செய்து தந்து போனார். அவரது தந்தையார் பெயரான காசிப்பிள்ளை என அதில் பொறிக்கப்பட்டிருந்தது. இதன் பின் எம் பாடசாலைக்கு வருகைதந்த கௌரவ பாராளுமன்ற உறுப்பினர் திரு.ரவிராஜ் அவர்கள் 75000 செலவில் புதியகேற் தொகுதி ஒன்றை பாடசாலைக்கென தருவித்தார். இக் கேற் தொகுதியே இன்றும் பாடசாலையை அலங்கரித்துக் கொண்டிருக்கிறது. குறிப்பிடத்தக்கதாகும். இது போன்று கிராமத்து மக்களும் தங்களால் இயன்ற சரீர உதவி பொருளாதார உதவிகள் செய்து பாடசாலை வளர்ச்சிக்கு பாடுபட்டனர். போர்ச்சூழல் காலத்தில் பாடசாலைக்கென பல பங்கர்கள் அமைத்துகொடுத்து மாணவர்களையும் ஆசிரியர்களையும் பாதுகாத்ததில் இவ்வூர் மக்கள் பெரிதும் பங்காற்றினர்.1998 ல் எமது பாடசாலை உயர்தர பரீட்சை நிலையமாக இருந்தது. அன்றொரு நாள் மாணவர்கள் பரீட்சை எழுதிக் கொண்டிருந்த நேரத்தில் கூட ஆனையிறவில் இருந்து இராணுவத்தினர் ஏவியஆட்லறி செல் பாடசாலை வளவின் மத்தியில் விழுந்து மாணவர் பதறி எழுந்து பங்கருக்குள் பதுங்கி எழுந்து பின் அதே பதற்ற நிலையுடன் பரீட்சை எழுதி அந்தப்பாடத்தில் குறைவான சித்திகளைப் பெற்றதும் குறிப்பிடத்தக்கது. போர்மேகம் சூழ்ந்த வேளையிலும் எம் மாணவர் கல்வி செயற்பாட்டில் ஊக்கம் காட்டி நின்றனர்.அக் காலத்தில் தான் எம் பாடசாலையிலிருந்து பல்கலைக்கழகத்திற'கு முதன்முறையாக மூன்று பெண பிள்ளைகள் கலைப்பிரிவில் தெரிவாகியமை குறிப்பிடத்தக்கது. செல்வி ஜெயக்குமாரி சுப்பிரமணியம் செல்வி.ஜெயந்தி ஜெயக்கொடி செல்வி.சுபாங்கினி, சிவராசா ஆகிய மூவரும் தரம் ஒன்றில் இருந்து பதின்மூன்று வரை இப் பாடசாலையை நம்பியே கல்வி கற்றவர்கள். இதே வேளை வர்த்தக பிரிவிலும் சங்கீதா, சிவலோகநாயகி ஆகியோர் தெரிவாகினர். 2003 ம் ஆண்டு O/L எழுதி சித்தி பெற்ற மாணவர் தொகுதி 6A,5A தரச்சித்தி பெற்று திறமையுடையவர்களாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருந்தும் பாடசாலையை விட்டு வேறு பாடசாலை செல்ல விருப்பமின்றி இங்குள்ள கற்கை நெறியையே பின்பற்றியமை உண்மை சம்பவம். பல ஆசிரியர்கள் வேறு பாடசாலை சென்றால் விஞ்ஞான பிரிவு மற்றும் கணிதபிரிவு கற்கலாம் என்ற வேளையில் எம் பாடசாலையை விட்டு செல்ல மாட்டோம் என்று பாடசாலை பற்றுடையவர்களாக காணப்பட்டனர். அவ் வேளை ஆசிரியர்கள் வேதனைப்பட்டது. எம் பாடசாலை 1AB யாக இருந்தால் மாணவர்கள் விரும்பிய துறையில் கற்றிருக்க வாய்ப்பு உண்டென்று இதன் பின்பும் தொடர்ந்து இந்நிலை காணப்படுகிறது. ஒரு சிலர் வேறு பாடசாலை சென்று கணித விஞ்ஞானம் கற்றனர். ஏனையோர் பாடசாலையை விட்டு செல்ல மனமின்றி இங்கிருக்கும் துறைகளிலே கற்றனர் இவர்களில் ஒருவரே இன்று கிளிநொச்சி தேசிய சேமிப்பு வங்கியில் உதவி முகாமையாளராக கடமையாற்றி வரும் திருமதி.லோ.விஜயதேவி ஆவார். இவ்வாறு வளர்ந்த எம் பாடசாலை தொடர் போர் நடவடிக்கையால் நலிவுற்று இடம்பெயர்ந்து மக்கள் சென்றதால் கைவிடப்பட்டது. மீள்குடியேற்றம் நடைபெற்றபோது பாடசாலை வெறிச்சோடிய நிலையில் எந்தவொரு தளபாடமும் இன்றியும் கட்டிடங்களும் இடிந்த நிலையில் காணப்பட்டது. இங்குள்ள பழையமாணவர்களும் வெளிநாடுகளிலுள்ள பழையமாணவர்களும் ஒன்றிணைந்து நிதி திரட்டி பாடசாலைத் தேவைகளை நிறைவேற்றி பழைய நிலைக்கு கொண்டு வந்தனர். அத்துடன் நின்று விடாது பாடசாலையை சுற்று மதில் அமைத்து கொடுக்கும் பொறுப்பில் முனைப்பாக உள்ளனர் இவர்களில் சண்முகம். செல்வராஜா என்னும் பழைய மாணவரின் சேவை பாரட்டத்தக்கதாகும்.. இவர் இடப் பெயர்வின் முன்பும் ஒரு பகுதி மதில் அமைத்து கொடுத்தார். இவரைப் போன்று முன்வீதிககரை மதிலமைப்பில் இங்குள்ளோர் பலர் பங்கு கொண்டது குறிப்பிடத்தக்கது. பழையமாணவர்கள் ஒன்றிணைந்து கனடா ஒன்றியம், லண்டன் ஒன்றியம், பிரான்ஸ் ஒன்றியம் என உருவாக்கி நிதி சேர்த்து தம் பாடசாலையின் தேவைக்கு என அனுப்பிய வரலாறும் உண்டு. குடிநீர்த் தேவையை பூர்த்தி செய்ய மனேச்சர் கதிரவேலு அவர்களின் வழித்தோன்றல்கள் உதவியமை ஒரு மகத்தான செயலாகும். அத்துடன் மீள் குடியேற்றத்தின் பின் கம்பியூட்டர் ஒன்றை அமைப்பதற்கான செயற்பாட்டில் டாக்டர்.மதி மிசின்காரக் கதிரவேலு மகன் குமேஸ்வரன் செல்லசோதி சுதன் சரவணமுத்து விநாயமுர்த்தி மற்றும் பழையமாணவர்கள் ஒன்றிணைந்து செயற்பட்டனர். பாடசாலையின் அழிந்த வேலிகள் புனரமைக்கும் பணியில் நல்லையா நாகேஸ்வரி குடும்பம் உதவியதுடன் பாடசாலையின் கேற்பகுதியில் முன்பு அமைக்கப்பட்டிருந்த வளைவை நல்லையா ராசன் அன்பளிப்பு செய்தார் என அறியக்கிடக்கின்றது. மேலும் பல தேவைகளை பழையமாணவர்கள் நிறைவேற்றி வந்தனர் இது பற்றிய விபரம் அப்போது அதிபராக இருந்த திரு.சி.முருகானந்தம் அவர்களுக்கு தெரிந்த விடயமாகும். இவ்வாறாக பழையமாணவர்கள் நிறைவேற்றியமை மட்டுமன்றி தம் பாடசாலை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1AB தரத்தில் உயர வேண்டும் தம் சந்ததியினர் சொந்தங்கள் நண்பர்கள் குழந்தைகள் எல்லாம் பல்கலைக்கழகம் செல்லும் வரை இங்கேயே கல்வி கற்க வேண்டும் என அங்கலாய்ப்புடன் காத்திருந்து வேண்டிய உதவிகள் செய்ய தயாராக உள்ளனர். இராமநாதபுரம் வாழ்மக்களின் மனக்கண்ணில் தமது பாடசாலை கல்லூரித் தரத்தில் உயர வேண்டும் உயரக்கூடிய பல சந்தர்பங்களை தவறவிட்ட துர்ப்பாக்கிய நிலை மாற வேண்டும் .அவர்களின் வாழ்வின் சிறப்புக்கு உறுதுணையாக இப் பாடசாலை அமைய வேண்டும் என்ற ஆவலுடன் காத்திருக்கும் இவர்கள் கனவு நனவாகவும் பழைய மாணவர் சிந்தனை செயற்பாடு வெற்றி பெறவும், ஊர் மக்கள் யாவரும் ஒரு ஒருமித்த சிந்தனையுடன் காத்திருக்கிறார்கள். பாடசாலையின் வளர்ச்சிக்கு இப்பகுதி மக்களின் கவனிப்பு ஒற்றுமை உதவிமுக்கியம் இதற்கு இராமநாதபுர வாழ்மக்கள், பெற்றோர்கள் ,நலன் விரும்பிகள், பழையமாணவர்கள் ஊரில் உள்ள உத்தியோகத்தரர்கள் உதவி என்றும் கிடைத்து வளம் பெற வேண்டும்.

தவராசா.மீனா
ஓய்வுநிலை ஆசிரியர்
கிளி/இராமநாதபுரம் ம.வி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஆற்றல் மிகு சிறுவர் சமுதாயத்திற்கு ஆரோக்கியமான உணவு

இன்றைய 21ம் நூற்றாண்டிலே சிறுவர்களின் ஆளுமையானது பல்வேறு துறைகளிலும் அசுர வேகத்தில் முன்னேறிக்கொண்டே செல்கின்றது. "சுவர் இருந்தால்தான் சித்திரம் வரைய முடியும்" என்ற முதுமொழிக்கிணங்க சிறுவர்கள் ஆரோக்கியமாக இருந்தால்தான் ஆற்றல்களை உரிய முறையில் வெளிக்காட்ட முடியும். நிறைவான ஆரோக்கியமானது உடல் உள சமூக நலனில் தங்கியுள்ளது. இதில் பிரதானமானது உடலாகும். உடலானது சிறந்த ஆரோக்கியமான உணவின் மூலமே சீராக பேணப்படுகிறது. எனவே சிறுவர் சமுதாயம் தங்களது சிறந்த ஆற்றல்களை வெளிக்காட்ட ஆரோக்கியமான உணவு இன்றியமையாததாகும்.



சிறுவர் பருவமானது மனித வாழ்க்கை வட்டத்தில் முக்கியத்துவம் வாய்ந்ததொன்றாகும். அதிகளவு வளர்ச்சி நடைபெறும் பருவமாகும். எனவே சக்தி போசாக்கு தேவை அதிகமாகும். ஆனால் இப்பருவத்தில் அதிக சிறுவர்களுக்கு உணவில் ஆர்வம் குறைந்து விளையாட்டிலே அதிக ஆர்வம் காணப்படுகிறது. அத்துடன் பதப்படுத்திய இரசாயனங்கள் சேர்க்கப்பட்ட உணவுகள் பற்றிய பல விபரங்கள் தொலைக்காட்சிகளில் காண்பிக்கப்படுகின்றன. இவ்விளம்பரங்கள் பொதுவாக சிறுவர் நிகழ்ச்சிகளுக்கு இடையில் சிறுவர்களுக்கு பிடித்த கார்டூன் (cartoon) உருவங்களை பயன்படுத்தி சிறுவர்களை கவரும் வகையில் காண்பிக்கப்படுகின்றன. "அக்கரை மாட்டுக்கு இக்கரை பச்சை" என்பது போல சிறுவர்களுக்கு ஆரோக்கியமான உணவுகளை விட அதிகளவு சீனி, கொழுப்பு கொண்ட உணவுகளிலே ஆர்வம் கூடுகிறது. எனவே ஆரோக்கியமான உணவை உரிய அளவில் அளிப்பதில் தாய் முக்கிய இடம் வகிக்கிறாள். எனவே சிறுவர்களுக்கு பிடித்தவகையில் அவர்களை தூண்டும் வகையில் சமைத்து கொடுக்க வேண்டும்.

இன்றைய கால கட்டத்திலே பொருளாதார சூழ்நிலைக்கு ஏற்றவாறு தாய் தந்தை இருவரும் வேலைக்கு செல்ல வேண்டிய நிலை காணப்படுகிறது. எனவே நேரப்பற்றாக்குறை காரணமாக பெரும்பாலான வேளைகளில் சமைப்பதைவிட வெளியிடங்களில் இருந்து உணவை பெற்று அன்றாட தேவையை நிறைவேற்றுகிறாள். பெற்றோர்கள் தங்களது சிறார்களில் அதிகளவு ஆர்வம் கொண்டிருந்தாலும் அவர்களது உணவுப்பழக்க வழக்கங்களில் அக்கறை காட்டுவதற்கான நேரம் குறைந்துகொண்டே செல்கின்றது. ஆனால் உணவானது அத்தியாவசிய தேவைகளில் ஒன்றாகும். அவ்வுணவானது ஆரோக்கியமாக எடுக்கப்படவேண்டும். "நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்" என்பதற்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இணங்க உணவானது பல நோய்களில் இருந்து பாதுகாப்பு வழங்குகிறது. இது நோய் இல்லாமல் வாழ வழிவகுக்கிறது.

ஆரோக்கியமான உணவு என்று கூறும் போது "நிறையுணவு" முக்கியத்துவம் பெறுகிறது. நிறையுணவு என்பது அனைத்து உணவுக்கூறுகளும் அதன் விகிதாசாரத்திற்கேற்ப உள்ளடக்கப்பட்டிருக்க வேண்டும். உணவில் அதிகளவு தானியங்கள் அடுத்தபடியாக மரக்கறிகள் உள்ளடக்கப்பட வேண்டும். இருப்பினும் சிறுவர்கள் அதிகளவு மரக்கறிகளை விரும்புவதில்லை. எனவே அவர்கள் விரும்பக்கூடிய வகையில் ஆர்வத்தை தூண்டக்கூடிய வகையில் சமைத்து கொடுக்க வேண்டும். இதற்காக தாய்மார்கள் பெற்றோர்கள் பல முறைகளைக் கையாள முடியும்.

**1. பலநிறங்களைக்கொண்ட மரக்கறிகளை ஒன்றாக இணைத்து சமைத்து கொடுத்தல்** (Rainbow vegetables**களை பயன்படுத்தல்**).

பல மரக்கறிகள் பலநிறங்களில் காணப்படுகின்றன. இவை பல வகையான விற்றமின், மூலக்கூறுகளை கொண்டுள்ளன. சிறுவர்களுக்கு ஒரு மரக்கறி சமைத்து கொடுப்பது அதிகளவு ஆர்வத்தை தூண்டாது. பல்வேறு நிறங்களைக் கொண்ட மரக்கறிகளை ஒன்றாக சேர்த்து சமைத்து கொடுக்கும் போது பார்வைப் புலத்தினூடாக அவர்களது ஆர்வம் தூண்டப்படுகின்றது. அத்துடன் சில ஆரோக்கியமான வாசனைத்திரவியங்களையும் இணைக்கலாம். இம்முறையானது சிறுவர்களின் ஆர்வத்தை தூண்டும். எனவே அதிகளவு மரக்கறிகளை விரும்பி உண்பார்கள். உதாரணமாக ஒரு செய்முறை:

**<u>பல்வேறு மரக்கறிகளை அவித்து தாழித்து கொடுத்தல்</u>**

தேவையானவை கரட்-2 பூசணிக்காய்- தேவையான அளவு போஞ்சி-100g பூக்கோவா-100g குடைமிளகாய் (சிவப்பு)-1 வெங்காயம்-1 பூண்டு-4 ஒலிவ் அல்லது நல்லெண்ணெய்-2 மேசைக்கரண்டி கறிவேப்பிலை- தேவையான அளவு.

**செய்முறை:** எல்லாவற்றையும் துப்பரவு செய்து நன்றாக கழுவ வேண்டும். பின் கரட், பூசணிக்காய், போஞ்சி, பூக்கோவா என்பவற்றை சிறுதுண்டுகளாக ஒரு பாத்திரத்தினுள் இடவேண்டும். அத்துடன் சிவப்பு குடைமிளகாயின் விதைகளை நீக்கிவிட்டு அதன் சதைப்பகுதிகளை துண்டுகளாக வெட்டி மரக்கறிகள் கொண்ட பாத்திரத்தினுள் இட்டு சிறிதளவு தண்ணீரை ஊற்றி சிறிதளவு உப்பும் இட்டு அவற்றை 15 நிமிடங்கள் அவிக்க வேண்டும். பின் ஒரு சட்டியில் சிறிதளவு ஒலிவ் அல்லது நல்லெண்ணெய் இட்டு சூடாக்க வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எண்ணெய் சூடாகும் நிலையில் வெட்டி வைக்கப்பட்ட வெங்காயம்இ பூண்டு, கறிவேப்பிலை என்பவற்றை இட்டு வதக்க வேண்டும். பின் அதனுள் மரக்கறிகளையும் இட்டு 5 நிமிடங்கள் தாழித்து எடுக்க வேண்டும். ஆரோக்கியமான மரக்கறிகள் கொண்ட உணவு தயார்! இதை தனியாகவோ அல்லது சோற்றுடனோ சாப்பிடமுடியும்.

இங்கு சிறிதளவு நீரில் அவிப்பதால் அதிகளவு விற்றமின்கள் இழக்கப்படுவது தடுக்கப்படுகின்றது. ஒலிவ் அல்லது நல்லெண்ணெய் உடலுக்கு ஆரோக்கியமானதாகும். இவ் உணவானது போசாக்கு நிறைந்ததுடன். சிறுவர்களின் ஆர்வத்தை தூண்டக்கூடியது.

**2. சமையல் வேலைகளில் சிறார்களையும் இணைத்தல்.**



தாய் சமைக்கும் போது சிறார்களையும் சமையல் வேலைகளில் இணைத்து அவர்களுக்கு அதிகளவு மரக்கறிகள், பழவகைகளில் ஆர்வத்தை ஏற்படுத்தி சிறார்களை தங்களுக்கு விருப்பமான மரக்கறிகளை தெரிவு செய்யவும் தூண்ட வேண்டும். சிறுவர்கள் சமையலில் ஈடுபடுவதால் தாங்கள் இணைந்து சமைத்த உணவுகளை உண்ண வேண்டும் எனும் ஆர்வம் ஏற்படும். இவ் ஆர்வத்தை தாய்மார்களும் அதிகரிக்க வேண்டும்.

**3. சந்தைக்கு செல்லும்போது பெற்றோர்கள் சிறுவர்களையும் தங்களுடன் கூட்டி செல்லுதல்.**

சிறுவர்களுக்கு சிலவேளைகளில் வீட்டில் இருக்கும் ஒருசில மரக்கறிகள் பிடிக்காமல் இருக்கலாம். எனவே சந்தைக்கு செல்லும் போது தங்களது சிறுவர்களையும் கூட்டிச் சென்றால் அவர்கள் அங்குள்ள பலவகையான மரக்கறிகள் பழங்கள் மீன்வகைகள் போன்றவற்றை நேரடியாக பார்வையிடுங்கள். தங்களுக்கு பிடித்த மரக்கறிகளை தெரிவு செய்வார்கள். அவர்களுக்கு மரக்கறிகள் பழங்கள் என்பவற்றில் அதிக ஆர்வம் ஏற்படும்.

**4. பெற்றோர்கள் சிறுவர்களுடன் இணைந்து வீட்டுத்தோட்டம் செய்தல்.**

பெற்றோர்கள் சிறுவர்களுடன் இணைந்து வீட்டுத்தோட்டம் செய்வதுடன் வீட்டுத்தோட்டம் செய்வதால் ஏற்படும் நன்மைகளை சிறுவர்களுக்கு கூறவேண்டும். இது வீட்டுத்தோட்டம் செய்தலில் சிறுவர்களின் ஆர்வத்தை தூண்டும். ஆனால் சில வீடுகளில் இடவசதி இல்லாமல் இருக்கலாம். இவர்கள் பூச்சாடிகளில் மரக்கறிக் கன்றுகளை நடலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வீட்டுத்தோட்டத்தில் செய்யும் மரக்கறிகள் பெரும்பாலும் பூச்சிநாசினிகள் இரசாயனங்கள் அற்றவை. இம்மரக்கறிகள் பூச்சிநாசினிகளால் எமது உடலுக்கு ஏற்படும் பாதிப்பை குறைக்கும். வீட்டுத்தோட்டத்தில் எமக்கு விரும்பிய பல்வேறு மரக்கன்றுகளை நடமுடியும். இணைந்து வீட்டுத்தோட்டம் செய்தலானது இயற்கையான மரக்கறிகளை தருவதுடன் மகிழ்ச்சியையும் மன அமைதியையும் தரும். சிறுவர்கள் உற்சாகமாக தொழிற்படுவார்கள்.

**5. பெரும்பாலும் பதப்படுத்தப்பட்ட உணவுகளை (processed foods) தவிர்த்து சுகாதாரமான போசாக்கு நிறைந்த உணவுகளை வீட்டில் சமைத்து சிறுவர்களுக்கு கொடுத்தல்.**

தற்போதைய காலகட்டத்திலே உணவுச்சந்தையில் அதிகளவு பதப்படுத்தப்பட்ட உணவுகள் அதிகளவு சீனி, உப்பு சேர்க்கப்பட்ட உணவுகள் என்பனவே பெரும்பாலும் காணப்படுகின்றன. இவ் உணவுகளில் பல இரசாயனப் பதார்த்தங்கள் காணப்படுகின்றன. இவை சிறுவர்களுக்கு ஒவ்வாமை (allergy) தாக்கங்களை ஏற்படுத்தும். அத்துடன் சிறுவயதிலேயே உடல்நிறை அதிகரித்து (obesity) பல தொற்றாத நோய்கள் (இருதய நோய்கள, நீரிழிவு, கேன்சர்)ஏற்படுவதற்கு வழிகோலும். எனவே பதப்படுத்தப்பட்ட உணவுகள் அதிகளவு உண்பதை தவிர்த்து இயற்கையான மரக்கறிகள் மீன் இறைச்சி என்பவற்றை பயன்படுத்தி சுவைநிறைந்த போசாக்குமிக்க உணவுகளை தாய்மார் சமைத்து தங்களுடைய சிறுவர்களுக்கு கொடுக்கலாம். இதன்மூலம் அதிகளவு போசாக்கு நிறைந்த உணவுகளை பெறுவதுடன் சிறுவர்களின் உடல்நிறை அதிகரித்தலை தடுத்து சுறுசுறுப்பான சிறார்களாகமாற்றும்.

**6. குடும்பத்திலுள்ளவர்கள் இணைந்து உணவு உண்ணுதல்.**

குடும்பத்திலுள்ளவர்கள் அனைவரும் இணைந்து சிறுவர்களுடன் உணவு உண்ணும் போது சிறுவர்களுக்கும் உணவு உண்பதற்கான ஆர்வம் தூண்டப்படும். சிறுவர்கள் உணவை தெரிவு செய்து உண்பார்கள். குடும்ப உறவினர்களுடன் இணைந்து உண்ணும் போது சிறுவர்கள் போதியளவு உணவை உண்பதற்கான வாய்ப்பு அதிகம். எனவே இயன்றளவில் குடும்ப உறவினர்கள் அனைவரும் இணைந்து உணவு உண்ண வேண்டும்.

எனவே பெற்றோர்களே சிறுவர்களுக்கு பொருத்தமான சூழலை உருவாக்கி அவர்களை சுகாதாரமான ஆரோக்கியமான பிரஜையாக உருவாக்க வேண்டும். சிறுவர்களுக்கு ஆரோக்கியமான உணவுகளை கொடுத்து ஆற்றல் மிகு சமுதாயத்தை உருவாக்குவோம்.

**"இன்றைய சிறுவர்களே நாளைய தலைவர்கள்"**

*ச.கிருஷ்ணராஜா* (B.Sc)
*நிறைவேற்று உத்தியோகத்தர்*
S.L.RS
*கிளிநொச்சி.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வைரநெஞ்சம்

காற்றடித்து ஓய்ந்தது
கலங்கி நாம் நிற்கிறோம்
நேற்றடித்த மழையில்
நிறைய நாம் நனைந்துவிட்டோம்
குளிர் வாட்டிவதைத்தாலும்
தளிர் வாடவிடமாட்டோம்
எழுத்தறிவித்தவன் இறைவனாவான்
பள்ளிக்கூடம் ஆலயமே!

வைரவிழா காணும் ஆலயம்
இராமநாதபுரம் மகாவித்தியாலயம்
எம்மை வளர்த்து ஆளாக்கிய
பெற்றோரை விட உயர்ந்தது
அறுபது ஆண்டுகள் அமைதியல்ல
போராட்டத்திற்கு மத்தியில் நாம்
போராடியே வளர்ந்தோம் அல்ல அல்ல
குற்றுயிரும் குறையுயிருமாய்
கால் இழந்து கையிழந்து
மனம் இழந்து மதியிழந்து
தலை இழப்பினும் காவியம் படைப்போம்

அரிவரி தொடங்கி கா.பொ.த
சாதாரணதரம் வரை என்னை வளர்த்த
தாயினும் சிறந்த தத்துவக்கடல்
மனிதனாக்கிய மகாசமுத்திரம்
பள்ளிக்காலப்பருவம்
துள்ளக்குதித்த வேளை
ஞபகம் வருதே! ஞாபகம் வருதே!
நண்பர் குழாம் சிறகடித்தே
இலக்கிய ஆசான் பாலபண்டிதர்
திருநாவுக்கரசு என்னும் பெருந்தகை
பொன்னையா சுப்பிரமணியம் என்னும்
பல்துறை விற்பனர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஊட்டிய பாடம் தமிழ்
இலக்கியம்,சமயம்,சுகாதாரம்
சுவையான பாடமானதே தவிர
சுமையானதாக தோன்றவேயில்லை
எழுபதுகளுக்கு பின்னால் எழுமுகமே
பட்டதாரிகள் நூற்றுக்கணக்கில் - அதில்
பொறியியலாளர்கள்,வைத்தியர்கள்
கணக்கியலாளர்கள்,சட்டத்தரணிகள்
ஆசிரியர்கள்,அரசஉத்தியோகத்தர்கள்
எனப் பலபல கோணங்களில் தந்து
வான் புகழ் கொண்ட எம் வித்தியாலயம்
தபால் அதிபராகிய என்னையும் தந்தது
அரிவரி முதல் A/L வரை படித்தபோது
சிவபாக்கியம் ரீச்சர்,பொன்னம்மாக்கா
மாணிக்கக்கா,கோபாலபிள்ளை மாஸ்டர்
திருமதி.கந்நப்பு ரீச்சர்,ஆறுமுகம் மாஸ்டர்
பாக்கியநாதன்,சின்னத்தம்பி எனும் ஆங்கிலம்

தலைமை ஆசிரியர் கனகசுந்தரம்
சங்கரப்பிள்ளை,மகாதேவன்
கந்தசாமி,காரளபிள்ளை அதிபர்கள் என
பாடசாலைக்கு உயிரூட்டி
உரமூட்டி வளர்த்தெடுத்த
தன்நலம் கருதா ஆசான்களைக் கொண்டு
வைரவிழா வரைக்கும் வந்த
மாபெரும் கல்விக்கூடம்
எங்கள் மகாவித்தியாலயம்
நூற்றாண்டு விழா காண வேண்டுமென
வாழ்த்தி வணங்குகின்றேன்.

**சோமசுந்தரம் செல்வராசா**
**தபால் அதிபர் (ஓய்வுநிலை)**
**பருத்தித்துறை.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# உளவளத்துணை – கல்வி நிறுவனங்களில் இச் சேவையை வழங்குவதற்கு அதன் முகாமைத்துவம் மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள்

உளநலம் என்பதனை தனியாக ஒரு சட்டக அமைப்புக்குள் அடக்கி விட முடியாது. அது ஆரோக்கியமான உடல்நிலை, ஆரோக்கியமான சமூகச் சூழல், ஆரோக்கியமான ஆன்மீக ஈடுபாடு என்பவற்றோடு தொடர்புடையதாகவே இருக்கின்றது. நலமாக இருத்தல் என்பது உடல் சார்ந்த நிலைமைகளையும் தாண்டி உளம் சார்ந்த, சமூகம் சார்ந்த, ஆன்மீகம் சார்ந்த நிலமைகளையும் விபரிப்பதாகவே அமைய வேண்டும்.

அன்றாட உறவுகளிலே பிறர் தமது உள்ளக்கிடக்கைகளை பகிர்கின்ற போது நாம் அக் கருத்தோடு செவிமடுத்து அவர்களை சரியாக புரிந்து பொருத்தமாக பதில் அளிக்கின்றோம். அவர் பகிர்ந்ததை இரகசியமாக பேணுகின்றோம். அவைகளில் நல்லவைகளை காணும் போது பாராட்டி அவற்றை வளர்க்க ஊக்கமும் ஆதரவும் கொடுக்கின்றோம். அதேவேளை வளர்ச்சி தராத சிந்தனை, உணர்ச்சி வெளிப்படுத்தல் முறை, நடத்தைக் கோலம், உறவு முறை என்பவற்றை காணும் போது பொருத்தமான முறையில் சுட்டிக்காட்டி அவர்களை நல்வழிப்படுத்த முயல்கின்றோம். நாம் அறிந்த திறன்களை பயன்படுத்தி நாம் எதிர்கொள்ளும் பிரச்சினைகளை தீர்த்துக் கொள்கின்றோம். அவ்வாறே பிறர் தம் பிரச்சினைகளை தீர்த்துக் கொள்ளவும் அத்திறன்களைப் பயன்படுத்தி உதவி புரிகின்றோம். இத்தகைய திறன்களை உள ஆற்றுப்படுத்தல் துறையிலும் பயன்படுத்துகின்றோம்.

இத்துறையானது ஆங்கிலத்தில் **Counselling Psychological Counselling, Psychology of Counselling** என வெவ்வேறு முறைகளில் அழைக்கப்படுகின்றது. இத்துறைக்கு ஆற்றுப்படுத்தல் என்ற சொல் இந்தியாவிலும் இலங்கையிலும் பயன்படுத்தப்படுகின்றது.

அமெரிக்க உளநலச் சங்கம் இத்துறையை பின்வருமாறு வரைவிலக்கணப்படுத்தியுள்ளது. ஒருவர் தனது உளவளங்களின் முழுமையான விருத்தியை நோக்கி செல்கின்ற பயணத்தில் தான் எதிர்கொள்ளும் தடைகளை வெற்றிகொள்ள அவருக்கு அளிக்கும் தொடர் செயற்பாட்டு உதவியே உளவளத்துணை ஆகும். இவ் வரைவிலக்கணமானது உள ஆற்றுப்படுத்தலை வளர்ச்சி அனுபவமாக நோக்குகின்ற நல்ல அம்சமாகக் காணப்படுகின்றது. அதாவது துணை நாடுநரின் வளரச்சிக்கு அல்லது விருத்திக்குத் துணை புரிதலே உள ஆற்றுப்படுத்தலாகும் என்பது இதன் கருத்தாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உள ஆற்றுப்படுத்துநர் தன்னை நாடி வரும் துணை நாடுநருடன் குணமாக்கல் உறவில் ஈடுபட்டு அவர் தன் தேவைகளை பொருத்தமாக பூர்த்தி செய்யவும் பிரச்சினைகளை வளர்ச்சி தரும் முறையில் கையாளவும் ஆளுமையையும் உறவுகளையும் மேம்படுத்தவும் நெறிப்படுத்தலே உள ஆற்றுப்படுத்தல் ஆகும். அதாவது உள ஆற்றுப்படுத்தலானது துணை நாடுநர் தன்னுள் மறைந்து கிடக்கும் நற்பண்புகள், நல்ல மனப்பாங்குகள், திறமைகள், ஆற்றல்கள் என்பவற்றை அடையாளங் காணவும் விருத்தி செய்யவும் உதவுகின்றது. அத்தோடு சாதகமான புறச் சூழல்களை அடையாளங் காணவும், பயன்படுத்தவும் உதவுகின்றது. இதன் மூலம் தன் ஆளுமையில் வளர்ச்சி காணவும், சமூகத்தினது தேவைகளை பூர்த்தி செய்யவும், பிரச்சினைகளை தீர்க்கவும், வளர்ச்சி தராதவற்றை கைவிடவும் உதவுவதே உள ஆற்றுப்படுத்தல் எனலாம்.

உள ஆற்றுப்படுத்துநர் துணை நாடுநருடன் உள வளமாக்கும் உறவில் ஈடுபட்டு, தன் மனப்பாங்கு, மதிப்பீடுகள், உறவாடல் திறன்கள், அறிவு, பயிற்சி, அனுபவம் என்பவற்றின் மூலம் துணை நாடுநர்க்கு உதவுகின்றார். துணை நாடுநர் உள நலத்துடன் உள்ளவரே என்பதை உள ஆற்றுப்படுத்தல் கருத்தில் கொண்டே இயங்குகின்றது. அவர் கடுமையாக உள நலம் குன்றியவர் அல்ல மாறாக கடந்து செல்லும் வாழ்க்கைப் பிரச்சினைகளை கையாள இவருக்கு உள ஆற்றுப்படுத்துநரின் தேவை தேவைப்படுகிறது.

உள ஆற்றுப்படுத்துநருக்கும் துணை நாடுநர்க்கும் உருவாகும் உறவு ஒரு வளமாக்கல் உறவே என்பதை இருசாராரும் தெளிவாக மனதில் பதித்து இயங்குவது முக்கியமானது. இங்கு உளவளமாக்கல் அல்லது உளக்குணமாக்கல் உறவே மேலோங்கி நிற்க வேண்டும். இதில் ஏற்படும் உறவு, நட்போ, பாசமோ, காதலோ, ஆசிரியர், மாணவர் உறவோ அல்ல. இங்கு நிகழ்வது ஒரு தனித்துவமான உறவாகும்.

**கல்வி நிறுவனங்களில் உளவளத்துணை சேவையின் அவசியம்.**

பிள்ளையின் உளநல விருத்திக்கும் உளநல மேம்பாட்டிற்கும் பாடசாலை பெரும் பங்காற்றி வருகின்றது. சூழ்நிலையும் சமுதாயமும் பிள்ளைகளின் உளநலத்திற்கு உகந்ததாக அமையாது விடின் அவர்களது ஆரோக்கியமும் விருத்தியும் பாதிப்படையும். பிள்ளைகளின் வாழ்வில் அவர்களது எதிர்காலத்தினை திட்டமிடுவதில் பாடசாலைக் கல்வியே கணிசமான அளவு செல்வாக்கு செலுத்துகின்றது. ஒரு பிள்ளை எத்தகைய குடும்பத்தில் இருந்து வந்ததாயினும் அதனிடமுள்ள எல்லா ஆற்றல்களையும் வெளிக் கொண்டு வரவும் நற்பண்புகளை வளர்க்கவும் ஏற்ற சூழலை பாடசாலையே அதிகளவில் வழங்கி வருகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்றைய காலகட்டத்தில் இயந்திரமயமாக்கப்பட்ட வாழ்க்கை, பொருளாதார முக்கியத்துவம், தனிமனித முன்னேற்றம், இயற்கை அனர்த்தங்கள், போர் நெருக்கடிகள், கல்வியில் பல்வேறு வகையான சிக்கல்கள், சுமை, போட்டித்தன்மைகள் போன்ற நிலைமைகள் காரணமாக ஆசிரியர், மாணவர் இருசாராருக்கும் மன உளைச்சலை உண்டு பண்ணி விடுகின்றது. இவ்வாறான பல்வேறு நிலைமைகளில் இருந்து மாணவர்களை மீட்டு மாணவர்களுடைய உள்ளத்திற்கு வலுவூட்டல் மிக அவசியமான நிலைமையாக இது கருதப்படுகின்றது. ஆகவே பாடசாலைகளில் உளவளத்துணை சேவை இன்றைய காலகட்டத்தில் அவசியமாகின்றது.

உளவளத்துணை சேவையை தனது பாடசாலையில் நடைமுறைப்படுத்த முகாமைத்துவம் மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள், வருமாறு..

**1. தனது பாடசாலையில் உளவளத்துணை வேலைத்திட்டத்தின் அவசியத்தினை உணர்ந்து பயன்மிக்க வேலைத்திட்டமாக முன்னெடுத்தல்.**

பாடசாலைகளின் தொழிற்பாடுகள் கற்றல் - கற்பித்தல் என்ற நிலைமையில் இருந்து அண்மைக் காலங்களில் மற்றமடைந்து வருகின்றது. அவை புதிய பணிகளையும் பொறுப்புக்களையும் ஏற்று நடத்த வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளன. இத்தகைய பணிகளில் ஒன்றாக அமைவது பாடசாலைகளில் மாணவர்களிற்கு உள சமூக விருத்தி தொடர்பான வழிகாட்டலாகும். இவ்வாறான வழிகாட்டலை காலத்தின் தேவை அறிந்து பயன்மிக்க வேலைத்திட்டமாக முன்னெடுத்தல் அதிபரின் கடமையாக உள்ளது.

**2. பாடசாலை ஆலோசனை சேவைக்கு ஆளணித் தெரிவு**

பாடசாலை முறைமையில் வழிகாட்டலும் ஆற்றுப்படுத்தலும் முக்கிய கூறாக இருக்க வேண்டும் ஆரம்ப இடைநிலை வகுப்புக்களைக் கொண்ட சகல பாடசாலைகளும் பயிற்றப்பட்ட ஆளணிகளைக் கொண்ட வழிகாட்டல் மற்றும் ஆற்றுப்படுத்தல் அலகினை கொண்டிருக்க வேண்டுமெனின் அதிபர், பொருத்தமான சேவை மனப்பாங்கும் தொடர்பாடல் திறனும் ஆர்வமும் மிக்க ஆசிரியர்களை இச் சேவையை வழங்கத் தெரிவு செய்ய வேண்டும். வழிகாட்டல் ஆலோசனை ஆசிரிய நியமனங்கள் கல்வி அமைச்சினாலும் வடக்கு கிழக்கு மாகாணங்களில் உள்ள தமிழ்மொழி மூல அரசாங்கப் பாடசாலைகளுக்குரிய பட்டதாரிகளை இலங்கை ஆசிரியர் சேவையில் இணைத்தல். 2005 என்ற வகையிலும், ஆசிரியர்கள் நியமிக்கப்பட்டனர். 2007 லும் வடக்கு மாகாணத்தில் உள்ள அரசாங்கப் படசாலைகளுக்கு பட்டதாரி ஆசிரியர்களை நியமித்தனர். 2011



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இல் தேசிய பாடசாலைகளுக்கு வழிகாட்டல் ஆலோசனை ஆசிரியர்கள் நியமிக்கப்பட்டனர். இவ் ஆளணித் தொகுதியினரில் ஆளணியினரை மாகாண, வலயமட்டங்களில் கோரிப் பெற்றுக் கொள்ளலாம். அவ்வாறு ஆசிரிய நிரப்புகையை பெற்றுக் கொள்ள முடியாத பட்சத்தில் தனது பாடசாலையில் உள்ள பொருத்தமான ஆசிரியரை இச் சேவைக்கென விடுவித்துக் கொள்ளலாம்.

**3. உளவளத்துணை ஆசிரியருக்கான பயிற்சியினைப் பெற ஆவன செய்தல்.**

தேசிய ரீதியாகவும் மாகாண வலய மட்டங்களில் இடம்பெறும் உளவளத்துணை சார்ந்த பயிற்சி நெறிகளில் பங்குபெற ஆசிரியர்களுக்கு ஆவன செய்தல். இவற்றுடன் GTZ, சாந்தீகம் போன்ற உளவளத்துணை நிலையங்களினால் நடத்தப்படும் பயிற்சி நெறியினைப் பெற ஊக்குவித்தல். தொழில் வழிகாட்டல் பயிற்சி நெறியினைப் பெற ஊக்குவித்தல். தொழில் வழிகாட்டல் பயிற்சி நெறிகளில் பங்கு பெற ஆர்வம் ஊட்டுதல் போன்ற செயற்பாடுகளினால் ஆசிரியரை வாண்மை மிக்கவராக செயற்படுத்த முடியும்.

**4. ஆலோசனை அறை / சீர்மிய அறை ஒன்றினை ஏற்படுத்திக் கொடுத்தல்.**

உள ஆற்றுப்படுததல் அறை துப்பரவாகவும் நெருக்கடிகள் அற்றதாகவும் அழகாகவும் போதிய அளவு காற்றோட்டம் வெளிச்சம் உள்ளதாகவும் உள்ள அறை ஒன்றை ஒதுக்கிக் கொடுக்க வேண்டும். துணை நாடுநர்கள் தாம் உள ஆற்றுப்படுத்தலுக்கு வரும் போது அதை பிறர் அறியாது இருக்க வேண்டும், என்று விரும்புகின்றனர். ஆகையால் இதைக் கருத்திற் கொண்டு அறைகளை பொருத்தமான இடத்தில் வழங்குவது சிறந்தது. சூரிய ஒளி கிடைக்கக் கூடிய அறையாயின் வரவேற்புக்குரியது. பூந்தோட்டத்திற்கு அண்மையில் அமைந்திருக்கும் அறை மகிடழ்ச்சியான அனுபவங்களை மேல் எழச் செய்யும். அத்துடன் உள ஆற்றுப்படுத்தலுக்கு சத்தம் சந்தடி பராக்குகள் அற்ற இடம் அவசியம். ஆகவே இவற்றை கவனத்திற் கொண்டு பொருத்தமான இடத்தினை அதிபர் வழங்க வேண்டும்.

**5. தளபாடங்கள் / பயன்படக் கூடிய பொருட்களை வழங்கல்.**

உள ஆற்றுப்படுத்தல் சேவை நிலையத்திற்கு வரும் துணைநாடுநர் அமர்வதற்கான இருக்கை. உள ஆற்றுப்படுத்துநருக்கான இருக்கை, மேசை, மேலதிக கதிரைகள் 03, தலையணை, சிறுவர்களுக்கான உள ஆற்றுப்படுத்தலின் போது, பயன்படுத்த பொம்மைகள், விளையாட்டுப் பொருட்கள், களிமண், கலர்ச் சோக், வெள்ளைத் தாள்கள், ஒலிவாங்கி, ஒளிப்பதிவுக் கருவிகள், உணர்ச்சி நிறைந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பகிர்வின் காரணமாக துணைநாடுநர் களைத்து தொண்டை வறண்டால் குடிப்பதற்கு நீர் அல்லது மென்பானம், வெண்பலகையும் மாக்கரும், பேனை, தாள்கள் துணைநாடுநர் தொடர்பான குறிப்பேடுகளை பேணுவதற்கு ஏற்ற அலுமாரி, பிள்ளைகளுக்கு வழிகாட்டலுக்கு ஏற்ற புத்தகங்களுடன் கூடிய இறாக்கைகள், மாணவர்களது திறன்களையும் ஆற்றல்களையும் வெளிப்படுத்துவதற்கான உபகரணங்கள், கல்வி, தொழில் வழிகாட்டுதலை வழங்குவதற்கு தேவையான தரவுகளை வழங்க இணையத்தள வசதி என்பவை உள ஆற்றுப்படுத்தல் அறையில் இருந்தால் மிக்க வசதி உடையதாக அவ்வறை காணப்படும்.

**6. தொழில் வழிகாட்டல் அதிகாரிகளுடன் ஒருங்கிணைப்பினை ஏற்படுத்தல்.**

தொழில் சார்ந்த சேவைகள் தேவைப்படும் மாணவர்களை அடையாளங் கண்டு ஆதரவு வழங்குதலும் ஆலோசனை பெறுவதற்கான தொழில் வழிகாட்டல் அதிகாரிகள் ஏனைய தொழில் வழங்கும் முகவர்கள் தொழிற்கல்வியை மற்றும் பயிற்சியை வழங்கும் நிறுவனங்களுடன் தொடர்பை ஏற்படுத்தல் போன்ற ஒருங்கிணைப்புக்களை மேற்கொள்ள வேண்டும். தனது பாடசாலை ஆலோசனை வழிகாட்டல் ஆசிரியர்கள், தொழில் வழிகாட்டல் அதிகாரிகள் போன்றோரின் உதவியுடன் தொழில்சார் வழிகாட்டலை செயற்படுத்த வேண்டும்.

**7. நடத்தை மாற்றத்திற்கான செயற்றிட்டத்தை உருவாக்குதல்.**

விசேட கல்விச் சேவைகள், உடல் ரீதியான குறைபாடு உடையோருக்கான சேவைகள், உளநலத்திற்கு வேண்டிய சிகிச்சை, குடும்ப சேவைகள் ஆகியன தேவைப்படும். சிறுவர்களை உளவளத்துணையாளர்கள், வைத்தியர், சேவை வழங்கும் நிறுவனங்கள், நிலையங்கள் என்பவற்றிற்கு ஆலோசனை பெற அனுப்புதல் வேண்டும். இதற்கு ஆலோசனை வழிகாட்டல் ஆசிரியருக்கு வசதி செய்து கொடுக்க வேண்டும்.

**8. மாணவர்களின் உள சமூகத் திறமைகளை விருத்தி செய்வதற்கான பயிற்சி வழங்கல்.**

கல்வி அமைச்சு மாணவர்களின் உள சமூகத் திறமைகளை விருத்தி செய்வதற்கான திட்டத்தினை விரிவாக்குவதற்கு மாகாணக் கல்வித் திணைக்களங்கள், UNICEF, GTZ, SEISL, CanadianRed, Word Vision போன்ற நிறுவனங்களுடன் வழங்கி வருகின்றன. உலக வங்கியும் கல்விக்காக மாகாண வலயங்களுக்கு நிதி ஒதுக்கீடு செய்து சேவைகளை வழங்கி ஊதவுகின்றது. ஆகவே அவற்றின் உதவிகளைப் பெற்று மாணவர்கள் தமது சொந்த உள சமூகத்திறமைகளை விருத்தி செய்ய அதிபர் உதவ வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேற்கூறப்பட்ட உளவளத்துணை சேவையின் அவசியம், அதன் வேலைத்திட்டத்தை முன்னெடுத்தல், ஆளணியைத் தெரிவு செய்தல், பயிற்சியினைப் பெற ஆவன செய்தல், சீர்மிய அறையினை ஏற்படுத்துதல், அதற்கான பொருட்களை வழங்குதல், அதிகாரிகளுடன் ஒருங்கிணைப்புச் செய்தல், பயிற்சி வழங்குதல் முதலிய விடயங்களில் அக்கறை செலுத்தி இச் சேவை மணவர்களுக்குக் கிடைக்க முகாமைத்தும் வழிவகை செய்ய வேண்டும்.

உசாத்துணை நூல்கள்


1. விமலா.கி.(2008) வழிகாட்டலும் ஆலோசனையும் 3ம் பதிப்பு, கொழும்பு.
2. அருட் திரு இராசேந்திரம் ஸ்ராலின் (2014) ஆளுமை மலர உள ஆற்றுப்படுத்தல்.
3. கல்வி வழிகாட்டலும் ஆலோசனையும் திறந்த பல்கலைக்கழம்.
4. வழித்துணை வடமாகாண கல்வித் திணைக்களம்.
5. சிறுவர் உள நலம் (2002) ஜீ.ரி.இசட்ஃபீகெயர் - சாந்திகம்.



**திருமதி.க.ஞானசேகர்**

(BA,PGDE, MED)

ISA (தமிழ்)

***வலயக் கல்வி அலுவலகம் கிளிநொச்சி***





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மாணவர்களின் கற்றல் ஆர்வத்தை அதிகரித்தல் தடைக்காரணிகளும் உளத்தூக்கங்களும்

கல்வி என்பது ஒருவனது தனிப்பட்ட தேவைக்காக மட்டுமல்லாமல் சமூகத்தேவைகளையும் கருத்திற் கொண்டு வழங்கப்பட வேண்டியதாகும். அறிவு சார்ந்த செயற்பாடுகள் மட்டுமல்லாமல் தத்தமது காலாசாரப் பண்பாடுகளையும் பல்வேறு வகைப்பட்ட திறன்களையும் அளிக்கும் ஒரு செயலே கல்வி எனப்படுகிறது. மனிதனது அன்றாட வாழ்வின் சவாலை வெற்றிகரமாக எதிர் கொள்ளக் கூடிய உறுதியான மனத்திடம் கொண்ட தனிநபர்களை உருவாக்குதல் கல்வியின் உயர்ந்த நோக்கங்களில் ஒன்றாகும்.

மாணவர்களது ஆளுமையை வளர்த்து அவர்களை எதிர்காலத்தின் உயர்ந்த பிரசைகளாக மாற்றும் செயற்பாட்டை முன்னெடுத்துச் செல்லும் பாடசாலைகள் இவற்றுக்கெல்லாம் உரமூட்டுவனவாக அமைய வேண்டும். ஆகவே ஒரு மாணவன் கற்றலுக்குத் தடையாக இருக்கும் காரணிகளையெல்லாம் தனது முயற்சியால் தகர்த்தெறிந்து தனது இலட்சியப் பயணத்தைத் தொடர்ந்து செய்வதற்கு அவனுக்கு அவன் அதுவரை பெற்றுள்ள அனுபவமும் அறிவும் போதாததாக இருக்கலாம். இதனால் அவனது இலட்சியத்தை அவன் அடைவதற்குப் பெற்றோர்களும் ஆசிரியர்களும் உற்ற நண்பர்களாகவும் வழிகாட்டிகளாகவும் செயற்பட வேண்டும். அவ்வாறான வழிகாட்டல்கள் இருந்த போதும் ஒருவனுக்குக் கற்பதில் உள்ள ஆர்வம் அவனுள்ளேயே இருந்து முகிழ்த்தெழ வேண்டும். இன்றைய நெருக்கடியான காலகட்டத்தில், கற்றல் ஆர்வத்தைத் தூண்டுகின்ற காரணிகளை விடக் கற்றல் ஆர்வத்தைத் தடுக்கின்ற காரணிகளின் தாக்கம் அதிகமாக உள்ளது.

கற்றல் ஆர்வத்தைத் தடுக்கின்ற காரணிகள் பலவற்றை இனங் காண முடிகின்றது.

1. பிள்ளைகளின் குடும்பப் பின்னணி
2. பெற்றோரின் வறுமை
3. சமூக அடுக்கமைவிலுள்ள சமத்துவமின்மை
4. சிறுவர் உழைப்பில் அதிக நாட்டம்
5. பாடசாலை வளங்கள் போதியளவின்மை
6. ஆசிரியர்களின் அக்கறையின்மை
7. நாட்டின் அரசியல் குழப்பங்கள்
8. பிள்ளைகளின் உளப்பிரச்சினைகள்
9. இளவயதுத் திருமணங்கள்
10. கட்டிளமைப் பருவ மாணவர்களின் மனக்குழப்பங்கள்
11. குடும்பத்தில், ஊடகங்களின் அதிகளவிலான பாவனை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போன்ற பல காரணிகள் இனங்காணப்பட்டுள்ளன. மாணவர்களின் கல்விச் செயற்பாட்டில் பல தடைகள் ஏற்பட்டுக் கொண்டேயுள்ளன. உண்மையில் கல்வியைப் பெறுபவனின் நடத்தையில் நல்லமாற்றங்கள் ஏற்பட வேண்டும். அதே போன்று அறிகைத் திரளமைப்பிலும் மாற்றங்கள் ஏற்பட வேண்டும். ஒரு பிள்ளையின் வீட்டுச் சூழலானது மாணவர்களின் கற்றலில் செல்வாக்குச் செலுத்துகின்றது என்பதை Shayctoft Postalethwait போன்றவர்கள் குறிப்பிட்டுள்ளார்கள். Rutte என்பவரின் கருத்துப்படி கல்வியறிவு குறைந்த குடும்பச் சூழலில் இருந்து வருகின்ற பிள்ளைகள் சராசரி அறிவுத் திறனை விடக் குறைந்தவர்களாகவும் சமூக மேல் மட்டத்தில் இருந்து வருகின்ற பிள்ளைகள் கல்வியில் அதிக ஆர்வத்தையும் கொண்டுள்ளனர் எனக் கருதுகின்றார். இதனால் பெற்றோர்களின் தொழில் பிள்ளைகளின் கற்றல் ஆர்வத்தில் செல்வாக்குச் செலுத்துகின்றது எனலாம்.

கருணாதிஸ்ஸ (1983) மாணவர்களின் கல்வி தொடர்பான ஆர்வம் பற்றிக் கருதும் போது கிராமங்களில் பிள்ளைகள் பாடசாலையிலிருந்து வீட்டுக்கு வந்தபின் வீட்டு வேலைகளைச் செய்ய வேண்டியுள்ளது. வயலில் அல்லது தோட்டங்களில் குறைந்தது 2 மணித்தியாலயமாவது வேலை செய்வதனால் கல்வியில் ஆர்வம் காட்ட முடியாதுள்ளது என்கின்றார். பிள்ளைகளின் சமூகக் கட்டமைப்பில் உள்ள பிரச்சினைகள் அவர்களின் கற்றல் ஆர்வத்தைத் தடை செய்கின்றன. Rupasinghe (1985) என்பவரால் 2400 மாணவர்களை வைத்து மேற்கொள்ளப்பட்ட ஆய்வொன்றிலே பெற்றோரின் கல்வி மட்டம், வருமானம் போன்ற சமூகப் பொருளாதாரக் காரணிகளும் அவர்களின் கல்வியில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்துகின்றன என்பது கண்டறியப்பட்டுள்ளது. பாடசாலையில் வசதிகளைக் கூட்டுவது மட்டுமல்லாமல் கல்வியில் சமவாய்ப்பினை ஏற்படுத்துவதன் மூலம் அவர்களின் கற்றல் விருப்பத்தை தூண்டலாம் என்பது தெளிவாகின்றது. சபாஜெயராசா (1989) அவர்களின் கருத்துபடி தாழ்த்தப்பட்ட மக்களின் கல்வி அவர்களின் பருவகாலத் தொழில்களின் மூலம் வீழ்ச்சியடைகின்றது என்கின்றார்.

**மாணவர்களின் உளம்சார் பிரச்சினைகள்**

மாணவர்களின் கட்டிளமைப் பருவப் பிரச்சினைகள் இன்று நாடெங்கிலும் பெரும் பிரச்சினைகளைத் தோற்றுவித்துள்ளன. மிக அண்மைக் காலங்களில் இப்பிரச்சினைகள் வேகமாகத் தலைதூக்குகின்றன. உண்மையில் கட்டிளமைப்பருவம் என்பது பிள்ளைகளின் உள்ளத்திலே ஏதோ ஒருவகையான தாக்கத்தை ஏற்படுத்தி வருவது உண்மை தான். பெற்றோர்களின் வரையறுக்கப்பட்ட வாழ்க்கை முறை, பெரியோர்களின் புத்திமதியைக் கேட்டு நடக்கும் பண்பு, வரையறைக்குட்பட்ட பணப்புழக்கம், சமய கலாசாரப் பண்புகளை மதித்து நடந்த தன்மை, ஊடகங்களின் செல்வாக்கு குறைந்திருந்தமை போன்ற நிலைமைகளின் கீழ் வாழ்ந்து பழக்கப்பட்ட எம்முன்னோர்கள் கட்டிளமைப் பருவத்தைக் கடந்து தான் வந்தார்கள் என்பது தெரிந்ததே. ஆனால் இன்றைய மாணவர்கள் மத்தியில் பிரச்சினைகள் பல வடிவத்திலே வந்து அவர்களின் கல்விக்குத் தடையாக அமைகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பருவத்தில் பல்வேறு வகைப்பட்ட மன உளைச்சல்கள் அவர்கள் மத்தியில் ஏற்படுகின்றன. மற்றையவர்களோடு எம்மை ஒப்பிட்டுப் பார்ப்பதே எமக்குத் தெரிந்த முதலாவது தேவையற்ற செயற்பாடாகும். மற்றையவர்களோடு ஒப்பிட்டுப் பார்ப்பதன் மூலம் எம் மகிழ்ச்சியை நாம் தொலைத்து விடுகின்றோம். இன்றைய பெற்றோர்களின் வருமானத்தில் வெளிநாட்டுப் பணத்தின் பங்கு அதிகமானதாகும். இந்நிலையில் பணவசதியுள்ள ஒரு பிள்ளை மோட்டார் சைக்கிள், கைத்தொலைபேசி விலையுயர்ந்த ஆடை போன்றவைகளை கையாளும் சந்தர்ப்பத்தில் வருமானம் குறைந்த குடும்பத்தில் உள்ள பிள்ளையும் இத்தகைய ஆடம்பர வாழ்க்கை வசதிகளை அனுபவிக்க ஆசைப்படுகின்றது. ஆனால் அவற்றை அனுபவிக்க அவனது குடும்ப நிலை இடங்கொடுக்காத நிலையில் பெற்றோர் மீது கோபத்தையும் எரிச்சலையும் காட்டுவதோடு தன்மீதே ஒருவிதமான எரிச்சலைக் கொள்ளும் நிலை ஏற்படும்.

இத்தகைய மன உணர்வுகள் தேவையற்ற பழக்கங்களைப் பழகும் வாய்ப்புக்களையும் ஏற்படுத்தி விடும். எப்படியாவது அவற்றை அடையவே முயற்சிப்பார்கள். கிடைக்காவிடில் அத்தோல்விகளைத் தாங்க முடியாதவர்களாகி விடுவார்கள். இதனால் கல்வியில் ஆர்வமின்மை, தேவையற்ற புதிய உறவுகளை ஏற்படுத்தல், ஆசிரியர்கள் மேல் வெறுப்பு, பொய் பேசுதல், ஏனையவர்களின் முன்னேற்றத்தைப் பார்த்து எரிச்சல்படுதல் போன்ற பல செயற்பாடுகளில் இறங்கி விடுகின்றார்கள். ஆயினும் எப்படியாவது அவற்றை அடைந்து விட்டாலும் அவற்றைச் சரியான முறையில் கையாளும் மனப்பக்குவமும் அவர்களிடம் இல்லை.

கட்டிளமைப் பருவம், நெருக்கடிகள் நிறைந்த பருவமாகும். காண்பவைகள் எல்லாம் அவர்களுக்கு ஏதோ ஒரு விதமான உணர்வை ஏற்படுத்தி விடும். தொலைக் காட்சிகளில் இடம் பெறும் நாடகங்கள், திரைப்படங்களைப் பார்த்து அவைகளை அப்படியே தனதாக்கிக் கொள்ளும் ஒரு நிலை இன்றைய மாணவர்கள் மத்தியில் காணப்படும் ஒரு விடயமாகும். இதனால் அவைகள் கிடைக்காத பட்சத்தில் மனஉளைச்சல்களுக்கு ஆளாகின்றார்கள். இச்சிந்தனையின் தாக்கத்தினால் இளவயதில் காதல் உணர்வுகளுக்கு உட்படுகின்றனர். இதன் விளைவு கற்றலில் ஆர்வத்தைக் குறைக்கின்றது. எதிர்ப்பாலாரிடம் கவர்ச்சி ஏற்படுவதனால் அவர்கள் தொடர்பான சிந்தனைகளை மனதில் வளர்ப்பதுவும் அவர்களைப் பின் தொடர்ந்து செல்வதும் சகஜமாகிவிட்டது. இத்தகைய செயற்பாடுகளின் உச்சவிளைவு, பாலியல் தீயநடத்தைகளும் துஷ்பிரயோகங்களும் அதிகரிக்க காரணமாகின்றது.

இன்றைய திரைப்படங்களும் இவர்களின் இத்தகைய மனஉணர்வுகளுக்குத் தீனிபோட்டு அவர்களின் தேவையற்ற ஆசைகளுக்கு உரமூட்டுகின்றன. அத்துடன் இன்று எமது பெற்றோர்களும் பிள்ளைகளுடன் சேர்ந்து திரைப்படங்களைப் பார்ப்பதனால் பிள்ளைகளும் அதிலிருந்து தவிர்க்க முடியாதவர்களாகி விடுகின்றார்கள். பிள்ளைகளைத் தண்டிக்கக் கூடக் கையாலாகாத்தனம் பெற்றேர்களுக்கு ஏற்படுகின்றது. இத்தகைய காரணிகள் அவர்களது கல்விக்குத் தாக்கத்தை ஏற்படுத்துவதனால் கல்வியில் ஆர்வம் குறைகின்றது. இவ்வகையில் ஆர்வம் குறைந்து கொண்டு செல்லும் சந்தர்ப்பங்களில்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர்கள் பாடசாலைக்குச் செல்வதையும் விரும்பமாட்டார்கள். இறுதியில் இடை விலகல் ஏற்படுகின்றது. இதனால் பெற்றோர்கள், ஆசிரியர்கள், பிள்ளைகளின் கல்வியில் அதிக அக்கறை கொள்வதோடு கற்றல் ஆர்வத்தைத் தடை செய்யும் காரணிகளை இனங்கண்டு அவற்றை நீக்கிக் கற்றலைத் தூண்டும் நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

சில முக்கிய காரணிகளின் விளைவுகளை விரிவாக ஆராய்வது பொருத்தமானதாகும்.

மாணவர்களின் குடும்பப் பொருளாதார நிலைமைகள்

பிள்ளைகளின் கற்றலை ஆர்வத்தை அதிகரிப்பதற்குப் பாடசாலை சார்ந்த காரணிகளை விடக் குடும்பம் சார்ந்த காரணிகளின் தாக்கம் அதிகமாகும். பிள்ளை ஒன்று தனது நேரத்தில் பெரும் பகுதியைக் குடும்பத்திலேயே கழிக்கின்றது Jencks (1972) என்பவர் இது தொடர்பாக்க கருத்துக் கூறும் போது குடும்பப் பின்புலமே கல்விப் பெறுபேறுகளைத் தீர்மானிக்கும் முக்கிய காரணி என்கிறார் குடும்பத்தின் பொருளாதார நிலை கீழ் மட்டத்தில் இருக்கும் போது பிள்ளைகளுக்குப் போசாக்கான உணவு வகைகளை வழங்குதலில் பெற்றோர்களுக்கு முடிவதில்லை. இதனால் பிள்ளைகள் கற்றலிலே ஆர்வம் காட்டமுடியாது.

குடும்பத்தின் பொருளாதாரம் சீர்குலைந்தால் உண்மையில் அது குறிப்பிட்ட அக் குடும்பத்தின் ஒவ்வொரு அங்கத்தவரையும் பாதிக்கின்றது. பிள்ளைகளைப் பொறுத்தவரை அவர்கள் இருந்து படிப்பதற்குரிய வசதிகளும் குறைவாக காணப்படும். சில குடும்பங்களில் பிள்ளைகள் தரையில் உட்கார்ந்து படிப்பதையும் காணமுடிகின்றது. தளபாட வசதியின்மையால் படிப்பதும் தடைப்படும். குடும்ப வறுமை காரணமாகப் பல குடும்பங்களில் மின்னிணைப்பு இல்லாமை அவர்களின் கற்றலுக்கு மிகப் பெரும் தடையாக உள்ளது. அந்நிலையில் கற்றலில் அக்கறை காட்டுவது குறைவாக உள்ளது.

குடும்ப வறுமை காரணமாக அவர்கள் ஒருவிதமான தாழ்வுச்சிக்கலுக்கு ஆளாகின்றார்கள். வசதியான பிள்ளைகளோடு தம்மை ஒப்பிட்டுப் பார்க்கும் தன்மை கல்விக்குப் பெரும் ஆபத்தை விளைவிக்கின்றது. தம்முடைய வறுமை காரணமாகத் தாம் எதையும் அனுபவிக்காது இருப்பது போன்ற உணர்வு அவர்களுக்குள்ளே தலை எடுக்கின்றது. இதனால் பெற்றோர்களைக் கூடக் கோபித்து வெறுத்துவிடும் நிலைகூட அப்பருவத்தில் ஏற்படும். இவற்றிற்கெல்லாம் ஆறுதலாகப் பெற்றோர்களினதும் ஆசிரியர்களினதும் செயற்பாடுகள் இருத்தல் வேண்டும். சில குடும்பங்களில் பெற்றோர்களினது சிக்கலான குடும்ப உறவு முறைகள் கூடக் கல்வியில் பெரிதும் தாக்கத்தை விளைவிக்கின்றன. இன்றைய நாகரிக உலகில் குடும்பத்தின் தலைமைத்துவத்தை ஏற்பதில் பெண்களும் சரிசமமாக இருப்பதனால் பிரச்சினைகள் தலை தூக்குகின்றன. ஒருவருக்கொருவர் புரிந்துணர்வு இல்லாத பட்சத்தில் குடும்பத்தில் பிணக்குகளும் மனக்கசப்புகளும் தோன்றுகின்றன. பெற்றோர் தமக்கு ஏற்படும் மனமுறிவுகளைப் பிள்ளைகளில் தீர்த்துக் கொள்கின்றார்கள். இவர்களின் இத்தகைய நடவடிக்கைகள்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிள்ளைகள் மீது பல தீய நடத்தைகளைத் தூண்டிவிடும் காரணியாக அமைவதனால் கல்வி சீர்குலைக்கப்படுகின்றது.

குடும்பப் பிணக்குகள் காரணமாக ஒருபிள்ளை சக மாணவர்களின் கேலிக்கும் பரிகாசத்துக்கும் ஆளாகின்றது. இந்நிலையில் பாடசாலை மீது வெறுப்பு ஏற்படுகின்றது. இது பிள்ளையினுடைய கற்றல் ஆர்வத்தைச் சீர்குலைத்து விடுகின்றது. பெற்றோர்களது அறியாமையினால் இத்தகைய துன்பத்துக்கு ஆளாகும் பிள்ளைகளின் நிலை பரிதாபமானது. ஒரு குடும்பத்தில் அறியாமை, வறுமை பெற்றோரின் நடத்தைப் பிறழ்வுகள், ஏனைய இழப்புக்கள் எல்லாம் இருக்கும் நிலையில் உண்மையில் பிள்ளையால், அதனை எப்படி வெல்வது என்று தெரியாமல் இருக்கும். அதனைச் சீர் செய்வதற்கான உளப்பக்குவம் அதனிடம் இருக்காது. இதன் காரணமாக அதனுடைய சிந்தனையில், செயற்பாடுகளில் சமச்சீரற்ற ஒரு நிலை ஏற்படுகின்றது. ஆகவே கற்றலில் நாட்டம் குறைவடைகின்றது.

நரகத்தைச் சொர்க்கமாக்குவதற்கும் சொர்க்கத்தை நரகமாக்குவதற்கும் காரணியாக இருப்பது ஒருவருடைய மனதின் செயற்பாடாகும். இதனால் இப்பருவத்தில் மாணவர்களின் மனதுக்குப் பொருத்தமான செயற்பாடுகளில் அவர்களைத் தூண்டிவிடுதல் வேண்டும். நல்லது கெட்டது என்பது புரியாத வயதாகையால் இப்பருவம் முற்று முழுதாகப் பெரியவர்களினால் அவதானிக்கப்பட வேண்டிய பருவமாகும். பிள்ளைகளின் நடத்தைப் பிரச்சினைகளைக் கட்டுப்படுத்தும் செயற்பாடு முதலில் வீட்டிலேயே ஆரம்பிக்கப்பட வேண்டும். பிள்ளைகளின் வளர்ச்சிக் கட்டம் ஒவ்வொன்றிலும் பெற்றோரின் கவனம் தொடர்ந்து வருவதுடன் பிள்ளைகளைச் சமூகப் பொருளாதாரச் சீராக்கங்களுக்கும் உட்படுத்துதல் முக்கியமானது.

அத்துடன் பாடசாலையின் செயற்பாடுகளும் மாணவர்களை மையப்படுத்தியதாக இருக்க வேண்டும். பிள்ளைகளிடையே விரும்பத் தகுந்த விளைவுகளை உருவாக்கக் கூடியவாறு பாடசாலைகள் அவர்களை ஈடுபடுத்த வேண்டுமென்று Walker, Cdvin and Ramsey ஆகியோர் தெரிவித்துள்ளார். இதனால் ஆசிரிய மாணவ உறவு என்பது மிக முக்கியமானதொரு விடயமாகும். ஆசிரியரை உயர்ந்த இடத்தில் மரியாதைக்குரிய ஒருவராக வைத்துப் பார்ப்பதோடுதனது இன்ப துன்பங்களில் பங்குபற்றும் ஓர் அன்புக்குரியவராகவும் பிள்ளைகள் எண்ண வேண்டும். தன்னுடைய ஒரு துன்பத்தைத் தனது ஆசிரியரிடம் சொல்லி மன உணர்வுகளைச் சீர் செய்யும் வகையில் ஆசிரியர்களின் செயற்பாடுகள் அமைய வேண்டும். இதன் மூலம் கற்றலில் ஆர்வத்தை அதிகரிக்கச் செய்யலாம்.

**மாணவர்களின் அதிகளவிலான வேலைப்பளு**

மாணவர்களின் சமூக அடுக்கமைவு அவர்களின் கற்றலில் பெரும் செல்வாக்குச் செலுத்துகின்றது. அவர்கள் தமது சொந்த வீட்டு வேலைகளில் அதிகம் ஈடுபடுத்தப்படுகின்றனர். ஆண் பிள்ளைகளும் பெண் பிள்ளைகளும் தோட்ட வேலை, மீன்பிடித்தலில் உதவி ஒத்தாசைகள் வழங்குதல், தண்ணீர் எடுத்தல், சிறுவியாபாரங்களில் ஈடுபடுத்தப்படல், பெற்றோர்களுக்குச் சமையல் வேலைகளில் உதவி செய்தல், குறிப்பாகப் பெண் பிள்ளையாயின் சமைத்தல், தனக்கு இளைய சகோதரர்களைப் பராமரித்தல் போன்ற வேலைகளில் ஈடுபடுத்தப்படுகின்றார்கள்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வேலைகள் மாணவர்களின் உடலை வருத்துவனாக அமைகின்றன. நீண்ட நேரம் தம் வயதிற்கு மேற்பட்ட வேலைச் சுமைகளைச் சுமப்பதனால் கல்வியில் அக்கறை குறைந்து செல்கின்றது. இதன் மூலம் உடல், உளப் பாதிப்புகள் ஏற்படுகின்றன.

இன்றைய குடும்பங்களில் பிள்ளைகளின் எண்ணிக்கை குறைவாக இருந்த போதிலும் சில கிராமப்புறப் பெற்றோர்கள் கூடுதலான பிள்ளைகளைப் பெறுகின்ற நிலையும் உண்டு. இதனால் குடும்பத்தின் பருமன் அதிகரிக்கின்றது. அத்துடன் கூட்டுக் குடும்பங்களாக இருக்கின்ற நிலையிலும் அங்கத்தவர் எண்ணிக்கை அதிகரிக்கலாம். இந்நிலையில் குடும்பத்தின் அங்கத்தவர் தொகைக்கேற்ப அக்குடும்பத்தின் வேலைப்பளுவும் அதிகரிக்கும். பெற்றோரும் அளவுக்கதிகமான வருமானம் ஈட்டும் வேலைகளிலும், வீட்டு வேலைகளிலும் அளவுக்கதிகமாக ஈடுபடும் போது தமது பிள்ளைகளைக் கவனிக்கும் நேரமும் குறைந்து விடுகின்றது. அத்துடன் அதிகமான வேலைப்பளுவினால் தாம் களைத்துவிடும் நிலையில் பிள்ளைகளிடம் சில வேலைகளைப் பொறுப்பாக விட்டு விடுகின்றனர். பிள்ளைகளுக்குப் பொருத்தமான வீட்டு வேலைகளில் அவர்களை ஈடுபடுத்துவது அவர்களது உடல், உளவளர்ச்சிக்கும் சில வேளைகளில் பொழுதுபோக்கிற்கும் கூட உதவலாம். ஆனால் பெரியவர்களுக்கான வேலைகளில் அவர்களை ஈடுபடுத்தும் போது பிள்ளைகளிடம் மனச்சோர்வு நாளடைவில் ஏற்பட்டு விடுகின்றது.

சில குடும்பங்களில் பெண் பிள்ளைகளை எப்படியாவது வேலைகளில் ஈடுபடுத்த வேண்டுமென்றும் அது அவர்களது எதிர்கால வாழ்க்கைக்கு அவசியமானதென்றும் கருதி பிள்ளைகளை வேலை வாங்குவதும் உண்டு. இது வசதியுள்ள குடும்பங்களிலும் கூட இடம் பெறுகின்றது. றுஸோ கருதுவதைப் போல "தூரத்தில் தெரிகின்ற எதிர்காலத்துக்காக நிகழ்காலத்தில் பிள்ளைகளை வாட்டி வதைப்பது கூடாது" என்பதைப் பெற்றோர்கள் எதிர்காலம் உண்டோ அல்லது இல்லையோ நிச்சயமாக விளங்கிக் கொள்ள வேண்டும் தற்போது பிரச்சினையில்லை. ஆனால் பிள்ளைக்கு அதற்குரிய மனப்பக்குவம் இல்லையென்பதும் உடல் ரீதியாக வளர்ச்சி இல்லையென்பதையும் கண்டிப்பாகப் பெற்றோர்கள் ஏற்றுத்தான் ஆக வேண்டும் பெரியவர்களோடு பொருத்திப் பர்க்காதீர்கள் என்ற றுஸோவின் கருத்தும் இங்கு குறிப்பிடக் கூடியது.

**ஆசிரியர்களின் வினைத்திறனற்ற கற்பித்தல் முறைகள்**

ஆசிரியர்களிடம் வினைத்திறனுள்ள கற்பித்தல் ஒன்றையே சமூகம் எதிர்பார்க்கின்றது. Kaplan (1952) என்பவர் மாணவரின் நடத்தைகள் ஓர் ஆசிரியரின் நடத்தையைக் குழப்புகின்றன என்று கருதுகின்றார். எனினும் ஆசிரியர்களின் சில செயற்பாடுகளும் நடைமுறைகளும் இன்று மாணவர்களைப் பல்வேறு குழப்பங்களுக்கும் ஆளாக்குகின்றன எனலாம். ஆசிரியர்கள் தமது சொந்த நியமங்களுக்குள் நின்று மாணவர்களை அணுகுவதால் சில தவிர்க்க முடியாத பிரச்சினைகளும் ஏற்படுகின்றன. வகுப்பறையில் விருப்பு வெறுப்பு என்ற நிலையைத் தவிர்த்துச் சமநிலை பேணும் உளப்பண்பு உடையவர்களாக ஆசிரியர்கள் செயலாற்ற வேண்டும். இக்கருத்துத் தொனிக்கும் வகையில் Warner (1953) என்பவர் சில விடயங்களை முன்வைத்துள்ளார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கையின் கல்வி முறைமைகளில் அடிக்கடி இடம்பெறும் புதிய ஆசிரிய நியமனங்கள் பிள்ளைகளின் கல்வியில் தாக்கத்தை உண்டு பண்ணுகின்றன. ஆசிரியர்களுக்கு எதுவித பயிற்சியும் வழங்காமலே ஆசிரியத் தொழிலுக்குள் உள்வாங்கப்படுகின்றார்கள். உண்மையில் ஆசிரியர்களுக்கான பயிற்சியைப் பெற்ற ஒருவரே கற்பிக்கத்தக்க தகுதியானவர். பாடசலைகளில் கணப்படும்ஒரு பெருங்குறைபாடு உள்ளகமேற்பார்வை செய்யப்படுவது குறைவாக இருக்கின்ற நிலையிலும் மேற்பார்வையாளர் ஆசிரியரில் குறை கண்டுபிடிப்பதையே விரும்புகின்றார். உண்மையிலே குறைகளை மட்டும் நோக்குவது மேற்பார்வையாகாது. குறிக்கப்பட்ட பாடத்தில் விசேட தேர்ச்சி பெற்ற இன்னொரு சக ஆசிரியர் அதனைப் பார்வையிடலாம். இச் செயலை மேற்பார்வை செய்யப்படும் ஆசிரியரும் மனதளவில் ஏற்றுச் செயற்பட வேண்டும். கற்பித்தலின் போது மாணவர்களின் பங்கேற்றல், கற்பித்தலுக்கான அகப்புறச் சூழல்கள், கற்பித்தல் உபகரணங்களைப் பயன்படுத்தல, ஆசிரியரின் திட்டமிட்ட செயற்பாடுகளுக்கான பாடக்குறிப்புகள் போன்றவற்றைப் பார்வையிடுவதன் மூலம் வினைத்திறனுள்ள கற்பித்தலை மேற்கொள்ள முடிகின்றது. இதனைவிடத் திணைக்களங்களினூடான மேற்பார்வையும் உண்டு. அது அவசியமானதுங்கூட அத்தோடு ஆசிரியர்கள் தம்மைத்தாமே மதிப்பீடு செய்யும் சுயமதிப்பீடும் அவசியம். இத்தகைய நிலைகளில் ஆசிரியர்களின் செயற்றிறன்கள் அதிகரிக்கும் போது மாணவர்களின் கற்றல் ஆர்வம் அதிகரிக்கும்.

ஆசிரியர்களின் நடத்தைகளும் ஒழுக்கங்களும் மாணவர் கல்வியில் பாரியதாக்கத்தை விளைவிக்கின்றன. மாணவர்களுக்கு முன்னுதாரணமாக ஆசிரியர்கள் நடத்தைகள் அமைய வேண்டும். மாணவர்களோடு பேசும் போது பயன்படுத்தும் மொழிப்பாவனை அவர்களின் நடை, உடை, பாவனை ஆசிரிய மாணவ உறவு போன்றவற்றில் மிகுந்த கவனம் செலுத்த வேண்டும். இன்று பல இடங்களில் அதிபர், ஆசிரியர்களின் தவறான நடத்தைகள் தொடர்பான செய்திகள் இடம்பெறுகின்றன. வேலியே பயிரை மேய்ந்த கதையாக இருப்பது வருந்தத்தக்கது. ஆசிரியமாணவ உறவு புனிதமானது. ஆசிரியர்கள் பெற்றோர்களைப் போன்று மாணவர்களோடு அணுகுதல் வேண்டும். இதனையே பாலகிருஷ்ணா என்பவர் பிள்ளையின் இரண்டாவது பெற்றோர், ஆசிரியர் என்று அழுத்தமாகக் குறிப்பிட்டுள்ளார்.

ஆசிரியர்கள் உரியநேரத்துக்கு வகுப்புக்குச் செல்லாமையும் மாணவர்களின் கற்றல் பின்னடைவுக்குக் காரணமாகலாம். ஒவ்வொரு பாடவேளையும் ஐந்து நிமிடம் தாமதித்து ஆரம்பமாகும் போது பிள்ளை ஒரு நாளில் 40 நிமிடத்தை வீணாக்குகின்றான். வகுப்புக்குச் சென்றதும் கற்பித்தலை எப்படி ஆரம்பித்தல் என்பது பல ஆசிரியர்களுக்கு இன்று தெரிவதில்லை. உண்மையில் ஒரு வகுப்பறையின் கற்றல் ஆர்வம், ஆசிரியர் குறிக்கப்பட்ட ஒரு வகுப்பறையில் செலவழிக்கும் முதல் 5 நிமிடத்தைப் பொறுத்ததாகும். வகுப்பில் ஆசிரியர்கள் உட்கார்ந்த நிலையில் கல்வி கற்பித்தல், மாணவர்களை அவதானிக்காமை, சரியான முறையில் சமநிலை உணர்வு பேணாமை, 40 நிமிடமும் ஒரே தொடர்ச்சியாக வாசிப்பது போன்று கற்பித்தல், மாணவர்களோடு சரியான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முறையில் உறவைப் பேணாமை போன்ற பல காரணங்கள் மாணவர்கள் கல்வியை வெறுக்கக் காரணங்களாகின்றன.

இன்று ஆசிரியத் தொழிலை பலர்விரும்புவதற்குக் காரணம் ஆசிரியத் தொழிலில் அதிக லீவு எடுக்க முடியும் என்பதாலாகும். பெரும்பாலான பாடசாலைகள் 2 மணியுடன் முடிவடைகின்றன. மாணவர்களுக்கான தவணை விடுமுறையும் ஆசிரியர்களுக்கும் கிடைப்பதனால் அதிகலீவு கிடைக்கின்றது. அத்துடன் தமது சொந்த லீவைக் கூட அவர்கள் தமக்குரிய உரிமையாகக் கருதுகின்றார்கள். உரிமை என்பது வேறு. ஆனால் எப்படியும் லீவை எடுத்து முடிப்பது என்ற எண்ணத்துடன் லீவு எடுக்கப்படுகின்றது. அத்துடன் ஆசிரியர்களும் கருத்தரங்கு, ஏனைய படசாலை நிகழ்வுகளில் கலந்து கொள்ளல் போன்ற செயல்களை முன் வைத்தும் லீவு வழங்கப்படுகின்றது. இதனால் கற்பித்தல் சரியான முறையில் இடம் பெறாமையினால் மாணவர்களின் மிதமிஞ்சிய நேரம் அவர்களைச் சிலவேளைகளில் தவறான பாதைகளுக்கும் அழைத்துச் செல்லும், என்று கருணாநிதி (2008) குறிப்பிடுகின்றார். கல்வித்திணைக்கள ஆய்வொன்றின் படி ஒரு நாளையில் 20% மான ஆசிரியர்கள் லீவில் நிற்பது கண்டறியப்பட்டுள்ளது. இதனால் மாணவர்கள், கல்வியில் அதிக ஆர்வம் காட்டுவது தடைப்படுகின்றது. இத்தகைய நிலைகள் மாணவர்கள் மத்தியில் தேலையில்லாத மனவிரக்தி, மனச்சோர்வை ஏற்படுத்தி விடுகின்றன.

ஆசிரியர்கள் தமது பாடத்தை முறையாகத் திட்டமிடாது வகுப்பறைக்குள் நுழைகின்றார்கள். இதனால் சிறப்பான கற்பித்தல் நடைபெறுவதில்லை. இதனைப் புரிந்து கொாண்ட மாணவர்கள் சில வேளைகளில் வகுப்பில் குழப்பங்களை உண்டுபண்ணி விடுகின்றார்கள். மாணவர்கள் மத்தியில் சோர்வும் ஏற்பட வாய்ப்புண்டாகும். இதனால் கல்வியே அவர்களுக்கு ஒரு பெரும் சுமையாகிவிடுகின்றது. சில ஆசிரியர்கள் வகுப்பறையில் கூடத் தனது சொந்த நலனில் கவனம் செலுத்துகின்றனரேயொழிய கற்பித்தலில் ஈடுபடுவதில்லை. பாடநூல்களில் உள்ளவற்றைப் படியுங்கள் என்று கூறிவிட்டு வெறுமனே கதிரையில் உட்கார்ந்து இருக்கும் ஆசிரியர்கள் எப்போதும் மாணவர்களுக்கும் பிரச்சினைக்கு உரியவர்களாகவே இருப்பார்கள். இதனால் ஆசிரியர்கள் அன்றைய பாடம் தொடர்பான முன்னறிவைக் கொண்டிருப்பதோடு நன்கு திட்டமிட்டுச் செயற்படுவதன் மூலம் தான் ஒரு வெற்றிகரமான கற்பித்தலை மேற்கொள்ள முடியும்.

**சிறுவர் துஷ்பிரயோகங்கள்**

இன்று சிறுவர்கள், பெரியவர்களினால் உடல், உளரீதியாகப் பாதிக்கப்படுவதினால் கற்றலில் பின்னடைவுகளையே எதிர்பார்க்கின்றார்கள் பல்வேறு வகைகளில் துஷ்பிரயோகங்கள் இடம் பெறுகின்றன. பிள்ளைகளின் உடல் உழைப்பைப் பெறுவதில் ஆர்வம், இளவயதில் அவர்களைத் தொழில் உலகுக்கு அறிமுகம் செய்து வைத்தல் சிறுவர்களுக்கு அளவுக்கதிமான தண்டனைகள் வழங்குதல்.பாலியல் ரீதியான துன்பங்களுக்கு உள்ளாக்குதல், போர் நடவடிக்கைகளில் பிள்ளைகளை ஈடுபடுத்துவதல் போன்றவைகள் மூலம் சிறுவர்கள் கற்றலில் ஆர்வத்தைக் காட்டத் தவறி விடுகின்றார்கள். இன்று போரின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொடுமையினால் தனது பெற்றோரையும் உறவுகளையும் தொலைத்து விட்டு மனஊனம், உடல் ஊனம் என்பவற்றுடன் வாழ்கின்ற பிள்ளைகள் பல்வேறு விதமான துஷ்பிரயோகங்களுக்கு உட்படுத்தப்படுவதன் மூலம் அவர்களது மனஉணர்வுகள் எப்படி அமையும் என்று திட்டவட்டமாகக் கூறமுடியாது.

கடந்த காலங்களோடு ஒப்பிட்டுப் பார்க்கும் போது இன்று துஷ்பிரயோகங்கள் அதிகரித்துக் காணப்படுகின்றன. சிறுவர் உரிமைகள் பறிக்கப்படுகின்றன. பெற்றோர்களை இழந்த பிள்ளைகளும், பெற்றோர்களால் கைவிடப்பட்ட பிள்ளைகளும் தொலைந்த பிள்ளைகளும் என்று பல்வேறு வகையான பிள்ளைகள் இனங்காணப்பட்டுள்ளனர். உதாரணமாக 2009 ஆம் ஆண்டில் பல்வேறு வகைகளில் பாதிக்கப்பட்ட சிறுவர்களின் எண்ணிக்கையும் அதிகமாகும். இத்தகைய நிலைமைகளில் பிள்ளைகளின் கற்றல் ஆர்வங்கள் பற்றி எப்படியாக உறுதி கூற முடியும் என்பது பெரும் கேள்விக் குறியாக உள்ளது.

இதே போன்று சிறுவர்களுக்கான உரிமைகள் தொடர்பான விடயமும் அட்டவணைப்படுத்தப்படுகின்றன. இவைகள் வெறும் எழுத்தளவில் உள்ளனவே தவிர அவைகள் கண்டுபிடிக்கப்படுகின்றனவா என்பதுவும் கேள்விக் குறியாகும். இத்தகைய செயற்பாடுகளினால் மாணவர்கள் பாரிய மனநோய்களுக்கு உள்ளாகின்றார்கள். இவ்வகையில் சிறுவர்களைச் சிறுவர்களாகவே கருதிச் செயற்படும் நிலையில் அவர்களைத் தேவையற்ற மனஉளைச்சல்களிலிருந்து காப்பாற்ற முடியும். அதனால் அவர்களின் கற்றல் ஆர்வத்தை அதிகரிக்கலாம்.

**ஊடகங்களின் அதிகரித்த பாவனை**

இன்றைய நூற்றாண்டில் தொழில்நுட்ப சாதனங்களின் பயன்பாடு அதிகமாவுள்ளது. குழந்தைகள் தொட்டு முதியவர்கள் வரை இத்தகைய சாதனங்களின் தாக்கத்துக்கு உள்ளாகி வருகின்றார்கள். அண்மைக்காலச் செல்நெறிகளில் கவனத்திற் கொள்ளப்பட வேண்டிய முக்கிய விடயங்களில் இதுவும் ஒன்றாகும். மனிதனது நாளந்த வாழ்க்கையில் இத்தகைய சாதனங்கள் மனிதனுடைய பாரிய முன்னேற்றங்களை ஏற்படுத்தியுள்ளது. தொழில்நுட்ப சாதனங்களின் விளைவாக பலவகையான முன்னேற்றங்களை மனிதன் தனது வாழ்க்கையில் சந்தித்த வண்ணமேயுள்ளான். ஆனால் இத்தகைய ஊடகங்களின் நன்மைகளும் தீமைகளும் அவரவர் பயன்படுத்தும் தன்மைகளையும் நேரத்தையும் பொறுத்ததாகும்.

ஊடகங்களில் முக்கியமாக இன்றைய தொலைக்காட்சி நிகழ்ச்சிகள் மாணவர்களது கற்றல் ஆர்வத்தைக் குறைத்து தேவையற்ற, தீமையுள்ள பல விடயங்களை வளர்த்து விடுகின்றதொரு பாரியதொரு பணியைச் செய்கின்றன. இதன் மூலம் மாணவ சமுதாயத்தில் நெறிபிறழ்வான நடத்தைகளும் சமூகத்துக்கு ஒவ்வாத செயல்களும் நாளுக்கு நாள் அதிகரித்துக் கொண்டு செல்கின்றன. சில இடங்களில் பெற்றோர் இத்தகைய தொலைக்காட்சி நிகழ்ச்சிகளைப் பார்ப்பதில் அதீத ஆர்வம் காட்டுவதனால் பிரச்சினைகளும் அதில் ஈடுபடுத்தி தமது கல்வியை இழந்து விடும் நிலையும் காணப்படுகின்றது.

தொலைக்காட்சியில் இடம்பெறும் பல்வேறு வகையான விடயங்கள் உண்மையில் மாணவர்களது கல்விக்கு உதவுவனவாக அமைகின்ற



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போதிலும் அத்தகைய நிகழ்வுகளைப் பார்க்கும் மாணவர்கள் மிகக் குறைவு. சினிமாவையும் தொடர் நாடகங்களையும் பார்ப்பதிலே தமது நேரத்தைச் செலவிடுகின்றார்கள். அதிகநேரம் பார்ப்பதனால் அவர்கள் மனதிலே ஒருவிதமான சோர்வு ஏற்படுகின்றது. இதனால் எரிச்சலடைகின்றார்கள். படிக்கும் நேரத்தில் தூக்கமும் ஏற்படுகின்றது. கற்பதில் வெறுப்பு ஏற்படுகின்றது. மனப்பதற்றம் அதிகரிக்கின்றது. தேவையற்ற நடத்தை மாற்றங்கள் ஏற்படுகின்றன.

ஊடகங்கள் மனித முன்னேற்றத்திற்கு வழிகாட்டுவனவாக அமைந்த போதிலும் அதில் பயனுள்ள விடயங்களைப் பார்ப்பது குறைந்து போகின்றது. கணினி, தொலைக்காட்சிகள் இன்று அநேகமாக எல்லாப் பாடசாலைகளிலும் காணப்படுகின்ற போதிலும் சில பாடசாலைகளில் அது பாவிக்கப்படுவதில்லை. கணனி அறிவுடைய ஆசிரியர்கள் சில பாடசாலைகளில் இல்லாமையும் ஒரு குறைபாடாகும். இதனால் அவை முடக்கப்படுகின்றன. இந்நிலை மாற்றப்பட்டு மாணவர்கள் கற்கும் போது கற்றலுக்கு உதவியாய் இருக்கும் இத்தகைய கற்பித்தல் சாதனங்கள் மாணவர்களில் கல்வி ஆர்வத்தைத் தூண்டி விடுகின்றது.

இவ்வகையில் மாணவர்களது கற்றல் ஆர்வங்கள் குறைந்து வருவதற்குப் பல தடைக் காரணிகள் இனங்காணப்படுகின்றன. இவற்றைக் கூடுதலான வகையில் தடுத்து நிறுத்தி மாணவர்களுக்குச் சுபீட்சமான எதிர்கால வாழ்க்கையொன்றினை காட்டிக் கொடுப்பதற்கு பெற்றோர்களும் ஆசிரியர்களும் உதவிபுரிய வேண்டுமென எதிர்பார்க்கப்படுகின்றது.

**உசாத்துணைகள் :-**


1. கருணாநிதி.மா - 2008, கற்றல் கற்பித்தல் மேம்பாட்டுக்கான வழிமுறைகள், மேமமடு பதிப்பகம்.
2. இளமதி. எஸ் - 2003, குழந்தைகளின் மனநலம் காக்க ஒரு உளவியல் நூல், நர்மதா வெளியீடு.
3. ஸ்ரீ ஆல் பாஸ் கைடுகள் - 2000, கல்வி உளவியல், சென்னை, ஸ்ரீ பப்ளிஷர்ஸ்.
4. யுனிசெப் - 1997, சிறுவர் உரிமைகள் பற்றிய சமவாயம், கொழும்பு, இலங்கை.
5. கருணதிஸ்ஸ.எஸ் - 1991, நாட்டுப்புறங்களில் சிறுவர் உழைப்புச் சுரண்டல், பொருளியல் நோக்கு, மக்கள் வங்கித் தலைமையகம், கொழும்பு.
6. கருணாநிதி.மா - 2007, பிள்ளையின் ஆளுமையில் செல்வாக்குச் செலுத்தும் குடும்பக் காரணி, அகவிழி, கொழும்பு, சேமமடு பதிப்பகம்.
7. பெனடிக்ற்பாலன்.யோ - 1991, கல்வி உளவியல் அடிப்படைகள், அன்னம்மா பதிப்பகம், யாழ்ப்பாணம்.
8. Jenck.C - 2001, Equality of Education Opportunity Report Sponsoreel by Colloquium, Board of the Harvard School of Education arvard School.



கலாநிதி.திருமதி.ஜெ.இராசநாயகம்
சிரேஷ்ட விரிவுரையாளர்
கல்வியியல் துறை
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாடசாலை வரலாற்றுப் பதிவுகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# 2017 இல் எமது பாடசாலையில் நடைபெற்ற நிகழ்வுகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# 2017 இல் எமது பாடசாலையில் நடைபெற்ற நிகழ்வுகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 2016 இல் எமது பாடசாலையில் நடைபெற்ற நிகழ்வுகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சாதனையாளர்கள் விருது



அணிநடை 1ம் இடம் (2004)
மாகாணம்



சதுரங்கப் போட்டி 2ம் இடம் (2006)
மாகாணம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மாணவர்களிடத்தில் மென்திறன்களை விருத்தி செய்வதில் ஆசிரியர்கள் கையாளக் கூடிய உத்திகள்

## The Soft Skills Make Personal attributes than enable someone to interact effectively and harmoniously with other people.

அறிமுகம்

இன்றைய உலகமயமாதல் சூழலில் பாடசாலை மாணவர்களிடம் விருத்தி செய்யப்பட வேண்டிய முக்கியமானதாக கருதப்படுவது மென்திறன்கள் (Soft Skills). ஒவ்வொருவருடைய தகுதிக்கும் இணையான முக்கியத்துவம் வாய்ந்தவையாக மென்திறன்கள் காணப்படுகின்றன.

மக்கள் திறன்கள், சமூகத் திறன்கள், தகவல் தொடர்பு திறன்கள், குணநலன்கள், வாழ்க்கைப் பண்புகள், மற்றும் உணர்வுசார் நுண்ணறிவு ஈவு (EQ) என்பவற்றின் மூலம் மக்கள் திறம்பட தமது இலக்குகளை அடைய மென்திறன்கள் உதவுகின்றது என Collins English Dictionary கூறுகின்றது.

காலமாற்றங்களுக்கேற்ப இன்றைய மாணவ சமுதாயத்தினர் பல்வேறு விடயங்களில் அதீத அறிவாற்றலைக் கொண்டவர்களாகத் திகழ்கின்றனர். இத்தகைய மாணவர்களை விவேகமான முறையில் கையாள்வதே தற்போது ஆசிரியர்களுக்கு மாபெரும் சவாலாக இருந்து வருகின்றது.

ஏனெனில் இதற்கு முந்தைய காலங்களில் பயன்படுத்தப்பட்டு வந்த கல்வி முறைகள் இக்கால மாணவர்களுக்கு ஏற்புடையதல்ல என்பதை உணர்ந்தே கல்வி அமைச்சு 21ம் நூற்றாண்டு கல்வித் திட்டத்தை அறிமுகப்படுத்தியது.

தேசியக் கல்வித்திட்டமானது சமநிலை, உறுதி மனப்பான்மை. ஆய்ந்தறியும் திறன், கொள்கைப் பிடிப்பு, தகவல் அறிவு, நாட்டுப்பற்று, சிந்தனைத்திறன், தொடர்புத்திறன், இணைந்து செயலாற்றும் திறன் ஆகிய பண்புகளைக் கொண்ட மாணவனை உருவாக்கும் இலக்கைக் கொண்டு அமைந்துள்ளது.

கற்றல் - கற்பித்தலைத் தவிர்த்து, எதிர்காலச் சவால்களான பொருளாதாரம், வர்த்தகம், வேலைவாய்ப்பு போன்றவற்றைப் பற்றிய அறிவாற்றலையும் மாணவர்களுக்கு ஊட்ட வேண்டும். ஏனெனில் அனைத்துலக ரீதியில் நிபுணத்துவ தொழில் வாய்ப்பைப் பெற ஒரு மாணவன் 35 வகையான தகுதிகளைக் கொண்டிருக்க வேண்டும் என்பது தற்போதைய நிலவரமாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடம் போதிக்கும் போது மாணவர்களுக்கு வழங்கப்படும் உதாரங்களில் மேற்கண்ட கூறுகளையும் சேர்த்துக் கொள்ள வேண்டும். இதனால் குறுகிய வட்டத்திற்குள்ளேயே சிந்திக்கும் மாணவர்களின் சிந்தனைத் திறன், தொலைநோக்குப் பார்வையிலும் இயங்கும் அதேவேளையில், மாணவர்களின் சிந்தனைத்திறன் பாடத்திற்கு அப்பாற்பட்டதாக அமைந்து விடாமல் இருப்பதையும் ஆசிரியர்கள் உறுதி செய்து கொள்ள வேண்டும்.

மாணவர்களுக்கு வாழ்க்கைக் கல்வி போதிக்கப்பட வேண்டும். நாம் எம்மாதிரியான உலகில் வாழ்ந்து கொண்டிருக்கிறோம்? நாம் எதிர்நோக்கக் கூடிய சவால்கள் யாவை? அவற்றை எவ்வாறு சமாளிப்பது என்பதையே பாடங்கள் வழியாக போதிக்க வேண்டும்.

மாணவர்கள் முன்னிலையில் ஏதாவது பிரச்சினையை முன்வைத்து அதற்கு அவர்கள் என்ன செய்வார்கள் எனக் கேட்டு அவர்களின் கருத்துக்களின் தொகுப்பை பகுப்பாய்வு செய்ய வேண்டும். ஒரு மாணவனின் கருத்து, பிற மாணவரோடு எவ்வாறு வேறுபடுகின்றது என்பதைப் பற்றி கலந்துரையாட வேண்டும்.

கற்றல் - கற்பித்தல் நடவடிக்கைகள் ஆசிரியர் மாணவர்களிடையே நல்ல உறவை வளர்க்க வேண்டும். ஒரு மாணவன் எந்தெந்த திறன்களில் கைதேர்ந்தவராக இருக்கின்றான்? எந்தெந்த திறன்களை அவன் வளர்த்துக் கொள்ள வேண்டும் என்பதையெல்லாம் ஆசிரியர் அறிந்து வைத்திருக்க வேண்டும்.

இவையாவும் உலக அளவிலான சவால்களை எதிர்கொள்ளும் ஒவ்வொரு மாணவனும் பெற்றிருக்க வேண்டிய 21ம் நூற்றாண்டின் திறன்களாக கருதப்படுகின்றன. எனவே ஒவ்வொரு மாணவனும் மென்திறன்களைக் கொண்டிருப்பதை உறுதி செய்ய வேண்டியது ஆசிரியர்களின் பொறுப்பாகும்.

**மென்திறன்களாக**

*01.* கணனி பற்றிய அடிப்படை அறிவு

*02.* கணிதத்திறன்

*03.* வெற்றியின் அடிப்படையான தன்னம்பிக்கை

*04.* எதிரொளி கண் பார்த்து பேசுதல்

*05.* உற்சாகமும் சுறுசுறுப்பும்

*06.* நேரம் தவறாமை

*07.* எழுத்துத்திறன்

*08.* சுயதோற்றம்

*09.* பணிவு, நேர்மை, உண்மை

*10.* ஆங்கிலத்தில் பேசுவது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

11. தொழில்சார்ந்த பயிற்சிகள்

12. கற்றுக் கொள்ளும் தாகம்

13. எடுத்துக்கொண்ட வேலையை திறம்படச் செய்து முடித்தல்

14. அணியுடன் சேர்ந்து செயல்படுவது

15. வங்கிச்சீட்டு நிரப்புதல்

16. புகையிரத முன்பதிவு சீட்டு எடுத்தல்

17. மின்னஞ்சல் (E-mail) அனுப்புதல் போன்றவற்றை தெரிந்திருத்தல் அவசியம்

18. குழுவில் இணைந்து செயல்படும் குழு உணர்வு

19. பிறர் மனதை கவரும் முறையில் கருத்தை வெளிப்படுத்திக் கொள்ளும் திறன்

20. எளிமையான தீர்க்கமான உடல் அசைவுகள்

21. அனைவரையும் கவரும் விதமான உரையாடல் திறன்

22. எதையும் உறுதியாகப் பார்க்கும் மனப்பாங்கு

23. பிறருக்கு ஊக்கமளித்து, தானும் ஊக்கத்துடன் இருத்தல்

24. எடுத்த பணியை குறிப்பிட்ட நேரத்துக்குள் முடிக்கும் மேலாண்மைத் திறன்

இப்பட்டியலில் அடங்காத சில அம்சங்களும் உள்ளன. ஒரு வேலையை சிறப்பாக செய்து முடிக்க உதவும் அனைத்து திறன்களும் மென்திறன்கள் எனப்படும். இந்த குணங்களும், திறன்களும் அனைவரிடமும் இருப்பது கடினம். இத்திறன்களை வளர்த்துக் கொள்ளத் தொடங்கினாலே வெற்றிப்பாதையில் பயணிக்கலாம்.

நேர்மை, நம்பகத்தன்மை, இலகுத்தன்மை சிறப்பாக எழுதும் திறன், நிர்வாகத்திறன், கற்றுக் கொள்ளும் ஆர்வம், பொது அறிவு, சிறப்பான தோற்றம் ஆகியவற்றையும் "மென்திறன்கள்" என்றே அழைக்கிறார்கள். இவற்றில் மூன்றில் ஒரு பங்கு திறன்களையும், குணங்களையும் பெற்றிருந்தாலே ஒவ்வொருவரும் நற்பிரசையாக முடியும் என்பது உறுதி.

### மென்திறன்களை வளர்க்கக் கூடிய உத்திகள்

**திட்டமிடல் (Planning)**

கற்பிக்கும் திறன் தேர்ந்தெடுக்கப்பட்டு அதன் உட்கூறுகள் அறியப்படுகின்றன. ஒரு பாடக்கருத்தினைக் கொண்டு, திறனை வெளிப்படுத்தும் வகையில் சிறு பாடத்திட்டமாக பாட நிகழ்வு தயாரிக்கப்படுகிறது.

**கற்பித்தல் (Teaching)**

ஆசிரியர் பாடக்கருத்தினை, கற்பிக்கும் திறனை பயன்படுத்தி, 5 முதல் 10 மாணவர்களுக்கு, 5 முதல் 10 நிமிடங்களில் கற்பிக்கிறார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பின்னூட்டல் (Feedback)

ஆசிரியர் மதிப்பீடுகளைக் கொண்டு பின்னூட்டம் அளிக்கிறார். திறன் திருப்தியாக கையாளப்படவில்லை எனில் மறுதிட்டமிடலுக்கு அறிவுறுத்தப்படுகின்றது.

மறுதிட்டமிடல் (Re-Planning)

அதே பாடக்கருத்து மற்றும் திறனைக் கொண்டு, பின்னூட்டத்திற்கு ஏற்ப குறைகளை நிவர்த்தி செய்யும் விதத்தில் பாடநிகழ்வு அமைக்கப்படுகின்றது.

## கற்றல் - கற்பித்தல் முறைகள்

காலை வேளையில் வாழ்த்து கூறுதல் - Greeting the Students in the Morning

வகுப்பறைக்குள் நுழையும் மாணவர்களை அவர்களுடைய நாள் தொடங்கும் போது இன்முகத்துடன் வணக்கம் கூறி கைகுலுக்கி வரவேற்க வேண்டும். இதனை மற்றைய மாணவர்களும் தம்மை பின்பற்றி கூற வழிப்படுத்த வேண்டும். இதனால் மாணவர்களின் அன்றைய நாள் மிகவும் உற்சாகமாக ஆரம்பிக்கும்.

விவாதங்கள் - Debate

வகுப்பறை செயற்பாடுகளில் விவாதங்களை மேற்கொள்ளுதல், தற்காலத்திற்கு பொருந்தக்கூடிய தலைப்பினை தெரிவு செய்து மாணவர்களை குழுக்களாக்கி சாதக, பாதக நிலைகளை விவாதித்தல். இதன்போது ஆசிரியர்கள் மாணவர்களின் பேசும் திறனை அவதானிக்க வேண்டும். எமது கல்வியமைப்பில் மாணவர்கள் மொழியின் வாயிலாகவே தமது திறன்களையோ, ஆற்றல்களையோ வெளியிடுவது பெரும்பாலும் எதிர்பார்க்கப்படுகின்றது.

குழுமுறைக் கற்பித்தல் - Group Discussions

இங்கு சமவயதுக் குழுக்கள் காணப்படுவர். மாணவர் மையமே அடிப்படையாக கொண்டது. மாணவர் உற்சாகமாக செயற்படுவர். கண்டறிந்தவற்றை குழுக்களாக முன்வைப்பர். இங்கு குழுவின் தலைவர் தானாகவே உருவாகுவார். ஆசிரியர் மாணவர்கள் முன்வைக்கும் கருத்துக்களைக் குறித்துக் கொண்டு சகல குழுக்களும் முன்வைத்த பின்னர் ஆசிரியரினால் கருத்துக்கள் வெளிக்கொணரப்படும். இங்கு 5E - முறை (Method) பயன்படுத்தப்படும். இதனூடாக மாணவர்களின் தொடர்பாடல் திறன், நடத்தை, ஒத்துப்போகும் தன்மை, புதிய விடயங்களை ஏற்றுக் கொள்ளும் தன்மை, நேர்மையான நெறிமுறை,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொறுப்பு கூறும் திறன் சமயோசித அறிவு போன்ற மென்திறன்கள் வளர்க்கப்படுகின்றன.

**பிரச்சினை தீர்த்தல் முறை - Problem Solving Method**

பிரச்சினை தீர்த்தல் கற்பித்தல் முறை ஒரு விஞ்ஞான முறையாகும். ஜோன் டுயி (John Deway) எடுத்துக் காட்டிய பிரச்சினை தீர்க்கும் முறை ஐந்து சந்தர்ப்பங்களைக் கொண்டது. இங்கு மாணவர் பிரச்சினையை எழுப்புதலும், அப்பிரச்சினையை பகுப்பாய்வு செய்தலும் அது தொடர்பான ஏதும் அனுமானங்களை எழுப்புதலும், அந்த அனுமானங்களை பரிசீனை செய்து பார்த்தலும், ஆதாரங்களின் அடிப்படையில் தீர்மானத்துக்கு வருதலும் ஆகும். இதிலிருந்து படைப்பாற்றல், தகவல் தொடர்பு, விமர்சன சிந்தனை போன்ற மென்திறன்கள் வளர்க்கப்படுகின்றன.

**விளையாட்டுமுறை - பாத்திரமேற்று நடித்தல் - Game Mode, Role - Play**

மாணவர்கள் செயற்பட்டு அனுபவம் பெறுகின்ற கற்பித்தல் முறையாகும். பாத்திரமேற்று நடித்தலின் போது ஓர் உயிர்த்துடிப்புள்ள பாத்திரத்தை அல்லது சந்தர்ப்பத்தை மாணவர்களால் நடித்துக் காட்டலாகும். மாணவர்கள் மிகவும் விருப்பத்தோடு செயற்படுவதற்கு இந்த நுட்பமுறை நன்கு உதவுகிறது. விளையாட்டு - பாத்திரமேற்றல் - நாடகம், நாட்டியம் போன்ற வகுப்பறைக் கற்றல் - கற்பித்தல் செயற்பாடுகள் மாணவர்களின் மகிழ்ச்சி, சுறுசுறுப்பு, பாடத்தில் விருப்பு, என்பனவற்றிற்கு மிகவும் உதவுகின்றன. இதன் மூலம் தொடர்பாடல், கவனிக்கும் திறன், மரியாதை, பாதுகாப்பு திறன், விட்டுக் கொடுக்கும் மனப்பாங்கு, நெகிழ்ச்சிப் போக்கு போன்ற மென்திறன்கள் வளர்க்கப்படுகின்றன.

**சிந்தனைக்கிளறல் கற்பித்தல் முறை - Induction Teaching Of Thinking**

சிந்தனைகளைத் தூண்டல் என்பது பங்குபற்றுகின்றவர்கள் சுதந்திரமாக கருத்து வெளியிடக்கூடிய மகிழ்ச்சி மிக்க கற்பித்தல் முறையாகும். இம்முறையின் பண்புகளாக

1. வகுப்பில் சகலரும் பிரச்சினையைச் சமர்ப்பித்தல்
2. மாணவர்கள் சகலரும் கருத்து வெளியிடுவதற்கு இடமளித்தல்
3. விடையை பின்னர் மதிப்பீடு செய்தலாகும்

சிந்தனை தூண்டல் சுதந்திர வெளிப்பாட்டிற்கும், ஆக்கபூர்வமான சிந்தனைக்கும் உதவும். விமர்சன சிந்தனை, சிக்கல் தீர்க்கும் திறன், குழுப்பணி, பொறுமை, அனைவரையும் கவரும் விதமான உரையாடல் திறன், எதையும் உறுதியாகப் பார்க்கும் மனப்பாங்கு, பிறருக்கு ஊக்கமளித்து தானும் ஊக்கத்துடன் இருத்தல் என்பவற்றை இச்செயற்பாட்டின் மூலம் வளர்க்க முடியும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**நுண்முறைக்கற்பித்தல் - Micro Teaching Method**

நுண்ணிய கற்பித்தலில் குறுகிய கால எல்லைக்குள் சிறு குழுவை பயன்படுத்தி ஆசிரியர் ஆற்றலை முன்னேற்ற நடவடிக்கை எடுத்தலாகும். பொதுவாக வகுப்பறையில் காணக்கூடிய கஷ்டமான நிலைமையை நீக்கி கட்டுப்படுத்தப்பட்ட சந்தர்ப்பத்தில் தேர்ந்தெடுக்கப்பட்ட ஒரு ஆற்றலை விருத்தி செய்வதே இதன் நோக்கமாகும். நேர முகாமைத்துவம், தகவல் தொடர்பு போன்ற திறன்களை வளர்க்க முடியும்.

**நிறைவாக**

கற்றல் - கற்பித்தல் செயல்முறையில் ஒரு குறிப்பிட்ட திறனை மட்டும் தனித்துப் பயன்படுத்த முடியாது. அதே சமயம் ஒரு மாணவன் எல்லா திறன்களிலும் சிறந்து விளங்க வேண்டுமெனில் அவை ஒவ்வொன்றாக பயிற்றுவிக்கப்பட வேண்டும். இதற்கு பயிற்சியுடனான கற்பித்தல் அவசியம். நுண்ணோக்கியில் பார்ப்பது போல ஒவ்வொரு திறனும் அவதானிக்கப்பட வேண்டும். "எதைக்கற்பித்தல்" என்பதை விட "எப்படிக் கற்பித்தல்" வேண்டும் என்பதே இதன் அடிப்படையாகும். ஆசிரியர் நேரடியாக இயற்கைச் சூழ்நிலையில் மாணவர்களுக்கு களம் அமைத்துக் கொடுப்பது அவர்களின் மென்திறன்களை வளர்த்தெடுப்பதற்கு சிறப்பானதாக அமையும்

Reference


Jegadish Prasad Sharma (2009). Teacher Education, Centrum Press, New Delhi

Maheswari.V.K, Suraksha Bansal & Rawat.S.C Essentials of Educational Technology, R.Lall Book Depot, Meerat.

Komala.A.H.(2009. Educational Activities, Saratha Pathippagfam, Chennai.



*செல்வி.தர்ஷினி முத்துராஜா*
*விவுரையாளர்* (SLTES)
*கோப்பாய் ஆசிரியர் கலாசாலை*


**மனித மூளையின் எடை எவ்வளவு?**
**1.36 Kg**




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சங்க இலக்கியத்தில் தனிமனித ஆளுமை உருவாக்கச் சிந்தனைகள்

**முன்னுரை**

சங்ககாலத்துக்குரிய இலக்கிய வெளிப்பாடுகளாகக் கருதப்படும் எட்டுத்தொகை பத்துப்பாட்டு நூல்களில் தனிமனித ஆளுமை உருவாக்கம் மற்றும் அதன் மேம்பாடு குறித்த செய்திகள் பரவலாகப் பயின்றுள்ளதனை அவதானிக்கமுடிகிறது. சங்க இலக்கியங்களுக்கு முற்பட்டதாகக் கருதப்படும் தொல்காப்பியத்தில்கூட இவ்விடயங்கள் ஒருவித உளவியற் பின்புலத்தில் பிரக்ஞை பூர்வமாகப் பதிவு செய்யப்பட்டுள்ளமையினைப் பார்க்க முடிகிறது. மேற்படி இலக்கியங்கள் 'ஆள்', 'ஆளுதல்', 'ஆட்சி', 'ஆண்மை', 'சான்றாண்மை', 'ஆள்வினை' முதலான சொல்லாட்சிகளின் மூலம் ஆளுமைத்திறனை விவாதித்திருப்பதைப் பார்க்கமுடிகிறது. தமிழ்ச்சமூகம், தனிமனிதஆளுமைக்கு கொடுத்திருக்கக்கூடிய முக்கியத்துவத்தின் பிரதிபலிப்புக்களாக இவற்றைக் கருதிக்கொள்ள முடியும்.இக்கட்டுரையானது தேர்ந்தெடுக்கப்பட்ட சங்கச்செய்யுட்கள் சிலவற்றினைத் துணைக்கொண்டு தனிமனித ஆளுமை உருவாக்கம் மற்றும் அதன் மேம்பாடு குறித்த சிந்திப்புக்கள் தமிழ்ச் சிந்தனைமரபில் எவ்வாறு உருவாகி வளர்ந்துவந்துள்ளன என்பதனை விவரணஆய்வுமுறையில் இனங்கண்டு சுட்டமுனைகிறது.

**ஆளுமை: சொல்லும் பொருளும்**

'ஆளுமை' (Personality) என்பது உளவியல் சார்ந்தது. கிரியாவின் தற்காலத் தமிழகராதி 'ஆளுமை' என்பதற்கு Personality, Individuality ஆகிய சொற்களோடு தொடர்புபடுத்தி ஒரு மனிதனின் தனிப்பட்ட 'குணத்தொகுப்பு' என விளக்கம் தருகிறது.[2] பிறிதொருவகையில் சொல்வதானால் ஒரு மனிதனின் குணத்தினை உருவாக்கும் இயல்புகள், ஒருவரைப் புகழுக்குரியவராக்கும் அல்லது மக்கள் செல்வாக்குப் பெற்றவராக்கும் இயல்புகள், மக்களால் பாராட்டப்படும். பெருந்தகையோர் என்ற மூன்று பொருண்மைகளை இது குறிப்பிடுவதாகக் கருதிக் கொள்ளலாம்.[3] இதன்வழி 'ஆளுமை' என்பது, தனிமனிதனொருவனுடைய முழுஇயல்பு அல்லது குணத்தைக் குறித்து நிற்பதோடு சான்றாண்மை நிறைந்த நல்ல ஒரு தோற்றத்தையும் குறித்து நிற்பதாகக் கருதிக்கொள்ளமுடியும்.

தனிமனிதனொருவனுடைய ஆளுமையினைப் பல்வேறு காரணிகள் தீர்மானிப்பவையாக உள்ளன. ஒருவருடைய உடலமைப்பு, உள்ளக்கிளர்ச்சி, பாரம்பரியம், குடும்பச்சூழல், சமூக காலாசார பொருளாதாரநிலை, மதம், பாலுணர்வு முதலானவை அவற்றுள் சிலவாகும். மேற்படி காரணிகளால் பெரிதும் கட்டமைக்கப்படுகின்ற தனிமனித ஆளுமைப் பண்புகளைச் சங்கஇலக்கியங்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மிகவும் நுட்பமாகவும் இலக்கிய நயத்துடனும் எடுத்துப்பேசியுள்ளன. சங்கஇலக்கியங்களில் அங்கொன்றும் இங்கொன்றுமாகப் பயின்றுள்ள இவ்விடயங்களைப் பிற்கால நீதிநூல்கள் ஒருவித வரன்முறைக்குள் ஒழுங்குபடுத்தியுள்ளதனைப் பார்க்க முடிகிறது.

தனிமனித ஆளுமை குறித்த சிந்திப்புக்கள் பலவற்றினைப் புறநானூற்றின் பாடாண்திணை, வாகைத்திணை மற்றும் பொதுவியல்திணை முதலான திணைகளில் அமைந்தபாடல்களில் அவதானிக்கமுடிகிறது. அவற்றுள் சிலவற்றை இவ்விடத்தில் வகைமாதிரியாக நோக்குதல் பொருத்தமானதாகும்.

சேரமான் பெருஞ்சோற்றுதியன் சேரலாதனைப்பாடும் புலவர் முரஞ்சியூர் முடிநாகராயர் வருமாறு பாடுகிறார்.,

"மண்திணிந்த நிலனும்
நிலம் ஏந்திய விசும்பும்
விசும்பு தைவரு வளியும்
வளித் தலை இயதீயும்
தீமுரணிய நீரும் என்றாங்கு
ஐம்பெரும் பூதத்து இயற்கைபோலப்
போற்றார்ப் பொறுத்தலும் சூழ்ச்சியது அகலமும்
வலியும் தெறலும் அளியும் உடையோய்

பாடாண்திணையிலும் செவியறிவுறூஉ, வாழ்த்தியல் மற்றும் ஓம்படைவாழ்த்து ஆகிய துறைகளிலும் அமைந்துள்ள இச்செய்யுள் வரிகள், 'மணிசெறிந்து விளங்குகின்ற இந்நிலவுலகத்தில் நிலமும் அதனோடு இயைந்து விளங்கும் காற்றும் காற்றின் தன்மையால் பெருகும் நெருப்பும் அத்தகைய நெருப்பின்முரண் என வியங்கும் நீரும் என்று சொல்லப்படுகின்ற ஐம்பெரும் பூதங்களாக விளங்கும் இயற்கை போன்று விளங்கும் தலைவனே! நின்னைப் போற்றாதவர்களைப்பற்றிச் சிறிதும் எண்ணாது பொறுமை காட்டுவாய். நன்கு ஆராய்ந்து அறிவதில் விரிந்த அறிவும், பேராற்றலும், பகைவரை அடக்குதலும், குடிமக்களிடம் அன்பும் விளங்கும் இயல்புடையை" என விபரித்துச் செல்கிறது.

குடிகளுக்குத் தலைமைதாங்கும் அரசன் ஒருவனுக்கு இருக்கவேண்டிய அவசியமான ஆளுமைப் பண்புகளான பொறுமை, சூழ்ச்சிகளைக் கட்டவிழ்க்கும் பரந்த அறிவு, வலிமை, அன்பு பாராட்டும் தன்மை முதலானவற்றை முரஞ்சியூர் முடிநாகராயர் ஐம்பெரும் பூதங்களின் இயற்கையுடன் பொருத்திப் பட்டியற்படுத்தும் திறம் வியக்க வைக்கிறது.

பிறிதொரு புறநானூற்றுச் செய்யுளில் புலவர் இரும்பிடர்த்தலையார், கருங்கை ஒள்வாட்பெரும்பெயர் வழுதியைப் பாடும்பொழுது

'நேமி. உய்த்த நேஎ நெஞ்சின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தவிரா ஈகைக் கவுரியர் மருக!.......
நிலம் பெயரினும் நின்சொல் பெயரல்
பொலம் கழற்கால் புலர் சாந்தின்
விலங்கு அகன்ற வியன்மார்ப!......
நின்னசை வேட்கையின் இரவலர் வருவர் அது
முன்னம் முகத்தின் உணர்ந்து அவர்
இன்மை தீர்த்தல் வன்மையானே![6]

எனப் பாடுகிறார். பாடாண்திணையும் செவியறிவுறூஉ மற்றும் வாழ்த்தியல் துறைகளில் அமைந்துள்ள மேற்படி செய்யுள் வரிகளில் பாண்டியன் கருங்கை ஒள்வாட்பெரும்பெயர் வழுதியின் படைக்கலன்களைத் துல்லியமாகச் செலுத்தும் ஆற்றல், எக்காலத்தும் தவிர்த்தல் இல்லாத கொடைப்பண்பு, சொன்ன சொல்லிலிருந்து மாறுபடாததன்மை, ஒருவருடைய முகக்குறிப்பினைக் கொண்டு விடயங்களை ஊகித்து அறியும் ஆற்றல் முதலான 'ஆளுமைப் பண்புகள்' அழகாகப் படம்பிடித்துக் காட்டப்பட்டுள்ளன. மேற்படி செய்யுளில் பாட்டுடைத்தலைவனின் வெளித்தோற்ற ஆளுமைப் பண்புகளைக் குறித்து 'கருங்கைஒள்வாள்', 'விலங்ககன்றவியன்மார்பு' ஆகிய சொற்றொடர்கள் பயின்றுள்ளமை கருதத்தக்கதாகும்.[7] வழுதியின் கருமையான கையில் ஒளிபொருந்தியவாள் இருக்கிறது. இங்கே 'கருமை' என்பது அவனுடைய வீரத்துடன் தொடர்புபடுத்தப்படும் ஒன்றாக இருக்கிறது. 'விலங்ககன்ற வியன்மார்பு' என்பதனூடே அவனுடைய பரந்துவிரிந்த மார்பின் வெளித்தோற்ற ஆளுமை பிரதிபலிக்கப்பட்டுள்ளது.

சேரமான் பாமுளூர் எறிந்த நெய்தலங்கானல் இளஞ்சேட்சென்னியைப் பாடும் புலவர் ஊன் பொதிபசுங்குடையார் வருமாறு பாடுகிறார்.

'வழிபடுவோரை வல்லறிதியே!
பிறர் பழிகூறுவோர் மொழி தேறலையே
நீ மெய் கண்ட தீமை காணின்
ஒப்பநாடி அத்தக ஒறுத்தி!
வந்து அடி பொருந்தி முந்தை நிற்பின்
தண்டமும் தணிதி பண்டையிற் பெரிதே!
'செய்து இரங்காவினை' சேண் விளங்கும்புகழ்...[8]

என வரும் பாடலடிகளில் சேரமான் பாமுளூர் எறிந்த நெய்தலங்கானல் இளஞ்சேட்சென்னியின் பல்வேறு வகையான ஆளுமைப் பண்புகளும் பதிவுசெய்யப்பட்டுள்ளதனைப் பார்க்கமுடிகிறது. தன்னைப் பலவாறு போற்றிப் புகழ்ந்து பாடுபவர்களுடைய உள்நோக்கத்தினைச் சடுதியாகப் புரிந்துகொள்ளும் ஆற்றல், பிறருடைய கோள் சொற்களைப் புறந்தள்ளும் பண்பு, குற்றங்களைக் கண்டுபிடிக்கும் ஆற்றல், குற்றங்களுக்கான தண்டனைகளை நீதிநூல்களின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வழியேவழங்கும் பண்பு, பிழையை உணர்பவர்கள் பொருட்டுத் தண்டனைகளைத் தணிக்கும் பண்பு இவை எல்லாவற்றிற்கும் மேலாக ஒரு காரியத்தைச் செய்யமுன்னர் அதனைப் பல்வேறு கோணங்களிலும் ஆராய்ந்து செய்தல், ஒரு காரியத்தைச் செய்த பின்னர் அது குறித்து வருந்ததாத பண்பு முதலான ஆளுமைப் பண்புகளை இச்செய்யுள் வரிசைப்படுத்தியுள்ளது. பிற்கால அறநூலான திருக்குறள் இதனையே "எண்ணித்துணிக கருமம்" எனக் குறிப்பிட்டுள்ளதெனலாம்.

தனிமனித ஆளுமைகளின் உயரிய பண்புகளையெல்லாம் தொகுத்துத்தருவதாகக் கடலுள் மாய்ந்த இளம்பெயர்வழுதியின் பின்வரும் பாடல் ஒன்று அமைந்துள்ளது. பாடல் வருமாறு,

'உண்டால் அம்ம இவ்வுலகம் இந்திரர்
அமிழ்தம் இயைவது ஆயினும் இனிது எனத்
தமியர் உண்டலும் இலரே! முனிவிலர்
துஞ்சலும் இலர் பிறர் அஞ்சுவது அஞ்சிப்
புகழ் எனின் உயிரும் கொடுக்குவர் பழி எனின்
உலகுடன் பெறினும் கொள்ளலர் அயர்விலர்
அன்னமாட்சி அனையர் ஆகித்
தமக்கென முயலா நோன்தாள்
பிறர்க்கென முயலுநர் உண்மையானே!

இந்திரன் முதலான தேவர்களுக்குரிய அமிழ்தம் கிடைப்பதானாலும் இனிமையுடையது என்று எண்ணித் தனியாக ஒருவர் உண்ணும் தன்மை இல்லை. சினம் அற்றவராக விளங்குவர், பிறர் அச்சம் தரும் துன்பத்தைக்கண்டு தாமும் அஞ்சியவராய்ச் சோம்பல் கொள்வதும் இல்லை. புகழ் உண்டாகுமானால் உயிரையும் தருகுவர். பழி உண்டாகுமானால் தமக்கு இவ்வுலகமே பரிசாகக் கிடைத்தாலும் கொள்ளமாட்டார். அயர்வு அற்றவராய் விளங்குவர். அத்தகைய அருங்குணங்கள் கொண்டு தமக்கென எதுவும் செய்யாது பிறர்க்கென உழைக்கும் உண்மையான இயல்புடைய மாந்தர்கள் இருந்து வாழ்வதாலேயே இவ்வுலகம் சிறப்புடன் வாழ்ந்துகொண்டிருக்கிறது என இப்பாடலின் பொருண்மை செல்கிறது.

பொதுவியல்திணையில் பொருண்மொழிக்காஞ்சித்துறையில் அமைந்துள்ள இப்பாடலில் தனிமனித ஆளுமையின் முக்கியமான பண்புகள் பலவும் விளக்கம்பெற்றுள்ள தன்மை சங்ககால மக்களுடைய நேரிய வாழ்க்கைத்திறத்தினை எடுத்துக்காட்டுவதாக உள்ளது. 'தமக்கென வாழாது பிறர்பொருட்டு வாழுகின்ற' இவ்வாறான மனிதர்கள் வாழ்வதாலேயே இவ்வுலகம் இன்றுவரை நிலைபெற்று இயங்கிவருவதாகப் புலவர் குறிப்பிடும்விதம் நயக்கத்தக்கதாக உள்ளது.

கலித்தொகைச் செய்யுளொன்று தனிமனித ஆளுமைப் பண்புகள் பலவற்றுக்கும் ஒருசேர விளக்கமளிப்பதாக உள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'ஆற்றுதல்' என்பது ஒன்று அலந்தவர்க்கு உதவுதல்
'போற்றுதல்' என்பது புணர்ந்தாரைப் பிரியாமை
'பண்பு' எனப்படுவது பாடறிந்தொழுகுதல்
'அன்பு' எனப்படுவது தன்கிளை செறாஅமை
'அறிவு' எனப்படுவது பேதையர் சொல் நோன்றல்
'செறிவு' எனப்படுவது கூறியது மறா அமை
'நிறை' எனப்படுவது மறைபிறர் அறியாமை
'முறை' எனப்படுவது கண்ணோடாது உயிர்வௌவல்
'பொறை' எனப்படுவது போற்றாரைப் பொறுத்தல்..."

என அமையும் மேற்படி செய்யுளில், சோழன் நல்லுருத்திரன் என்ற புலவர், ஆற்றுதல், போற்றுதல், பண்பு, அன்பு, அறிவு, செறிவு, நிறை, முறை, பொறை ஆகிய தனிமனித ஆளுமை பண்புகளுக்குச் செறிவானதும் நிறைவானதுமான விளக்கத்தினை அளித்துள்ளமை கருதத்தக்கதாகும். ஆற்றுதல் என்பது பசிப்பிணிபோக்குதல், வாழ்க்கையில் போற்றுவதற்குரியது துணையைப் பிரியாது இருத்தல், பண்பு எனப்படுவது பண்புடையோர் நடந்துசென்ற நெறியில் நடந்துகொள்வது, அன்பெனப்படுவது சுற்றத்தாரை அரவணைத்துக்கொள்ளுதல், அவர்களை வெறுக்காதிருத்தல்,அறிவெனப்படுவது தம்மைவிடத் தாழ்ந்தோர் கூறும் அறிவற்ற சொற்களைப் பொறுத்துக்கொள்தல், செறிவு எனப்படுவது கூறியதை மறுக்காதிருத்தல், நிறைவெனப்படுவது மறைபொருளைப் பிறர் அறியாது பாதுகாத்துக்கொள்ளல், முறை எனப்படுவது இரக்கம் காட்டாது கொல்லுதல், பொறை எனப்படுவது தம்மைப் பழித்தவர்களையும் போற்றாதவர்களையும் பொறுத்துக்கொள்ளுதல் என மேற்படி பண்புகளின் விளக்கங்கள் அமைகின்றன. தனிமனித வாழ்வில் ஒருவருக்கு வேண்டப்படும் ஆளுமைப்பண்புகள் எல்லாவற்றையும் சிந்தித்து ஒருவித விதிமுறைகளாகச் சோழன் நல்லுருத்திரன் தந்திருப்பது வியக்கவைப்பதாக உள்ளது.

**முடிவுரை:**

தமிழ்ச்சமூகம், மேலைத்தேயச்சமூகம் போல ஆளுமை வளர்ச்சியை ஒரு வகைமையாக வளர்த்தெடுக்கவில்லை என்றொரு குறைபாடு காணப்படினும் அதற்குப் போதியளவு முக்கியத்துவத்தினை வழங்கியே வந்துள்ளது எனலாம். இப்பின்புலத்தில்தனிமனித ஆளுமை உருவாக்கம் மற்றும் அதன் மேம்பாட்டில் செல்வாக்குச் செலுத்தும் ஆளுமைப்பண்புகள் பலகுறித்தும் சங்கஇலக்கியங்கள் விரிவாகப் பேசியுள்ளதனைப் பார்க்கமுடிகிறது. 'ஆளுமைப்பண்பு' (Personality) என்பது மனிதனொருவனுடைய புறப்பண்பை மட்டுமே ஆரம்ப காலத்தில் குறித்திருக்க வேண்டும். காலப்போக்கில் அது மனிதனொருவனுடைய அகப்பண்புகளையும் இணைத்துப் பேசப்படுகின்ற ஒருவிடயப் பொருளாக மாறியதனைச் சங்கஇலக்கியங்கள் தெளிவாகவே காட்டுகின்றன. தனிமனிதனுடைய ஆளுமைப் பண்புகளில் பலவும் பிற்காலத்தில் சமூக மதிப்புக்களாக (Social Values) உருமாற்றம் கண்டன எனக் கருதலாம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**அடிக்குறிப்புக்கள்:**

1. தொல்காப்பியம், பொருளதிகாரம், மெய்ப்பாட்டியல், ப. 90
2. க்ரியாவின் தற்காலத் தமிழகராதி, ப. 121
3. நிர்மலா மோகன்., சங்கச்சான்றோர் ஆளுமைத்திறன், ப. 47
4. புறநானூறு., செய்யுள், 2
5. புறநானூறு., வ. த. இராமசுப்பிரமணியம் உரை, ப. 59
6. புறநானூறு., செய்யுள், 3
7. புறநானூறு., செய்யுள், 10
8. மேலது, செய்யுள், 182
9. கலித்தொகை, செய்யுள், 133

**துணைநின்ற நூல்கள்:**


1. க்ரியாவின் தற்காலத் தமிழகராதி, க்ரியா, சென்னை, 1999.
2. கலித்தொகை, தெளிவுரை (குறிப்புரை விளக்கங்களுடன்), மா. இராசமாணிக்கனார் (பதிப்பாசிரியர்), வள்ளுவர் பண்ணை, சென்னை, 1958.
3. காரைமைந்தன்., ஆளுமை வளர்ச்சி, விழுதுகள் வெளியீடு, காரைக்கால், 2009.
4. புறநானூறு (மூலமும் தெளிவுரையும்)., வ. த. இராமசுப்பிரமணியம் (உரையாசிரியர்), திருமகள் நிலையம், சென்னை, 2000.
5. சுந்தரசீனிவாசன். எஸ்., ஆளுமைமேம்பாடு, தாமரை பப்ளிகேக்ஷன்ஸ் (பி) லிட், சென்னை, 2011.
6. தொல்காப்பியம், பொருளதிகாரம், இளம்பூரணருரை, சைவசித்தந்த நூற்பதிப்புக்கழகம், சென்னை, 1961.
7. ராஜா உசேன். என்., ராதா. க., ஆளுமைத்திறனும் மனிதமேம்பாடும், உதயா பதிப்பகம், நாகர்கோவில், 2006.
8. நிர்மலா மோகன்., சங்கச்சான்றோர் ஆளுமைத்திறன், செல்லப்பா பதிப்பகம், மதுரை, 2009.
9. Hall Calvin. S., Theories of Personality, John Wisly & Sons Inc., New York, 1970.



*பேராசிரியர் கிருஷ்ணபிள்ளை விசாகரூபன்*
*பேராசிரியர் மற்றும் தலைவர்,*
*தமிழ்த்துறை,கலைப்பீடம்,*
*யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை.*





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பாடசாலைகளில் சாதனைமிகு மாணவர் உருவாக்கம்

ஒரு பாடசாலை நீண்ட வரலாற்றையும் செழுமையான கல்விப் பாரம்பரியத்தையும் சிறந்த சாதனைகளையும் வெற்றிகளையும் தனது வரலாற்றுத் தடத்தில் தடமிட்டுச் செல்ல வேண்டுமாயின் தனக்கான எதிர்காலச் சிந்தனைகளையும் அதற்கான ஆழமான முன்னோக்கான திட்டமிடல்களையும் பாடசாலை கொண்டிருத்தல் அவசியம்.

பாடசாலை ஒரு சமூக நிறுவனம் எனும்போது அங்கு அதன் இயங்குநிலைக்கு பல்வேறு பின்புலக்காரணிகள் அடித்தளமாக அமையும் அதனையே "நிறுவனப்பண்பாடு" என்பர். மனிதர்கள் தமது தேவைகளில் பெரும்பாலானவற்றை நிறுவனங்கள் மூலமாகவே நிறைவேற்றிக் கொள்கின்றனர். பாடசாலைச் சமூகத்தின் எதிர்கால மனிதவள விருத்திக்கான நிறுவனம். நாட்டின் எதிர்கால மனிதவளம் எவ்வாறு உருவாக்கப்படவேண்டுமென்பதைக் கருத்திற்கொண்டு அதனை உருவாக்கும் உயரிய பணியைப் பாடசாலை மேற்கொள்ள வேண்டியுள்ளது. ஆகவே நிறுவனப்பண்பாடு என்பது இங்கு முக்கியமானது. அதாவது ஒரு நிறுவனத்துக்குள்ளே பொதுவாகக் கைக்கொள்ளப்படும் ஒப்பீட்டளவில் ஓரளவுக்கு உறுதியாகவுள்ள நம்பிக்கைகள், மனப்பாங்குகள், விழுமியங்கள், பழக்கங்கள் என்பன நிறுவனப்பண்பாடு ஆகும்.எனவே இங்கு ஒரு நிறுவனத்தின்,

1. தூரநோக்கு(Vision)
2. பணிக்கூற்று(Mission)
3. கற்றுக்கொள்ளப்படும் முறை
4. நிறுவனத்தின் காரண காரியம்
5. உணர்வுபூர்வமான சிந்தனை
6. வரலாற்றுப் பாரம்பரியம்
7. பொதுவாக ஏற்றுக்கொள்ளப்படும் தன்மை
8. பன்முகத்தன்மை
9. வெற்றியும் சாதனையும்
10. வினைத்திறன் மற்றும் விளைதிறன்
11. தரஉறுதிப்பாடு

ஆகியன முக்கியமானதும் உறுதிப்படுத்தப்பட வேண்டியதுமாகும். பாடசாலையாகிய நிறுவனம் பின்வரும் பிரதான அம்சங்களைக் கொண்டிருத்தல் வேண்டும்.

1. சவால்களுக்கு முகம் கொடுத்தல்
2. சாதனை புரிதல்
3. மாணவர்களை சிறந்த மனித வளமாக உருவாக்குதல்
4. பங்காளிகளாக இணைதல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆகிய அம்சங்களை அடைவதன் மூலம் நல்லாளுகையை(Good Governance)ஏற்படுத்திக் கொள்ள முடியும்.இதனை ஏற்படுத்துவதற்கு சகலவற்றிலும்

1. சமவாய்ப்பு (Equity)
2. பண்புத்தரம் (Quality)
3. வினைத்திறன் மிகு வளப்பகிர்வு(Resource Efficiency)

என்பன மேற்கொள்ளப்படுதல் வேண்டும்.பாடசாலையின் தூரநோக்கினை அடைவதற்கு மேற்குறித்த மூன்று அம்சங்களிலும் அதிமிகு கவன ஈர்ப்பினை மேற்கொள்ளுதல் அவசியமாகும். அதற்காக

1. பாடசாலைக்கான மூலோபாயம் மற்றும் திட்டங்கள் (ஐந்தாண்டுத் திட்டமிடல், நடப்பாண்டுத் திட்டமிடல், செயற்றிட்டங்கள்)
2. பாட ரீதியான தரவட்டங்கள்
3. வகுப்பு ரீதியான தரவட்டங்கள்
4. பாடசாலை முழுமைக்குமான தரவட்டங்கள்
5. பாடசாலைக்கான முகாமைத்துவப் பாணி
6. சிறப்பார்ந்த கற்றல் கற்பித்தல்
7. ஆற்றுகை மற்றும் அடைவில் கவனக்குவிப்பு

ஆகியவற்றினூடே தூரநோக்குக்கான உயர் முன்மாதிரியான பண்புத்தரக்குறியை அடைய முடியும். குறிப்பாக,

1. தரம் 5 புலமைப்பரிசில் தேர்வு
2. க.பொ.த (சாத)
3. க.பொ.த (உத)

ஆகியவற்றில் தேசியமட்டத் தேர்வுகளில் முன்னோக்கிய பாய்ச்சல் சார்ந்த நகர்வுகளை மேற்கொள்ள இடையீட்டு மூலோபாயங்கள் மேற்கொள்ளப்பட வேண்டும். குறிப்பாக

1. தரம் 5 புலமைப்பரிசில் தேர்வில் எழுபது புள்ளிகளுக்கு மேல் சகல மாணவர்களும்,வெட்டுப்புள்ளிக்கு மேல் சாதனை புரியும் "சாதனைமிகு மாணவர்களை" உருவாக்குதலும்.

2. க.பொ.த சாதாரண சித்திவீதத்தை தேசியமட்டத்திற்கு மேல்நகர்த்தலும்தேசியநிலையில் முதன்மை நிலை பெறுதலும்.

3. க.பொ.த உயர்தர சித்திவீதத்தை 100மூஆக எய்தலும் அதிசிறப்புச்சித்தி பெறும் "சாதனைமிகு மாணவர்களின்" எண்ணிக்கையை அதிகரித்தலும் (Merit Pass)

இவற்றை எய்துவதற்காகப் பாடசாலை முதல்வரும் ஆசிரியர் குழாத்தினரும் பங்காளிகளாக தங்களுக்குரிய கடமையையும் சேவையையும் அர்ப்பணிப்புடனும் விசுவாசத்துடனும் நம்பிக்கையுடனும் நேர்மையுடனும் வழங்குவது முதன்மையானதாகும். தூரநோக்கும் அதன் செயற்பாடுகளும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தூரநோக்குக்கேற்ற வகையில் மூலோபாயங்களை மேற்கொண்டு பாடசாலையின் பணிக்கூற்றை அடையப்படக்கூடிய சாத்தியப்பாட்டுக்கு உட்படுத்துதல் வேண்டும். தூரநோக்கும் பணிக்கூற்றும் இசைவுறுதல் அவசியமாகும். பாடசாலையின் பணிக்கூற்றில்

1. தேசத்தின் கல்விக்கான குறிக்கோள்களை அடைதல்.
2. தேர்ச்சிமிகு மாணவர்களை உருவாக்குதல்.
3. சமூகத்தின் தேவைகளை இனங்காணல்.
4. நாட்டின் எதிர்காலத்தை வளப்படுத்தல்.
5. தனியாள் தேவைகளை கவத்திற் கொள்ளல்.

ஆகியவற்றைக் கொண்டிருக்கலாம். பணிக்கூற்றுயதார்த்த பூர்வமாக அடையமுடியுமென்ற நம்பிக்கை சகலரிடத்திலும் ஏற்படுதல் வேண்டும். அதற்காகளூ பாடசாலையில் காணப்படும்

1. பலங்கள்
2. பலவீனங்கள்
3. அச்சுறுத்தல்கள்
4. வாய்ப்புக்கள்

ஆகியவற்றை (SWOT) ஆய்வுநிலைப்படுத்தி சூழ்நிலைஆய்வை அடிப்படையாகக் கொண்ட அபிவிருத்தி நோக்கி நகர்த்தலாகும்.இவ்வாறான சூழலமைவினூடாகவே பாடசாலையில் தர உறுதிப்பாட்டை அடையமுடியும். அதாவது "பாடசாலைக்கல்வியின் பண்புத்தரச் சுட்டி" யினை அடையமுடியும். (School Education Quality Index-SEQI). எமது பாடசாலை எந்தளவிற்குத் தரமானது என்பதை எய்துதலென்பது பின்வரும் பின்புலக்காரணிகளின் செல்வாக்கில் தங்கியுள்ளதெனலாம்.

1. சமவாய்ப்பும் உள்வாங்கலும் (Equity and Access)
2. கல்வியின் பொருத்தப்பாடு (Relevance of Education)
3. கல்வியின் பண்புத்தரம் (Quality of Education)
4. வளப்பற்றாக்குறை (Lack of Resources)
5. கல்வியின் வகை கூறலும் பயனுறுதியும் (Accountability and Efficiency)
6. உள்ளக மதிப்பீடு (Internal Evaluation)
7. வெளியக மதிப்பீடு (External Evaluation)

மேற்குறித்த ஏழுவிடயங்களையும் கருத்திற்கொண்டு செயற்படும் போது "சாதனைமிகு மாணவர்களை" உருவாக்க முடியும். சாதனைமிகு மாணவர் உருவாக்கம் என்பது தர உறுதிப்பாட்டுக்கு இட்டுச்செல்லும் தரஉறுதிப்பாடென்பது பின்வரும் எட்டுமதிப்பீட்டுத் துறைகளிலும் பத்து பண்புத்தரங்களிலும்,அறுபது நியதிகளிலும் 210 சுட்டிகளிலும் தங்கியுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| இல | மதிப்பீட்டுத் துறைகள் | பண்புத்தரம் | தேவைப்பாடுகள் | நியதிகள் | சுட்டிகள் | வினாக்கள் |
|---|---|---|---|---|---|---|
| 01 | மாணவர் அடைவு | 02 | 03 | 05 | 35 | 05 |
| 02 | கற்றல் கற்பித்தல் மதிப்பீடு | 02 | 05 | 04 | 30 | 07 |
| 03 | முறையான கலைத்திட்ட முகாமைத்துவம் | 01 | 03 | 08 | 25 | 05 |
| 04 | இணை பாடவிதான செயற்பாடுகள் | 01 | 03 | 05 | 14 | 04 |
| 05 | மாணவர் நலன்புரி | 01 | 04 | 09 | 22 | 04 |
| 06 | தலைமைத்துவமும் முகாமைத்துவமும் | 01 | 07 | 16 | 45 | 07 |
| 07 | பௌதிகவள முகாமைத்துவம் | 01 | 02 | 08 | 26 | 04 |
| 08 | பாடசாலையும் சமூகமும் | 01 | 03 | 05 | 13 | 04 |
| | மொத்தம் | 10 | 30 | 60 | 210 | 40 |

இந்த எட்டுமதிப்பீட்டுத்துறைகளையும் உறுதிப்படுத்துவதற்கு மூலோபாயத்திட்டமிடல் பாடசாலையில் மேற்கொள்ளப்படுதல் மிக அவசியமாகும். இதற்காக தூரநோக்கும் பணிக்கூற்றும் சிறப்பாக அமைதல் வேண்டும். அத்துடன் பாடசாலை மேம்பாட்டு வேலைத்திட்டம் (Programme for School Improvement- PSI ) ஊடாக சமூக இணைப்பும் சமூகப் பங்குகொள்ளலும் அதிகரிக்கப்படுதல் வேண்டும். எனவே பாடசாலையின் தூரநோக்கு மற்றும் பணிக்கூற்று (Vision and Mission) அடையப்படக்கூடிய ஒன்றாக இருத்தல் வேண்டும்.

எனினும் மனிதவள ஒத்துழைப்பு, வழிகாட்டல், உள்ளக மதிப்பீட்டுச் செயன்முறை, வாண்மைத் தகைமைகள் மற்றும் வாண்மைத்துவம்,உடன்பாடான ஆழ்மிகு சிந்தனை, ஆய்வுசார் அபிவிருத்தி, தேர்ச்சிசார் கற்றல் கற்பித்தல்செயன்முறை என்பன தொடர்பில் பாடசாலை முகாமைத்துவம் மற்றும் நிர்வாகம் தனது கவனஈர்ப்பைக் குவியப்படுத்துதல் அவசியமாகும்.

அப்போதுதான் கல்வி அபிவிருத்திப் பணியின் பயன்பாடு ஒருசில நாட்களுக்குள், ஒருசில மாதங்களுக்குள், ஒருசில வருடங்களுக்குள் எதிர் பார்க்க முடியாத ஒன்று என்று கூறுவாரின் சிந்தனைகளைத் தகர்க்க முடியும். பிள்ளை மீதான அக்கறைபோடும் எதிர்கால சாதனை மீதான விருப்போடும் பாடசாலையின் புகழும் பெருமையும் பண்பாடும் கொண்டு சாதனையும் வெற்றியும் பெறும் முடியும்.

**திரு.சுப்பிரமணியம் ஜெயச்சந்திரன்,**

(TTC, B.A.{Hons}, PGDE, M.Ed, SLTES III)

**ஆசிரியர் நிலைய முகாமையாளர்,**

**புளியங்குளம்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# உடற்கல்வி ஆசிரியர்களின் வகிபங்கு பற்றிய பார்வை

ஒரு சமூகத்தின் வாழ்வியலை மேம்படுத்தவது பாடசாலையாகும். பாடசாலையின் சகல செயற்பாட்டிற்கும் வகைகூறுபவர் அதிபராவர். அரசாங்கத்தின் எண்ண ஓட்டத்திற்கும், அதிபரின் செயற்பாட்டிற்கும் பக்க பலமாக நிற்பவர் ஆசிரியர் ஆவர். பாடசாலை ஒன்றில் பல்வேறுவகையான ஆசிரியர்கள் வேறுபட்ட ஆசிரியத்துவ பண்புகளோடு காணப்படுகின்றனர். ஒரு பாடசாலையின் முதுகெலும்பாகவும், சகல மாணவர்களுடனும் தொடர்பாடலை மேற்கொள்ளக்கூடியவராகவும் உடற்கல்வி ஆசிரியர் திகழ்வார். அந்த வயில் உடற்கல்வி ஆசிரியர் என்பவர் யார்? அவரின் வகிபங்கு என்ன? உடற்கல்வி ஆசிரியர் கொண்டிருக்க வேண்டிய இயல்புகள் எவை? என்பவற்றைத் தெரிந்து கொள்வோம். ஏதேனும் நிறவனத்தில் கற்பித்தல் கடமையில் ஈடுபடும் ஒரு நபரே ஆசிரியர் என பொதுவாக அறிவோம். ஒரு பாடசாலையில் ஆசிரியர் என்பவர் ஒரு பதவிக்குரியவர். அப் பதவியுடன் தொடர்புடையவர்களாக அதிபர் மாணவர்கள் சமூகத்தவர்கள் காணப்படுகின்றனர். இவர்கள் இவ் ஆசிரியரிடம் ஏதோவொன்றை எதிர்பார்பவர்களாக தமது தொடர்புகளைபேணிக்கொள்கின்றார்கள். இதனால் ஆசிரியர் என்பவர் தன்னைதான் தயார்படுத்திக் கொள்வதன் மூலம் ஆசிரியத்துவத்தை இற்றைப்படுத்த முடியும். சகல ஆசிரியர்களினதும் இலக்குகள் ஒன்றாக இருந்தாலும் இலக்குகளை அமுல்படுத்தவதன் அடிப்படையில் வேறுபட்டவர்களாகக் காணப்படுவார்.

**உடற்கல்வி ஆசிரியர்**

உடற்கல்வி ஆசிரியர் தமது பொறுப்புக்கள்,கடமைகள் என்றவற்றின் மூலம் வேறுபடுகினறார். கல்வித் தத்துவவியலாளர் 'ஜோண்டூவி" யின் கல்விக் சிந்தனைக்கமைய உடற்கல்வி ஆசிரியர் ஒருவர் உடற்செயற்பாடுகளின் மூலம் கல்வியை வழங்குபவராவார். இச் செயற்பாடுகளினால் அனுபவங்களைப் பெற்று அதனூடாக கல்வியை வழங்குவதே அவர்களின் பொறுப்பாகும்.

**உடற்கல்வி ஆசிரியரின் வகிபங்கு**

உடற்கல்வி ஆசிரியரின் வகிபங்கு என்பது ஒரு பாடசாலையில் ஒரு நபரின் நிலை ,பதவி அல்லது அதிகாரம் என்பதன் அடிப்படையில் ஒப்படைக்கப்படும் பொறுப்புக்களாகும். அப் பொறுப்புக்களை நிறைவேற்றுவதற்காக அதற்குரிய அதிகாரம், பொறுப்பு, கடமை, நடைமுறை என்பன அவசியமாகும். சமூகத்தின் அல்லது நிறுவன மனித எதிர்பார்ப்புக்களுக்கமைய பொறுப்புக்கள் ஒழுங்குபடுத்தப்படும். இப் பொறுப்புக்களே உடற்கல்வி ஆசிரியரின் வகிபங்கு எனலாம். ஒரு உடற்கல்வி ஆசிரியர் தனது கடமைகளை நிறைவேற்ற வேண்டுமானால் மாணவனைப் பற்றி நன்கு அறிந்திருக்க வேண்டும். அதாவது தனியாள் வேறுபாட்டை தெரிந்திருத்தல்அவசியமாகும். ஏனெனில் அப்போதுதான் உடற்கல்வி ஆசிரியரினால் தனது பொறுப்புக்களை இலகுவாக நிறைவேற்றிக்கொள்ள



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முடியும். உடற்கல்வி ஆசிரியர்கள் ஒவ்வொருவரும் தங்கள் வகிபங்கை நன்கு அறிந்திருக்க வேண்டியது அவசியமானது

01. கல்வி அறிவின் விருத்திற்காக அறிந்திருத்தல்

02. தொழில்சார் உரிமைகளை வென்றெடுப்பதற்காக அறிந்திருத்தல்

03. பாடசாலையில் அதிக வரஆவற்பை ஏற்படுத்திக் கொள்வதற்காக தெரிந்திருத்தல்

04. உடற்கல்வி தொடர்பான நோக்கந்களை அடைவதனை தெரிந்திருத்தல்

05. தேசிய வெற்றியை பெறுவதற்காகவும் அறிந்திருத்தல்

உடற்கல்வி ஆசிரியரின் வகிபங்கு பாடசாலைக்கு மாத்திரம் விசேடமானதல்ல. அது சமூகத்திற்கும் உரியது. மாறுபடும் சமூகத்திற்கு ஏற்ப ஆசிரியரும் மாறவேண்டும். இதற்காக உடற்கல்வி ஆசிரியர்கள் வினைத்திறன், விளைதிறன் ஆகிய இரு திறன்களை வளர்க்க வேண்டும.இவ்விரு திறன்களையும் மேம்படுத்தி கொள்வதற்கு பாடம் சார்ந்த திறன்கள், செயன்முறைதிறன்கள் போன்ற திறன்கள் இருப்பது அவசியமாகும். பாடம் சார்ந்திறன்கள் எனும் போது பொதுக்கல்வியில் தன்னை ஈடுபடுத்துதல், அறிவை புதுப்பித்தல், சமூகத்திற்கேற்ப பாடங்களைத்திட்டமிடல், கற்றல் அனுபவங்களை பயனள்ளதாக பெற்றுக்கொடுத்தல், கற்பித்தலில் பல்வேறு முறைகளை பயன்படுத்தும் திறன், பொருத்தமான மதிப்பீட்டு முறை மற்றும் ஆராய்ச்சிகளில் ஈடுபடல் என்பவற்றைக் குறிப்பிடலாம். செயன்முறைத்திறன் எனும் போது விளையாட்டுக்களின் விதிகள், நுட்பங்கள் பற்றிய அறிவு, விளையாட்டுகளுக்கு பொருத்தமான உடலப்பியாசங்கள், தசைநார் பயிற்சிகள் ,பயிற்றுவிக்கும் முறைகள், வெளிக்களச் செயற்பாடுகள், தற்காப்பு செயற்பாடுகள், ஓய்வுநேரச்செயற்பாடுகள் மற்றும் அழகியல் உணர்வுடன் கூடிய சந்தச்செயற்பாடுகள் என்பன உடற்கல்வி ஆசிரியரிடம் காணப்படவேண்டிய செயன்முறைதிறன்களாகும்.

**உடற்கல்வி ஆசிரியரின் வகிபங்கின் இயல்பகள்**

உடற்கல்வி ஆசிரியர்களுக்கு பலவகையான வகிபங்குகள் காணப்படினும் நான்கு வகிபங்குகள் அவசியமானது

**1. விளையாட்டு மைதானத்தில் ஆசிரியரின் வகிபங்கு**

உடற்கல்வி ஆசிரியரானவர் விளையாட்டு மைதான்திலே முகாமையாளராக கடமையாற்றுபவராக இருக்க வேண்டும். முகாமை என்பது ஒரு செயற்பாடு ஒன்றினை திட்டமிடல், ஒழுங்கமைத்தல், தீர்மானித்தல், வழிநடத்துதல் போன்றவற்றைக் குறிக்கின்றது.இதனை நிர்வகிப்பவரே முகாமையாளர் ஆவார். ஒவ்வொரு விளையாட்ட வீரர்களை மதிப்பிடுவதன் மூலம் குறைபாடுகனை நிவர்த்தி செய்யக் கூடிவராக இருத்தல் வேண்டும். இதற்கு முகாமையாளர் சந்தர்ப்பத்திற்கேற்ப உபாயத்திறன்களை கையாளும் திறன், தற்போதைய காலத்திற்கேற்ப தொழில்நுட்ப உராய்வை நீக்குபவராகவும் காணப்படுதல் அவசியமாகும். இவைதவிர விளையாட்டு விதிகளில் ஏற்படும் மாற்றங்கள், உலகில் நடைபெறும் உடற்கல்விச் செயற்பாடுகளின் தகவல்களை உடனுக்குடன் வழங்குபவராகவும் ,விமர்சனங்களை தயக்கமின்றி வெளிப்படுத்துபவராகவும் இருத்தல் சிறப்பானது .இது எல்லாவற்றுக்கும் மேலாக விளையாட்டு மைதானத்தில் சிறந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பயிற்றுவிப்பாளராக இருப்பதுடன் மாணவர்கள் விடும் தவறுகளை சுட்டிக் காட்டக் கூடியவராகவும் இருத்தல் வேண்டும்.

**2. நிர்வாகம் சார்ந்த ஆசிரியரின் வகிபங்கு**

பாடசாலையின் நிர்வாகத்திற்கும் பாடசாலையின் மேம்பாட்டிற்கும் தமது பங்கினை வழங்குவதில் உடற்கல்வி ஆசிரியர் முன்நிற்றல் அவசியமானதாகும். அதாவது பாடசாலையின் ஒழுக்காற்றுக்குழு, மன்றச்செயற்பாடுகளில் பரஸ்பர ஒத்துழைப்பை வழங்குபவராகவும், மாணவர்களின் கற்றல் சார்பான பிரச்சனைகளை பெற்றோர்களுடன் கலந்துரையாடுதல் தேவைப்படின் பெற்றோரிற்கும், மாணவர்களுக்கும் ஆலோசனை வழங்குபவராகவும் உடற்கல்வி ஆசிரியர் செயற்படவேண்டும். அது மட்டுமின்றி பாடசாலையின் நோக்கத்தினை அடைவதற்கும் உடற்கல்விப் பாடத்தின் ஊடாக பங்களிப்பைச் செய்து பாடசாலை நிர்வாகத்திற்கு உதவுதல் அவசியமானதாகும்.

**3. சமூகம் சார்ந்த ஆசிரியரின் வகிபங்கு**

பாடசாலையின் நோக்கங்களும் குறிக்கோள்களும் சமூகத்தின் வளர்ச்சிக்கு உதவுவனவாக இருத்தல் வேண்டும். அதாவது சமூகத்தின்பண்புகளையும் தேவைகளையும் பிரதிபலிப்பதாய் பாடசாலைகள் விளங்க வேண்டும். சமூகத்திற்கும் பாடசாலைக்கும் நெருங்கிய தொடர்புகளை ஏற்படுத்துவதில் முக்கிய பங்கு வகிப்பவர் ஆசிரியரே. அதிலும் உடற்கல்வி ஆசிரியர் ஒருவருக்கு சமூகத் தொடர்பாடல் என்பது அவர்களின் செயற்பாடுகளை இலகுவாக நகர்த்தி செல்வதற்கு துணைபுரிகின்றது. அந்த வகையில் சமூகத்தின் தலைவராகவும் ,சமூகத்தின் நம்பிக்கைக்கு பாத்திரமாகவும் ஆசிரியர் விளங்க வேண்டும். இதற்கு ஆசிரியரானவர் பெற்றோருடன் நெருங்கிய தொடர்பாடலை பேணுவதுடன் சமூக,கலாசார, மதஸ்தாபனங்களின் நிகழ்ச்சிகளில் பங்குபற்றும் மனப்பான்மையைக் கொண்டிருத்தல் வேண்டும். அதுமட்டுமன்றி உடற்கல்விப் பாடத்தினூடா சமூக மனப்பாங்குகளை விருத்தி செய்வதன் மூலம் விளையாட்டுச் செயற்பாடுகளில் ஈடுபடுவதனால் கற்றலில் திறமையாக செயற்பட முடியாது என்ற சமூகத்திலுள்ள மூட நம்பிக்கைகளை நீக்குபவராகவும் செயற்பாடுவர்.

**4. தொழில்ரீதியான ஆசிரியரின் வகிபங்கு**

தொழில் ரீதியான வகிபங்கு எனும் போது உடற்கல்வி ஆசிரியரிடம் காணப்படும் தொழில் ரீதியான தனிப்பட்ட வகிபங்காகும். ஆசிரியரை பொறுத்தவரையில் துறைசார்ந்த திறன்களையும் பண்புகளையும் ஒவ்வொரு ஆசிரியரும் பெற்றுக்கொள்ள வேண்டும். அந்தவகையில் உடற்கல்வி ஆசிரியர் எனும் போது முதலில் ஒழுக்கவியல் ரீதியான பண்புகளும், அர்ப்பணிப்பும் இருத்தல் அவசியமாகும். அதுமட்டுமன்றி மாணவர்கள் விரும்பத்தக்க வகையில் சிறந்த உடலமைப்பு, உடல்நலம் , சிறந்த குரல் வளம் மற்றும் செயற்பாட்டுத்திறன் உள்ளவராகவும் இருப்பது மாணவர்களின் நன்மதிப்பை பெற்றுக்கொள்ள வழிவகுக்கும். அத்தடன் உடற்கல்வி ஆசிரியர் ஒருவர் வகுப்பறைச் செயற்பாட்டில் நவீன அறிவைப் பெற்றுக்கொள்பவராகவும், நவீன கற்ப்பித்தல் முறைகளை கையாள்பவராகவும் ,பேச்சைவிட செயலாற்றங்கள் கூடியவராகவும், மாணவரை விளங்கிக் கொள்பவராகவும் இருப்பதோடு சிறந்த இடம் மாற்றும் பெற்றோராகவும் பங்காற்ற



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேண்டும். விளையாட்டில் குழுநிலைப் பயிற்சியின்போது மாணவரின் பாதுகாவலர், சிறந்தநண்பர், கட்டளை பிறப்பிக்கும் ஆற்றலைக் கொண்டவராகவும், தன்னிடமுள்ள விளையாட்டுதிறன்களை உரிய சந்தர்பத்தில் பிரயோகிப்பவராகவும்,மாணவர்களின் முன்மாதிரித்தலைவராகவும் மற்றும் பிரச்சனைகளை தீர்ப்பவராகவும் இருப்பது சிறந்ததாகும். இருப்பினும் சிறந்த பொதுசனத் தொடர்பாளர், கொள்கைகளை மதிப்பவர், மாணவர் எல்லோரையும் சமமாகமதிப்பவர், மற்றயவர்கள் பற்றிய சிந்தனை உள்ளவர் போன்றவை தொழில் ரீதியான வகிபங்கிற்குள் அடங்கும். மேற்கூறப்பட்ட வகிபங்குகளை உடற்கல்வி ஆசிரியர் ஒருவர் ஆற்றும் போது விசேட அன்புகுப் பாத்திரமாகவும் காணப்படுவார். இதற்கமைய உடற்கல்வி ஆசிரியரானவர் பலவகையான வகிபாகங்களையும் பிறரால் விரும்பத்தக்க நடத்தை கோலத்தையும் கொண்டு பணியாற்ற வேண்டிய தேவை உள்ளது. ஏனெனில் பாடசாலையில் மாணவர்களை இவ் ஆசிரியர் அவதானிப்பவராகவும் வளவாளராகவும், வழிகாட்டபவராகவும் மாணவர் தன்னம்பிக்கையை வலுப்படுத்துபவராகவும் நலன் பேணுபவராகவும் விளங்குகின்றார். இவ்வாறான நிலையில் ஓர் உடற்கல்வி ஆசிரியர் பல வகிபாகங்களையும் செயற்படுத்த முனையும் போது , மாணவர்களின் திறன்கள் மற்றும் ஆற்றல்கள் இயல்பாகவே விருத்தியடைய வழிபிறக்கின்றது என்றால் மிகையில்லை.

**உசாத்துணை நூல்கள்**


*01.* தேசிய கல்வி நிறுவகம், **(2015)** சுகாதாரமும் உடற்கல்வியும் மகரகம தேசிய கல்வி நிறுவக அச்சகம்.

*02.* தேசிய கல்வி நிறுவகம், **(1992)** உடற்கல்வி ஆசிரிய செயற்பங்கு மகரகம தேசியகல்வி நிறுவக அச்சகம்.



*செல்வி.துஷ்யா திருச்செல்வம்*
*ஆசிரிய ஆலோசகர்(உடற்கல்வி)*
*தீவகவலயம்*





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## புலமை பரிசில் பரீட்சையில் சித்தி பெற்றோர் விபரம் 2009 - 2016

| 2009 இல் சித்தி பெற்றோர்பெறுபேறு | | |
|---|---|---|
| பெயர் | புள்ளி | நிலை |
| பவிநிதிரன் வான்மதி | 158 | 11 |
| நல்லலிங்கம் தரணியா | 128 | 99 |
| செல்வரூபன் ஜிஷா | 126 | 110 |
| நடேசலிங்கம் கரிந்திரன் | 121 | 159 |
| மணிவண்ணன் தனுசிகன் | 114 | 219 |
| **2010 இல் சித்தி பெற்றோர்பெறுபேறு** | | |
| கமலநாதன் நிலக்சன் | 148 | 47 |
| சத்தியநாதன் நிஷாங்கன் | 142 | 68 |
| அற்புதராசா நிலக்ஷிகா | 142 | 68 |
| **2011 இல் சித்தி பெற்றோர்பெறுபேறு** | | |
| கிருஸ்ணசீலன் நிலவன் | 169 | 15 |
| விஜயகுமார் மதுஷனன் | 160 | 59 |
| **2013 இல் சித்தி பெற்றோர்பெறுபேறு** | | |
| மகாதேவன் டனோஜா | 160 | 94 |
| பிரபாகரன் சார்மதி | 156 | 127 |
| **2014 இல் சித்தி பெற்றோர்பெறுபேறு** | | |
| குலம் மதுசாளினி | 164 | 89 |
| சந்திரகுமார் கம்சிகா | 160 | 136 |
| முத்துநாயகம் அபிநயன் | 152 | 211 |
| **2015 இல் சித்தி பெற்றோர்பெறுபேறு** | | |
| விமலபாலன் தனுசாரணி | 178 | 06 |
| ஜெயராஜிதன் பிறையாளன் | 168 | 41 |
| மனோகரன் எழில்மைந்தன் | 167 | 50 |
| அங்குசன் உதயநிலா | 167 | 50 |
| லோகேஸ்வரன் சியான் | 165 | 58 |
| உதயகுமார் ருசான் | 164 | 66 |
| சசிகரன் றஜிவனா | 163 | 76 |
| தவக்குமார் டஸ்விகா | 153 | 161 |
| **2016 இல் சித்தி பெற்றோர்பெறுபேறு** | | |
| இலங்கேஸ்வரன் பிரியாளன் | 166 | 58 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# க.பொ.த (சா/த) பெறுபேறுகள்

## 1997 இல் சாதாரண தரப் பெறுபேறுகள்

| | |
|---|---|
| 1. பாலசுப்பிரமணியம் பிரசாந் | 7D, S |
| 2. சுந்தரலிங்கம் நிசாமினி | 6D, C, S |
| 3. திருவாதவூரன் கண்ணா | 6D, C, S |
| 4. தர்மகுலசிங்கம் பாரத்றமனா | 6D, 2C |
| 5. துரைரட்ணம் கௌரிசங்கர் | 5D, C, S |
| 6. பரமநாதன் தீபாஜினி | 5D, C, 2S |
| 7. ஆறுமுகம் கலைச்செல்வி | 4D, 3C, S |
| 8. ஸ்ரீஅனந்தன் சுபோதினி | 4D, 3C, S |
| 9. குமாரசாமி பஞ்சகேதாரன் | 4D, 3C, S |
| 10. இராசேந்திரன் சுஜிதா | 3D, 3C, S |
| 11. தங்கராசா கவியரசன் | 3D, 2C, 3S |
| 12. விக்னேஸ்வரன் ஸ்ரீவித்தியா | 3D, 3C |

## 1998 இல் சாதாரண தரப் பெறுபேறுகள்

| | |
|---|---|
| 1. ஜோசப் பிலிப்பையாஅன்ருகில்மின் | 4D, 3C |
| 2. திருச்செல்வம் மயூரன் | 3D, 3C, S |
| 3. சிவலிங்கம் ஸ்ரீபிரகாஸ் | 3D, 4C, S |
| 4. பரமலிங்கம் சசிக்குமார் | 3D, 3C, S |
| 5. அழகரத்தினம் சத்தியன் | 3D, 4C |
| 6. பாக்கியநாதன் தாரணி | 3D, 2C, 2S |
| 7. கனகரத்தினம் கௌசலா | 3D, 3C, 2S |
| 8. இன்பலிங்கம் விஜிதா | 3D, 2C, S |

## 1999 இல் சாதாரண தரப் பெறுபேறுகள்

| | |
|---|---|
| 1. சிவசுப்பிரமணியம் சஞ்சீவன் | 8D, C, S |
| 2. நாகேந்திரம் மதிசோபனா | 6D, 4C |
| 3. நவரத்தினம் பிரசாந்தன் | 3D, 3C, 2S |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 2000 இல் சாதாரண தரப் பெறுபேறுகள்

1. பிரபாகரன் துவாரகா 10D, C
2. பிரபாகரன் சார்ளஸ் அன்ரனி 9D, C
3. இரத்தினகுமார் டிவாகரன் 4D, 6C
4. இராஜேஸ்வரன் வாகீசன் 3D, 6C, S
5. சிவசுப்பிரமணியம் நிலாந்தி 3D, 4C, 2S
6. பெருமாள் மீனா 3D, 6C, S
7. கோபாலபிள்ளை பிரகீதா 3D, 4C, 2S
8. மகாலிங்கம் மயீபன் 3D, 3C, 2S

## 2001 இல் சாதாரண தரப் பெறுபேறுகள்

1. தர்மசூரியர் யதீஸ் 7A, C, 2S
2. கணேசமூர்த்தி மதனனயனன் 7A, C, S
3. சுப்பிரமணியம் கவிதா 5A, 3B, S
4. சிறீதரன் றம்மியா 4A, 3B, S
5. செல்வராஜா தர்சிகா 4A, 5C, S
6. மாசிலாமணி மரின்சிந்துஜா 3A, B, 6S

## 2002 இல் சாதாரண தரப் பெறுபேறுகள்

1. சிவராசா பிரகாக்ஷ் 5A, 4C, S
2. திருநாவுக்கரசு ஜானுகா 4A, 3B, 2C, S
3. சந்திரன் சஜிதா 3A, 6C, S
4. திருநாவுக்கரசு தர்மினி 3A, 2B, 3C, 2S
5. யமேஸ் யெறோலின் சியானா 3A, B, 5C, S

## 2003 இல் சாதாரண தரப் பெறுபேறுகள்

1. சிவலிங்கம் துவாரகா 6A, B, 2C, S
2. பசுபதிப்பிள்ளை தரிசிகா 5A, 3B, C, S
3. முத்துக்குமார் லக்க்ஷிகா 5A, 3B, 2C, S
4. ஜீவநாதன் நிலஸ் டொறின் ஒலிவியா 4A, 4B, 2C
5. இராசேந்திரப்பிள்ளை றாஜினி 4A, 2B, 3C, S
6. இராமலிங்கம் தினுக்ஷா 4A, 2B, 2C, 2S
7. சின்னராசா கோபிநாத் 3A, 3B, C, 2S



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### 2004 இல் சாதாரண தரப் பெறுபேறுகள்

| | |
|---|---|
| *01.* றெஜினோல்ட் நிர்மலன் கீர்த்திகா | **4A, B, 4C, S** |
| *02.* கதிர்காமநாதன் தேனுகா | **3A, 3B, 4C** |
| *03.* ரவீந்திரராசா சுபாசினி | **3A, 5C, 2S** |

### 2005 இல் சாதாரண தரப் பெறுபேறுகள்

| | |
|---|---|
| *01.* பசுபதிப்பிள்ளை கஜன் | **9A, C** |
| *02.* முத்துநாயகம் அபிராமி | **6A, 3B, C** |
| *03.* சிவபாலன் சிவகௌரி | **6A, 2B, 2C** |
| *04.* கோபாலப்பிள்ளை தர்ஜன் | **5A, B, 3C** |
| *05.* செல்வராசா சஜீதன் | **4A, 4B, C, S** |
| *06.* முத்துநாயகம் துர்க்காயினி | **4A, 3B, 3C** |
| *07.* செல்வராசாசெந்தில்குமரன் | **3A, 5B, C** |
| *08.* கனகலிங்கம் யனிகா | **3A, 2B, 4C** |
| *09.* பூரணச்சந்திரன் ருத்திரா | **3A, B, 3C, S** |
| *10.* ஜெகதீஸ்வரன் சுவர்னா | **3A, 3B, 2C, S** |

### 2006 இல் சாதாரண தரப் பெறுபேறுகள்

| | |
|---|---|
| *01.* செல்வராசா கிருசிகன் | **8A, B, C** |
| *02.* ஞானசேகரம் பிரியங்கா | **8A, B, C** |
| *03.* பரமசாமி புகிலன் | **7A, 3C** |
| *04.* விஜயரத்தினம் விஜிதரன் | **4A, 3B, 3C** |
| *05.* கந்தசாமி கஜந்தன் | **3A, 3B, 2C, S** |
| *06.* கிருபாகரன் சரண்ஜா | **4A, 2B, 3C, S** |
| *07.* மகேந்திரன் பிருந்தா | **4A, B, 2C, 2S** |
| *08.* கந்தசாமி ஆதித்தன் | **3A, 6B, C** |
| *09.* செல்வநாதன் துவாரகா | **3A, 3B, 2C, 2S** |
| *10.* நாகேஸ்வரன் நிஷாந்தினி | **3A, 2B, 3C, S** |
| *11.* ஜெயராஜா யூடினா | **3A, 2B, 2C, S** |
| *12.* சிவோதமாசர்மா யதுகரன் | **3A, B, 2C, 3S** |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 2007 இல் சாதாரண தரப் பெறுபேறுகள்

| | |
|---|---|
| *01. பசுபதிப்பிள்ளை கார்த்திகா* | **10A** |
| *02. செல்வராசா தஜீவன்* | **8A, 2B** |
| *03. வன்னியசிங்கம் சரண்ஜா* | **7A, 3B** |
| *04. ஜெகதீஸ்வரன் சோபனா* | **6A, B, 2C** |
| *05. சிவபாலன் சிவசொரூபன்* | **5A, 4B** |
| *06. செல்வராசா சயந்தினி* | **5A, 3B, 2C** |
| *07. சிவலிங்கம் கீர்த்திகா* | **5A, 3B, 2C** |
| *08. சபாபதிப்பிள்ளை அர்ச்சனா* | **4A, 2B, 4C** |
| *09. இராஜேஸ்வரன் கீர்த்தனா* | **4A, 2B, C, 3S** |
| *10. சண்முகராசா குஜிந்தன்* | **3A, 5B, C, S** |
| *11. யோகராஜா றஜீவன்* | **3A, 4B, 2C** |
| *12. தர்மகுலசிங்கம் நிறோஜன்* | **3A, 3B, 2C, 2S** |
| *13. மகாலிங்கம் ஜசிந்தினி* | **3A, B, 3C, 2S** |
| *14. சிவபாலசுந்தரம் விவேகதாஸ்* | **3A, B, 5C, S** |
| *15. பஞ்சலிங்கம் றஜிகா* | **4A, 3B, 3C** |

## 2008 இல் சாதாரண தரப் பெறுபேறுகள்

| | |
|---|---|
| 1. திருநாவுக்கரசு லோஜினி | **6A, B, C, S** |
| 2. கணேசலிங்கம் மாறன் | **5A, 3B, S** |
| 3. செல்வராசா சதீஸ் | **5A, 2B, C, S** |
| 4. நடராசா இலக்கியா | **5A, B, C, 2S** |
| 5. சச்சிதானந்தம் கணேஷ் | **4A, 3B, C** |
| 6. மகேந்திரம் லதீஸ் | **3A, 3B, 2C** |
| 7. வரதராசா தர்மிலா | **3A, 3B, C** |
| 8. அருணாசலம் கபிலதாஷ் | **3A, 3B, 2C** |
| 9. சிவகுமார் சிந்துஜா | **3A, 3B, 2C** |
| 10. இராமச்சந்திரன் தனுசா | **3A, 2B, C, S** |
| 11. கைலநாதன் டன்சிகா | **3A, 2B, C, S** |
| 12. தம்பிஜயா டயந்தினி | **3A, B, 2C, 2S** |
| 13. சந்திரசேகரம் வினோஜன் | **3A, B, 2C** |
| 14. பாலேந்திரராசா சதன் | **3A, 2B, 2C, S** |

## 2009 இல் சாதாரண தரப் பெறுபேறுகள்

| | |
|---|---|
| 1. ஜெயராஜா ஜெயமாருதி | **9A** |
| 2. முருகானந்தன் ரகுராம் | **4A, 4B, S** |
| 3. சுப்பிரமணியம் மேர்ஜினி | **6A, 2B, C** |
| 4. சச்சிதானந்தம் தர்சனி | **3A, 3B, 2C, S** |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### 2010 இல் சாதாரண தரப் பெறுபேறுகள்

| | |
|---|---|
| 1. ஸ்ரீகரன் பானுசாந் | 7A, C |
| 2. மார்க்கண்டு ஜனகராஜ் | 3A, 2B, 3C |
| 3. நடேசலிங்கம் விஜிந்திரன் | 3A, 4C, S |
| 4. முத்துத்தம்பி நிந்துசா | 3A, 3B, 2C, S |
| 5. தெய்வேந்திரம் பிரதா | 3A, 2B, 3C |
| 6. மகாலிங்கம் விதுரா | 3A, 2B, 3C, S |
| 7. சிவசுப்பிரமணியம் தனுசிகா | 3A, B, 3C, 2S |

### 2011 இல் சாதாரண தரப் பெறுபேறுகள்

| | |
|---|---|
| 1. இராஜசேகரன் பிரசாந் | 4A, 2B, 2C, S |
| 2. பரம்சோதி ஜீவனி | 3A, 4B, C |
| 3. அருளானந்தம் அஜந்தா | 3A, 2C, 3S |
| 4. சின்னராசா ஜனார்த்தி | 3A, 3B, C, 2S |
| 5. சிவபாக்கியநாதன் நிறோஜினி | 3A, C, 3S |

### 2012 இல் சாதாரண தரப் பரீட்சை பெறுபேறுகள்

| | |
|---|---|
| 1. ஜசிதா மகேந்திரராசா | 8A, C |
| 2. லோஜனா ஜெகதீஸ்வரன் | 4A, 5B |
| 3. தேன்குழலி கணேசநாதன் | 4A, 2B, 3S |
| 4. றுகன்ஜா சித்திரசேனன் | 3A, 3B, 2C, S |
| 5. கவர்ணா சந்திரமோகன் | 3A, 3C, 3S |
| 6. தயாளன் டனுசன் | 3A, 2B, 3C,S |
| 7. சுதர்சன் கிருசாந் | 3A, 2B, 3C, S |
| 8. கிருஸ்ணசீலன் கௌசிகன் | 3A, B, 2C, 2S |

### 2013 இல் சாதாரண தரப் பரீட்சை பெறுபேறுகள்

| | |
|---|---|
| 1. ஜீவிதா தயாளன் | 6A, 3B |
| 2. டிசாந்தினி கனகசூரியர் | 5A, B, C, S |
| 3. தர்சிகா மகேந்திரராசா | 4A, B, 3C, S |
| 4. துர்சிகா கருணாநிதி | 3A, 4B, C, S |
| 5. பிரணவி ரவீந்திரன் | 3A, 2B, 2C, 2S |
| 6. அனோஜன் சந்திரசேகரன் | 3A, 4B, C |
| 7. கோபீந்திரன் குலேந்திரன் | 3A, 4B, C |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 2014 இல் சாதாரண தரப் பரீட்சை பெறுபேறுகள்

| | |
|---|---|
| 1. நர்மிஜா மகாதேவன் | 8A, B |
| 2. கோசிகன் சந்திரராசா | 4A, B, 3C |
| 3. மதுசா பரமேஸ்வரன் | 3A, 2B, 3C |
| 4. அர்ச்சனா கிருஸ்ணானந்தன் | 3A, B, 4C |

## 2015 இல் சாதாரண தரப் பரீட்சை பெறுபேறுகள்

| | |
|---|---|
| 1. ஜிஷா செல்வரூபன் | 8A, B |
| 2. கிருசாளினி புண்ணியமூர்த்தி | 6A, 2B, S |
| 3. அபிராமி யோகலிங்கம் | 4A, 4B, S |
| 4. ஜேசன் குணசீலன் | 3A, 4B, 2C |

## 2016 இல் சாதாரண தரப் பரீட்சை பெறுபேறுகள்

| | |
|---|---|
| 1. கிருசாளினி சசிகரன் | 8A, B |
| 2. நிலக்சன் கமலநாதன் | 8A, C |
| 3. ரிலக்சிகா அற்புதராசா | 7A, B, C |
| 4. ரிசாங்கன் சத்தியநாதன் | 7A, B, C |
| 5. அனோஜா ஜெதீஸ்வரன் | 6A, B, C, S |
| 6. டிலக்சன் கிருஸ்னானந்தன் | 6A, B, C |
| 7. பிரஷாளினி விமலபாலன் | 5A, 3B, S |
| 8. திலக்சி சின்னராசா | 5A, 3B, S |
| 9. டனுஜிகா மகாதேவன் | 4A, 4B, S |
| 10. சிந்துஜன் ஸ்ரீகரன் | 4A, 4B, S |
| 11. சஜிந்திரன் தர்மராசா | 3A, B, 4C, S |
| 12. பகீர்த்தன் இளங்குமரன் | 3A, B, 4C |
| 13. விதுஷா ரகுநாதன் | 3A, 2B, 3S |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எமது பாடசாலை வரலாற்றில் கலை, வர்த்தகப் பிரிவுகளில் பல்கலைக்கழகம் சென்றோர் விபரம்

| இல | ஆண்டு | மாணவர் பெயர் | பிரிவு |
|---|---|---|---|
| 01. | 1998 | சுப்பிரமணியம் ஜெயக்குமாரி | கலை |
| 02. | 1998 | ஜெயக்கொடி ஜெயந்தினி | கலை |
| 03. | 1998 | சிவராஜன் சுபாசினி | கலை |
| 04 | 1998 | வேலாயுதபிள்ளை கமலேந்திரன் | கலை |
| 05. | 1998 | குலவீரசிங்கம் கோகுலன் | கலை |
| 06. | 1998 | சுப்பிரமணியம் சிவலோகநாயகி | வர்த்தகம் |
| 07. | 1998 | கணபதியையன் சங்கீதா | வர்த்தகம் |
| 01. | 1999 | கந்தசாமி மயூரன் | கலை |
| 02. | 1999 | செல்லத்துரை விஜயதேவி | வர்த்தகம் |
| 01. | 2000 | பொன்னுத்துரை சகுந்தலாதேவி | கலை |
| 02. | 2000 | இராஜேந்திரலிங்கம் பிரதீபா | கலை |
| 03. | 2000 | ஸ்ரீஆனந்தன் கவிதா | வர்த்தகம் |
| 01. | 2001 | ஆறுமுகம் செந்தில்பிரியா | கலை |
| 02. | 2001 | வைரவநாதன் மாலினி | கலை |
| 03. | 2001 | பத்மநாதன் தாரகா | கலை |
| 04. | 2001 | கணேசலிங்கம் நிதர்சினி | கலை |
| 05. | 2001 | மரியதாஸ் மேரிஅபர்ணா | கலை |
| 06. | 2001 | கருணாநிதி கலைச்செல்வி | கலை |
| 01. | 2002 | ஜெயராமன் தனரூபி | கலை |
| 02. | 2002 | தயாளதேவன் ஜெயரம்யா | கலை |
| 03. | 2002 | பரமசாமி ஜெயநிஷா | கலை |
| 04. | 2002 | அழகரத்தினம் சத்தியன் | வர்த்தகம் |
| 01. | 2003 | தர்மசூரியர் ரேனுஷா | கலை |
| 01. | 2004 | யோசப்அருளானந்தம் மேரிசுஜீவினி | கலை |
| 02. | 2004 | கோபாலகிருஸ்னன் கல்ப்பனா | கலை |
| 03. | 2004 | இராஜேந்திரலிங்கம் றதீபா | கலை |
| 04. | 2004 | சுப்பிரமணியம் கவிதா | கலை |
| 05. | 2004 | குணசிங்கம் தமிழ்ப்பிரியா | கலை |
| 06. | 2004 | விநாயகமூர்த்தி கீதாஞ்சலி | கலை |
| 07. | 2004 | கணேசலிங்கம் சந்திரரேகா | கலை |
| 08. | 2004 | உதயகுமார் கோகுலன் | கலை |
| 09. | 2004 | கனகராஜா கமலினி | கலை |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | | |
|---|---|---|---|
| 10. | 2004 | மகாலிங்கம் மஜீபன் | வர்த்தகம் |
| 01. | 2005 | செல்வராசா தர்சிகா | கலை |
| 02. | 2005 | கந்தசாமி ஆர்த்தி | கலை |
| 03. | 2005 | தவராசா நித்தியா | கலை |
| 04. | 2005 | சிவசுப்பிரமணியம் அகிலா | கலை |
| 05. | 2005 | முத்துத்தம்பி நிருஷா | கலை |
| 06. | 2005 | வேதநாயகம் செந்தூரன் | வர்த்தகம் |
| 07. | 2005 | இராஜேஸ்வரன் ஜனன் | வர்த்தகம் |
| 01. | 2006 | நாகலிங்கம் பத்மப்பிரியா | கலை |
| 02. | 2006 | தங்கராசா கீதரோகினி | கலை |
| 03. | 2006 | சிவலிங்கம் துவாரகா | கலை |
| 04. | 2006 | இராமலிங்கம் தினுஷா | கலை |
| 05. | 2006 | மகேந்திரம் காந்தரூபி | கலை |
| 06. | 2006 | புவனேந்திரராசா தீபனா | கலை |
| 07. | 2006 | தம்பியையா குகாயினி | கலை |
| 08. | 2006 | முத்துத்தம்பி நித்தியா | கலை |
| 09. | 2006 | இருதயராசன் மேரிடெக்லா | கலை |
| 10. | 2006 | ஜீவானந்தன் டொறின்ஒலிவியா | வர்த்தகம் |
| 01. | 2007 | பசுபதிப்பிள்ளை தர்சிகா | கலை |
| 02. | 2007 | சர்வலோகானந்தம் கஜீந்திரன் | வர்த்தகம் |
| 03. | 2007 | சிவபாலசுந்தரம் துசிதா | வர்த்தகம் |
| | 2008 | திருச்செந்தூர்நாதன் சுபாஸ்கரன் | கலை |
| 01. | 2009 | பொன்னையா கஜன் | கலை |
| 02. | 2009 | திருநாவுக்கரசு நிஷாளினி | கலை |
| 03. | 2009 | ஞானியர்கரசன் யசோதா | கலை |
| 04. | 2009 | சுவேதசர்மா யதுகரன் | கலை |
| 05. | 2009 | ரட்ணம் குலேபா | கலை |
| 06. | 2009 | மகாலிங்கம் கஸ்தூரி | கலை |
| 07. | 2009 | பரமசாமி புகிலன் | வர்த்தகம் |
| 08. | 2009 | முத்துநாயகம் துர்க்காயினி | வர்த்தகம் |
| 09. | 2009 | லோகேஸ்வரன் ஜீவதாஸ் | வர்த்தகம் |
| 10. | 2009 | கந்தசாமி ஆதித்தன் | வர்த்தகம் |
| 01. | 2010 | சபாபதிப்பிள்ளை அர்ச்சனா | கலை |
| 02. | 2010 | சிவலிங்கம் தீபிகா | கலை |
| 03. | 2010 | பொன்னையா சுரேந்திரன் | கலை |
| 04. | 2010 | கெங்கேஸ்வரன் பிரிந்திகா | கலை |
| 05. | 2010 | கணேசலிங்கம் அமிலினி | கலை |
| 06. | 2010 | யோகராசா ரஜீவன் | வர்த்தகம் |
| 07. | 2010 | முத்துநாயகம் அபிராமி | வர்த்தகம் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | | |
|---|---|---|---|
| 01. | 2011 | சுப்பிரமணியம் சுதாகரன் | கலை |
| 02. | 2011 | பாலசிங்கம் லாவண்யா | கலை |
| 03. | 2011 | கிருஷ்ணபிள்ளை ஜானுகா | கலை |
| 04. | 2011 | சிவராசா கிருஷ்ணராஜி | கலை |
| 05. | 2011 | இராசதுரை நிமலினி | கலை |
| 06. | 2011 | செல்வச்சந்திரன் நிரோஜன் | வர்த்தகம் |
| 07. | 2011 | கோடிஸ்வரன் அஜந்தன் | வர்த்தகம் |
| 08. | 2011 | பாலேந்திரராசா சதன் | வர்த்தகம் |
| 09. | 2011 | யோகேஸ்வரன் ஜெயதுவாரணி | வர்த்தகம் |
| 10. | 2011 | கிருஸ்ணமூர்த்தி சிவந்தினி | வர்த்தகம் |
| 11. | 2011 | தம்பியையா டயந்தினி | வர்த்தகம் |
| 01. | 2012 | பூபாலசிங்கம் நிவேதிகா | கலை |
| 02. | 2012 | நடராசா இலக்கியா | கலை |
| 03. | 2012 | நவரத்தினம் சந்திரிக்கா | வர்த்தகம் |
| 04. | 2012 | சந்திரசேகரன் வினோஜன் | வர்த்தகம் |
| 05. | 2012 | சிவபாலசுந்தரம் விவேகதாஸ் | வர்த்தகம் |
| 01. | 2013 | அன்ரன்டயஸ் சகாயராணி | கலை |
| 02. | 2013 | கனகரத்தினம் காயத்திரி | கலை |
| 03. | 2013 | தெய்வேந்திரம் பிரதா | வர்த்தகம் |
| 04. | 2013 | சிறிகரன் பானுசாந் | வர்த்தகம் |
| 05. | 2013 | சபாபதிப்பிள்ளை அஜந்தன் | வர்த்தகம் |
| 01. | 2014 | ஞானசீலன் பகிர்தா | கலை |
| 02. | 2014 | பத்மஸ்ரீ சதுர்சிகா | கலை |
| 03. | 2014 | செல்வரத்தினம் கோபிகா | கலை |
| 04. | 2014 | இராசசேகரம் பிரசாந் | வர்த்தகம் |
| 05. | 2014 | பரஞ்சோதி ஜீவனி | வர்த்தகம் |
| 06. | 2014 | சிவசுப்பிரமணியம் தனுசிகா | வர்த்தகம |
| 01. | 2015 | சுரேந்திரன் கர்சனா | வர்த்தகம் |
| 02. | 2015 | சுதர்சன் கிருசாந் | வர்த்தகம் |
| 03. | 2015 | ஜெகதீஸ்வரன் மதிநிலா | வர்த்தகம் |
| 04. | 2015 | சந்திரசேனன் ருகன்ஜா | வர்த்தகம் |
| 05. | 2015 | கிருஸ்ணபவன் லக்சனா | வர்த்தகம் |
| 06. | 2015 | அழகரத்தினம் சுதர்சனா | வர்த்தகம் |
| 01. | 2016 | சந்திரமோகன் கவர்ணா | கலை |
| 02. | 2016 | சோதீஸ்வரன் ரிஷாந்து | கலை |
| 03. | 2016 | சத்தியசீலன் சாஜனா | கலை |
| 04. | 2016 | பரந்தாமன் துஷாளினி | வர்த்தகம் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# க.பொ.த.உயர்தரத்தில் கணித விஞ்ஞான துறைகளைத் தெரிவு செய்து வேறு பாடசாலை சென்று பல்கலைக்கழகத்திற்கு தெரிவான மாணவர் விபரம்

01. ஐ.தர்மராசா
02. ப.மதியழகன்
03. ஜெ.கிருபாலன்
04. கோ.நக்கீரன்
05. செ.பிரதீபன்
06. இ.வாகீசன்
07. த.ஜதீஸ்
08. க.மதனநயனன்
09. ந.கிரிசாந்
10. தி.தர்மினி
11. சி.கோபிநாத்
12. ப.கஜன்
13. கோ.தர்ஜன்
14. சி.கிருஷ்ணராஜா
15. த.மிகுந்தன்
16. வி.விஜிதரன்
17. செ.கிரிசிகன்
18. த.சயந்தன்
19. க.கயந்தன்
20. ஞா.பிரியங்கா
21. செ.துவாரகா
22. ம.பிருந்தா
23. செ.தஜீவன்
24. சி.சிவசொரூபன்
25. ப.கார்த்திகா
26. வ.சரண்ஜா
27. ப.ரஜீகா
28. சி.கீர்த்திகா
29. செ.சதீஸ்
30. ச.கணேஸ்
31. க.மாறன்
32. அ.கபிலதாஸ்
33. தி.லோஜினி
34. மு.ரகுராம்
35. ஜெ.ஜெயமாருதி
36. சு.மெர்ஜினி
37. ச.சரவணன்
38. கோ.விதுசன்
39. ஜெ.லோஜனா
40. ம.யசிதா
41. சி.கௌசிகன்
42. கென்சீலன்

**(கிடைக்கப்பெற்ற தகவலின் படி)**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எமது பாடசாலையில் கற்று முதன் முறையாக பல்கலைக் கழகம் தெரிவான மாணவர்கள்.

**1998 - சுப்பிரமணியம் ஜெயக்குமாரி** (கலைப்பிரிவு)

**ஜெயக்கொடி ஜெயந்தினி** (கலைப்பிரிவு)

**வேலாயுதபிள்ளை கமலேந்திரன்** (கலைப்பிரிவு)

**சிவராசா சுபாசினி** (கலைப்பிரிவு)

**சுப்பிரமணியம் சிவலோகநாயகி** (வர்த்தகப்பிரிவு)

**கணபதிஜயன் சங்கீதா** (வர்த்தகப்பிரிவு)

**குலவீரசிங்கம் கோகுலன்** (கலைப்பிரிவு)

## சாதனையாளர்கள்

**1999- விக்னராஜா கபில்தேவ்** - சித்திரப்போட்டி - தேசியமட்டம் 1ம்இடம்

**2002- ஜெயராஜா ஜெயமாருதி** - ஆக்கத்திறன் கதை கூறல்

மாகாணம் 1ம்இடம்

தேசியமட்டம் 3ம்இடம் (வெண்கலப்பதக்கம்)

2003- தமிழ் மொழித்தினப் பேச்சுப் போட்டி

வடக்கு கிழக்கு மாகாணம் 1ம்இடம்

தேசிய மட்டம் 1ம்இடம் (தங்கப்பதக்கம்)

தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சை மாவட்ட நிலை 2

அகில இலங்கை ரீதியில் நடத்தப்பட்ட

2004 - சைவ பரிபாலன சபை பேச்சுப் போட்டி

1ம்இடம் (தங்கப்பதக்கம்)

அகில இலங்கை இந்துமா மன்ற பொன்விழா ஞாபகார்த்த பேச்சு போட்டி மாகாணம் 1ம் இடம் தேசியம் 3ம் இடம்

2009- க.பொ.த சாதரன பரீட்சை 9A (கிளிநொச்சி மாவட்டத்தில் 9A இம்மாணவனுக்கு மட்டுமே கிடைக்கப் பெற்றது. குறிப்பிடத்தக்கது. இதற்காக மக்கள் வங்கியின் தலைமைக் காரியாலயத்தில் "sisu udana kusalatha pranama" புலமைப்பரிசு வழங்கிக் கௌரவிக்கப்பட்டது.

2012- G.C.E A/L விஞ்ஞானப் பிரிவு A,2B மாவட்டநிலை-1

**2003- சிவபாலன் சிவகௌரி (சமூகக் கல்வி போட்டி)**

மாகாணம் 2ம் இடம்

சைவ பரிபாலன சபையில் நடத்தப்பட்ட பேச்சுப் போட்டி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**2003ல் செல்வராசா தாரணி**

மத்திய பிரிவு 1ம்இடம் (தங்கப்பதக்கம்)

**2003 இராசேந்திரலிங்கம் ரதீபா.**

சைவபரிபாலன சபைத்தேர்வு (1ம்இடம் தங்கப்பதக்கம்)

**2004- சிவலிங்கம் துவாரகா** - மக்கள் வங்கியின் சிசுஉதான தேசிய விருது திட்டம், நாவலர் 125வது குருபூசை தொடர்பாக பாடசாலை மாணவர்களிடையே சைவபரிபாலன சபையால் நடாத்தப்பட்ட கட்டுரைப்போட்டி - தங்கப்பதக்கம், அகில இலங்கை சைவநெறித் தேர்வு - தங்கப்பதக்கம்

**2005 - ந.கதீசன்** - தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை 2ம் இடம் - மாவட்டம்

**2005- செல்வராசா தாரணி** - மேற்பிரிவு - 1ம்இடம் - தங்கப்பதக்கம்

**2005- சிவபாலசுந்தரம் ஸ்ரீமிதுலா** - உயரம் பாய்தல் 1ம்இடம் வடகிழக்கு மாகாணம்.

**2006- கெங்காதரன் பிரசாந்த்** - ஜனாதிபதி சாரணர் விருது பெற்றமை. 19வயது சதுரங்க அணி மாகாண மட்டம் 2ம் இடம்.

**2007 - பசுபதிப்பிள்ளை கார்த்திகா** - **10A**

**2012 - கனகலிங்கம் நக்கீரன்** - ஈட்டி எறிதல் - 2ம் இடம் மாகாணம்

**2013 - தெய்வேந்திரம்பிள்ளை பிரதா** - க.பொ.த (உ/த) வர்த்தகப்பிரிவு 2யுட 1ம் இடம் மாவட்டம்

**2014 - கமலநாதன் நிக்சன்** - குண்டு போடுதல் - 4ம் இடம் மாகாணம்

**2016 - ராசன் அகல்யா** - மனைப்பொருளியல் விஞ்ஞான திறனாய்வு 2ம் இடம் மாகாணம்

**2016 - ரகுநாதன் விதுஷா** - மனைப்பொருளியல் விஞ்ஞான திறனாய்வு 2ம் இடம் மாகாணம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சி.ந.தண்டாயுதபாணி
சமாதான நீதவான்
(அகில இலங்கை)
0?/12/வகி/தீமு/540
இராமனாதபுரம்,
கிளிநொச்சி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

60 YEARS
1956-2016

# வைரவிழா
# DIAMOND JUBILEE

கிளி/இராமநாதபுரம் மகாவித்தியாலயம்

கஜு பிறின்டேர்ஸ் கருமபுரம்
தொ.பே : 0778115801

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org